D
V211,31 N91
N91.36
144896

வெளியீடு 3-6-1991 Issued 3-6-1991

தமிழ்நாடு வணக்காப்பகம்
18 ஜூலை 1991
எழும்பூர், சென்னை-600008.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMILNADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, சனவரி 22, 1991-தொகுதி 36-எண்3

Tuesday, the 22nd January 1991-Volume 36-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras 600 009.**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

(ஆ) வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1991. 368

இ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு, 1991. 368—369

5. இரண்டாம் துணை நிதி நிலை அறிக்கை, 1990–91 அளித்தல். 369—371

6. அறிவிப்பு—

இரண்டாம் துணை நிதி நிலை அறிக்கை—1990-91 — வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து. 372

7. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி. 372—425

திரு. க. அர்ச்சுனன் 373—383

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் 383—391

*திரு. உ. ரா. வரதராசன். 391—410

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் 411—425

8. உரிமைப் பிரச்சினை—

உறுப்பினர் திரு. இரா. சிங்காரம் மீது விடுதலைப் புலிகள் நடவடிக்கைகள் பற்றி முரண்பட்ட தகவல்கள் தெரிவித்துள்ளது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு. 425—426

9. சட்ட முன்வடிவுகள்—(ஆய்வு செய்தல்)—

(அ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990. 426—432

(ஆ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1991. 432—434


V 2
N91·36
144896




(இ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991. 434—437

(ஈ) மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1991. 437—444

(உ) நகராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்ட முன்வடிவு, 1991. 444—449

(ஊ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்ட முன்வடிவு, 1991. 449—452

(எ) ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1991. 452—456

• உறுப்பினர்கள் திரு. எஸ். திருநாவுக்கரசு, கே. கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திரு. என. டி, உகம்சந்த் ஆகியோரின் அணியை அ.இ.அ.தி.மு.க.—2 கட்சியாக அங்கீகரித்துள்ளது குறித்துப் பேரவைத் தலைவரின் தீர்ப்பு. 456—460

• பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் 460—461

உள்ளடக்கம்


பக்கங்கள்

1. வினாக்கள் விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 235—275

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் 275—352

2. தகவல் கோரல்—

(அ) சேஷசாயி இன்சுலேட்டர் தொழிற்சாலை லே—ஆப் செய்யப்பட்டுள்ளதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு 353—354

(ஆ) அம்பாசமுத்திரத்தில் சப் கோர்ட்டு அமைக்கக் கோரி வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்தி வருவது குறித்து. 354—355

(இ) நாகர்கோவில் மாவட்ட நீதிபதி—வழக்கறிஞர்கள் பிரச்சினையையொட்டி வழக்கறிஞர்கள் நீதி மன்றங்களைப் புறக்கணிப்பதால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து. 356—358

(ஈ) எந்தக் கட்சியையும் சாராதவர்கள் என்று சில உறுப்பினர்கள் குறித்துப் பேரவைத் தலைவர் 21—1—1991 ஆம் நாளன்று அளித்த தீர்ப்பு பற்றி. 358, 366—367

(உ) கர்நாடக அரசு காவிரி நீர் விடாததால் விவசாயிகளும், உணவு உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து. 358—366

3. அறிக்கை அளித்தல்—

அரசு உறுதிமொழிக் குழு. 366

4. சட்ட முன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்)—

(அ) வேளாண் விளைபொருள் சந்தைகள் சார்ந்த சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1991. 367

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

**தை 9, பிரோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2022**

**1991, சனவரி 22, செவ்வாய்க்கிழமை.**

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் 9-00 மணியளவில் பேரவைக் கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்;**

*''உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேரா தியல்வது நாடு.*

*மிக்க பசியும், ஓயாத நோயும், அழிவு செய்யும் பகையும் தன்னிடம் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடாகும்.*

### 1, வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *வினா எண். 1821 மற்றும் 1962 ஆகியவை சற்றுப் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.*

### தமிழில் சட்டப் புத்தகங்கள்

* *5759*—**திரு. பி, என். வல்லரசு:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:*

*(அ) சட்டம் பயிலும் மாணவர்களுக்குத் தமிழில் சட்டப் புத்தகங்கள் கிடைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும்?*

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** *பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

*(அ) ஆம்.*

*(ஆ) தமிழில் ஏற்கனவே பல சட்டப் புத்தகங்கள் உள்ளன. மேலும் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**திரு, உ. ரா, வரதராசன் :** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டம் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் வழக்கு நடத்தக் கூடிய வழக்கறிஞர்களுக்குக் கூட உச்சநீதி மற்றும் உயர்நீதிமன்றங்களுடைய தீர்ப்புகளைத்*

தொகுத்து தமிழிலே வெளியிடக் கூடிய ஏற்பாடு முறையான அளவிலே இல்லை. அதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியிலே பயிலுகிற மாணவர்களுக்கான புத்தகங்கள் வெளியிடுவது உடனடித் தேவையாக இருந்தும் அது இடைக்காலத்திலே சற்றுச் செயல்படாமல் போய்விட்ட காரணத்தால், அண்மையிலே ஏற்கனவே வெளியிடப்பட்ட புத்தகங்களை மறுபடியும் அச்சிடுவதற்கும், புதிய நூல்களை அச்சிடுவதற்கும். அந்தத் துறையினுடைய இயக்குநர் மூலமாக உரிய பேராசிரியர்களைக் கொண்டு எழுதுவதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நீதி மன்றங்களிலே தமிழைப் பயன்படுத்த வேண்டுமென்பதற்காக, உரிய, அடிப்படையான சட்டங்கள் தமிழில் வரவேண்டும் என்ற முறையில் அதற்காக ஆட்சி மொழிக் குழு ஒன்று, தகுந்த அறிஞர் ஒருவர் தலைமையிலே நியமிக்கப்பட்டு, அவர்கள் அந்த மொழி பெயர்ப்புப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். மேலும் சட்ட நுணுக்கச் சொற்களுக்கு (Glossary) தயாரிப்பது என்பது பல ஆண்டுகளுக்கு முன்னாலே சிறிய அளவில் மட்டுமே தயாரிந்துள்ளதால் மேலும் பல ஆயிரக் கணக்கான சொற்களுக்குத் தயாரிக்க வேண்டிய ஒரு நிலைமை இருப்பதன் காரணமாக அதற்கும் இப்போதுள்ள குழு மேலும் விரிவுப்படுத்தப்பட்டு அந்த 'கிளாசரி' தயாரிக்கிற பணியை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்புகளை தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுவது என்பது இந்த அடிப்படைப்பணிகள் நிறைவேறியதற்குப் பின்னர், தொடங்கப்படுமானால்தான் தீர்ப்புகளுடைய கருத்துக்கள் திட்டவட்டமாக, தெளிவாக விளங்கும் என்பதன் காரணமாக, இந்த அடிப்படைப் பணிகளை நிறைவேற்றுவதற்கு விரைந்து முயற்சி மேற்கொள்ளப்படும்.

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய ஆட்சிப் பணித் தேர்வு எழுதுவதற்குத் தமிழில் போதிய நூல்கள் இல்லையென்பதன் காரணமாக, தமிழகத்திலேயிருந்து தேர்வு எழுதுபவர்களில் பல பேர் தேர்ச்சி பெற இயலாத நிலை ஏற்படுவதை அறிந்து இந்திய ஆட்சிப் பணித் தேர்வுக்குரிய புத்தகங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது இந்தக் கேள்வியிலேயிருந்து எழாது. இருந்தாலும் மொழி பெயர்ப்பு என்ற ஒரு தொடர் இடையிலே வருகிற காரணத்தால் தமிழில் அப்படிப்பட்ட நூல்கள் வரவேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கிறார். ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதுவதற்குத் தமிழில் நூல் இல்லாத காரணத்தாலேதான் வெற்றிபெற முடியவில்லை



என்பதை முழு அளவிலே ஒப்புக் கொள்ள நான் தயாராக இல்லை. அதற்குப் பல்வேறு முயற்சிகள் நடைபெற வேண்டும் என்று துணைவேந்தர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் புத்தகங்களை தமிழிலே மொழி பெயர்ப்பதற்காகவே தனியாக ஒரு துறை செயல்பட்டு வருகிறதே, அது கடந்த ஆண்டு எத்தனைச் சட்டப் புத்தகங்களை மொழி பெயர்த்தது என்பதையும் இதற்காக மத்திய அரசு அவ்வளவு காகிதங்களையும் இலவசமாகத் தருகிறார்களே—அதாவது ரீஜினல் லாங்குவேஜில் அந்த லாவை டிரான்ஸ்லேட் பண்ணுவதற்கு—அந்தச் சலுகையை இந்த அரசு கடந்த ஆண்டு எவ்வளவு தூரம் பயன்படுத்திக் கொண்டது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியின் முதல் பகுதிக்கான விடை, அரசியல் சட்ட அமைப்பு இடைக்காலத்திலே மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது பல குறைபாடுகள் கொண்டதாக அமைந்து விட்டது. அதைத் திருத்தி, செம்மைப் படுத்தி மறுபடியும் அச்சிட வேண்டிய ஒரு கட்டத்தில் மத்திய அரசின் இசைவையும் பெற்று அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. மேலும், ஆட்சி மொழி தொடர்பான பணிகளில் பல சட்டங்களை மொழி பெயர்ப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். தனியாகக் கேள்வி கேட்டால் அதற்கு விடையளிக்க முடியும் என்று நான் நம்புகிறேன். தனியாக இதற்காகத் தாள் தருகிறார்கள் என்பது இதுவரையில் எனக்குத் தெரியாத செய்தி. விவரம் அறிந்த பின்னர் தான் தெரிவிக்க முடியும்.

9.05 மணி

**திரு. அ. இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல சட்டப் புத்தகங்களைத் தமிழில் எழுதுகின்றவர்களுக்கு ஊக்கத் தொகை அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, எழுதுகிறவர்கள் முன்கூட்டி அரசாங்கத்தாலோ அல்லது குழுவினாலோ கேட்டுக் கொள்ளப்பட்டு எழுதுவார்களேயானால் அந்த முறைப்படி அவர்களுக்கு ஆதரவு அல்லது ஊதியம் வழங்கப்படும். அவர்களாகவே முன்வந்து எழுதுவார்களேயானால் அவை பரிசீலிக்கப்பட்டு தகுதியுடையதாக இருந்தால் ஊதியம் வழங்குவதற்கு முயற்சிக்கலாம்.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்டப் புத்தகங்களை சட்டக் கல்லூரி மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்வதோடு, பழைய சட்டப் புத்தகங்களும் தமிழிலே மொழி பெயர்க்கப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். அதற்கான முயற்சிகள்

எடுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இப்பொழுது குற்றவியல் நீதி மன்றங்களிலே தீர்ப்புகள் தமிழிலே வழங்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. தமிழிலே வழங்கப் படுகிறது. அப்படித் தீர்ப்புகள் தமிழிலே வரும்பொழுது அதற்குரிய சட்டப் புத்தகங்கள் தமிழிலே இல்லாததால் சில சங்கடங்கள் ஏற்பட்டு, அதனால் வழக்கிலே சம்பந்தப்பட்ட பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அந்தச் சட்டப் புத்தகங்களைத் துரிதமாகத் தமிழாக்கித் தருவதற்கான முயற்சிகளை அரசு எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்த வேண்டுகோள் அடிப்படை யிலே உள்ள கேள்வி, அரசாங்கத்தால் எற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும்.

### அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு அரசின் சலுகைகள்

*8011—திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஓய்வுபெற்ற அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் அரசின் சலுகைகள், அரசு உதவிபெறும் தனியார் பள்ளி ஆசிரியர் களுக்கும் விரிவாக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, ஓய்வுபெற்ற அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் அரசின் சலுகைகள் அரசு உதவிபெறும் தனியார் பள்ளி ஆசிரியர் களுக்கும் நீடிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு உதவிபெறும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போல் சலுகைகள் வழங்கப்படுவதாக அமைச்சரவர்கள் இங்கே சொன்னார்கள். நன்றி. ஆனால், எல்லாச் சலுகை களும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை என்று தெரிகிறது. குறிப்பாக, மருத்துவப்படி அவர்களுக்கு இன்று வரை கொடுக் கப்படவில்லை என்று தெரிகிறது. அதைக் கொடுப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி எழுப்ப வேண்டும். ஆனால் அரசுப் பணியிலேயிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்படுகிற அத்தனை சலுகைகளும் அரசு உதவி பெறும் பள்ளியிலே



இருந்து ஓய்வு பெறுகிறவர்களுக்கும் வழங்கப்படுகிறது. அரசுப் பள்ளியிலே பணியாற்றுகிறவர்கள் ஓய்வு பெற்றால் வழங்கப் படாத எந்தச் சலுகையும் அரசு உதவி பெறும் பள்ளியில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெற்றதற்குப் பிறகு சலுகைகள் எல்லாம் வழங்கப்படுவதாக அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், பணியில் இருக்கும்பொழுது அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை என்று தெரிகிறது. குறிப்பாக, திருமணக் கடன், வீடு கட்டுவதற்கான சலுகைகள், ஒரு வழிப் பாதை சலுகைகள், இவையெல்லாம் கிடைப்பதில்லை என்று சொல் கிறார்கள். அவைகளும் கிடைப்பதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, அதுபற்றி உடனடியாகப் பதில் சொல்ல எனக்கு வாய்ப்பு இல்லை. இந்தக் கேள்வியில் அது ஏற்கனவே எழுப்பப்படவில்லை. ஆனால் அரசு அலுவலர்களாக உள்ளவர்களை இட மாற்றம் செய்கிற வாய்ப்பு, அந்த உரிமை இருக்கிறது. ஆனால், தனியார் பள்ளியிலே பணியாற்றுகிறவர்கள் இட மாற்றத்திற்கு என் றைக்கும் ஆளாகமாட்டார்கள். ஆகவே, இந்த வேறுபாடு களும் இருக்கத்தான் செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : துணைத் தலைவரவர்களே, ஓய்வு பெற்ற அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அரசின் சலுகைகளில், ஓய்வுபெற்று அவர்கள் வெளியிலே செல்லும் பொழுது அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய எல்லாக் கொடைகளையும் அவர்கள் கையிலே கொடுத்து அவர்களை அனுப்ப வேண்டும். அரசு ஊழியர்களுக்கு அந்த மாதிரிதான் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், அப்படி இல்லாமல் அவர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு 6 மாதம், ஒரு வருஷ காலம் எல்லாம் நீடித்து தங்களுக்கு இவை யெல்லாம் கிடைக்கவில்லை என்று அவர்கள் பல காரியாலயங் களுக்கு ஏறி இறங்க வேண்டிய ஒரு துரதிருஷ்டமான நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இது அவர்கள் மத்தி யிலே வெறுப்பையும் உண்டாக்குகிறது. நான் இந்த விஷ யத்தை நேரடியாகப் பார்த்திருக்கிறேன். ஆகவே, இதன்மீது தகுந்த நடவடிக்கை எடுத்து, அவர்கள் ஓய்வுபெற்று வெளியேறு கிற அன்றைக்கே, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பாத்திய தைகள் முழுவதையும் அவர்கள் கையிலே கொடுத்து அனுப்புவ தற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

9-10 மணி.

மாண்புமிகு டாக்டர் க. **அன்பழகன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓய்வுபெற்று விடைபெறுகிற அந்த நேரத்திலேயே வழங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இதில் ஒன்றும் கருத்து அளவிலே மாறுபாடு இல்லை. நடைமுறையிலே உள்ள சிக்கல் அவர்களுடைய 'ரெக்கார்ட்ஸ்'. தகுந்த முறையிலே முன்கூட்டியே அவர்கள் பள்ளியிலே வைத்திருந்து, அந்த 'ரெக்கார்ட்ஸ்' களோடு அவர்கள் ஓய்வு பெறுகிற ஒரு நிலைமை இருக்குமானால், உடனடியாக அவற்றை வழங்குவதில் எந்தச் சிரமமும் இருக்காது. சில குறிப்பிட்ட சான்றுகள், ஏடுகள் இவைகளெல்லாம் அவர்கள் முன்கூட்டியே தயாரித்து வைக்காத காரணத்தினால், இந்த நிலைமை ஏற்படுகிறது. அதனையும் விரைந்து முடிக்க என்ன உண்டோ, அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். எஸ். இராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களில், தங்களுடைய பணிக்காலத்தில் மிகச் சிறந்து விளங்கும் ஆசிரியர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுடைய பணி முடிந்த பின்னாலும், அவர்களுடைய திறமையைப் பயன்படுத்தக்கூடிய முறையிலே, அத்தகைய ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு வேறு ஏதாவது வழிகளில் செய்வதற்கு அரசு முன்வருமா ? அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் அளிப்பதற்கு, அதாவது அவர்களுடைய அறிவைப் பயன்படுத்துவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை வைத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. **அன்பழகன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஆசிரியர் பணியில் தொடர்ந்து, வேறு வகையாக நீடிப்பது, என்பதை பெரும்பாலும் ஆசிரியர்கள்தான் எதிர்ப்பார்கள். ஏற்கெனவே, பணியிலே உள்ளவர்கள் பெறுகிற சில உயர்வு வாய்ப்புகள் அதானல் தவறி விடுகிறது என்பது ஒரு காரணம். மற்றொன்று, வேலையில்லலாத் திண்டாட்டம் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கிடையிலே மிகுதியாக இருக்கிறபோது, அரசாங்கம் ஓய்வு பெற்றவர்களை மறுபடியும் அலுவலில் ஈடுபடுத்துவது என்பதை ஒரு பொது நீதியாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஏதாவது ஒரு பாடத்துறையில், ஏதாவது ஒரு உயர்நிலையில், ஒரு தகுந்தவர் கிடைக்கமாட்டார் என்ற நிலைமை இருக்குாமனால், அதைத் தனிப்பட்ட முறையில் அர்சு கருதிப் பார்க்கலாமே தவிர, பொது விதியாக இதனை ஏற்க இயலாது.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியோடு தொடர்புடையக் கேள்வி என்ற முறையில், நான் இந்தக் கேள்வியை, எழுப்புகிறேன். நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக, பள்ளிகளிலே தொழிற்பயிற்சி கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய ஆசிரியர்கள் 1,500 பேர்கள். அந்தப் பிரிவு



மூடப்பட்டதால் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களில் 900 பெண்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது மாற்று வேலையோ அல்லது ஏதாவது சலுகையோ அளிப்பதற்கு அரசிடம் ஏதாவது யோசனை உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. **அன்பழகன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தனிக் கேள்வியாக இருந்தால் தகுந்த விடையை நான் வழங்க முடியும். ஆயினும் வேறு பணிகளுக்கு அரசோ அல்லது அந்தத் துறையின் சார்பிலோ ஆட்கள் எடுக்கிறபோது, அதற்கான தகுதி அவர்களுக்கு இருந்து, அந்தத் தகுதியோடு அவர்கள் விண்ணப்பிப்பார்களேயானால், அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது பற்றி அரசு பரீசீலிக்கலாம்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு நிதியுதவி பெறக்கூடிய தனியார் பள்ளிகள், கல்லூரிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள் பல வருடங்களாகப் பணியாற்றியும்கூட, அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பதும், அதைவிட ஒவ்வோராண்டும் பள்ளித் தேர்வு முடிந்தவுடன் அவர்களை வேலையிலிருந்து நிறுத்திவிட்டு, பிறகு மீண்டும் பள்ளி, கல்லூரிகள் திறக்கப்படுகிறபோது, புதிய ஆசிரியர்களாக அவர்களை எடுக்கக்கூடிய நிலைமையும் நீடிக்கிறது. அதுவும், அரசு உதவிபெறும் கல்லூரிகளிலே இதுபோன்ற நிலைமை இருப்பதால், அந்த ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில் அவர்கள் நிரந்தரமாக்கப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. **அன்பழகன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது நிலையான பணியிடமாக இருந்தால், அரசாங்கம் நிதி வழங்குவது— ஏற்கெனவே அந்த அடிப்படையில் ஒரு ஆசிரியருக்கு வழங்கப்பட்ட அந்த இடத்தில் ஒருவர் முறைப்படி நிரப்பப்படுவாரேயானால் அவருக்கு அந்தப் பணி நிலையானதாகி ஊதியம் கிடைத்துவிடும். அரசு அங்கீகரிக்காத பணிகளுக்கு ஆசிரியர்களை எடுப்பார்களேயானால், அந்தப் பணி நிலைபடுத்தப்பட்ட பணியாக அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிற காலக் கட்டம் வரையில், அது அந்த நிர்வாகத்தைப் பொறுத்து அவர்களுடைய வசதியைப்பொறுத்து தற்காலிகமாக வைக்கப்படும்.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் வாரிசுகள் பலபேர் நிலமற்ற ஏழைகளாக இருக்கிறார்கள். பலபேர் ஆசிரியர் பயிற்சி பெற்றிருந்தும்கூட, பல ஆண்டுக் காலமாக வேலை கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு என்று ஒதுக்கீடு செய்கின்ற முன்னுரிமை அதிகப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் பிள்ளைகள் என்ற முறையில் முன்னுரிமை வழங்குவது என்பது சட்டப்படியும், வேறு சில நியாயத் தின்படியும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்காது என்றுதான் அரசு கருதுகிறது. ஆனால் பணியில் இருக்கிறபோது இறந்து விடுகிற அப்படிப்பட்ட ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு குறைந்தபட்சம் ஆசிரியர் பயிற்சி பெற்ற தகுதி இருக்கு மானால் அவர்களுக்கு உடனடியாக வேலை வழங்க இந்த அரசு முன்வந்திருக்கிறது. ஆனால் ஆசிரியர் அல்லாத வேறு வேலைக்கு அவர்கள் விண்ணப்பிப்பார்களேயானால், ஆசிரியர் பயிற்சித் தகுதி இல்லாதவர்களாக இருப்பார்களே யானால், அந்தப் பணியிடங்கள் மிகவும் குறைவாக இருப்ப தால் அந்தந்தப் பணிகளில் உடனடியாக அவர்கள் நியமிக்கப் பட முடியவில்லை. எனவே இறந்துபோன ஆசிரியர்களுக்கு என்று உள்ள சலுகையை ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு என்று வழங்குவது எளிதல்ல.

## தேன்கனிக்கோட்டா வட்ட தலைநகரில் நீதிமன்றம் ஏற்படுத்துதல்

*8125. திரு. டி. சி. விஜயேந்திரய்யா :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தருமபுரி மாவட்டம், தேன்கனிக் கோட்டா வட்ட தலைநகரில் நீதிமன்றம் ஏற்படுத்த அரசு மேற்கொண்டி ருக்கும் நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

9-15 மணி

திரு. டி. சி. விஜயேந்திரய்யா : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஏற்கெனவே தேன்கனிக்கோட்டை சப் தாலுக்காவாக இருந்தது. அப்போது அங்கே 'தேர்ட் க்ளாஸ்' மாஜிஸ்ட்ரேட் கோர்ட் நடந்துகொண்டிருந்தது. ஆனால் ஜுடிசியரி செப்பரேட்டாக ஆனதற்குப்பிறகு தனித்தாலுக்காவில் மட்டும் இயங்கவேண்டும் என்று, அங்கே இருந்த 'தேர்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்-ஐ எடுத்து விட்டார்கள். அது தனித் தாலுக்காவாக கடந்த 25 வருடங் களாக இயங்கி வருகிறது. இருந்தாலும் இது வரையில் பல முறை கேட்டும் இதே மாதிரி அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்கிறார்களே தவிர அதை ஏற்படுத்தவில்லை.



அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் இந்த வருடத்திலேயே இதைக் கொண்டுவர ஏற்பாடு செய்வார்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் தேன்கனிக் கோட்டையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைப்ப தற்கான செயற்குறிப்பு உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருப்பதாகவும் அது தொடர்பாக உயர்நீதிமன்றம் விரைவில் முடிவான பதிலை அனுப்புவதாகவும் 1990 ஆம் ஆண்டு மே மாதத்தில் தெரிவித்து இருக்கிறது. மேலே குறிப்பிடப்பட்ட செயற்குறிப்பு உயர் நீதி மன்றத்திடமிருந்து வரப்பெற்றதும் அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. சி. விஜயேந்திரய்யா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது பல விண்ணப்பங் கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தாலுகாவாக அமைக்கப் பட்ட பிறகு அங்கே மாஜிஸ்ட்ரேட் கோர்ட் கட்டப்பட வேண்டும் என்று சொல்லும் இடத்தில் ஒரு கூடம், இருக்கிறது, அதிலே தேவையான பொருட்கள் என்ன வேண்டுமென்றாலும் அந்த ஊர்ப் பொது மக்கள் கொடுக்கத் தயாராக இருப்பதாக எவ் வளவோ மனுக்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால் இது வரையில் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. எனவே அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்டுக்கொள்ளவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி முடிவான கருத்து தெரிவிக்க வேண்டியது உயர்நீதி மன்றம். உயர்நீதிமன்றம் தன்னுடைய கருத்தை மே மாதத்தில் அனுப்புவதாகத் தெரி வித்து இருக்கிறார்கள். அவர்களிடத்திலே மீண்டும் வலியுறுத்தி உடனடியாக பதிலைப் பெற்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் அங்கே இருக்கின்ற வசதிகளை வைத்துக்கொண்டு அந்த உயர்நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பின்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கான முயற்சியை அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை போன்று தமிழகத் தில் எத்தனை தாலுக்கா தலைநகரங்களில் நீதிமன்றங்கள் இல்லாமல் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்துத் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

[1991 சனவரி 22

திரு. அ. வே. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை, வட்ட தலை நகராகக் கடந்த 15 ஆண்டுகளாகச் செயல்பட்டுக் கொண்டு வந்தாலும் அங்கே குற்றவியல் நீதிமன்றம்தான் செயல்பட்டு வருகிறது; உரிமையியல் நீதிமன்றம் இல்லை என்று பொதுமக்களிடமிருந்து அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளது. எனவே அங்கே உரிமையியல் நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டையைப் பொறுத்த வரையில் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தரலாம். ஆயினும் உளுந்தூர்பேட்டையைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

உதகமண்டலத்தில் நிதிமன்ற வளாகம் கட்டுதல்.

*9355—திரு. எச். எம். ராஜு :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

உதகமண்டலத்தில் எல்லா நீதிமன்றங்களும் ஒரே கட்டிடத்தில் செயல்படும் வகையில் நீதிமன்ற வளாகம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. உதகமண்டலத்தில் ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்த , நூற்றாண்டு கடந்த ஒரு மிகவும் பழைய கட்டடத்தில் சார்நீதி மன்றம் இயங்கி வந்த இடத்திலே தற்போது மாவட்ட நீதி மன்றமும், உரிமை இயல் நீதி மன்றமும் போதிய வசதிகள் இல்லாமல் இயங்கி வந்துகொண்டிருக்கிறது. மேலும் குற்றவியல் நீதிமன்றம் ஒன்று ஒரு பழங்காலக் கட்டடத்தில் அரை கிலோ மீட்டர் தூரத்தில் இயங்கி வருகிறது. தற்போது தாவாக்களும் குற்றங்களும் அதிகரித்து வருவதாலும் மாவட்ட மக்களுக்கு பயன்படும் வகையில் எல்லா நீதி மன்றங்களும் ஒரே கட்டடத்தில் தக்க வசதிகளுடன் செயல்படும் வகையில் நீதிமன்ற வளாகம் ஒன்று இந்த ஆண்டில் அரசு நிறுவ முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-20 மணி.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உதகமண்டலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தும் செயற் குறிப்பை அரசு பரிசிலித்தது. இதற்



1991 சனவரி 22]

காகும் தொகை, இந்த லேண்ட் அக்குவிசிசன் மற்றும் அதில் ஏற்படக்கூடிய செலவு ரூ.1,03,79,800 என்று அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. இவ்வளவு செலவு செய்ய வாய்ப்பு இல்லாததனால், அரசாங்கத்தின் இடத்திலேயே கட்ட முடியுமா என்ற ஒரு குறிப்பு ஆராயப்பட்டது. ஜெயில் ஹில் என்ற இடத்தில் 22 செண்ட் நிலம் உள்ளதாகவும், அதில் நீதிமன்றக் கட்டடம் அமைக்க முடியுமா என்று பரிசீலிக்கப்பட்டது. ஆனால் அந்த இடம் போதுமானதாக இல்லை என்று இப்போது தெரிவிக்கப்பட்டு இருக்கிற காரணத்தினாலே மீண்டும் தனியார் இடத்தைக் கையகப்படுத்துவதற்கு செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கே இடம் கையகப்படுத்துவதற்கு, லேண்ட் அக்குவிசிசன் காம்பன்சேசன் அதிகமாகவும், இடம் கிடைப்பது அரிதாகவும் இருக்கின்ற காரணத்தால் கொஞ்சம் கால தாமதம் ஏற்பட்டு வருகிறது.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்னும் எத்தனை ஆண்டுக்குள் இந்த வளாகம் வரும் என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடனடியாக வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இந்த இடத்திற்கு மாத்திரம் ஒரு கோடி ரூபாய் என்பது சாத்தியமாக இல்லை. நிதி நிலைமை அனுமதிப்பதாக இல்லை. ஆனால் கூடுமான வரையில் இதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற அளவில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. .

திரு. மு. கு. கரீம்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உதகமண்டலத்தில் அத்தகைய புது கட்டடம் வருகின்ற நேரத்தில் பிளான்டேஷன் லேபர் கோர்ட்டையும் அதில் கொண்டு வர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் அடிக்கல் போட்டு கட்டடம் எழுப்பிய பிறகு அதைப் பற்றி கவனிக்கலாம்.

சேலம்—பெங்களூர் அகல ரயில் பதை.

*10464—திரு. வ. முல்லைவேந்தன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலத்தில் இருந்து தர்மபுரி வழியாக பெங்களூருக்கு அகல ரயில்பாதை அமைக்க மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): சேலத்திலிருந்து தர்மபுரி வழியாக பெங்களூருக்குச் செல்லும் மீட்டர் கேஜ் ரயில் பாதையை அகலப் பாதையாக மாற்றியமைப்பதற்காக 1981 மற்றும் 1982ஆம் ஆண்டுகளில் சர்வே தென்னக இரயில்வேயால் தயாரிக்கப்பட்டு அறிக்கை 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரயில்வே வாரியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. இரயில்வே வாரியத்திற்கு அதனை மீண்டும் தற்போதைய நிலைக்கேற்றவாறு திருத்தி அமைத்து அனுப்ப இருப்பதாக தென்னக இரயில்வே பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் என்பது தமிழ்நாட்டில் மிகப் பெரிய வளர்ந்துவரும் நகரமாகவும் அதே நேரத்தில் தர்மபுரி வழியாக ஹோசூர் சென்று அங்கிருந்து பெங்களூருக்கு வருகின்ற நிலையில் இருக்கின்றது. அந்த ஹோசூர் பகுதி மிகப் பெரிய தொழில் பேட்டைபகுதியாக வளர்ந்து வருகின்ற காரணத்தினால் அதே நேரத்தில் டீசல் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு போன்றவைகளை எல்லாம் குறைக்கின்ற வகையிலும், பயணிகள் பயன் அடையும் வகையிலும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலும் மாநில அரசு மத்திய அரசை மிக விரைவாக அந்த திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையில் வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்தப் பல்வேறு அம்சங்களுடைய அடிப்படையிலேதான் இந்த மீட்டர் கேஜ் பாதையை பிராட் கேஜ் பாதையாக மாற்ற வேண்டுமென்ற திட்டத்தை தமிழக அரசு சிபாரிசு செய்து ரெயில்வே வாரியத்திற்கு அனுப்பி இருக்கின்றது. 1990—91 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் மேற்படி சர்வே அறிக்கையை தற்போதைய நிலைக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க ரெயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்குறித்த சர்வேயின் விவரமான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது என்றும் விரைவில் அது ரெயில்வே வாரியத்திற்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது என்றும் தென்னக ரெயில்வே பொது மேலாளர் தெரிவித்திருக்கின்றார். விரைவு நடவடிக்கையாக நம்முடைய அரசு அதை வலியுறுத்தும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இதுபோன்ற எந்தெந்த வழித் தடங்களில் அகல ரெயில்பாதை அமைக்கவும், புதிய ரெயில் பாதை போடவும் வலியுறுத்தப்பட்டுள்ளது? எந்தெந்தத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9-25 மணி.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் வலியுறுத்தலாம்.



திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நம்முடைய முன்னாள் ரெயில்வே அமைச்சர் திரு. ஜார்ஜ் பெர்னான்டஸ் தாம்பரத்திலே இரட்டை ரெயில் பாதைத் துவக்க விழாவிலே கலந்துகொண்ட போது, அமைச்சரோடு பேசிய நேரத்தில் 'கொங்கன்' ரெயில் கார்ப்பரேஷன் போன்று தமிழ்நாட்டிலுள்ள ரெயில்வேயை விரிவுபடுத்த கார்ப்பரேஷன் அமைக்கப்பட வேண்டுமென்ற ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததே, அது தற்போது எந்த நிலையில் உள்ளது? கடலூரிலிருந்து சேலம் வரையுள்ள குறுகிய ரெயில் பாதையை அகல ரெயில் பாதையாக ஆக்க, இந்த ஆண்டு இந்த அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, அதற்குரிய ஏற்பாட்டைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல அந்த நிகழ்ச்சியில் அப்படி எல்லாம் பேசப்பட்டது. அது இன்றைக்கு எந்த நிலையில் கருத்துரு பெற்றுள்ளது என்கிற தகவல் என்னிடத்தில் இல்லை. கடலூரிலிருந்து சேலம் வரை செல்லக்கூடிய இருப்புப் பாதையை அகல இருப்புப் பாதையாக மாற்றுவது குறித்தும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த தகவலும் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெங்களூருக்கு அகல ரெயில் பாதை அமைக்கும் திட்டத்தைப்பொறுத்தவரையில், அது முழுமையாகப் பயன்பெற, கரூரில் இருந்து நாமக்கல், ராசிபுரம் வழியாக புதிய அகல ரெயில் பாதை அமைக்கப்பட வேண்டும். அது அமைக்கப்பட்டால்தான் தென் மாவட்டங்களிலிருந்து செல்லக் கூடியவர்கள் புதிய அகல ரெயில் பாதையை பயன்படுத்தி பெங்களூருக்கு மட்டுமல்லாமல் சென்னைக்கு வரவும் வாய்ப்பு ஏற்படும், இதன் மூலம் 30 கிலோமீட்டருக்கு மேல் பயணத் தூரம் குறையும் என்பதால் தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தி இந்த புதிய ரெயில் வழி திட்டத்தையும் நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் வழியாக வருகின்ற காரணத்தால் இந்தத் திட்டம் சாத்தியமா என்பதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. எஸ்.டி. உகம் சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மத்திய அரசு வில்லிவாக்கத்திலிருந்து அம்பத்தூருக்கும், செங்கல்பட்டு நகரத்திலிருந்து விழுப்புரத்திற்கும் இரட்டை ரெயில் பாதையாக மாற்றியமைக்க ஏற்பாடு செய்திருக்கிறது. ஆனால் அவைகள் தற்போது நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா? அப்படி என்றால் மீண்டும் மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன திட்டம் நிறுத்தப்பட்டதா என்கிற தகவல் என்னிடத்தில் இல்லை. அப்படி ஏதாவது தடங்கலோ அல்லது மெதுவாக வேலை செய்யக்கூடிய நிலைமையோ இருந்தால் விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று நம்முடைய அரசு ரெயில்வே வாரியத்தை வலியுறுத்தும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எங்கெங்கு புதிய ரெயில் தேவையோ அங்கெல்லாம் விடலாம் என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தொகுதிக்கு பக்கத்திலுள்ள திருப்பூர் நகரத்திலுள்ள லட்சக்கணக்கான இளைஞர்கள் சுமார் 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் செல்ல வேண்டியிருக்கிறது. எவ்வளவுதான் பஸ்கள் விட்டாலும் அவர்களுக்கு அவை போதுமான அளவில் இல்லை. சென்னையிலே இருப்பதுபோல திருப்பூரில் 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு எலக்ட்ரிக் ரெயில் விட்டால் நிச்சயமாக போக்குவரத்துக்கு இன்னும் வசதி வாய்ப்புகள் அதிகமாக ஏற்பட வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதைத் தீவிரமாகப் பரிசீலித்து—கோவை மாவட்டத்துக்காரரான அவர் போக்குவரத்துத் துறை அமைச்சராகவும் இருக்கிற காரணத்தால்— அவருடைய காலத்திலேயே இதற்கு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். அவருடைய தொகுதியை ஒட்டிய பகுதியாக இருப்பதால்அவருடைய தொகுதி மக்களுக்கும் இது அரியவாய்ப்பாக இருக்கும். அப்படி இதற்கு ஏற்பாடு செய்கின்ற நேரத்தில் ......(சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வட்டாரத்திலே ஓட்டுவதற்கு புது விதமான ரெயில் கண்டுபிடிக்க வேண்டும். (சிரிப்பு).

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம்—பெங்களூர் மீட்டர்கேஜ் ரெயில் பாதையை அகல ரெயில் பாதையாக அமைக்க அரசு எடுத்த முயற்சியை இங்கே அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதுபோல 1978-ல் தர்மபுரி மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுவின் தீர்மானத்தின் மூலமாக ஒகேனக்கல், தர்மபுரி, மொரப்பூர், அரூர், தீர்த்தமலை, திருவண்ணாமலை வழியாக சென்னை—பாண்டி தொடர்புக்கும் ரெயில் பாதை அமைக்கும் திட்டம் தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டது. இதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவரவர்களே, அது பற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

9-30 மணி.

திரு. எஸ்.ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆமை வேகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் திண்டுக்கல்—கரூர் அகல ரயில்பாதையைத் துரிதப்படுத்தி, எந்த ஆண்டில் அது முடிவடையும் என்பது குறித்து தமிழக அரசுக்குத் திட்டவட்டமான அறிவிப்பு மத்தியிலிருந்து வந்தது உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவரவர்களே, பல இடங்களில் நில ஆர்ஜிதங்கள் தடைப்பட்டு அல்லது உயர்நீதி மன்றத்திற்குச் சென்றிருந்த காரணத்தால் வேகம் கொஞ்சம் தடைப்பட்டு, ஆமை வேகமாக இருந்து கொண்டிருந்தது. இப்போது அந்தத் தடைகள் எல்லாம் நீக்கப்பட்டு, வேகமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. வி. இராமசாமி : பேரவைத் துணைத் தலைவரவர் அவர்களே, தூத்துக்குடி--கரூர் அகல ரயில் பாதைத் திட்டம் ஆமை வேகத்திலே நடந்து கொண்டிருக்கிறது. கரூர்—திண்டுக்கல் வரை ஓடுகின்ற அந்த வண்டி, மதுரை, தூத்துக்குடி வரை சென்றால் மேலும் நல்ல முறையில் ஓடும் என்று கருதுகிற நிலையில் அந்த வேலையில் துரிதம் இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறது. அரசு அதைத் துரிதப்படுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவரவர்களே, துரிதப்படுத்தலாம்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓடும் இரயில்கள் திருவனந்தபுரம் டிவிஷனில் இருப்பதால், அங்கே மலையாளி-தமிழன் என்ற வேற்றுமையில் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கேயிருந்து பெங்களூருக்கும் பம்பாய்க்கும் இரண்டு ட்ரெயின்கள் ஓடுகின்றன. அதற்கு 'கோட்டா' கூட கொடுப்பதில்லை. அந்த அளவு மோசமாக இருப்பதால், அதை மதுரை டிவிஷனில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் அதை மதுரை டிவிஷனில் சேர்க்க வேண்டுமென்று ஏற்கெனவே நம்முடைய அரசின் சார்பில் ரயில்வே துறைக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அதற்குரிய பதிலும் சமீபத்தில் தான் தமிழக அரசுக்கு வந்திருக்கிறது. அவர்கள் சொல்லியிருக்கும் கருத்துப்படி திருவனந்தபுரம்தான் அவர்களுக்கு

எல்லா வகையிலும் வசதியானது. சமீபத்தில் இருக்கும் இடம், போக்குவரத்து மற்றும் ரயில்வே துறையினுடைய நிர்வாக வசதிக்கு திருவனந்தபுரத்தைச் சிறந்ததாகக் கருதுகிறார்கள். எனவே மதுரையோடு சேர்க்க இயலாது என்று தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் ரிசர்வேஷன் போன்றவைகளில் குறைபாடுகள் இருக்குமானால் அவைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, அகல ரயில் பாதை பற்றிப் பலர் பலவிதமாகச் சொன்னார்கள். கரூர்—திண்டுக்கல் ரயில் பாதை போட்டு, அங்கே பேசஞ்சர் ரயில் ஓடுகிறதா? அப்படி என்றால் அதில் பேசஞ்சர்கள் போகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, the only pair of passenger trains scheduled to run on Karur-Dindigul line stand cancelled temporarily.

### இராமநாதபுரத்தில் அரசு கட்டும் வீடுகள்.

*11990—திருமதி ரமணி நல்லதம்பி:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், இராமநாதபுரம் தொகுதி, கோட்டைக் கருங்குளம் மின்உபநிலையம் அருகில் சுமார் 50 வீடுகளை அரசு கட்டி முடித்துவிட்டதா?

(ஆ) அவ்வாறாயின் மக்கள் எப்போது அவைகளில் குடியமர்த்தப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் இங்கே குறிப்பிட்டிருக்கின்ற அந்த வீடுகள் அனைத்தும் எஸ். சி. சமுதாயத்தினருக்காகக் கட்டப்பட்ட வீடுகள். பல ஆண்டுகளாக அவை மேற்கூரை இல்லாமல் நான்கு சுவர்களோடு நின்று கொண்டிருக்கின்றன. மேலும் அவை ஊருக்கு வெளியே தள்ளி இருக்கின்றன. அதிலே போட்ட முதலீடு வீணாகிக் கொண்டிருக்கிறது. எனவே அவற்றைக் கட்டி,



யாருக்காக அவை கட்டப்பட்டதோ அவர்களை அதிலே குடியேற்ற அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கக்கூடிய இடத்தில் வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்ற கேள்விக்குத்தான் 'இல்லை' என்ற பதில் சொல்லப்பட்டு உள்ளது. ஆனால் தாழ்த்தப்பட்டோருக்காகக் கட்டப்பட்ட வீடுகளாகவோ அல்லது வேறு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளாகவோ உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய வீடுகள் இருக்கலாம் என்று கருதுகிறேன். ஆனால் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இராமநாதபுரம் கோட்டைக்கருங்குளம் உப மின் நிலையம் அருகில் கட்டப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

9-35 மணி

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதைப்போல பல்லாண்டு காலமாக வெறும் சுவர்களாக நின்று கொண்டிருக்கின்றன. அதை யார் கட்டி இருந்தாலும் அதன் பயன் மக்களைச் சென்றடைகின்ற வகையிலே அந்தப் பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். அது போலவே மீனவர்களுடைய குடியிருப்புகளும் இடிந்து பாழடைந்த நிலையில் இருக்கின்றன. அவைகளையும் பழுது பார்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: துணைத் தலைவர் அவர்களே, அது எந்தத் துறையின் சார்பில் கட்டப்பட்டது என்பதைக் கவனித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். தமிழ்நாட்டில் ராதாபுரம் தொகுதியைப் பொறுத்தவரையில் தற்போது சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் வீடுகள் 500 நகர்ப் பகுதிகள், கிராமப் பகுதிகளில் கட்டுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையில் ராதாதபுரம் தொகுதியிலுள்ள வள்ளியூரில் சுமார் 14½ ஏக்கர் நிலத்தில் 239 வீடுகள் கட்டுவதற்கான நடவடிகைக்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

### நலிவுற்ற கலைஞர்களுக்கு உதவி வழங்கும் திட்டம்.

*1821. திரு. மு. இராமநாதன்:—மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாடகக் கலைஞர்கள், இசைவாணர்கள், நாதஸ்வரக் கலைஞர் உள்ளிட்ட கலைஞர் பெருமக்களுக்கு உதவி வழங்கும்

திட்டம் செயல்பட்டு வருகின்றதா ?

(ஆ) இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் கலைஞர்கள் எத்தனை பேர் ?

(இ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 2,467 நலிவுற்ற கலைஞர்களுக்கு ரூ. 250 வீதம் மாதா மாதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. தமிழில் சிறந்த புதிய நாடகத்தைத் தயாரிக்கும் கலைக் குழுவிற்கு ரூ. 10,000 உதவி மானியமாக வழங்கப்படுகிறது.

(இ) வாழ்வில் நலிந்த வயோதிகக் கலைஞர்களுக்கு உதவி மானியத் திட்டத்தின் கீழ் இசை, நாட்டியம், நாடகம், ஓவியம், சிற்பம் ஆகிய கலைத்துறைகளில் சிறப்புப் பணியாற்றிய 58 வயதுக்கு மேற்பட்ட மாத வருமானம் ரூ. 400-க்கு மிகாமல் வறுமையில் வாடும் கலைஞர்களுக்காக இத்திட்டம் 1961-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் மாதா மாதம் ரூ. 75 என்று 31-3-1980 வரையில் தரப்பட்டது. பிறகு ரூ. 150 ஆக உயர்த்தி 31-3-1989 வரையில் தரப்பட்டது. 1-4-1989 முதல் ரூ. 250 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கலைஞர்களுக்கு முதற்கண் மூன்றாண்டுகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு இதன் தொடர்ச்சியாக அவர்களுடைய வாழ்நாள் முழுவதுமாக இப்பொழுது வழங்கப்படுகிறது. அக்கலைஞர்கள் மறைந்த பிறகும் அவர்களுடைய மனைவி உயிரோடு இருப்பார்களேயானால் இந்நிதியுதவியை நீட்டிப்புச் செய்து தொடர்ந்து வழங்கவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. மு. இராமநாதன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழ் இசையைத் தேனினும் இனிய வாய்ப்பாட்டு மூலமாகவும், நாதஸ்வரம் உள்ளிட்ட பிற இசைக் கருவிகள் மூலமாகவும் இசைத்து வந்த கலைஞர்கள் இன்று மேலைநாட்டு இசையினுடைய தாக்கத்தினாலும் ஆதிக்கத்தினாலும் பாதிக்கப்பட்டு அவை மெல்ல அழிந்து வருகின்றன என்கின்ற ஒரு குறைபாடு அரசினுடைய கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு இருக்கின்றதா ? முதல்வர் அவர்கள் இப்போது சொன்ன பதிலினுடைய அடிப்படையிலே, நலிந்து வரக்கூடிய இசைக் கலைஞர்களுக்கு எல்லாம் நாடகத் துறையாக இருந்தாலும் வாய்ப்பாட்டாக இருந்தாலும் பிற இசைக் கருவிகளை இசைக்கக்கூடிய இசைவாணர்களாக இருந்தாலும் அவர்களுக்கு எல்லாம் தமிழக அரசு செய்து தரக்





கூடிய உதவியைப் பற்றிச்சொன்னதற்கு நன்றி தெரிவிக்கின்றேன்.
என்றாலும் கூட, இப்போது தமிழர்களுடைய தனித் தன்மை
வாய்ந்த கிராமியக் கலைகள், இசைகள் புதிய ஆர்க்கெஸ்ட்ரா
போன்ற ஒரு ஆதிக்கத்தினால் நலிந்து வருகிறது என்பதை அரசு
அறிந்து, அவற்றைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை மேற்
கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர்
அவர்களே, நலிந்த இசைக் கலைஞர்களுக்குத் தான் உதவி செய்ய
முடியும். நலிந்து வரும் இசைக்கு (சிரிப்பு) பண உதவி செய்து
அதைக் காப்பாற்ற முடியாது. வேறு மாதிரியான வகையிலே
தான், அதற்குக் கர்நாடக இசைக் கலைஞர்கள் தேர்ந்தெடுக்க
வேண்டும்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, முதல்வர் அவர்கள் கிராமியக் கலைகளைப் பற்றியும்
குறிப்பிட்டார்கள். இதனுடைய தொடர்பாக பம்பை, உடுக்கை,
உறுமி மேளம், தாரை, தப்பட்டை, கொம்பு, குழல் போன்ற
இசைக் கருவிகளை இசைக்கும் கலைஞர்களுக்கு ஆதரிப்பார் அற்ற
ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஏதோ வானொலியிலே அல்லது
ஒளிக்காட்சியிலே பழம் தமிழ்க் கிராமியக் கலைகள் என்று காட்
டப்படுகின்ற காட்சிகளாகத் தமிழர்களுடைய இசை பலவீனப்
பட்டுப் போய்க்கொண்டு இருக்கின்றது என்பதை அரசு அறியுமா?
மேலை நாட்டினுடைய இசையை நாம் வெறுப்பவர்கள்
அல்ல ; ஆனால் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு தனித் தன்மை
வாய்ந்த இசை இருக்கின்றது ; இசைக் கருவிகளும் இருக்கின்றன;
ஆகவே தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட இசைக் கருவிகளை, இசை
வாணர்களைப் பாதுகாக்கச் சிறப்பு ஏற்பாடு ஏதேனும் செய்ய
அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர்
அவர்களே, என்ன செய்வது. இன்று நாட்டில் ரசிகத்தன்மையில்
இராமநாதனைப் போன்ற மீசை வைத்திருப்பவர்கள் மாத்திரம்
தான் அந்த உடுக்கை, பம்பை போன்றவைகளையெல்லாம் ரசிக்க
முடிகிறது. (சிரிப்பு).

9-40 மணி

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, சினிமாத் துறையைச் சிறப்பிக்க
வேண்டும் ; சிறந்த சினிமாக்களும், சிறந்த சினிமா கலைஞர்களும்
சிறப்பிக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு பரிசு அளித்து
சிறப்பிக்கிறது. அதைப் போலவே நசிந்து வரும் நாடக உலகத்
தைக் காப்பதற்கு, சிறந்த நாடகங்களுக்கும், நாடகக் கதாசிரியர்
களுக்கும், நாடக நடிகர்களுக்கும் பரிசு வழங்கி பண முடிப்பு
வழங்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இப்போதே இயல், இசை, நாடக மன்றத்தின் சார் பாக இது போன்ற ஒரு பரிசுத் திட்டம் இருக்கிறது. அதில் இந்த ஆண்டு கூட எஸ்.வி.ஆர். நாடக மன்றத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட '' குலோத்துங்க சோழன் '' என்ற நாடகத்திற்கு ரூபாய் பத்தாயிரம் பரிசளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினருடைய அரிய ஆலோசனையை, நாடகத்துறைக்கும் விரிவுபடுத்துவதற்கு இயலுமா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் வி. தமைராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நலிவுற்ற நாடகக் கலைஞர்களை ஊக்கப் படுத்துகிற விதத்திலே, அரசினுடைய நலத் திட்டங்களை விளக்கு வதற்கு, குடும்பநல முகாம்களில் அதனுடைய சிறப்புகளை எடுத்துச் சொல்லும் விதத்தில் நாடகக் கலைஞர்களுக்கு முன்னுரிமை அளித்து அரசு ஊக்கப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, குடும்பநலத் திட்டம் போன்றவற்றை பிரச்சாரம் செய்வதற்கு ஏற்கெனவே நாடகக் குழுக்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன.

திரு. குமரி அனந்தன் ; மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, முதல்வர் அவர்கள் இந்தக் கலைஞர்களைப் பற்றி மிகுந்த அக்கறையோடு அளித்த பதிலிலே மகிழ்ச்சிகரமாக பலர் இணைக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவித்தார்கள். ஆனால் மெல்லிசை என்பது அண்மையிலே நாடெங்கும் பரவி வருகின்றது. அத்தகைய மெல்லிசை கலை நிகழ்ச்சிகளை நடத்துகின்ற கலைஞர்களும் இதிலே இணைக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, நலிந்த கலைஞர்களுடைய வறுமை நிலையைப் பற்றிய விவரங்களை இந்த இயல், இசை, நாடக மன்றத்திற்கு அளிப்பார்களேயானால் அவற்றையும் பரிசீலித்து அவர்களையும் அந்தப் பட்டியலிலே இணைத்து அவர்களுக்கும் உதவி வழங்கப் படும்.

திரு. செ. நூர் முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் கலைஞர்களுக்கு நல்ல வாழ்வு கிடைக்கும் என்ற எண்ணத்தில் ஏராளமான மனுக்கள் நலிந்த கலைஞர்களால் இன்றைக்கு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அப்படி அனுப்பப்பட்டிருக் கின்ற மனுக்கள் எத்தனை இப்போது நிலுவையில் இருக்கின்றன? அவைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களுக் கெல்லாம் வாழ்வை அளிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, நான் தொடக்கத்திலே விடை அளித்தபோது, இப் போது உதவி பெறுகிற கலைஞர்கள் 2,467 பேர் என்று குறிப் பிட்டேன். இதற்கு முன்பெல்லாம் ஒவ்வொரு ஆண்டும் 100 பேர் என்ற அளவிற்கு நலிந்த கலைஞர்களுக்கு உச்சவரம்பு வைத்து அவர்கள் இந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு 200 பேராக அது ஆக்கப்பட்டது. அது 300 பேர் என்ற அளவிற்கு இப்போது ஆக்கப்பட்டு இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. மேலும் தேவைப்படுமானால் அதைப் பற்றி இயல், இசை, நாடக மன்றம் பரிசீலித்து அரசுக்கு அறிவித்தால் அவற்றை ஏற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.

திரு. பெ. சீனிவாசன் : துணைத் தலைவர் அவர்களே, திரைப்படக் கல்லூரியை அரசாங்கம் நடத்துவதைப் போல நாடகக் கலையை தற்கால முறைகளுக்கு ஏற்றவகையில் அபி விருத்தி செய்வதற்கேற்ற முறையில் ஒரு நாடகக் கல்லூரியை தமிழ்நாடு அரசு தொடங்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இப்போது அத்தகைய உத்தேசம் எதுவும் இல்லை.

சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்துதல்

*1962—திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து சைக்கிள் ரிக்ஷாக்களி லும் மோட்டார் பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அரசு அவர்களுக்கு உதவி செய்ய உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர் களே, (அ) மற்றும் (ஆ) : இம்மாநிலத்தில், அன்றாடப் பிழைப்பிற் காகத் தாங்களே சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்களுக்கு அவர்கள் வைத்திருக்கின்ற சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்தவும், சொந்த சைக்கிள் ரிக்ஷா இல்லாமல் வாடகைக்கு சைக்கிள் ரிக்ஷா எடுத்து அன்றாடப் பிழைப்புக்காக ஓட்டுபவர்களுக்கு மோட்டார் பொருத்திய புது சைக்கிள் ரிக்ஷா வாங்கவும், அரசு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் ஒரு வண்டிக்கு ரூபாய் 1,500 மூலதன ஊக்குதவித் தொகையாகவும் மானியமாகவும் மீதியைக் கடனாகவும், கடனுக்குரிய வட்டியில் 7 விழுக்காடு

வட்டி ஊக்குதவித் தொகையாகவும், ஆதி திராவிடர்-பழங்குடியினர் வகுப்பினருக்குக் கூடுதலாக 2 விழுக்காடு வட்டி ஊக்குதவித் தொகையாகவும் வழங்குகிறது. தவணைத் தொகையைத் தவறாமல் உரிய தேதியில் கட்டுபவர்களுக்கு மேலும் 2 விழுக்காடு வட்டியைத் தள்ளுபடியாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்குகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மனிதனை மனிதன் இழுக்கின்ற ரிக்ஷாக்கள் ஒரு காலத்தில் இருந்தது. அந்த நிலைமை மாறி இன்றைக்கு சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைக்கு அரசாங்கம் ஆதிதிராவிடபழங்குடியின மக்களுக்கு அதற்காக மானியம் வழங்கியிருக்கிறது. ஆனால் இந்தத் தொழிலில் அனைத்து இனத்தைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் சென்னை நகரில் இதுபோன்ற அனைத்து சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் கண்டிப்பாக மோட்டார் பொருத்த உதவி செய்யுமா ? அதோடு மட்டுமல்ல, அரசாங்கமே இன்றைக்கு ஆட்டோ ரிக்ஷாக்களை மானியமாக வழங்கிக் கொண்டு வருவதால், சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் அரசு மானியம் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, அரசு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் ரூ. 1,500 மூலதன மானியம் வழங்குகிறது என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். எனவே அதில் எந்த ஐயமும் இல்லை. வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மனிதனை மனிதன் இழுத்துக்கொண்டிருந்த கொடுமை ஒழிக்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்காவது பாராட்டியமைக்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்துவதை அதிகபடுத்த வேண்டுமென்று 837 ஆக இலக்கு இருந்தபோதிலும் கூட, 153 பேர்தான் மோட்டார் பொருத்துவதற்குத் தயாராக முன்வந்தார்கள். எனினும் மொத்தத்திலே பார்க்கும்போது, சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்துதல், மோட்டார் பொருத்திய புதிய சைக்கிள் ரிக்ஷாக்களைப் பெறுதல், அதேபோல ஆட்டோ ரிக்ஷாக்கள், வாடகைக் கார்கள், இந்த வகையில் நம்முடைய இலக்கு 5,032 ஆக இருந்தாலும் கூட, 5217 பேர் இதன் மூலம் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை 10.65 கோடி ரூபாயாகும். ஆதி திராவிட மக்களைப்பற்றி உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மற்ற எல்லாப் பிரிவினருக்கும் தரவேண்டுமென்றும் சொன்னார்கள். இந்த 5,217 பேரில் 1,072 பேர் ஆதிதிராவிட, பழங்குடியினர் என்கின்ற அந்த எண்ணிக்கை விபரத்தையும் நான் சொல்ல



விரும்புகிறேன். தொடர்ந்து பலரும் பயன் பெறுகின்ற வகையில் மிகுந்த எளிய அணுகுமுறையில், எந்தவித சங்கடமும் இல்லாமல் செய்யப்பட்டு, இந்த இலக்கை நாங்கள் எட்டியிருக்கிறோம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அறிவிப்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இன்றைய தினம் பெட்ரோல்-டீசல் தட்டுப்பாடு இருக்கின்ற நிலைமையில், சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்துவதன் மூலம் அதிகமான பெட்ரோல் பற்றாக்குறை ஏற்படலாம். இந்த நிலையில் டீசல், பெட்ரோல் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல் அவர்களுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ? அல்லது அவர்களுக்கு பெட்ரோல் மானியம் வழங்கி, அந்த ரிக்ஷா ஓட்டுகின்ற தொழிலாளர்களை வாழவைக்கும் முறையிலாவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நடவடிக்கைகளை மத்திய அரசுதான் எடுக்க வேண்டும்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆட்டோ, கார் போன்ற வாகனங்களுக்கு உள்ளதைப் போல மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் அவற்றை ஓட்டுபவர்கள் சாலை விதிகளைப் பின்பற்றும் வண்ணம் ஓட்டுநர் லைசென்ஸ் பெற அறிவுறுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது இத்தகைய சைக்கிள் ரிக்ஷாக்களைப் பெறுபவர்களுக்கு உதவியளிப்பதைப் பற்றிய கேள்வியாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்து தனியாக ஒரு வினாவை எழுப்பினால் விடையளிக்க இயலும்.

### மகாபலிபுரம் செல்ல ஹெலிகாப்டர் சர்வீஸ்

*8145—டாக்டர் து. திருமூர்த்தி :

திரு.எஸ்.டி. உகம்சந்த் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு சுற்றுலாக் கழகம் சென்னை விமான நிலையத்திலிருந்து மகாபலிபுரம் செல்ல ஹெலிகாப்டர் சர்வீஸ் இயக்க முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. ஜெஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சுற்றுலாவை வளர்க்க வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மகாபலிபுரம் உலக அளவில் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலமாக விளங்கி வருவதால் சுற்றுலாப் பயணிகளை நாம் கவர்வதற்காக அரசின் மூலமாகவோ அல்லது தனியார் மூலமாகவோ இதுபோன்ற வசதிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்தால் சுற்றுலா மேலும் வளர்வதற்கு வாய்ப்பு இருக்குமென்ற காரணத்தால், அரசாங்கம் அப்படி ஏதாவது நடவடிக்கையெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே பி. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக இப்படிப்பட்ட விமானம், ஹெலிகாப்டர் போன்றவைகளை ஓட்டுவதற்கு இயலாது. அப்படிப்பட்ட திட்டம் சுற்றுலா வளர்ச்சி கழகத்திலே இல்லை. ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல சென்னையிலிருந்து பம்பாய்வரையில் தனியாருடைய விமானம் ஓடத் தொடங்கியுள்ளது. அதைப் போல எதிர்காலத்திலே மகாபலிபுரம், காஞ்சிபுரம் போன்ற இடங்களுக்கு ஹெலிகாப்டர் விமான சர்வீஸ் நடத்துவதற்கும் அப்படிப்பட்ட தனியார்கள் முன்வருவார்கள் என்றே நான் எதிர்பார்க்கிறேன்.

மருதமலை கோவிலைப் புதுப்பித்தல்.

*9960-திரு. யூ.கே.வெள்ளிங்கிரி :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தொண்டாமுத்தூர் தொகுதியில் அமைந்துள்ள மருதமலை கோவிலைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?



மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டம் மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலைப் புதுப்பிக்கும் திட்டம் தொடர்பாக வரைபடங்கள் மற்றும் மதிப்பீடு ஆகியவைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விரைவில் புதுப்பிக்கும் பணி தொடங்கப்படும்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வரைப்படங்கள் தயார் செய்யப்பட்டும் நீண்டகாலமாக காலதாமதமாகி வருவதாக அந்தப் பகுதியில் இருக்கிற பெரியவர்கள் எல்லாம் என்னிடம் வந்து சொன்னார்கள். ஆகவே, விரைவில் அந்தப் பணியை செய்யவேண்டுமென்று என்னிடம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த வரைப்படங்கள் இந்த முறையாவது சரிசெய்யப்பட்டு பணியை முடிக்கவேண்டும். எத்தனை ரூபாய் மதிப்பீட்டில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதையும் எந்தக் கால அளவிற்குள் அது முடிக்கப்படும் என்பதையும் அந்தப் பகுதி மக்கள் என் மூலமாக அறிய விரும்புகிறார்கள். ஆகவே, எவ்வளவு காலத்தில் பணி முடிவுறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தாமதம் இருப்பதாக எனக்கும் தகவல் வந்தது. இந்தத் திருப்பணியைத் தொடங்க வேண்டுமென்று 1985 ஆம் ஆண்டிலேயே மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் அந்த வேலை எடுக்கப்படவில்லை. இதற்கு ஒரு முக்கியமான காரணம், அங்கே ராஜகோபுரத்தை எங்கே கட்டுவது என்ற ஒரு பிரச்சினை வந்தது. அதற்காக குழி தோண்டிய இடத்தில் பாறையும், மண்ணும் சரிந்த காரணத்தால் அங்கே அதனைக் கட்ட முடியாது என்று முடிவு செய்தார்கள். அந்த இடத்தை இப்போது மூடி இருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. ராஜகோபுரம் நீக்கி, அர்த்த மண்டபம், மகா மண்டபம் போன்ற மற்ற வேலைகளுக்கு இன்றைய நிலவரப்படி ஏறத்தாழ ரூ. 33 லட்சம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு மேலே அடுத்த கட்டமாக ராஜகோபுரத்திற்கு 17 அல்லது 18 லட்சம் ரூபாய் ஆகும். ஆகவே, ஏறத்தாழ 50 லட்சம் ரூபாய் செலவில் பணி இன்னும் இரண்டு மாதத்திற்குள்ளே தொடங்கவிருக்கிறது. முடிவதற்கு இரண்டு ஆண்டுக் காலம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பாகச் சொன்னார்கள். புதுப்பிக்கப்படும் என்று. அந்த வேலைகளைச் செய்து முடிக்க

திருப்பணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தத் திருப்பணிக் குழு செயல்படுகின்றதா? அதை அதிகப்படுத்தியிருக்கிறார்களா? அந்தத் திருப்பணிக் குழு இதைக் கண்காணிக்குமா? அல்லது அங்கேயிருக்கக்கூடிய நிர்வாகமே அதை நேரடியாகக் கண்காணித்து, அந்த வேலையைச் செய்து முடிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-55 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, கடந்த 19, டிசம்பர் 1990-ல் புதிய திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. சுந்தர சுவாமிகள் அதற்குத் தலைவராக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த திருப்பணிக் குழு இப்படிப்பட்ட வேலையை எப்படியோ அங்கே செய்து முடிப்பதற்குத் தவறிவிட்டது. ஆனால் இப்போது அமைக்கப்பட்டு இருக்கிற திருப்பணிக் குழுவில் ஏறத்தாழ 15 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில் உள்ள முக்கியமானவர்கள் எல்லாம் அதிலே இருக்கிறார்கள். ஆகவே, கோவில் நிதியிலிருந்தும், அதேபோல் நன்கொடையாளர்களிடமிருந்தும் கிடைக்கக்கூடிய நிதியிலிருந்தும் அந்த வேலை விரைவாக நிறைவேற்றி முடிக்கப்படும்.

**ஊராட்சித் தலைவர்கள் மூலமாகக் கட்டப்படும் இலவச வீடுகள்.**

* 1593—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சித் தலைவர்கள் மூலமாகக் கட்டப்படும் இலவச வீடுகளைக் கட்ட மறுக்கும் ஊராட்சித் தலைவர்களை மீறி அந்தந்த ஒன்றியப் பொறியாளரே கட்ட அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளில் தொகுப்பு வீடுகள் கட்டும் பணி ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. தலைவர்கள் அந்தப் பணியை மேற்கொண்டு நடத்துவதற்கு மறுத்தாலோ, அல்லது தரக்குறைவாக அந்தப் பணிகள் இருந்தாலோ, அதைத் திருப்பி மாற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர் ஒன்றியத்தின் மூலமாக நடத்துவதற்கு ஆணை பிறப்பிக்கலாம். ஆனால் ஒன்றியப் பொறியாளர், அந்த வேலையை மேற்கொள்ள இயலாது. காரணம், அதை ஆய்வு செய்வதும், அளவு எடுப்பதும் அவருடைய பொறுப்பாக இருக்கிற காரணத்தால், வேறு ஒரு பணியாளர் அந்தப் பொறுப்பை ஏற்று நடத்துவார்.





திரு. வீ. தமிழ்மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருந்த கேள்வி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மறுத்தாலோ என்பது அல்ல, சில ஊராட்சி தலைவர்கள் சரியான முறையில் கட்டாமலே, ஆரம்பத்திலே பணத்தைப் பெற்றுக்கொண்டும் விடுகிறார்கள். என்னுடைய தொகுதியில் கூட 8 ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட அந்தத் தொகுப்பு வீடுகள் இன்று வரையில் முடிவு பெறாமலேயே இருக்கின்றன. எனவேதான் அப்படிப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்களுக்குப் பதிலாக ஒன்றியப் பொறியாளரோ அல்லது மாற்று ஏற்பாடோ செய்து, அந்தத் தொகுப்பு வீடுகளைக் கட்டுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்களே, ஒன்றியங்களில் கட்டப்படுகிற வீடுகளுக்கு இடம் தேர்வு செய்வதில் அல்லது செய்யப்படுகின்ற வேலைகளில் தரக்குறைவு இருந்தாலும், வேறு எந்தவித குற்றங்குறைகள் இருப்பினும், அவற்றை மாற்றியமைப்பதற்கு நிச்சயமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் ஒன்றியப் பொறியாளர் அதை ஏற்று நடத்துவாரா என்று அந்த வினாவில் இருந்தது. ஆகையினாலேதான் அதை நான் குறிப்பிட்டேன். அந்தப்பணியை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் ஒன்றியத்தின் மூலமாக நிச்சயமாக நடத்தலாம்.

திரு. வீ. தமிழ்மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது ஒவ்வொரு ஊராட்சிக்கும் 20 தொகுப்பு வீடுகள் தான் வழங்கப்படுகின்றன. அதைக் கொஞ்சம் உயர்த்தி 30 தொகுப்பு வீடுகளையாவது ஒவ்வொரு கிராமத்திற்கும் வழங்குகின்ற வகையில் அந்தத் திட்டத்தை அரசு கொண்டுவர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்களே, பரவலாக எல்லா இடங்களிலும், இந்த வீடுகளைக் கட்ட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அப்படிப்பட்ட ஒரு எண்ணிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது, தேவைப்படின், அவ்வப்போது அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. தி. ரா. மாசிலாமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத் தலைவர்கள், பெரும்பாலும் ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கப்படுகிற வீடுகளைக் கட்டுவதற்கு மறுப்பதற்கு முதல் காரணம், அதற்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற நிதி 14,200 ரூபாய் என்பது போதுமானதாக இல்லை என்பதுதான். ஆகவே அந்த நிதி உதவியை உயர்த்திக் கொடுக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 47 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த 47 ஆயிரம் வீடுகளில் ஏறத்தாழ 25 ஆயிரம் வீடுகளை நானே, அதிகாரிகளோடு சென்று நேரிடையாகப் பார்த்து இருக்கிறேன். அப்படிப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்களையும் கேட்டு அறிந்து இருக்கிறோம், ஒரு சிலர் லாபம் கிடைக்கவில்லை என்றுதான் என்னிடத்திலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். லாப நோக்கத்தோடு ஊராட்சி மன்றத் தலைவருக்கு அந்தப் பணியை நாம் ஒதுக்கவில்லை. அவர்கள் திறமையாகவும் தரமாகவும் செய்து, காலத்தோடு முடிப்பார்கள் என்ற நோக்கத்தோடுதான் அளிக்கப்பட்டு இருக்கிறது. நிச்சயமாக நான் பல இடங்களிலே கூட கேட்டேன். யாருக்குத் தேவை என்கிறீர்களோ, அவர்கள் தெரிவித்துவிடுங்கள். நானே அதிகாரிகள் மூலம் அதைக் கட்டுகிறேன் என்று சொன்னேன். அதிலே லாபம் இருந்தாலும், நஷ்டம் இருந்தாலும், நிச்சயமாக அரசாங்கத்தில் தொய்வு இதிலே இருக்காது என்று குறிப்பிட்டு இருக்கிறேன். யாரும் இதுவரையில் லாபம் இல்லை, அல்லது நஷ்டம் ஏற்படுகிறது, அந்த விட்டைக்கட்ட முடியவில்லை என்று சொல்கிற தகவல் எனக்கு இதுவரையில் வரவில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களால் கட்டப்படுகிற வீடுகள் கடுமையான மழை பெய்தால், ஓர் ஆண்டுக்குள் அத்தனையும் இடிந்து கீழே விழுந்துவிடக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. காரணம் என்னவென்றால், அதில் 40 சதவீதத்திற்கு மேலே அந்தப் பணம் கையாடல் செய்யப்படுகிறது. ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாட்கோ மூலமாக பல காரியங்களைச் செய்து வருகிறார்கள். அந்த அடிப்படையிலே அரசாங்க அதிகாரிகள் வீடுகளைக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ? அல்லது இனிமேல் ஊராட்சித் தலைவர்கள்மூலம் இந்த வீடுகளைக் கட்ட வேண்டாம் என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

10.00–மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் கட்டப்பட்டிருக்கும் கான்கிரிட் வீடுகளைப் பற்றி எனக்கு எந்தவிதமான தகவலும் கிடைக்கவில்லை. சென்ற முறை தி.மு.க. ஆட்சி வந்தது. அப்போது முதல்வர் அவர்கள் அதை அறிமுகப் படுத்தி, அன்றைக்கு கட்டப்பட்ட, திரும்ப இப்போது 2 ஆண்டு



களாக கட்டப்படுகிற ஏறத்தாழ 89,000 வீடுகள் அப்படிப்பட்ட நிலையில் இருப்பதாகத் தகவல் இல்லை. உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தில் எந்தப் பஞ்சாயத்தில் இப்படிப்பட்ட வீடுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவிப்பாரேயானால், உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதைப்பற்றி அவர்களுக்கு அறிவிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இப்போது கட்டிய வீடுகள் எல்லாம் எந்த இடத்திலே, எந்த ஊரிலே ஒழுகுகின்றன என்று கேட்டார்கள். என்னுடைய தொகுதியிலே, காங்கேயம் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட பழையக்கோட்டை பஞ்சாயத்தில் புது வெங்கரையான்பாளையம் என்ற ஊரிலே கடந்த ஆண்டு கட்டிய வீடுகளில் பெரும்பகுதி மழை பெய்தால், ஒழுகிக்கொண்டிருக்கின்றன. கொஞ்ச காலத்திலே, ஓராண்டு, ஈராண்டுகளுக்குள்ளாக அங்கே குடியிருப்பவர்களில் பெரும்பகுதியினர் உயிரிழந்து விடுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். அடுத்தபடியாக என்னுடைய காங்கேயம் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட பொத்தியபாளையம் பஞ்சாயத்தைச் சேர்ந்த இல்லியம் புதூர் என்ற ஊரிலே அதே மாதிரிதான். இன்னும்கூட திறப்பு விழா நடத்தவில்லை. ஆனால் அங்கே குடிபோய் விட்டார்கள் குடியிருக்கிற வீடுகளில் மழை பெய்யும்போது ஒழுகுகிறது என்று சொன்னார்கள். நான் கூட நேரடியாகச் சென்று பார்த்தேன். அங்கே வீடுகளில் உள்ளேயே தண்ணீர் நிற்கிறது. ஆகவே அமைச்சரிடம் பெட்டிஷன் கொடுப்பதற்காக பெட்டிஷன் டைப் செய்யக் காலையில்தான் கொடுத்திருக்கிறேன். (சிரிப்பு) ஆகவே அதைக் கொஞ்ச நேரத்தில் உங்களிடத்திலே கொடுத்து விடுவேன். இந்தக் கருத்தை ஆய்வு செய்யவேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொள்வதோடு மட்டுமல்லாமல், நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் 3 முறை நான் வீடுகளைப் பார்ப்பதற்கு வந்திருக்கிறேன். 2. 3 முறை அங்கேயே அதிகாரிகளின் கூட்டமும் நடத்தியிருக்கிறேன். ஒரு முறை கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அதைப்பற்றி என்னிடத்தில் தகவல் தெரிவிக்கவில்லை. இப்போதுதான் தெரிவித்திருக்கிறார். உடனடியாக அதைப் பார்த்து அப்படியிருந்தால், உரிய நடவடிக்கை சம்பந்தப்பட்டவர்கள் மீது எடுக்கப்படும்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1989 டிசம்பருக்கு முன்னாலே கட்டப்பட்ட வீடுகளினுடைய நிலைமையை அரசு ஆய்ந்து, அதிலே கட்டப்

பட்டிருக்கிற—வீடுகள் முக்கால்வாசி போலித்தனமான வீடுகளைக் கட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: துணைத் தலைவர் அவர்களே, இப்போது வீடு கட்டுவதற்கே நமக்கு நேரம் போதவில்லை அதைப்பற்றிப் பிறகு ஆராயலாம்.

ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்

* 8170—திரு. எஸ். ஆர். சிவலிங்கம் :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டத்தில் வறட்சி அதிகமாக இருப்பதால் விவசாயிகளுக்கு இலவசமாக ஆழ்துளைக் கிணறுகள் போட்டுத்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : வறட்சிப் பகுதிகளில், விவசாயிகளுக்கு இலவசமாக ஆழ்துளைக் கிணறுகள் போட்டுத்தரும் திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ்.ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயிகளின் துயர் துடைக்கும் வண்ணம் விவசாயிகளின் கடன் ரூ. 508.15 கோடி தள்ளுபடி செய்யப்பட்டதன் காரணமாக 18.88 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். இந்த வேளாண்மை கிராமப்புற கடன் நிவாரணத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்திய முதல் மாநிலம் நமது தமிழ் மாநிலம்தான். அதுமட்டுமல்லாது 12 இலட்சம் பேர் பயனடையும் விதத்தில் விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்கியதும் நமது முதல்வர் அவர்கள் தான். . . . . . .

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : அதுபோல் சேலம் மாவட்டத்திற்கு மட்டும் வறட்சியின் காரணமாக கருணையோடு மறுபரிசீலனை செய்து இலவச ஆழ்துளைக் கிணறுகள் அமைத்திட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பு குறிப்பிட்டது போல தற்போது இத்திட்டம் அமலில் இல்லை.

10-05 மணி

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு உண்மையிலேயே பலன்தரக்கூடிய இந்த ஆழ்துளைக் குழாய் அமைக்கும் திட்டத்தை அரசு இப்போது நிறுத்தி வைத்திருப்பதாகக் கூறுகிறார்களே, இந்தத் திட்டம் விவசாயிகளுக்கு மிக மிக முக்கியமான திட்டம் என்பதால் நிலத்தடி நீர் அதிகமாக இருக்கக்கூடிய பகுதியிலே இந்தத் திட்டத்தினை நிறைவேற்ற இந்த அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்களே, தற்போதைக்கு இல்லை.

திரு. க. அர்ச்சுனன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் எங்கும் கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் பல இருந்த போதிலும், சேலம், தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் இந்த ஆண்டு கிட்டத்தட்ட 60 சதவீதம் மழைக் குறைவினால் இப்போதே கடுமையான வறட்சி நிலவுகிறது. குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்தப் புள்ளி விவரம் அமைச்சர் அவர்களுக்கும் கிடைத்திருக்கும். ஏற்கெனவே போடப்பட்டிருக்கிற ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் வறண்டு போகக் கூடிய சூழ்நிலையையும் நீங்கள் அறிவீர்கள். எனவே இந்த வறட்சியைப் போக்குகிற வகையிலே உடனடியாகப் போர்க்கால நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தகவலைத் தெரிவித்து, அதிலிருந்து பரிகாரம் தேடலாம்.

* விவசாயப் பண்ணை அமைத்தல்

* 11261 திரு. ரெ. பிச்சைமுத்து :
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரம்பலூர் வட்டத்தில் விவசாயப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர் வட்டத்தில் விவசாயப் பண்ணை அமைக்கும் எண்ணம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. ரெ. பிச்சைமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சரிடம் கேட்ட வினா பெரம்பலூர் வட்டத்தில் விவசாயப் பண்ணை அமைக்கும் செயற் குறிப்பு உள்ளதா என்பது. அதற்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதி விவசாயப் பெருங் குடி மக்கள் அதிகமாக வாழ்கிற பகுதி. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ஏழை எளிய மக்கள் அதிகமாக வாழ்கிற பகுதி. அதனால் விவசாயிகளுக்கு இடு பொருள் கிடைப்பது சம்பந்தமாகவும் அவர்களுடைய மேம்பாட்டையும் கருதித்தான் அங்கே விவசாயப் பண்ணை அமைக்கும் திட்டம் உள்ளதா என்று நான் கேட்டேன். ஆகவே அது குறித்து அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதையும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, அங்கு அமைக்கப்படாது என்பதற்குத்தான் இல்லை என்று பதில் சொன்னேன். தமிழ்நாட்டில் 44 அரசு விதைப் பண்ணைகள் இருக்கின்றன. திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நெய்க்குப்பைப்புதூர், புதூர்ப் பாளையம், இனங்கூர் ஆகிய மூன்று இடங்களில் அரசு விதைப் பண்ணைகள் இருக்கின்றன. நெய்க்குப்பைப்புதூரிலே 29.70 ஏக்கரும், புதூர்ப்பாளையத்திலே 60.80 ஏக்கரும், இனங்கூரில் 111.20 ஏக்கரும், மொத்தம் 201.70 ஏக்கர்கள் இந்தப் பண்ணைகளிலே இருக்கின்றன. லால்குடிக்குப் பக்கத்திலே 20 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இந்த நெய்க்குப்பைப்புதூர் பண்ணை பெரம்பலூருக்குப் பக்கத்திலே இருக்கிறது. ஆகவே புதியதாக ஒரு பண்ணையை ஏற்படுத்தத் தேவையில்லை.

பசுந்தாள் உர விதைகள்.

*11461. திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பசுந்தாள் உர விதைகள் வேளாண் கிடங்குகளில் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?



மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டு பசுந்தாள் உரப் பயிர் விதைகள் விவசாயிகளின் விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, அவற்றைக் கொள்முதல் செய்து விநியோகித்திட புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு விதைப் பண்ணை மூலம் கொள்முதல் செய்யப்படும் பசுந்தாள் உரப் பயிர் விதைகள் அடுத்து வரும் ஆண்டிலிருந்து வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் விநியோகிக்கப்படும்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அசோஸ்பைரில்லம் போன்ற பசுந்தாள் உரச் செடிகளை ஒவ்வொரு கிராமத்திலேயும் வேளாண்மைத் துறை பயிரிட்டு விவசாயிகளுக்கு எளிதாகக் கிடைப்பதற்கு, வழங்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

10•10 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு வரை வேளாண்மை விரிவாக்கப் பணிகள் ஊராட்சி ஒன்றிய அளவிலே இருந்தபோது, இதுபோன்ற பசுந்தாள் விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்தன. அத்துறை தனியாகப் பிரிக்கப்பட்ட பிறகு அந்தப் பணி இடைக்காலத்திலே மேற்கொள்ளப்படவில்லை. அதனுடைய அவசியத்தை உணர்ந்து இப்போது இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டவுடன் கொளிஞ்சி, செஸ்பேனியா சன்ஹெம்ப் போன்ற பசுந்தாள் பயிர் விதைகள் விவசாய விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. விதைப் பண்ணையில் விவசாயிகள் தரமான விதைகள் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு கொள்முதல் விலையுடன் விதைப் பண்ணை விவசாயிகளுக்குக் கூடுதலாக ஒரு கிலோ விதைக்கு ஒரு ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. நடப்பு ஆண்டில் 200 மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்ய ரூ. 10 இலட்சமும், விதைப் பண்ணை விவசாயிகளுக்கு 200 மெட்ரிக் டன் விதைகள் உற்பத்தி செய்வதற்காக ஊக்கத் தொகையாக ரூ. 2 இலட்சமும், மொத்தம் 12 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அசோஸ்பைரில்லம் ஒவ்வொரு கிராமங்களிலேயும் வேளாண்மைத்துறை மூலம் பயிரிட்டு வழங்குவதற்கு அரசு

முன்வருமா என்ற கேள்வியைக் கேட்டேன். அதற்குரிய விடையில், அமைச்சர் அவர்கள் படித்ததிலே காவாளை விடுபட்டிருக்கிறது. அதையும் சேர்த்து இரண்டுக்கும் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தனியாக அதைப்பற்றி எழுதித் தருவாரேயானால் பரிசீலிக்கலாம்.

வழுக்குப்பாறை திட்டம்.

*929.—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) அந்தியூர் தொகுதியில் வழுக்குப்பாறை திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா :

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இந்தத் திட்டத்தை அரசு பரிசீலனை செய்தது. பல்வேறு சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பார்த்த பிறகு சாத்தியம் இல்லை என்று கைவிடப்பட்டது.

திரு. வே. பெரியசாமி : துணைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் வழுக்குப்பாறை மணியாச்சி திட்டம் என்று நீண்ட காலத்திற்கு முன்னாலே, காங்கிரஸ்காரர் காலத்திலேயிருந்து இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று அரசிடம் கோரிக்கை வைத்தார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக, சங்கராபாளையம், வெள்ளித்திருப்பூர், மாத்தூர், எண்ணமங்கலம், கண்ணப்பள்ளி, இலுப்பள்ளி, அம்மாபேட்டை, நெருஞ்சிப்பேட்டை போன்ற பகுதிகளில் மழைக் காலங்களில் அங்கே மழையே இல்லாத நிலையில் மிகவும் வறட்சி ஏற்பட்டு, ஏறத்தாழ 10 ஆண்டுகளாக மக்கள் அல்லல்பட்டுக் கொண்டு, குடிதண்ணீருக்குக்கூட வழி இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறவர்கள் பயனடைவார்கள். எல்லாப்பகுதிகளிலேயும் இதேபோன்ற திட்டத்தினைச் செய்திருக்கிறார்கள். ஆனால் பெரியார் மாவட்டத்திலே அந்தியூர் தொகுதியில் மட்டும் இத்திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதினால் 3,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே தயவு செய்து அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு சுமார் 269 ஏக்கர் வன நிலங்கள் தேவைப்படுகின்றன. இந்தத் திட்டத்தை எங்கே அமைக்க விரும்புகிறோமோ அந்த இடத்திலேதான் அதிகமான சந்தன மரங்கள் வளர்ந்து நிற்கின்றன என்று கருதுகிறேன். வன விலங்குகளும் இருக்கிற காரணத்தால் மத்திய அரசு இந்த இடத்தில் ஒரு நீர்த் தேக்கத்தைக் கட்டக் கூடாது என்று மறுப்பு அளித்திருக்கிறது. Collector, Commissioner for land Administration and principal chief conservator of Forests ஆகிய அத்தனை பேரும் இந்தத் திட்டத்திற்கு அனுமதி மறுத்து இருக்கிறார்கள். இரண்டாவது இதனுடைய பயன் துய்க்கிற விதத்திலே இது குறைந்து காணப்படுவதாலும் இத்திட்டத்தை இப்போது அமைப்பதற்குச் சாத்தியக்கூறு இல்லை என்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது.

திரு. வே. பெரியசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்திட்டத்தினைப் பற்றி விளக்கிச் சொன்னார்கள். மத்திய, மாநில அரசினுடைய வன இலாக்கா அதிகாரிகள் சந்தன மரங்கள் அங்கே அதிகமாக இருக்கின்றன என்றும், அவைகள் எல்லாம் பாதிக்கப்படும் என்றும், வன விலங்குகள் பாதிக்கப்படும் என்றும், ஏராளமான நிலங்கள் பயிர் பாசனம் செய்ய முடியாத நிலை ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டியிருப்பதாக எனக்குத் தகவல் வந்தது என்று அமைச்சர் குறிப்பிட்டார். அங்கே இருக்கின்ற சந்தன மரங்களை எல்லாம் ஏற்கெனவே வீரப்பன் குரூப் வெட்டிச் சென்றுவிட்டார்கள். எந்தவிதமான மரமும் கிடையாது. சத்தியமாக கிடையாது அந்தப் பகுதியிலே. (சிரிப்பு) அந்தப் பகுதியிலே வன விலங்குகள் மிகவும் குறைவு. எனவே வீரப்பன் என்றால் இங்கே இருக்கின்ற நம்முடைய (சிரிப்பு) காணாமல் போன, காவல் துறையினால் பிடிக்கமுடியாமல் போன அவல நிலை ஏற்பட்டிருக்கிற அந்த வீரப்பனைப் பற்றிச் சொல்கிறேன். நீண்ட நெடுங்காலமாக பல கோடி ரூபாய் செலவு செய்தும் கூட, நம்முடைய காவல் துறையினால் பிடிக்க முடியாத வீரப்பன் குரூப் ஏறத்தாழ ஒரு ஆண்டு காலமாக மரங்களை அடியோடு வெட்டிக் கொண்டு சென்று விட்டார்கள். வேரோடு தோண்டி எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். எனவே தயவுசெய்து அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. வன விலங்குகளும் மிகவும் குறைவு. இதனால் அங்கே சேதாரம் ஆகக்கூடிய நிலப்பரப்பும் குறைவு. அந்த மணியாச்சி தண்ணீர் காவேரிக்கு வந்து அங்கே வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது (மணியடிக்கப்பெற்றது) தயவுசெய்து மறுபரிசீலனை செய்து இந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவு செய்ய வேண்டும் என்று நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

10-15 மணி

(பதில் இல்லை)

திரு. தூ. க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தியூருக்கு அருகிலே வழுக்குப் பாறைத்திட்டம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு அருகிலே தூக்கநாயக்கன் பாளையம் ஒன்றியத்தில் வேதபாறை நீர்த் தேக்கத் திட்டம் என்ற ஒரு திட்டம் ஆய்வில் இருந்தது. அங்கே ஆழ்துளைக் கிணறுகள் போட்டு அதை ஆய்வு செய்து கொண்டிருந்தார்கள். அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன். அதோடு அந்தப் பகுதியில் சந்தன மரங்கள் எல்லாம் இப்போது வெட்டப்படவில்லை. கடந்த காலத்தில் வெட்டப்பட்டது. அதற்குப் பிறகு தமிழக அரசிடம் நான் அந்தப் பகுதியான சத்தியமங்கலத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் நேரில் வந்து பார்த்துச் சொன்னேன். அங்கே உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்போது அங்கே யாரும் இல்லை என்பதை நான் திட்டவட்டமாகக் கூறிக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்ட திட்டத்தைப் பற்றி ஒரு தனிக் கேள்வி போட்டால் விவரங்களை நான் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

செய்யார் அணைக்கட்டு பாலத்தை மாற்றி அமைத்தல்

* 10644.—திரு. மு. சின்னக்குழந்தை :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை—சம்புவ்ராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், ஆவணியாபுரம் அருகே உள்ள செய்யார் அணைக்கட்டு பாலத்தை மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றி அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : செய்யார் அணைக்கட்டு பாலத்தை மாற்றி அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மு. சின்னக்குழந்தை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரணியிலிருந்து வந்தவாசிக்கும், திண்டிவனத்திற்கும் அதிகமான நெரிசலான போக்குவரத்து உள்ள



இந்த நிலையில்-கட்டத்தட்ட அந்தப் பாலம் கட்டி 200 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போக்குவரத்து நிலையை முன்னிட்டு அதை மாற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தை நேரில் பார்த்து அது தேவை என நான் உணர்ந்தால், பிறகு அரசு அதைப்பற்றி பரிசீலிக்கும்.

ஊனமுற்ற அரசு ஊழியர்கள் மாற்றம்.

* 8106—திரு. மு. முகமது சித்திக் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊனமுற்ற அரசு ஊழியர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றல் செய்வதை அரசு தடை செய்யுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பொதுவான சில காரணங்களைத் தவிர்த்து உடல் ஊனமுற்றவர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் இப்போது மாற்றுவது இல்லை. இதற்கென்று தனியாக அரசு ஆணை பிறப்பிக்கவும் தேவையில்லை.

திரு. மு. முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊனமுற்ற அரசு ஊழியர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றுவதால் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அப்படி மற்ற மாவட்டத்தில் பணிபுரிகின்ற அந்த அரசு ஊழியர்கள் அவர்கள் சொந்த மாவட்டத்திற்கு வந்து பணிபுரிவதற்கு மனுச் செய்தால் அதில் சில சட்டச் சிக்கல்கள் காரணமாக காலதாமதம் ஏற்படுகிறது. இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒப்புதல் கொடுப்பதிலும் தாமதம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட அந்த தாமதங்கள் நேராமல் செய்து, அவர்கள் துரிதமாக அந்த மாவட்டத்திலிருந்து சொந்த மாவட்டத்திற்கு வருவதற்கு வழிவகையை அந்த உடல் ஊனமுற்றவர்களுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக பதவி உயர்வு பெறுகின்ற நேரத்தில் அந்தப் பதவி அந்தக் குறிப்பிட்ட மாவட்டத்தில் இல்லை என்றால் அடுத்த மாவட்டத்திற்கு

அவர்களை மாறுதல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இரண்டாவது, நிர்வாகக் காரணத்தினால் மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிற நேரத்தில் மிகவும் ஆலோசித்த பிறகுதான் அவர்களை அந்த இடத்தில் நாம் பணியில் அமர்த்துகிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்திலே காலதாமதம் ஏற்படுமானால் சமூக நல இயக்குநருக்கு அவர்கள் அக்குறையை எடுத்துச் சொல்லி குறையை நிவர்த்தி செய்து கொள்வதற்கான வாய்ப்பைப் பெறலாம்.

### ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள்.

*9994—திருமதி யசோதா செல்லப்பா :

மாண்புமிகு சமூகநலம்மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக அரசின் சார்பில் நடத்தப்படும் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் எத்தனை?

(ஆ) எந்த அடிப்படையில் ஆதரவற்ற குழந்தைகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் அரசால் 22 ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் நடத்தப்படுகின்றன. அந்த இல்லங்களில் 5 வயது பூர்த்தி அடைந்த மாணவ, மாணவிகள், தாயோ, தந்தையோ இல்லாதவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் இருக்கும் குழந்தைகளுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

10-20 மணி

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் தங்கியிருக்கின்ற குழந்தைகளுக்கு இலவச உணவு, இலவச உடை, பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள், மருத்துவ உதவி மற்றும் கல்வி அளிக்கப்படுகிறது. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை அந்த இல்லத்திலேயே அவர்களுக்குக் கல்வி வழங்கப்படுகிறது. ஐந்தாம் வகுப்பிற்குமேல் அருகிலுள்ள அரசுப் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டு, பள்ளி இறுதித் தேர்வு வரையில் அவர்கள் அங்கே தங்கிப் பயிலுவதற்கான வாய்ப்பினை வழங்குகிறோம்.





திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக நடத்தப்படுகிற அநாதை இல்லங்களைப் போல கில்ட் ஆஃப் சர்வீஸ் மூலமாக நடத்தப்படுகிற அநாதை இல்லங்களுக்குத் தமிழக அரசின் மூலம் ஏதேனும் சலுகைகள் வழங்கப்படுகின்றனவா? அப்படிப்பட்ட, கில்ட் ஆஃப் சர்வீஸ் மூலமாக நடத்தப்படுகிற அநாதை இல்லங்களுக்கு, தமிழக அரசின் மூலமாகப் பரிந்துரை செய்தால், அநாதைக் குழந்தைகளை எடுத்துக் கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு உதவியுடன் நடத்தப்படும் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லத்தின் உணவூட்டும் செலவினமாக ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் 90 ரூபாயை இந்த அரசு வழங்கி வருகிறது.

### திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிற்சாலைகள்

*9775—திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் சட்ட விதிகளின்படி கட்டப்பட வேண்டிய ஓய்வு அறை, சாப்பாட்டுக் கூடம், கழிப்பறை ஆகியவை கட்டப்படாமலும், சட்டப்படியான வேலை நேரம் அனுசரிக்கப்படாமலும் உள்ள தொழிற்சாலை உரிமையாளர்கள்மீது அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சாதாரணமாக 150 தொழிலாளர்களுக்கு மேல் பணியாற்றும் தொழிற்சாலைகளில்தான் தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் விதிகளின்படி ஓய்வறை பராமரிக்கப்படவேண்டும். இச்சட்டப்படி ஓய்வறை பராமரிக்கப்படவேண்டிய தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஏதும் திண்டுக்கல்லில் இல்லை. அனைத்துத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலும் கழிப்பறை வசதிகள் உள்ளன.

தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் தொழிற்சாலைகள் விதி 95-இன் கீழ் உள்ள ஷெட்யூல்-IX—இன்படி உணவருந்தும் அறை ஒன்று பராமரிக்கப்படவேண்டும். திண்டுக்கல் பகுதியில் தொழிற்சாலைச் சட்டத்தின்கீழ் பதியப்பெற்ற 46 தொழிற்சாலைகளில் 36 தொழிற்சாலைகளில் உணவருந்தும் அறை பராமரிக்கப்

படுகிறது. உணவருந்தும் அறை அமைக்கப்படாத 10 தொழிற் சாலைகள் பேரில் ஆய்வு ஆணைகள் மற்றும் காரணம் காட்டும் அறிக்கை நிர்வாகத்தினருக்கு அனுப்ப நடவடிக்கை கோரப் பட்டுள்ளன.

தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவுகள் 51 மற்றும் 52 ஆகியவற்றிற்கு முரணான வேலைநேரம் அனுசரித்த ஒரு தொழிற்சாலையின்மீது வழக்கு தொடரப்பட்டு நீதிமன்றத்தினால் ரூ. 1,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகள் நவீன முறையில் ஏராளமாகக் கட்டப்பட்டு வருகின்ற இந்தக் காலத்தில் தொழிலாளர்களின் அடிப்படை நல உரிமைகளான, உணவருந்தும் அறை, குளியல் அறை, ஓய்வறை, கழிப்பறை போன்றவைகளைக் கட்டாமலேயே தொழிற்சாலைகளை நிர்மாணித்து விடுகிறார்கள். எனவே, தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கும்படியான இந்த ஆரம்ப நடவடிக்கைகளை முடித்த பிறகுதான் தொழிற்சாலைகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கும்படியான செயற்குறிப்பு ஏதேனும் தமிழக அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கேள்வி எழுப்பி இருக்கிறார், பொதுப்படையாக தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை தொழிற்சாலைகளிலும் இதுபோல சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் சின்னஞ்சிறார்கள் அதாவது சைல்ட் லேபரர்களை வைத்து ஏராளமான தொழிற்சாலைகளில் வேலை வாங்கப்பட்டு வருகிறது. இந்தக் கொடுமையைத் தடுக்கக் கூடிய முறையில், குழந்தைத் தொழிலாளர்களை வைத்து வேலை வாங்குவதைத் தடுப்பதற்கு அரசிடம் ஏதேனும் குறிப்பான நடவடிக்கை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறார்களையெல்லாம் வேலையில் அமர்த்துவதைத் தடுக்க வேண்டுமென்பதற்காக ஏற்கெனவே பல சட்டங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



குறிப்பிட்டு ஏதாவது ஒன்றிரண்டு சொல்வார்களேயானால், அதை ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசுக்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீன் வளர்ப்புப் பண்ணை அமைத்தல்.

*9622—டாக்டர் (திருமதி) காஞ்சனா கமலநாதன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மீன் வளர்ப்புத் துறை, தனியார் மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்க அரசு நிலத்தைத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் (திருமதி) காஞ்சனா கமலநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆயிரம் கிலோமீட்டர் நீளத்திற்கு விரிந்து பரந்துள்ள தமிழகத்தின் கடற்கரையையொட்டி ஆயிரக் கணக்கான ஹெக்டேர் நிலத்தில் இரால் மீன் வளர்ப்பு நடைபெறுகிறது. அஃதன்னியில் உள் நிலப் பகுதிகளில் தண்ணீர் வசதி கிடைக்கக்கூடிய பகுதிகளில் மீன் வளர்ப்புப் பண்ணை, மீன் குஞ்சுப் பொறிப்புப் பண்ணை இவைகளை ஏற்படுத்தி, மீன் உற்பத்தியை மேம்படுத்த வருவாய்த் துறை, வனத் துறை, நீர் வரத்து அல்லாத ஓடை புறம்போக்கு நிலங்களை மீன் வளத் துறை மூலம் தனியாருக்குக் குத்தகை அடிப்படையில் ஒதுக்கித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

10-25 மணி

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உள்நாட்டு மீன் வளர்ப்புப் பகுதிகளில் மீன் பண்ணை அமைக்க அரசு நிலம் கொடுப்பதற்கான வாய்ப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

வெளிமாநிலங்களில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த கைத்தறி கூட்டுறவு விற்பனை நிலையங்கள்.

[1991 சனவரி 22

விளா எண் 275—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வெளி மாநிலங்களில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த கைத்தறி கூட்டுறவு விற்பனை நிலையங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) ஆண்டொன்றுக்கு அவைகளின் மொத்த விற்பனை அளவு என்ன?

விடை—

(அ) தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்ற (பட்டு மற்றும் பருத்தி) துணிகளை வெளி மாநிலங்களில் விற்பனை செய்யும் பொருட்டு (பருத்தி மற்றும் பட்டு) 34 பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் வெளிமாநிலங்களில் மொத்தம் 81 கிளை விற்பனை நிலையங்கள் வாயிலாக தங்கள் துணிகளை விற்பனை செய்து வருகின்றன. தவிர தமிழகத்தில் உள்ள ஆறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களும் (கரூர், சேலம், மதுரை, ஈரோடு, குறிஞ்சிப்பாடி மற்றும் காஞ்சிபுரம்) தங்களது துணிகளை 84 முகவர் விற்பனை நிலையங்கள் மூலமாகவும், அயல் மாநிலங்களில் விற்பனை செய்து வருகின்றன. தமிழகத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தலைமைச் சங்கமான கோ-ஆப்டெக்சுக்கு மொத்தம் 492 விற்பனை நிலையங்கள் நாடெங்கிலும் உள்ளன. அவற்றில் 206 விற்பனை நிலையங்கள் அயல் மாநிலங்களிலும், 286 விற்பனை நிலையங்கள் தமிழகத்திலும் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) கடந்த மூன்றாண்டுகளில் இச்சங்கங்கள் மேற்கொண்ட விற்பனை விவரம் கீழே வருமாறு :—

| பெயர். | வருடாவாரி விற்பனை விவரம். 1985-86 | 1986—87 | 1987—88 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள். | 658.73 | 801.68 | 745.05 |
| கூட்டுறவு கைத்தறி வளர்ச்சி திட்டங்கள். | 29.00 | 24.88 | 26.07 |
| தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்). | 2669.81 | 2445.72 | 2323.[illegible] |



1991 சனவரி 22]

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட இலவச வீடுகள்.

வினா எண் 387—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கடந்த பத்தாண்டு காலத்தில் தர்மபுரி மாவட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட இலவச வீடுகள் எத்தனை? (வட்ட வாரியாக).

விடை—

தர்மபுரி மாவட்டத்தில் தாட்கோ திட்டங்களின்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு, கடந்த பத்தாண்டுகளில் (1978-79 முதல் 1987-88 வரை) கட்டிக் கொடுக்கப்பட்ட இலவச வீடுகள் (வட்ட வாரியாக) விவரங்கள் கீழ்க்கண்டவாறு :

| வ. எண். | வட்டத்தின் பெயர். | வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | 45 |
| 1 | தர்மபுரி | 839 |
| 2 | அரூர் | 25 |
| 3 | பெண்ணாகரம் | 151 |
| 4 | கிருஷ்ணகிரி | 145 |
| 5 | ஊத்தங்கரை | 53 |
| 6 | பாலக்கோடு | 44 |
| 7 | ஓசூர் | 36 |
| 8 | தென்கனிக்கோட்டை | |
| | மொத்தம் .. | 1338 |

3— திருவண்ணாமலை அரசினர் கலைக்கல்லூரி.

வினா எண். 1019—திரு. கு. பிச்சாண்டி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை அரசினர் கலைக்கல்லூரிக்கு மீண்டும் கலைஞர் கருணாநிதி கலைக்கல்லூரி என பெயர் வைக்கப்படுமா?

விடை—

அவ்வாறு பெயர் வைக்கப்படமாட்டாது.

4—

குடிசைத் தொழில் துவங்க குறைந்த வட்டிக்குக் கடன் வழங்கும் திட்டம்.

வினா எண். 1121— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிசைத் தொழில் துவங்க குறைந்த வட்டிக்கு கடன் வழங்கும் திட்டத்தை கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் வங்கிகள் செயல்படுத்தி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) எந்தெந்த தொழில் இத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது?

(ஈ) பயன்பெற்றுள்ளவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) குடிசைத் தொழில் துவங்க குறைந்த வட்டிக்கு கடன் வழங்கும் திட்டம் ஏதும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் வங்கிகள் செயல்படுத்தி வரவில்லை.

(ஆ), (இ) மற்றும் (ஈ) : எழவில்லை.

5—

மேல்நிலை நிர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 1271.—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கை-அண்ணா மாவட்டம், லத்தூர் ஊராட்சி ஒன்றியம், சேலூர், கொளத்தூர், மாலச்சேரி, ஆக்கினாம்பேடு, நெற்குணப்பட்டு, பாலூர், பச்சம்பாக்கம், இரணியசித்தி புதுப்பட்டு, கீழச்சேரி, தென்பட்டினம், கோலாமஞ்சி, முகையூர் காலனி, கூவத்தூர், பரமேஸ்வர மங்களம் காலனி, கடலூர் கிராம காலனி ஆகிய பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தரப் படுமா?



விடை—

சேலூர், நெற்குணப்பட்டு, பச்சம்பாக்கம், தென்பட்டினம், கூவத்தூர், பரமேஸ்வரமங்களம் காலனி, கடலூர் கிராம காலனி ஆகிய கிராமங்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது.

கொளத்தூர், மாலச்சேரி, பாலூர் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வசதி இல்லாத குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அளித்த பின் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்ட ஆவன செய்யப் படும்.

ஆக்கினாம்பேடு, இரணியசித்தி, புதுப்பட்டு, கீழச்சேரி, கோலாமஞ்சி, முகையூர் காலனி ஆகிய கிராமங்கள் குடிநீர்ப் பிரச்சினை இல்லாதவையாகும். எனவே தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கான செயற்குறிப்பேதும் இல்லை.

6—

ஆரம்பச் சுகாதார நிலையம் துவக்குதல்.

வினா எண். 1474—திரு. எஸ். டி. உகம்சந்த் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம், வீராணகுன்னம் கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கட் தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பது என்ற அரசின் கொள்கைக்கேற்ப 1,17,600 மக்கட் தொகை கொண்ட மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே ஜமீன் எண்டத்தூர், ஞானகிரீஸ்வரன் பேட்டை, நல்லாமூர் மற்றும் படாளம் ஆகிய நான்கு இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதால் வீராண குன்னம் கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பது தற்போது சாத்தியமில்லை.

7—

## பெண் மருத்துவர் நியமனம்.

**வினா எண். 1518.**—தி. வீ. தமிழ்மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கற்பட்டு தாலுக்காவில் உள்ள சதுரங்கப்பட்டினம் நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கு பெண் மருத்துவர் நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

பெண் மருத்துவர் ஒருவர் அந்த மருத்துவமனையில் பணியாற்றி வருவதால் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

8—

## திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து வழிமறிக்கப்பட்டு கொள்ளை.

**வினா எண். 1817.**— திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு முதலமைச்சர் .கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலத்திலிருந்து 14-2-1989 அன்று இரவு இராமநாத புரத்திற்கு வந்து .கொண்டிருந்த திருவள்ளுவர் போக்குவரத்து பேருந்து திண்டுக்கல்-காயிதேமில்லத் மாவட்டம் கொடைரோடு அருகே 'மேட்டுர் கேட்' என்னும் இடத்தில் சிலரால் வழிமறிக்கப் பட்டு கொள்ளை அடிக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து டி. எம்.எல். 9671, 14-2-89 அன்று சேலத்திலிருந்து இரவு 9 மணிக்கு புறப்பட்டு இராமநாதபுரத்திற்குச் சென்றுகொண்டிருந்த போது, மேற்படி பேருந்தில் அடையாளம் தெரியாத நான்கு குற்றவாளிகள் சேலத்திலிருந்து மதுரைக்கு பயணம் செய்து கொண்டிருந்தனர், இவர்களுள் இருவர் ஓட்டுநரின் இருக்கைக்கு பின்னாலும், மற்றிருவர் பேருந்தின் கடைசி பின்பக்க இருக்கையிலும் அமர்ந் திருந்தனர். பேருந்து அதிகாலை 2.15 மணிக்கு 'மேட்டூர் கேட்'



இருப்புப் பாதை நுழைவு வாயிலைக் கடந்து சென்றுகொண்டிருந்த போது, ஓட்டுநருக்குப்பின் இருக்கையில் பயணம் செய்து கொண்டிருந்த அடையாளம் தெரியாத இரு குற்றவாளிகளில் ஒருவர் ஓட்டுநரையும், மற்றொருவர் நடத்துனரையும்அருவாளை காட்டி மிரட்டிக்கொண்டிருந்த அதேசமயம், கடைசி இருக்கையில் இருந்த இருவர் சக-பயணிகளிடம் கத்தியைக் காட்டி மிரட்டி அவர்களின் நகை மற்றும் பணங்களையும் கொள்ளையடித்துக் கொண்டு, பின் பேருந்தை நிறுத்தச் சொல்லி நால்வரும் இறங்கி ஓடிவிட்டனர்.

மேற்சொன்ன நால்வரும் பல வழக்குகளில் சம்பந்தப் பட்டுள்ளார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு தற்போது ரிமாண்டில் இருக்கிறார்கள். அந்நால்வரில் ஒருவர் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலப்படி திருடுபோன நகை கைப்பற்றப்பட்டு விட்டது. இது தொடர்பான வழக்கு நிலக்கோட்டை நீதித்துறை நடுவர் மன்றத்தில் விசாரணையில் உள்ளது.

9—

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

**வினா எண். 1961.**— திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் 1988-89-ல் எத்தனை Divisions and Sub-Divisions மூடப்பட்டன?

(ஆ) அவைகள் எந்த அடிப்படையில் மூடப்பட்டன?

(இ) அப்பகுதிகளில் அனைத்து பணிகளும் முடிந்து விட்டனவா?

**விடை—**

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் 1988-89-ல் 100 கோட்டங்களும், 363 உபகோட்டங்களும் இருந்தன. இவற் றில் 4 கோட்டங்களும் அதன்கீழ் உள்ள 14 உபகோட்டங்களும் மூடப்பட்டன.

(ஆ) ஒரு கோட்டம் ஒரு ஆண்டில் ரூ. 200 லட்சம் மதிப் பீட்டில் செலவு செய்ய வேண்டும் என்ற இலக்கு அரசாணை எண். 2195, போக்குவரத்து (எண் 1) துறை நாள்: 22-12-87-ல் நிர்ணயிக்கப்பட்டது. 200 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிற்கும் கீழே

வேலைப்பளு உள்ள கோட்டங்கள் மூடப்பட வேண்டும் என்ற வாரிய உபகமிட்டியின் சிபாரிசின் அடிப்படையில் மேற்கண்ட கோட்டங்கள் மூடப்பட்டன.

(இ) மூடப்பட்ட கோட்டங்களில் உள்ள பெரும்பாலான பணிகள் முடிந்துவிட்டதாலும், மீதமுள்ள பணிகளை அருகாமையில் உள்ள மற்ற கோட்டங்களுக்கு இணைத்து முடிக்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

10—

ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்.

வினா எண். 2029—திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகம் முழுவதும் இவ்வாண்டு எத்தனை ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது?

(ஆ) இதில் அவினாசி தொகுதிக்கு ஒதுக்கீடு என்ன?

விடை—

(அ) ஊரகக் குடிநீர் திட்டத்தின்கீழ் 7,168 வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் 6,500 மற்றும் மாற்று நீராதாரக் கிணறுகள் திட்டத்தின் கீழ் 1,800 ஆக மொத்தம் 15,468 ஆழ்துளைக் கிணறுகளை 1989–90 ஆம் ஆண்டில் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

(ஆ) இவற்றுள் அவினாசி சட்டமன்றத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறுகளின் விபரம் வருமாறு:—

| | ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை (அமைக்கப்பட்டது). | | |
|---|---|---|---|
| | அன்னூர் ஒன்றியம். | அவினாசி ஒன்றியம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| 1. வறட்சி நிவாரணம் .. | 15 | 13 | 28 |
| 2. மாற்று ஆழ்துளைக் கிணறு .. | 1 | 1 | 2 |
| 3. 1989–90 மதிப்பீட்டில் இடம் பெற்ற குடியிருப்பு. | 1 | 1 | 2 |
| மொத்தம் .. | 17 | 15 | 32 |



11—

காஞ்சிபுரம் மாவட்ட தலைமை மருத்துவமனை

வினா எண். 2124—திரு. பொ. முருகேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காஞ்சிபுரம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் டாக்டர்களையும், செவிலியர்களையும், உதவியாளர்களையும் கூடுதலாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) அங்கு கூடுதலாக ஒரு கதிர் இயக்க கருவி வழங்க அரசு முன் வருமா?

விடை—

(அ) மருத்துவமனை தேவைக்கேற்பவும், சிகிச்சைபெறும் பிணியாளர்கள் எண்ணிக்கைக்கேற்பவும் மருத்துவ விதித் தொகுப்பில் உள்ள குறியீடுகளின்படியும் அரசின் நிதி நிலைமைகளைக் கருத்தில் கொண்டும் இம்மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்கள் மற்றும் பிற பணியாளர்களை படிப்படியாக நியமிக்க பரிசீலிக்கப்படும்.

(ஆ) தற்போதுள்ள 3 கதிர்வீச்சு கருவிகளும் நல்ல முறையில் இயங்குவதால் அரசின் நிதி ஆதாரங்களை பொறுத்து கூடுதல் கதிர் வீச்சு கருவி வாங்குவது பற்றி பரிசீலிக்கப்படும்.

12—

கிராமப்புற மின்சார விநியோகக் கூட்டுறவுச் சங்கங்கள்.

வினா எண். 2328—திரு. கே. ரமணி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிராமப்புற மின்சார விநியோகக் கூட்டுறவுச் சங்கங்களில் பணி புரியும் தொழிலாளர்கள் வேலைக்கு சேரும்முன் டிபாசிட் தொகை வாங்குவது உண்டா?

(ஆ) ஆம் எனில், ஒரு தொழிலாளியிடம் எவ்வளவு பணம் டிபாசிட்டாக பெறப்படுகிறது?

(இ) அத்தொகைக்கு வட்டி கொடுப்பது உண்டா?

(ஈ) டிபாசிட் எப்பொழுது திருப்பிக் கொடுக்கப்படும்?

விடை—

(அ) உண்டு. அயற்பணி அடிப்படையில் பணியமர்த்தப் பட்டோர் நீங்கலாக கிராமப்புற மின்சார விநியோகக் கூட்டுறவுக்

சங்கங்களால் நேரடியாக பணியமர்த்தப்பட்ட பணியாளர்களிட மிருந்து வேலைக்கு சேரும் முன் பிணை வைப்புத் தொகை வசூலிக்கப்படுகிறது.

(ஆ) பணியாளர்களின் பதவி மற்றும் பெறும் சம்பளம் ஆகியவைகளுக்கேற்ப குறைந்த பட்சம் ரூ. 100 முதல் அதிக பட்சம் ரூ. 500 வரை பிணை வைப்புத் தொகை வசூலிக்கப்படு கிறது.

(இ) பிணை வைப்புத் தொகைக்கு வட்டி வழங்கப்படுகிறது.

(ஈ) சங்கப் பணியாளர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற வுடன் அல்லது வேறு காரணங்களுக்காக விடுவிக்கப்பட்டவுடன் சங்கக் கணக்குகள் தணிக்கை செய்வது முடிக்கப்பட்டதும் அவர் களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தொகை ஏதும் இருந்தால் அதை பிடித்துக் கொண்டு, பிணை வைப்புத் தொகை திருப்பிக் கொடுக்கப்படுகிறது.

13—

மதுராந்தகம் தொகுதியில் கால்நடை பராமரிப்பு நிலையங்கள்.

வினா எண். 2807—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கால்நடை பாரமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் தொகுதியில் எங்கெங்கு கால்நடை பராமரிப்பு நிலையங்கள் உள்ளன ?

(ஆ) எங்கெங்கு கிளை நிலையங்கள் உள்ளன ?

விடை—

(அ) மதுராந்தகம் தொகுதியில் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த புக்கத்துறை மற்றும் லத்தூர் ஊராட்சி ஒன்றியம் ' செய்யூர் பவுன்சூர் ' என்ற இடங்களில் கால்நடை மருந்தகங்கள் உள்ளன.

(ஆ) மதுராந்தகம் தொகுதியில் உள்ள கால்நடை கிளை நிலையங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1. வீரானக்குன்னம் | 7. படாளம். |
| 2. மேலக்கண்டிகை. | 8. மாமண்டூர். |
| 3. சென்ட்ரச்சேரி. | 9. நெல்வாய். |
| 4. காட்டுதேவத்தூர். | 10. சிவாடி. |
| 5. பெரியவெண்மணி. | 11. அணைகட். |
| 6. கருங்குழி. | 12. கூவத்தூர். |



14—

தமிழ்நாட்டில் கிடைக்கும் மூலப் பொருட்கள்.

வினா எண். 2826—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதியில் என்னென்ன மூலப் பொருள்கள் கிடைக்கின்றன என்கிற விவரம் சேகரிக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்த மூலப்பொருள்களைக் கொண்டு அரசு மற்றும் தனியார் துறை மூலம் தொழிற்சாலைகள் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) ஆம். தமிழ்நாட்டில் சுண்ணாம்புக்கல், மாக்னசைட், பாக்சைட், பழுப்பு நிலக்கரி, இரும்புத்தாது, கிராபைட், ஜிப்சம், நெருப்பு களிமண் வெர்மிகுலைட் கனகனிம மணல்கள் வெங்கற்கல் பெல்ஸ்பர், மணிக்கற்கள் மற்றும் குறை மணிக்கற்கள் மெரு கேரும் கிரானைட் பாறைகள் ஆகியவை கிடைக்கின்றன. இவற் றைத் தவிர சமீப காலத்தில் காவிரிப் படுகையில் எண்ணெய் மற்றும் நிலவாயு கிடைப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

(ஆ) தமிழக அரசு தமிழ்நாட்டில் கிடைக்கும் மூலப் பொருட்களை பயன்படுத்தி அரசு மற்றும் தனியார் துறையில் தொழில்கள் நிறுவி வருகிறது.

15—

மாணவர்கள் எண்ணிக்கை.

வினா எண். 2841—திரு. எஸ். டி. உகம்சந்த் மற்றும் திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் ஒரு வகுப்புக்கு எத்தனை மாணவர்கள் படிக்க வேண்டும் என்று அரசு நிர்ணயம் செய்துள்ளது ?

(ஆ) அதிக அளவில் மாணவர்கள் பயிலும் வகுப்புகளைப் பிரித்து வகுப்புகள் அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(இ) கல்லூரிகளில் ஓர் ஆசிரியருக்கு இத்தனை மாணவர்கள் என்ற நிர்ணயம் அரசால் செய்யப்பட்டுள்ளதா ? ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) தொடக்கப் பள்ளிகளில் வகுப்புக்கு சராசரி 30 மாணவர்கள் இருக்க வேண்டும். அதிக பட்சமாக 35 மாணவர்கள் ஒரு வகுப்பில் சேர்க்கப்படலாம். தமிழ்நாடு கல்வி விதிகள் 17 மற்றும் 18-ன்படி உயர்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 10-ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்புக்கும் 40 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். மேல் நிலைப் பள்ளிகளில் (11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில்) பொதுக் கல்வியில் ஒரு வகுப்புக்கு 50 மாணவர்களும், தொழிற் கல்வியில் ஒரு வகுப்புக்கு 25 மாணவர்களும் சேர்க்கப்பட வேண்டும்.

(ஆ) 1—5 வகுப்புகள் கொண்ட தொடக்கப்பள்ளி ஓர் அலகு ஆகவும், நடுநிலைப்பள்ளியில் 1—5 வகுப்புகள் ஓர் அலகு ஆகவும், 6—8 வகுப்புகள் தனி அலகு ஆகவும் கருதப்பட வேண்டும். தொடக்கப் பள்ளியில் சராசரி மாணவர் வருகை 35-க்கு மேல் இருப்பின் 2 பிரிவுகளாகவும், 71-க்கு மேல் இருப்பின் 3 பிரிவுகளாகவும் பிரிக்கலாம். நடுநிலை வகுப்புகளில் சராசரி மாணவர் வருகை 36 முதல் 60 முடிய இருப்பின் அவ்வகுப்பை 2 பிரிவுகளாகவும் சராசரி வருகை 61 முதல் 80-க்குள் இருப்பின் 3 பிரிவுகளாகவும் பிரிக்க வகை செய்யப்பட்டுள்ளது. அரசின் நிதி நிலைமைக்கேற்ப வழங்கப்படும் கூடுதல் ஆசிரியர் பணியிடங்களைக் கொண்டு தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல் நிலைப் பள்ளிகளில் கூடுதல் மாணவர்கள் உள்ள வகுப்புகள் பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.

(இ) இல்லை. கல்லூரிக் கல்வித் துறையைப் பொறுத்த மட்டில் சம்பந்தப்பட்ட பாடத் துறையின் மொத்த பணிப் பளுப் படி, ஒரு வாரத்திற்கு பல்கலைக் கழக மானியக்குழு. அறிவித்துள்ள பணிப்பளு விதிகளின்படி ஆசிரியர் தேவை நிர்ணயிக்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட பணிப் பளுவின்படி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

16—

குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

வினா எண். 2921—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குழந்தைக்கும் செலவிடப்படும் தொகை எவ்வளவு ?

(ஆ) அது எந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது ?

(இ) அதை இன்றைய விலைவாசி உயர்வை கருதி உயர்த்தி கொடுக்கும் உத்தேசம் உண்டா ?



விடை—

(அ) சத்துணவு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குழந்தைக்கும்
உணவிற்காக செலவிடப்படும் தொகை 45 பைசாவாகும். இதைத்
தவிர மாதம் இரு முறை ஒவ்வொரு குழந்தைக்கும் முட்டை
இலவசமாக வழங்கப்படுகின்றது. முட்டையின் விலை ஒன்று
60 பைசாவிலிருந்து 65 பைசா வீதம் சராசரி செலவு ஒரு மாதத்
திற்கு ரூ. 1-20 லிருந்து ரூ. 1-30 வரை செலவிடப்படுகின்றது.

(ஆ) 1—7—1982 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது.

(இ) அதை இன்றைய விலைவாசி உயர்வை கருதி உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் இல்லை.

17—

நெசவாளர்களுக்கு அரசு மானியம்.

வினா எண். 3003—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு
கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்
கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் வட்டம் கருங்குழி பேரூராட்சியில் நெச
வாளர்களுக்கு அரசு மானியம் 1989-ம் ஆண்டு வழங்கியிருந்தும்
வங்கிகள் கடன் வழங்கவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ): மதுராந்தகம் ஒன்றியத்திலுள்ள கருங்குழி
பேரூராட்சியில் உள்ள நெசவாளர்களில் 25 நெசவாளர்களுக்கு
1989-ஆம் ஆண்டில் காஞ்சிபுரத்திலுள்ள ஒருங்கிணைந்த ஊரக
வளர்ச்சித் திட்ட அலுவலகத்தின் மூலம் சொந்தமாக தறிவைத்
துள்ள ஒவ்வொரு நெசவாளிக்கும் தறி உபகரணங்கள் வாங்கவும்,
தறியைப் பழுது பார்க்கவும், சொந்தமாக ஜவுளிகளை உற்பத்தி
செய்வதற்கு ஏதுவாகவும் பாவு மற்றும் நூலை கொள்முதல்
செய்யவும் பயன்படும் வகையில் தலா ரூ. 2,000 இந்தியன் வங்கி
யின் மதுராந்தகம் கிளை மூலமாக மொத்தம் ரூ. 50,000 வழங்
கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நெசவாளருக்கும் வழங்கப்பட்ட
கடன் தொகையான ரூ. 2,000-இல் 1/3 பங்கு மானியமாகவும்,
மீதி 2/3 பங்கு கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு
வழங்கப்பட்ட கடன் தொகை மாதமொன்றுக்கு ரூ. 50 வீதம்
இரண்டு வருடகால அவகாசத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய
தாகும்.

18—

### திருமங்கலத்திலிருந்து வாகைகுளம் செல்லும் சாலையைச் சீர் செய்தல்.

**வினா எண். 3195—திரு. இரா. சாமிநாதன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருமங்கலத்திலிருந்து வாகைகுளம் செல்லும் சாலையைச் சீர் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**விடை—**

இச்சாலையின் சரியான பெயர் சித்தானை வாகைகுளம் சாலையாகும். இது ஒரு இதர மாவட்டச் சாலை. இச்சாலை திருமங்கலம் பள்ளப்பட்டி சாலை கி.மீ. 2/8-ல் பிரிந்து செல்கிறது. இச்சாலை முழுவதும் தார் பரப்பைக் கொண்ட சாலையாகும். இச்சாலை கி.மீ. 6/6—13/0 உள்ள பகுதியை மேம்பாடு செய்யும் பணியை மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ் எடுத்து செய்யும் பொருட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. 13.8 கி.மீ. நீளம் உடைய இச்சாலையில் கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 7.40 கி.மீ. நீளத்திற்கு கி.மீ. 0/0—6/6 மற்றும் 13/0-8 தார் பரப்பி புதுப்பிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதியில் அவ்வப்போது நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை லாரிகள் மூலம் கிணற்று சரளை கொண்டு வந்து சிறப்புத் தொகுதியாட்கள் மூலம் நொடிகள் போடப்பட்டு, போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் செப்பனிடப்பட்டு வருகிறது. மேலும் நடப்பு நிதியாண்டில் ரூ. 47,000-க்கு மதிப்பீடு அங்கீகரித்து பராமரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

19—

### வீரபாண்டிய கட்டபொம்மன் சிலை.

**வினா எண். 3470—திரு. சு. குருநாதன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் பாளையங்கோட்டையில் உள்ள "வீரபாண்டிய கட்டபொம்மன்" சிலையை வர்ணம் பூசி, மின்வசதி செய்து பாதுகாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**விடை—**

பாளையங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள கோட்டையில் அமைந்துள்ள கட்ட பொம்மன் சிலைக்கு காலமுறை தோறும் [periodically] வர்ணம் பூசப்பட்டும் இரவு நேரத்தில் தெரிவதற்கு மின் விளக்கு அமைத்தும் பராமரிக்கப்பட்டு வருகின்றது.



20—

### கழிப்பறை கட்டுதல்.

**வினா எண். 3600—டாக்டர் ச. சுந்தரராஜ் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பரமக்குடி பேருந்து நிலையத்தில் கட்டணம் இல்லாத கழிப்பறை கட்ட அரசு ஆவன செய்யுமா ?

**விடை—**

பரமக்குடி நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில் ஒரு இலவசக் கழிப்பறை கட்ட நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

21—

### வேலூர் சர்க்கரை ஆலை.

**வினா எண். 3789—திரு அ. இராசேந்திரன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம், வேலூர் சர்க்கரை ஆலைக்கு, போளூர் தொகுதியில் சாலை வசதிகள் செய்துதர அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆலைப் பகுதிக்கும் சாலைப் பணிகள் ஒப்பளிக்கும்போது முதல் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட ஆலைப் பகுதிக்கு அடுத்த ஆண்டில் ஒப்பளிப்பு வழங்குவதில்லை. இதன் அடிப்படையில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைப்பகுதியில் 1988–89 ஆம் ஆண்டிற்கு சோளிங்கர்-காவேரிப்பாக்கம் சாலையை மேம்படுத்தும் பணி ரூ. 27.00 இலட்சம் செலவில் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, அடுத்து 1990–91 ஆம் ஆண்டில் தான் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்க இயலும். 1990–91 ஆம் ஆண்டு சாலைப் பணிகள் ஒப்பளிக்கும்போது போளூர் பகுதியில் சாலை எந்த ஊரிலிருந்து எந்த ஊர் வரை என்ற விவரங்களுடன் சாலை அமைக்கும் கருத்துரு வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து பரிந்துரை செய்யப்பட்டால், அரசு இது குறித்து ஆய்வு செய்யும்.

22 —

கணக்கில் காட்டப்படாத எள் மூட்டைகள்.

**வினா எண். 4017—திரு. கோ. பூவராகன் :** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஈரோட்டில் எண்ணெய் பிழியும் ஆலை ஒன்றிலிருந்து கணக்கில் காட்டப்படாத எள் மூட்டைகள் அண்மையில் கைப்பற்றப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், கைப்பற்றப்பட்ட சரக்கின் மதிப்பு என்ன?

(இ) அந்த ஆலை அதிபர் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) நிர்ணயம் செய்யப்பட்ட அளவுக்கு அதிகமாக எள் மூட்டைகள் வைக்கப்பட்டுள்ளது என்ற சந்தேகத்தின் பேரில் பெரியார் மாவட்டம் ஈரோட்டில் உள்ள காவேரி எண்ணெய் ஆலை கிடங்கிலிருந்து 21—3—1989 அன்று 10,011 எள் மூட்டைகள் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைப்பற்றப்பட்டு அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், 1955, பிரிவு 6ஏ-ன்படி நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அனுப்பப்பட்டது.

(ஆ) மதிப்பு ரூ. 60,06,600.

(இ) மாவட்ட ஆட்சித் தலைவர் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், 1955, பிரிவு 6ஏ-ன்படி விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட ஆலை உரிமையாளர், அரசு நிர்ணயித்துள்ள அளவுக்கு உட்பட்டுத்தான் எள் மூட்டை இருப்பு வைத்துள்ளார் என்று முடிவு செய்து கைப்பற்றப்பட்ட எள் மூட்டைகளை விடுவித்தும் மேல் நடவடிக்கையை கைவிட்டும் ஆணை பிறப்பித்துள்ளார்.

23—

அரசு பள்ளிகளுக்குக் கட்டிட வசதி.

வினா எண். 4359— திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது உள்ள அரசு பள்ளிக் கட்டிடங்களில் ஒரு பகுதி கொட்டகைகளாக இருப்பதால் அடிக்கடி பழுதடைந்து பள்ளி பிள்ளைகளின் உயிருக்கு பாதிப்பு ஏற்படுவது பற்றி அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?





(ஆ) ஆம் எனில், கீற்றுக் கொட்டகைகளை மாற்ற அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஆம். அரசு பள்ளிகளுக்குக் கட்டட வசதி செய்து தருவதற்கு அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது. ஆண்டுதோறும் போதிய வகுப்பறைகள் இல்லாத பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப வகுப்பறைகள் கட்டித் தரப்படுகின்றன. இதுதவிர பழுதுபட்ட கட்டடங்களைச் செப்பனிடுதல், இயற்கையின் சீற்றத்தினால் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல் ஆகியவற்றிற்கும் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசின் நிதிநிலைமைக்கேற்ப அவ்வப்போது சிறப்பு பழுதுபார்ப்பதற்காகவும் (Special Repair) நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

24—

கோடியக்கரை துறைமுகத்தில் மணலை அகற்றுதல்.

**வினா எண் 4678—திரு. இரா. சிங்காரம் :** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், மீன்பிடி விசைப் படகுகளை பாது காப்பாக நிறுத்தி வைக்க ஏதுவாக கட்டப்பட்ட கோடியக்கரை துறைமுகத்தில் மணலை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

கோடியக்கரையில் உள்ள ஜெட்டியைச் சுற்றிலும் அதிக அளவில் மணல் சேரத் தொடங்கி ஆண்டொன்றுக்கு சுமார் 11 மீட்டர் நீள அளவில் கடற்கரையின் அளவு விரிவடைந்து வரு கிறது என கணக்கிடப்பட்டுள்ளது. ஆகவே, கடற்கரையோரத் தின் உள்வாங்கும்/முன்னேறும் தன்மை, நீரோட்டத்தின் தன்மை, மண் சேரும் அளவு, அது சேரும் வேகம், ஆகிய இனங் களைப் பற்றிய ஒரு விரிவான ஆய்வு மேற்கொண்ட பின்தான் கோடியக்கரை ஜெட்டியை ஆழப்படுத்துவதோ அல்லது விரிவு படுத்துவதோ குறித்து பரிசீலனை செய்து முடிவெடுக்கலாம் என்ற கருத்து அரசுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மூன்றாண்டு களுக்கு (ஆண்டுக்கு இருமுறை) மேற்குறிப்பிட்ட ஆய்வினை மேற் கொண்டு முடிவுகளை தெரிவித்திட நாகர்கோவில் மீன்பிடி துறை முக திட்டவட்ட மேற்பார்வை பொறியாளர் பணிக்கப்பட்டுள் ளார். ஆய்வின் முடிவுகளைக் கொண்டுதான் இதன்மீது மேல் நடவடிக்கை தொடருவது பற்றி பரிசீலிக்க இயலும்.

25—

### மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 4761.—திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா ;

பேராவூரணி தொகுதி, விளங்குளம் ஆதிதிராவிடர் மேலத் தெருவுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

விளங்குளம் ஆதிதிராவிடர் மேலத்தெரு விளங்குளம் வடக்கு குடியிருப்பின் ஒரு பகுதியாகும். 1979-ம் ஆண்டில் சேது பாவா சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 35 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் நீரேற்று உந்து குழாயில், இக்குடியி ருப்பிற்கு ஒரு பொது குடிநீர்க் குழாய் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளது. மேலும் நடப்பு ஆண்டில், குறைந்த தேவைத் திட்டத்தின் கீழ் ரூ. 2.13 இலட்சம் செலவில், 30,000 லிட்டர் கொள்ளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 1.5 கி.மீ. நீளத்திற்கு பகிர்மானக் குழாயும், 7 பொது குடிநீர்க் குழாய் களுடன் கூடிய ஒரு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திலிருந்து ஆதிதிராவிடர் மேலத் தெரு வுக்கு ஒரு பொது குடிநீர்க் குழாய் மூலம் குடிநீர் வசதி செய்துதர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

26—

### ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி.

வினா எண் 5081—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் நடத்தப் படும் ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் 1987 முதல் 1989 வரை தேர்ச்சிபெற்றவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் நடத்தப் படும் ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் 1987 முதல் 1989 வரை தேர்ச்சி பெற்றவர்கள் எழுபத்து மூன்று.

(ஆ) அரசு விதிகளின்படி இக்கழகத்தில் ஓட்டுநர் பயிற்சி முடித்தவர்களையும் வேலைவாய்ப்பு அலுவலகம் வழியாகத்தான்



பணியில் நியமனம் செய்யவேண்டும். அதன்படி தேவைக்கேற்ப வேலைவாய்ப்பு அலுவலகம் செய்யும் ஒதுக்கீட்டின்படி நபர்கள் பெறப்பட்டு நியமனம் செய்யப்படும்போது இக்கழகத்தில் பயிற்சி பெற்றவர்கள் முன்னுரிமை கொடுக்கப்பட்டு நியமனம் செய்யப் படுகிறார்கள். இந்த வழிமுறைப்படி தேர்ச்சி பெற்ற எழுபத் தாறு நபர்களில் இதுவரை இருபத்தாறு நபர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

27—

### கோட்டூர்புரத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ் நிலையம் அமைத்தல்.

வினா எண் 5212—திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

கோட்டூர்புரத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ் நிலையம் அமைக்க அரசு அடிப்படை விவர மையத்தின் (Covernment Data Cent e) நிலத்தை அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

பல்லவன் போக்குவரத்துக் கழகம் கோட்டூர்புரத்தில் ஒரு பேருந்து நிலையம் அமைக்க அரசு அடிப்படை விவர மையத்திற்கு (Governm nt Data Centre) சொந்தமான நிலத்தின் ஒரு பகுதியை கோரியிருந்தது. அவ்வாறு கோரப்பட்டபோது கோட்டூர் பேருந்து நிலையத்திற்கு பேருந்துகள் தற்போது நந்தனத்துடன் இணைக்கும் பாலம் முன்பில்லாத காரணத்தாலும், அவ்விடத்தில் தங்கி பின்னர் அவை திரும்பிச் செல்ல வேண்டிய நிலையில் இருந்த காரணத்தாலும், நிலம் கோரி பேருந்து நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இருந்தது. பின்னர் அப்பகுதியில் மேம்பாலம் கட்டி கோட்டூர் வழியாக நந்தனத்திற்கு போக்கு வரத்து விரிவுப்படுத்தப்பட்ட பிறகு, மாநகராட்சி, இப்பேருந்து களுக்கு ஒதுக்குப்புற வசதியை விரிவுப்படுத்தியுள்ள காரணத்தால் இப்பகுதியில் நிலம் எடுத்து தனியாகப் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது.

28—

### தீயணைக்கும் நிலையத்திலுள்ள வண்டிகளை அதிகப்படுத்துதல்.

வினா எண் 5466—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வடஆற்காடு மாவட்டம், தீயணைக்கும் நிலையத்திலுள்ள வண்டிகளை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[1991 சனவரி 22

விடை—

முன்பு இருந்த வடஆற்காடு மாவட்டம், வடாற்காடு-அம்பேத்கார் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் என இரு மாவட்டங்களகப் பிரிக்கப்பட்டதையடுத்து தீயணைப்புத்துறையிலும், வடாற்காடு கோட்டம், இரு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு கீழே குறிப்பிட்டவாறு வடாற்காடு-அம்பேத்கார் கோட்டத்தின் கீழே 10 தீயணைப்பு நிலையங்களும், திருவண்ணாமலை-சம்புவராயர் கோட்டத்தின் கீழ் 7 தீயணைப்பு நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேற்சொன்ன இரு கோட்டங்களில் இயங்கி வரும் 17 தீயணைப்பு நிலையங்களின் ஊர்திகளை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

| வடாற்காடு-அம்பேத்கார் கோட்டத்திலுள்ள தீயணைப்பு நிலையங்கள். (1) | திருவண்ணாமலை - சம்புவராயர் கோட்டத்துள்ள தீயணைப்பு நிலையங்கள். (2) |
|---|---|
| 1. வேலூர் | 1. திருவண்ணாமலை |
| 2. ராணிப்பேட்டை | 2. செங்கம். |
| 3. சிப்காட் ராணிப்பேட்டை | 3. போளூர். |
| 4. சோளிங்கர் | 4. செய்யாறு. |
| 5. அரக்கோணம் | 5. வந்தவாசி. |
| 6. திருப்பத்தூர் | 6. ஆரணி. |
| 7. நாட்ரம்பள்ளி. | 7. தண்டராம்பட்டு. |
| 8. வாணியம்பாடி. | |
| 9. ஆம்பூர். | |
| 10. குடியாத்தம். | |

29—

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.

வினா எண் 570—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் உள்ளன ?

(ஆ) மேலும் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் குறிப்பில் உள்ளதா ?



1991 சனவரி 22]

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது 43 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) 1989-90 ஆம் ஆண்டில் கூடுதலாக இம்மாவட்டத்தில்: மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தில் தாமரைக்குளம் கிராமத்திலும் ஆர். எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் குலமங்கலம் கிராமத்திலும் மற்றும் கடலாடி ஊராட்சி ஒன்றியத்தில் மேலகிடாரம் கிராமத்திலும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

30—

ஆதி திராவிடர் மாணவர்கள் விடுதி.

வினா எண் 5834.—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரத்தில் பரமக்குடி தொகுதியில் ஆதிதிராவிட மாணவர்கள் விடுதி எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அரசுக்குச் சொந்தமாக எத்தனை விடுதிக்கட்டிடங்கள் உள்ளன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதியில்மூன்று ஆதிதிராவிட மாணவர்கள் விடுதிகள் உள்ளன. அவற்றின் பெயர்களும் தங்கியுள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் கீழே தரப்பட்டுள்ளன :—

1. அரசினர் மாணவர் விடுதி, பரமக்குடி-303.

2. அரசினர் மாணவர் விடுதி, பார்த்திபனூர்-48.

3. அரசினர் மாணவர் விடுதி, சத்திரக்குடி-51.

(இ) அனைத்து விடுதிகளும் வாடகைக் கட்டிடக்தில் செயல்பட்டு வருகின்றன.

31—

## ஆதி திராவிடர்களுக்காகக் காலனி வீடுகள்.

வினா எண் 5836—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

"இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி தொகுதியில் 1989-90ஆம் ஆண்டு ஆதிதிராவிடர்களுக்காக எந்தெந்த ஊர் களில் எத்தனை காலனி வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு திட்ட மிட்டுள்ளது?

விடை—

விபரம் பின்வருமாறு :—

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | ஊராட்சி/கிராமத்தின் பெயர். | எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | போகளூர் | எத்திவயல் | 14 |
| | | மன்னந்திநாக்காச்சி | 13 |
| | | போகளூர் சத்திரக்குடி | 13 |
| | | தியனூர் வேப்பங்குளம் | 21 |
| | | அரியக்குடி | 11 |
| | | | 72 |
| 2 | நயினார் கோயில். | சிறுவயல் | 16 |
| | | கிள்ளியூர் | 20 |
| | | கொல்லனூர் | 20 |
| | | | 56 |
| 3 | பரமக்குடி | நெம்மேனி | 30 |
| | | உரக்குடி | 13 |
| | | மேல்பதம்பலூர் | 36 |
| | | பொன்னாக்கரை | 20 |
| | | | 99 |



32—

## காவலருக்குச் சீருடைகள்.

வினா எண். 5895.—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) காவல் துறையில் பணிபுரியும் காவலர்களுக்கு ஆண்டுக்கு எத்தனை ஜோடி உடைகள் வழங்கப்படுகின்றன?

(ஆ) இதற்கு ஆகும் செலவு எவ்வளவு?

விடை—

(அ) காவல் துறையில் பணிபுரியும் காவலர் முதல் ஆய்வாளர் வரையிலுள்ள பதவியினருக்கு கீழ்க்கண்டவாறு சீருடைகள் வழங்கப்படுகின்றன.—

(1) தலக்காவல் (Local Police) மற்றும் பெண்காவலர்கள் (Women Police)-ஒவ்வொருவருக்கும் மூன்று ஆண்டுகளுக்கு நான்கு ஜோடி சீருடைகள் என்ற சுழற்சியில் வழங்கப்படுகின்றன. (முதலாண்டு இரண்டு ஜோடி சீருடைகளும், இரண்டாமாண்டு ஒரு ஜோடியும, மூன்றாமாண்டு ஒரு ஜோடி சீருடையும் என்ற முறையில் வழங்கப்பட்டு வருகின்றன.)

(2) மாவட்ட ஆயுதப்படை (Armed Police) மற்றும் தமிழ் நாடு சிறப்புக் காவல்படை (Tamil Nadu Special Police) ஆண்டு தோறும் தலைக்கு இரண்டு ஜோடி சீருடைகளுடன் ஒரு அரைக் கால் சட்டையும் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) ஆண்டொன்றுக்கு சராசரியாக ஆகும் மொத்த செலவு ரூ. 2.17 கோடி.

போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணச் சலுகை.

33—

**வினா எண். 6002.**—திரு. என். பழனிவேல், மற்றும் திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 60 வயதைக் கடந்தவர்கள் 100 கி.மீ. தூரத்திற்கு மேல் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்யும்போது அவர்களுக்கு கட்டணச் சலுகை வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) 60 வயதைக் கடந்தவர்கள் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் 100 கி.மீ. தூரத்திற்கு மேல் பயணம் செய்ய கட்டணச் சலுகை குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

34—

அரசு மருத்துவ மனைகள்.

**வினா எண். 6186.**—திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு மருத்துவமனைகளில் 50 படுக்கைகளுக்கு எத்தனை டாக்டர், பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்?

(ஆ) மருத்துவர்கள், பணியாளர்களை அதிகப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

(அ) மருத்துவர்கள் மருத்துவமனைகளில் நியமிக்க அளவுகோல் அல்லது குறியீடுகள் ஏதும் நடைமுறையில் இல்லை. மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை, சிகிச்சை அளிக்கப்படும் உள்நோயாளிகள்-வெளி நோயாளிகள் எண்ணிக்கை மற்றும் மருத்துவமனையின் தேவைகளின் அடிப்படையில் மருத்துவர்கள் நியமிக்கப்படுகின்றனர்.





மேலும், தமிழ்நாடு மருத்துவ விதி தொகுப்பில் ) Tamil Nadu Medical) மருத்துவமனையில் சில வகை பணியாளர்களை நியமிக்க அளவுகோல்கள் வகுக்கப்பட்டுள்ளது.

(ஆ) அந்தந்த மருத்துவமனைகளின் தேவைகளுக்கேற்பவும், அரசின் நிதி ஆதாரங்களைப் பொறுத்தும் கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்த அனுமதிக்கப்படுகிறது.

35—

மயானத்திற்குச் செல்ல பாதை வசதி.

**வினா எண் 6314.**—திரு. பெ. மாரப்பன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், புங்கம்பாடி ஊராட்சி புங்கம்பாடி, ஆதிதிராவிடர் காலனி மயானத்திற்குச் செல்ல தட வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம், புங்கம்பாடி கிராமத்தில் 110 ஆதிதிராவிட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் மேற்படி கிராமத்தில் க.ச. எண் 193/1-ல் வண்டி பாதைப் புறம்போக்கை மயானமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இது இவர்கள் குடியிருப்பிலிருந்து சுமார் 0.8 கி.மீ. தொலைவில் உள்ளது. காலனியிலிருந்து மயானம்வரை தொடர்ச்சியாக உள்ள வண்டிப்பாதை புறம்போக்கையே இவர்கள் பாதையாக பயன் படுத்தி வருகின்றனர். இதில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை. மேலும் இந்த பாதை மயானத்திற்குச் செல்ல போதுமானது ஆகும். இப்பாதை சமப்படுத்தப்படாமல் மேடுபள்ளமாக உள்ளது. இதனை சமப்படுத்தி பாதை அமைத்துக் கொடுக்க புங்கம்பாடி ஊராட்சி மன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

36—

நீதிமன்றக் கட்டிடங்கள்.

**வினா எண் 6318**—திரு. பெ. மாரப்பன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம் ஈரோட்டில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் எல்லா முதல் வகுப்பு நீதி மன்றங்களுக்கும், நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கட்டிட வேலைகள் எப்பொழுது நிறைவு பெறும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): பெரியார் மாவட்டம் ஈரோடு, சூரம்பட்டி கிராமத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு முதற்பகுதியாக ரூ. 78.20 இலட்சத்தில் உரிமையியல் நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டப்பட்டு 29-4-1988 அன்று மேதகு ஆளுநர் அவர்களால் திறப்பு விழா செய்யப்பட்டது. இப்பொழுது உரிமையியல் நீதிமன்றங்கள் அங்கு செயல்பட்டு வருகின்றன. ரூ. 106.00 இலட்சம் மற்றும் ரூ. 14.63 இலட்சம் செலவில் முறையே இரண்டாம் பகுதியான குற்றவியல் நீதிமன்றங்கள் மற்றும் உரிமையியல் நீதிமன்றக் கட்டிடத்தின் மூன்றாம் மாடி கட்டுவதற்கான திட்டம் மற்றும் மதிப்பீடு கொண்ட செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. நிதிநிலைக்கேற்ப இச்செயற்குறிப்புகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

37—

### ஆரம்பச் சுகாதார நிலையம் துவக்குதல்.

வினா எண் 6335—திரு. இரா. சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பழஞ்சூர் கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கும்?

விடை—

(அ) மற்றும் (ஆ).: 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பது என்ற அரசின் கொள்கை அடிப்படையில் 1,21,400 மக்கட் தொகை கொண்ட தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் நான்கு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். ஏற்கனவே அந்த ஒன்றியத்தில் தாமரன்கோட்டை, ராஜாமடம், நாட்டுச் சாலை மற்றும் ஏனாதி ஆகிய நான்கு இடங்களில் ஆரம்பச்சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதால் பழஞ்சூர் கிராமத்தில் ஆரம்பச்சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



38—

### I.M.F.S விற்பனைமூலம் அரசுக்கு விற்பனை வரி.

வினா எண் 6407—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

I.M.F.S விற்பனை மூலம் அரசுக்கு விற்பனை வரியாக 1989 ஆம் ஆண்டு சனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் கிடைத்த வருமானம் எவ்வளவு?

விடை—

இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் விற்பனை மூலம் அரசுக்கு விற்பனை வரியாக 1989 ஆம் ஆண்டு சனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் கிடைத்த வருமானம் பின்வருமாறு:

| மாதம். (1) | | | மொத்த வசூல் (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| சனவரி | 1989 | .. | 553.95 |
| பிப்ரவரி | 1989 | .. | 536.23 |
| மார்ச் | 1989 | .. | 472.02 |
| ஏப்ரல் | 1989 | .. | 382.35 |
| மே | 1989 | .. | 526.96 |
| | | மொத்தம் .. | 2,471.51 |

144896

39—

### ரவுண்டானா அமைத்தல்.

வினா எண் 6439—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் டிராபிக் ரவுண்டாணா ஆர்ச் ஐந்துமுனைரோடு, பஸ் ஸ்டாண்ட் ஆகிய இடங்களில் அமைக்கப்படுமா?

D
V211,31
N91.36

விடை—

மதுரை—தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலை எண் 49-; கி.மீ. 74-1-ல் தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புறப்பகுதி பரமக்குடியில் அமைந்துள்ள சாலை சந்திப்பிற்கு ஐந்து முனை ரோடு என்று பெயர். இச்சந்திப்பிலிருந்து மதுரை-இராமநாதபுரம், முதுகுளத்தூர் -இளையான்குடி சாலைகள் மற்றும் குந்துக்கால் முனியகாடு கோவில் தெரு முதலியன பிரிந்து செல்கின்றன. மேற்படி சந்திப்பு அபிவிருத்திக்கு தனி ஆய்வு செய்தல் போக்குவரத்து சிறு குழு மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சந்திப்பு அபிவிருத்தி வேலை எதிர்காலத்தில் பகுதி 2 திட்டத்தில் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படும். இச்சந்திப்பு அபிவிருத்திக்கு சுமார் ரூ. 8 இலட்சம் செலவாகும். மேலும் பரமக்குடி பேருந்து நிலையம் உள்ள பகுதியில் ரவுண்டாணா அமைத்தல் குறித்து எவ்விதக் கருத்துருவும் இல்லை.

40—

### கால்நடை மருந்தகங்கள்.

வினா எண் 6442—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை கால்நடை மருந்தகங்கள் உள்ளன?

(ஆ) 1989-90 இல் மேலும் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 18 காலநடை மருந்தகங்கள் கீழ்க்கண்ட இடங்களில் இயங்கி வருகின்றன :—

1. இராமநாதபுரம்.
2. சூரன்கோட்டை.
3. தேவிப்பட்டினம்.
4. உச்சிப்புளி.
5. இராமேஸ்வரம்.
6. கீழக்கரை.
7. ஆர். எஸ். மங்கலம்.
8. திருவேகம்பட்டு.
9. திருவாடானை.



10. பரமக்குடி.
11. பார்த்திபனூர்.
12. பாகனூர்.
13. நைனார்கோவில்.
14. முதுகுளத்தூர்.
15. கடலாடி.
16. சிக்கல்.
17. கமுதி.
18. பெருநள்ளி.

(ஆ) 1989-90 ஆம் ஆண்டில் மேலும் கால்நடைமருந்தகங்கள் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

41—

### ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளிகளின் பள்ளிக் கட்டிடம்.

வினா எண் 6477— திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவெறும்பூர் ஒன்றியம், காட்டூர் பாப்பாக்குறிச்சியில் உள்ள ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளிகளின் பள்ளிக்கட்டிடம் கட்ட ஒதுக்கப்பட்ட 9 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்திட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

விடை—

திருவெறும்பூர் ஒன்றியம், காட்டூர் பாப்பாக்குறிச்சியில் உள்ள ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளிகளின் பள்ளிக் கட்டிடம் கட்ட 9 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்திட எடுக்கப்பட்ட நடவடிக்கை தற்போது உயர்நீதிமன்ற தடை ஆணையால் நிறைவேற்றப்பட முடியாத சூழ்நிலையில் உள்ளது.

42—

### வீட்டுமனைப் பட்டா.

வினா எண் 6771—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு ஆதித்திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

லால்குடி வட்டம், பழவூர் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

[1991 சனவரி 22

விடை—

லால்குடி வட்டம், பழூர் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்த நடவடிக்கை ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின் முன் மொழிவு கிடைத்தவுடன் அரசு உரிய ஆணை பிறப்பிக்கும்.

43—

பாதை அமைத்தல்.

வினா எண். 6797—திரு. கே. ரமணி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தாலுக்கா மலைப்பகுதியில் கடம்பூரிலிருந்து செங்காடு வழி ஓசினியம் வரையுள்ள சிற்றூர்களுக்கு பாதையே அமைக்கப்படா மலிருப்பது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த ஊர்களுக்கு பாதை அமைக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) கடம்பூரிலிருந்து செங்காடு மற்றும் பவளக்குட்டை வழியாக ஓசினியம் செல்லும் சாலையின் நீளம் 16.00 கி. மீ. ஆகும். இச்சாலை வனச்சாலையாகும். கடம்பூர், சத்தி வட்டம், சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் குத்தியாலத்தூர் மலைப் பகுதியில் உள்ளது. கடம்பூரி லிருந்து திம்பம் செல்லும் சாலையில் 16.00 கி.மீ. தொலைவில் ஓசினியம் உள்ளது. இவ்வனச் சாலையை நன்கு மேம்படுத்தி திருத்தி அமைக்க தோராயமாக ரூ. 40.00 (நாற்பது இலட்சங்கள்) அளவில் தேவைப்படும். இப்பணி யாதொருவிதமான திட்டம் காலப் பட்டியலிலும் இடம் பெறவில்லை. எனவே எதிர் வரும் காலங்களில் சாலை வளர்ச்சிப் பணிகளுக்கு பெருமளவில் நிதி வழங்கப்படுமாயின், வனத்துறை அனுமதி கொடுத்தால், மேற்குறித்த பணியினை பகுதி 2 திட்டத்தில் சேர்த்து அரசின் ஒப்புதல் பெற்று பணியினை மேற்கொள்வது குறித்து முயற்சி செய்யப்படும்.



1991 சனவரி 22]

44—

மின் இணைப்புகள்.

வினா எண் 6822—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் குழாய் பாசனக் கிணறு களுக்கு விரைவாக மின் இணைப்புகள் கொடுக்க ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை :—

(அ) ஆம். தஞ்சை மாவட்டத்தில் குழாய் பாசனக் கிணறுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்புகள் தரும் திட்டம் ஏற்கெனவே உள்ளது.

(ஆ) தஞ்சை மாவட்டத்திலுள்ள வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கு முன்னுரிமையின் கீழ் மின்இணைப்பு வழங்குவது 1969-70 ஆண்டிலிருந்து வழக்கத்தில் உள்ளது. இம்மாவட்டம் சிறப்பு உணவு உற்பத்தி திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ள தால் இம்மாவட்டத்தில் கூடுதலான மின் இணைப்புகள் தரப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டிற்கான (1989-90) குறியீடு 2,000 பம்புசெட்டுகளாகும். 30—11—1989 நில வரப்படி இந்த ஆண்டு 1,071 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சிறப்பு முன்னுரிமைச் சலுகையின் காரணமாக தஞ்சை மாவட்ட விவசாயிகள் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புப்பெற வாய்ப்புள்ளது. அதே நேரத்தில் மற்ற மாவட்ட விவசாயிகள், விவசாய விசை யேற்ற மின் இணைப்புக்காக ஐந்திலிருந்து பத்தாண்டுகள் வரை காத்திருக்க வேண்டியுள்ளது.

45—

நகரப் பேருந்து விடுதல்.

வினா எண் 6913—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி—காடர்ந்தகுடிக்கு காலையில் 8.00—8.30க்குள் நகரப் பேருந்துவிட மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த இரு நகரப் பேருந்துகள் காடர்ந்தகுடி வழியாக பரமக்குடியில் இருந்து பல்முனைத்திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறு இயக்கப்படுகின்றன :—

முதல் பேருந்து :

| | |
|---|---|
| பரமக்குடி—சாத்தனூர் (வழி) காடர்ந்தகுடி | 6 நடைகள் |
| பரமக்குடி—முதுகுளத்தூர் (வழி) பாம்பூர் .. | 6 நடைகள் |

இரண்டாம் பேருந்து :

| | |
|---|---|
| பரமக்குடி—புனிதவயல் (வழி) காடர்ந்தகுடி | 4 நடைகள் |
| பரமக்குடி—முனைவென்றி (வழி) தெ. புதுக்கோட்டை. | 6 நடைகள் |
| பரமக்குடி—முஸ்தாபாபுரம் (வழி) பனங்குளம். .. | 4 நடைகள் |

வேண்டுகோளிற்கு இணங்க நேரத்தை மாற்றுவோமேயானால் மற்ற கிராமங்களுக்கு செல்லும் நடைகள் பாதிக்கப்பட்டு புகார்களுக்கு வாய்ப்பளிக்கும்.

46—

### நல்ல மிளகு உற்பத்தி.

வினா எண் 6950—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1988-89 ஆம் ஆண்டில் நல்ல மிளகு நமது மாநிலத்தில் உற்பத்தியின் அளவு என்ன ?

(ஆ) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா ?



விடை—

(அ) தமிழ்நாட்டில் 1988-89 ஆம் ஆண்டில், உற்பத்தி செய்யப்பட்ட நல்ல மிளகின் விளைச்சலும், சாகுபடி பரப்பும் மாவட்ட வாரியாக கீழே தரப்பட்டுள்ளது.—

| வரிசை எண். | மாவட்டம். | சாகுபடி பரப்பு (ஹெக்டேரில்) | உற்பத்தி செய்யப்பட்ட அளவு (டன்களில்) |
|---|---|---|---|
| 1 | சேலம் .. .. ... | 300 | 64.000 |
| 2 | கோவை .. .. .. | 10 | 2.000 |
| 3 | மதுரை | 58 | 12.000 |
| 4 | திண்டுக்கல் காயிதே மில்லத் | 13 | 3.000 |
| 5 | நீலகிரி .. .. ... | 578 | 123.000 |
| 6 | கன்னியாகுமரி | 81 | 17.000 |
| 7 | வட ஆற்காடு | 2 | ... |
| 8 | நெல்லை கட்டபொம்மன் | 2 | .. |
| | மொத்தம் .. | 1,044 | 221.000 |

(ஆ) தமிழ் நாட்டில் விளையும் நல்ல மிளகு உள்நாட்டில் உபயோகத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. ஏற்றுமதி செய்யப்படுவதில்லை, சோவியத் யூனியன், சவுதி அரேபியா, ஜெர்மனி, பிரான்சு, இத்தாலி, அமெரிக்கா, யூகோஸ்லோவேகியா போன்ற நாடுகளுக்கு கேரள மாநிலத்தில் உற்பத்தியாகும் நல்லமிளகு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஏனெனில் இந்தியாவில் உற்பத்தியாகும் நல்லமிளகில் 97 சதவிகிதம் கேரள மாநிலத்தில்தான் உற்பத்தி செய்யப்படுகிறது.

47—

### கிராமப்புற வீட்டுவசதி சங்கம்.

வினா எண் 6978—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1987-88, 1988-89-ல் தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற வீட்டுவசதி சங்கம் வீடு கட்ட கடனாக கொடுத்த தொகை எவ்வளவு?

(ஆ) 1989-90-ல் கடன் கோரி எவ்வளவு விண்ணப்பங்கள் வந்துள்ளன.

(இ) வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

விடை—

(அ)

| வருடம். (1) | கடன். (2) | மானியம். (3) | மொத்தம். (4) |
| --- | --- | --- | --- |
| | (ரூபாய் கோடியில்.) | | |
| 1987—88 | 10.35 | 0.39 | 10.74 |
| 1988—89 | 14.57 | 0.67 | 15.24 |

(ஆ) 1989-90 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு கிராமிய வீட்டுவசதி திட்டத்தின் கீழ் வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலமாக மொத்தம் 30,000 வீடுகள் கட்டி முடிக்க கடனுதவி செய்யப்படவேண்டும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இக்குறியீட்டிற்கேற்ப வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் முன்னுரிமைப் பதிவேட்டில் ஏற்கனவே பதியப்பட்டுள்ள மனுதாரர்களில் 30,000 நபர்களை சங்கங்களின் உறுப்பினர்களாக்கி வீடு கட்ட கடன் வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) 1989-90ஆம் ஆண்டிற்கு கடன் தொகை வழங்கப்படவில்லை. மாவட்ட வாரியாக குறியீடுகள் நிர்ணயிக்கப்பட்டு திட்டங்கள் தயார் செய்யப்பட்டு 'அட்கோ' நிதிவியுதவி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட நிதியுதவி நிறுவனத்திடமிருந்து கடன் தொகை கிடைக்கப்பெற்றவுடன் அந்தந்த வட்டக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உறுப்பினர்களுக்கு வீடுகட்ட கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்காக அரசு ரூ. 4.50 கோடி செலவிட உத்தேசித்துள்ளது.

48—

அறக்கட்டளைகள்.

வினா எண் 6984—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) செங்கை—அண்ணா மாவட்டத்தில் எத்தனை அறக்கட்டளைகள் இயங்குகின்றன.





(ஆ) மதுராந்தகம் ஜானகிராம் பந்தலு அறக்கட்டளை யார் பராமரிப்பில் உள்ளது?

(இ) அதன் சொத்துக்களின் விவரம் என்ன?

விடை—

(அ) செங்கை—அண்ணா மாவட்டத்தில் 25 அறக்கட்டளைகள் இந்து—சமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகத்தில் உள்ளன.

(ஆ) செங்கை—அண்ணா மாவட்ட நீதிமன்றத்தின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது.

| | | |
| --- | --- | --- |
| (இ) மதுராந்தகம் டவுன் | .. | கட்டிடம் வ. எண் 10 முதல் 21, ஜி.எஸ்.டி. ரோடு, மதுராந்தகம். |
| வேடால் கிராமம் | .. | மதுராந்தகம் வட்டம் சர்வே எண் 37 (5.60 ஏக்கர், நஞ்சை.) |
| செம்புலிவரம் | .. | சர்வே எண் 217, 218 (10.25 ஏக்கர் புஞ்சை) |
| முழுதிக்குப்பம் | .. | சர்வே எ.ண் 208,26.19 ஏக்கர் நஞ்சை. |
| கொல்லோபிரான்புரம் | | சர்வே எண் 83, 0.15 ஏக்கர், நஞ்சை. |
| பூங்குணம் | .. | சர்வே எண் 10, 3.61 ஏக்கர், நஞ்சை. |

49—

சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை.

வினா எண் 7000—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையை மேம்படுத்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த விபரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னை-பெங்களூர் சாலையை எக்ஸ்பிரஸ்வே (அதிவேகச்சாலை)யாக ஆக்கும் திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு சாத்தியக்கூறுகள் மதிப்பீடு தயாரிப்பதற்கான ஆய்வுகள், சர்வே பணிகள் மேற்கொள்ள ரூ. 3.558 கோடிக்கு ஒரு மதிப்பீடு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. ஆனால் தற்சமயம் சென்னை-பெங்களூர் சாலையில் சென்னை-இராணிப்பேட்டை பகுதிக்கு தற்சமயம் உள்ள இரு தட வழிப்பாதையை நான்கு தடவழிப்பாதையாக விரிவுபடுத்தும் திட்டத்தை தயாரிக்கும் மகத்தான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளுவதற்காக ஆயத்தங்கள் மேற்கொள்ள மத்திய அரசு தெரிவித்துள்ளது. அதற்கான சர்வே மற்றும் ஆய்வுப் பணிகளுக்கான மதிப்பீடு ரூ. 42 லட்சத்தில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டிற்கு ஒப்புதல் கிடைக்கப்பெற்றபின் விரிவான ஆய்வு மற்றும் அறிக்கை மதிப்பீடு தயாரிக்கும் பணி தொடங்கப்படும்.

50—

பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கங்கள்.

வினா எண். 7032—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் எத்தனை இடங்களில் எங்கெங்கு பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன ?

(ஆ) அங்கு நாள்தோறும் எத்தனை லிட்டர் பால் விநியோகம் செய்யப்படுகிறது?

விடை—

(அ) மொத்தம் 18 இடங்களில் பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவைகளாவன.

விருதுநகர்.
சிவகாசி.
ராஜபாளையம்.
ஸ்ரீவில்லிபுத்தூர்.
வத்திராயிருப்பு,
மன்னார்குடி.



நீடாமங்கலம்.
மதுராந்தகம்.
சைதாப்பேட்டை.
செங்கல்பட்டு,
சோளிங்கர்.
குன்றக்குடி.
பரமக்குடி.
ராமநாதபுரம்.
காரைக்குடி.
செங்கோட்டை.
சங்கரன்கோயில்.
திருநெல்வேலி.

(ஆ) நாள்தோறும் விநியோகம் செய்யப்படும் பாலின் அளவு (லிட்டரில்) :

| | |
|---|---|
| விருதுநகர் | 4,011 |
| சிவகாசி | 1,911 |
| ராஜபாளையம் | 7,025 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் | 1,830 |
| வத்திராயிருப்பு | 1,853 |
| மன்னார்குடி | 5,600 |
| நீடாமங்கலம் | 2,600 |
| மதுராந்தகம் | 2,815 |
| சைதாப்பேட்டை | 5,673 |
| செங்கற்பட்டு | 650 |
| சோளிங்கர் | 1,583 |
| குன்றக்குடி | 325 |
| பரமக்குடி | 4,430 |
| இராமநாதபுரம் | 3,012 |
| காரைக்குடி | 2,573 |
| செங்கோட்டை | 7,440 |
| சங்கரன்கோயில் | 3,400 |
| திருநெல்வேலி | 8,909 |

51—

ஜீவன் தாரா திட்டம்,

வினா எண். 7093—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1991 சனவரி 22

(அ) மத்திய அரசு தமிழகத்திற்கு 1988-89-ல் ஜீவன் தாரா திட்டத்திற்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு?

(ஆ) 1989-90-க்கு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?

(இ) இந்தத் தொகையை 1990-91-க்கு அதிகப்படுத்த மத்திய அரசை தமிழ்நாடு அரசு கோருமா?

விடை—

(ரூ. லட்சத்தில்.)

| | |
|---|---|
| (அ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ். | ரூ. 791.66 |
| ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ். | ரூ. 475.27 |
| மொத்தம் .. | ரூ. 1,266.93 |
| (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு 1989—90-ல் ஜீவன் தாரா திட்டத்தின் கீழ் ஒதுக்கியது. | ரூ. 500 லட்சம். |

(இ) 1990-91-ல் ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் அளிக்கப்படக்கூடிய நிதி ஒதுக்கீடு மத்திய அரசு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒதுக்கிடும் நிதியைப் பொறுத்தும் மற்றும் அதனை பகிர்ந்தளிக்க வெளியிடும் வழிமுறைகளை பொறுத்தும் அமையும்.

52—

## பேராவூரணி தீயணைப்பு நிலையம்.

வினா எண். 7134: திரு. இரா. சிங்காரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி தீயணைப்பு நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டு செயல்பட்ட டி.சி.எக்ஸ். 169 பென்ஸ் வண்டியை மீண்டும் ஒதுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

2. பேராவூரணி தீயணைப்பு நிலையத்திற்கு புதியதாக கட்டுமானம் செய்யப்பட்ட நீர்தாங்கி வண்டி டி.சி. எக்ஸ். 169



1991 சனவரி 22]

முதலில், ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர் சேலம் மாவட்டம், ஏற்காட்டில் தீயணைப்பு நிலையம் திறக்கப்பட்ட போது மலைப் பிரதேசத்தில் சுலபமாக செல்வதற்கு ஏதுவாக நீர் தாங்கி வண்டி டி.சி.எக்ஸ். 169 ஏற்காடு தீயணைப்பு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதற்குப் பதிலாக பேராவூரணி தீயணைப்பு நிலையத்திற்கு நீர் தாங்கி வண்டி டி.எஸ்.பி. 1125 ஒதுக்கீடு செய்யப்பட்டு நன்முறையில் பணியாற்றி வருகிறது. எனவே, நீர்தாங்கி வண்டி டி.சி.எக்ஸ். 169-ஐ மீண்டும் பேராவூரணி தீயணைப்பு நிலையத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

53—

## பஸ் விடுதல்.

வினா எண். 7142—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அந்தியூர் நால்ரோடு வெள்ளித்திருப்பூர், ரெட்டிபாளையம் வழியாக மூங்கில்பாளையம் பிரிவு, ஆட்டுக்காரன் கொட்டாய் பூம்பிளிச்சாம்பாளையம் கோவில் வழியாக குருவாரெட்டியூர் செல்ல பஸ் விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை---

(அ) மற்றும் (ஆ) இவ்வழித்தடத்தில் ஆய்வு செய்யப்பட்டது. மொத்த வழித்தட நீளம் 20.0 கி.மீ. ஆகும். இதில் மூங்கில்பாளையம் பிரிவு முதல் பூம்பிளிச்சாம் கோவில் பிரிவு வரையிலான சுமார் 2.5 கி.மி. பகுதிக்கு பேருந்து வசதியில்லை. இதற்கிடையே ஆட்டுக்காரன் கொட்டாய் என்ற இடத்தில் மட்டும் சுமார் 30 வீடுகளில் சுமார் 150 நபர்கள் உள்ளனர். பூம்பிளிச்சாம்பாளையம் கோவிலுக்கும் குருவரெட்டியூருக்கும் இடையே ஒரு பெரியபள்ளம் பாதையின் நடுவில் அமைந்துள்ளது. தற்போது ஆட்டுக்காரன் கொட்டாய் இடத்தில் உள்ள மக்கள் சுமார் 1.0 கி.மி. தூரத்தில் உள்ள மூங்கில் பாளையம் பிரிவு என்னும் இடத்திலிருந்து இரண்டு தனி நடைகள் மூலம் தற்போது பேருந்து வசதி பெறுகின்றனர். எனவே மேற்குறிப்பிட்ட காரணங்களால் மேற்படி வழித்தடத்தில் ஒரு புதிய நகரப் பேருந்தை தற்சமயத்திற்கு உடனடியாக இயக்க வாய்ப்பில்லாத நிலையுள்ளது.

[1991 சனவரி 22

54—

அந்தியூர் ஒன்றியத்தில் பஸ் போகும் சாலைகள் தார்ச்சாலையாக மாற்றல்.

**வினா எண். 7150—திரு. வே. பெரியசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்ட, அந்தியூர் ஒன்றியத்திலுள்ள அனைத்துக் கிராமங்களிலும் பஸ்போகும் சாலைகள் எல்லாம் தார்ச் சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது பணி முடியும்

**விடை—**

(அ) மற்றும் (ஆ) பேருந்து தட மேம்பாட்டுத் திட்டத்தில், 1983-84 வரை பேருந்துகள் ஓடிய, கீழ்க்கண்ட இரு சாலைகள், அரசால் அரசு ஆணை எண். 706, போக்குவரத்து, நாள் 23—6—1983-இல் அந்தியூர் ஒன்றியத்தில் 1989-90 ஆம் ஆண்டில் செயலாக்கப்பட்டு வருகின்றது.

அந்தியூர்-அத்தாணி சாலையில் கி.மி. 1/0 இல் அண்ணமார் பாளையம் செல்லும் சாலை கி.மி. 0/0-2/1.
2. சின்னதம்பிபாளையம் முதல் தங்கப்பாளையம் வழியாக மைக்கேல் பாளையம் செல்லும் சாலை கி.மீ. 1/4-2/8.

1—4—1983 முதல் 31—3—1984 முடிய உள்ள காலத்தில் பேருந்துகள் ஓடிய சாலைகளில் மேம்பாடு செய்யவேண்டிய சாலைகள் ஏதுமில்லை. மேலும் 1—4—1984 முதல் 31—3—1989 வரை கீழ்க்கண்ட சாலைகள் அந்தியூர் ஒன்றியத்தில், பேருந்துகள் ஓடிய சாலைகள் எனத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன :—

1—4—1984 முதல் 31—3—1985 முடிய :

1. சண்டியூர்-மேட்டூர் சாலையிலிருந்து மைக்கேல் பாளையம் செல்லும் சாலை கி.மி. 0/0—2/0.

2. மைக்கேல்பாளையத்திலிருந்து நஞ்சமடைக்குட்டை சாலை கி.மீ. 0/0—2/8.

3. தவிட்டுப்பாளையம்-ஆட்டக்கடல் சாலையில் கி.மீ. 7/2 இல் பிரிந்து கூத்தம்பூண்டி சாலை கி.மீ. 3/4—5/8.



1991 சனவரி 22]

1-4-1985 முதல் 31-3-1986 முடிய :

1. பவானி-செல்லம்பாளையம் சாலையிலிருந்து வட்டக்காடு செல்லும் சாலை கி.மீ. 0/0—1/6.

2. தவிட்டுப்பாளையம்-ஆட்டக்கடல் சாலையிலிருந்து சேத்தனாம் பாளையம் வழியாக பருவாச்சி செல்லும் சாலை கி.மீ. 0/0—6/4.

3. கழுதைப்பள்ளி மாற்றுபாதையிலிருந்து புதுக்காடு காந்திநகர் வழியாக கள்ளிவாடி குட்டை செல்லும் சாலை கி.மீ. 1/6—3/2.

4. அத்தாணியிலிருந்து-வரடுகாம்பை சாலை கி.மீ. 0/0-2/0.

1—4—1986 முதல் 31—3—1987 முடிய :

1. பள்ளிபாளையத்திலிருந்து குத்துபாயூர் அம்மாசு பேட்டை எல்லை வரை செல்லும் சாலை கி.மீ. 0/0—1/0.

2. தாரைக்கரையிலிருந்து தானிக்கரை செல்லும் சாலை கி.மீ. 0/0—5/0.

1—4—1987 முதல் 31—3—1988 முடிய :

1. சத்தி-அத்தானி-பவானி சாலையிலிருந்து சத்திநகர் வழியாக கடத்தம்பூண்டி சாலை கி.மீ. 0/0—1/0.

2. அந்தியூர்-அத்தானி சாலையில் கி.மீ. 3/8ல் பிரிந்து பெருமாபாளையம் வழியாக கரும்பாறை சாலை கி.மீ. 1/6-5/2.

1—4—1988 முதல் 31—3—1989 முடிய :

சாலைகள் ஏதுமில்லை.

மேற்படி சாலைகள் தற்போது நடைமுறையில் உள்ள அரசு ஆணைப்படியும் ஒவ்வொரு ஆண்டும் அரசு பேருந்து தட சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கும் நிதி ஒதுக்கீட்டை ஒட்டியும், அரசின் ஆணை பெற்று இச்சாலைகள் மேம் பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

55—

ஆதிதிராவிடர் மாணவர், மாணவியர் இல்லம்.

**வினா எண் 7153—திரு. வே. பெரியசாமி :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1991 சனவரி 22

(அ) பெரியார் மாவட்டம், சிங்கம்பேட்டை, நெருஞ்சிப் பேட்டை, ஆலம்பாளையம், குருவாரெட்டியூர், மூங்கில்பட்டி, அத்தானி போன்ற ஊர்களில் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் அரசினர் மாணவர், மாணவியர் இல்லம் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், 1989-90-ல் எங்கெல்லாம் விடுதி திறக்க அரசு எண்ணியுள்ளது?

விடை—

(அ) தேவை மற்றும் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு வரும் ஆண்டுகளில் மேற்குறிப்பிட்ட இடங்களில் விடுதிகள் திறக்க பரிசீலிக்கப்படும்.

(ஆ) 1989-90 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் விடுதிகள் திறக்க ஆணை இடப்பட்டுள்ளது :—

கல்லூரி மாணவ/மாணவியர் விடுதிகள்.

| | மாவட்டம். | | இடத்தின் பெயர். |
|---|---|---|---|
| 1. | சென்னை | .. | சென்னை (மாணவர்.) |
| 2. | தஞ்சாவூர் | .. | தஞ்சாவூர் (மாணவியர்) |
| 3. | நீலகிரி .. | .. | உதகமண்டலம் (மாணவர்) |

தொழிற்பயிற்சி நிலைய விடுதிகள்.

| | | | |
|---|---|---|---|
| 4. | சென்னை | .. | சென்னை (மாணவர்) |
| 5. | சென்னை | .. | சென்னை (மாணவியர்) |

பள்ளி மாணவர் விடுதிகள்.

| | | | |
|---|---|---|---|
| 6. | செங்கை-அண்ணா | .. | குணாம்பேடு |
| 7. | செங்கை—அண்ணா | .. | திருவாலங்காடு |
| 8. | தஞ்சாவூர் | .. | தேலூர் |
| 9. | திருச்சிராப்பள்ளி | .. | எம். ஆர். பாளையம். |
| 10. | புதுக்கோட்டை | .. | முள்ளங்குறிச்சி |



1991 சனவரி 22]

| | | | |
|---|---|---|---|
| 11. | திண்டுக்கல்-காயிதே மில்லத். | | கனகம்பேட்டை |
| 12. | மதுரை .. | .. | கோட்டூர் |
| 13. | இராமநாதபுரம் | .. | சிக்கல் |
| 14. | திருநெல்வேலி-கட்டபொம்மன். | .. | குருவிக்குளம் |
| 15. | சிதம்பரனார் | .. | எட்டயபுரம் |
| 16. | தர்மபுரி .. | .. | மருதிப்பட்டி |
| 17. | கோயம்புத்தூர் | .. | பெதப்பம்பட்டி |

பள்ளி மாணவியர் விடுதிகள்.

| | | | |
|---|---|---|---|
| 18. | திருவண்ணாமலை சம்புவராயர். | | கீழ்க்கொடுங்காலூர். |
| 19. | தென்னாற்காடு | .. | புளிச்சபள்ளம். |
| 20. | தஞ்சாவூர் | ... | திருக்குவளை |
| 21. | கன்னியாகுமரி | ... | சுசீந்திரம் |
| 22. | சேலம் .. | ... | தும்பல் |
| 23. | பெரியார் | — | கொடுமுடி |
| 24. | கோயம்புத்தூர் | ... | பல்லடம் |
| 25. | நீலகிரி ... | .. | சாம்ராஜ் எஸ்டேட். |

56—

கைமுறைக் காகிதத் தொழிற்சாலைகள்.

வினா எண் 7233—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை—அண்ணா மாவட்டத்தில் கைமுறை காகிதத் தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன?

[1991 சனவரி 22

(ஆ) அவைகளின் ஆண்டு உற்பத்தி எவ்வளவு ?

(இ) எத்தனை பேர் பணிபுரிகிறார்கள் ?

(ஈ) மேலும் எத்தனை புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்க உள்ளன ?

விடை—

(அ) செங்கை-அண்ணா மாவட்டத்தில் தற்போது இரண்டு கைமுறை காகித அலகுகள் வீரராகவபுரம் மற்றும் மாமண்டூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) ஆண்டு உற்பத்தி கீழ்க்கண்டவாறு :—

| மாவட்டம். | அலகின் பெயர். | 1989—90 உற்பத்தி (30-11-89 வரை.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | மெ. டன். |
| செங்கை .. | வீரராகவபுரம் .. | 11.650 |
| அண்ணா .. | மாமண்டூர் .. .. | 10.000 |

(இ) மேற்கண்ட அலகுகளில் 47 நபர்கள் பணி புரிகின்றனர்.

| | முழு நேரம். | பகுதி நேரம். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| வீரராகவபுரம் .. .. | 20 | 5 | 25 |
| மாமண்டூர் .. .. | 14 | 8 | 22 |
| | மொத்தம் .. | | 47 |

(ஈ) செங்கை-அண்ணா மாவட்டத்தில் வேறு புதிய கைமுறை காகித அலகு துவக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை.

57—

### அரிசி மில்கள்.

வினா எண் 7240.—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1991 சனவரி 22]

(அ) செங்கை-அண்ணா மாவட்டத்தில் எத்தனை அரிசி மில்கள் உள்ளன ?

(ஆ) மதுராந்தகம் மற்றும் செய்யூர் வட்டத்தில் எத்தனை மில்கள் உள்ளன ?

(இ) ஆண்டுக்கு இவைகளின் அரவைத் திறன் எவ்வளவு?

(ஈ) இவைகளில் எத்தனை பேர் பணி புரிகின்றனர் ?

விடை—

(அ) செங்கை-அண்ணா மாவட்டத்தில் பின் கண்டவாறு மொத்தம் 1,690 அரிசி ஆலைகள் உள்ளன—

| | |
|---|---|
| (1) பழங்கால ஒற்றை அல்லர் கொண்ட அரிசி ஆலைகள் .. .. .. | 1,232 |
| (2) இரப்பர் ரோல் ஷெல்லர் பொருத்தி நவீனப்படுத்தப்பட்ட அரிசி ஆலைகள். | 399 |
| (3) ஒன்றுக்கு மேற்பட்ட அல்லர்கள் கொண்ட அரிசி ஆலைகள். .. .. | 14 |
| (4) அல்லர்-கம்-ஷெல்லர் இன அரிசி ஆலைகள். | 38 |
| (5) ஷெல்லர் இன அரிசி ஆலைகள் .. | 6 |
| (6) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மாடர்ன் அரிசி ஆலை-திம்மாபுரம் ஆலை | 1 |
| மொத்தம் .. | 1,690 |

(ஆ) மதுராந்தகம் வட்டத்தில் 182 அரிசி ஆலைகளும், செய்யூர் வட்டத்தில் 74 அரிசி ஆலைகளும் ஆக மொத்தம் 256 அரிசி ஆலைகள் உள்ளன.

(இ) செங்கை-அண்ணா மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலைகளின் மொத்த அரவைத் திறன் ஆண்டு ஒன்றுக்கு 16,09,866 மெட்ரிக் டன் நெல் ஆகும்.

(ஈ) மேற்கண்ட அரிசி ஆலைகளில் மொத்தம் எத்தனை பேர் பணிபுரிகின்றனர் என்ற சரியான விபரத்தை துல்லியமாக குறிப்பிட இயலாது. எனினும், பின்கண்ட இனவாரி அரிசி ஆலைகளில் பணிபுரியத் தேவையான நபர்களின் விபரம் கீழ்க்கண்டவாறு தோராயமாகக் கணக்கிடப்படுகிறது.

[1991 சனவரி 22

| வரிசை எண். | அரிசி ஆலையின் வகை. | ஆலைகளின் எண்ணிக்கை. | ஆலை ஒன்றுக்கு நபர் வீதம். | மொத்த பணியாளர்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பழங்கால ஒற்றை அல்லர் கொண்ட அரிசி ஆலைகள். | 1,232 | 1 நபர் வீதம். | 1,232 நபர்கள் |
| 2 | நவீனப்படுத்தப்பட்ட ஒற்றை அல்லர் அரிசி ஆலைகள். | 399 | 1 நபர் வீதம். | 399 ,, |
| 3 | ஒன்றுக்கு மேற்பட்ட அல்லர்கள் கொண்ட அரிசி ஆலைகள். | 14 | 2 நபர்கள் வீதம் | 28 ,, |
| 4 | அல்லர்-கம்-ஷெல்லர் இன அரிசி ஆலைகள். | 38 | 4 நபர்கள் வீதம் | 152 ,, |
| 5 | ஷெல்லர் இன அரிசி ஆலைகள். | 6 | 4 நபர்கள் வீதம் | 24 ,, |
| 6 | தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக மாடர்ன் அரிசி ஆலை-திம்மாபுரம், செங்கற்பட்டு வட்டம், செங்கை-அண்ணா மாவட்டம். | 1 | 60 நபர்கள் வீதம். | 60 ,, |
| | ஆக .. | 1,690 | | 1,895 நபர்கள் |

அரவைக்கு வரும் நெல் அளவினைக் கொண்டு கூடுதல் பணியாளர்களையோ அல்லது பணியாளர்களை குறைத்தோ உரிமையாளர்கள் அரிசி ஆலையில் பணியில் அமர்த்திக் கொள்வதால் இதற்கான நிரந்தர பணி விபரம் உடன் சேகரிக்க இயலாது. எனினும், அரிசி ஆலை பணியின் பொதுவான தேவை கருதி மொத்தம் 1,895 பணியாளர்கள் தோராயமாக பணியாற்றக் கூடும்.

58—

கோட்ட அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம்.

வினா எண். 7270. திரு. எஸ். பி. உகம்சந்த் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



1991 சனவரி 22]

(அ) தீயணைப்பு நிலையங்கள் சீராக செயல்படுவது கண்காணிக்க மாவட்டந் தோறும் ஒரு கோட்ட அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இம்மாநிலத்திலுள்ள 21 மாவட்டங்களுக்கு தீயணைப்புத் துறையில், தற்சமயம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 16 கோட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

| மாவட்டம். | கோட்டம். |
|---|---|
| (1) | (2) |
| 1 சென்னை | 1 வட சென்னை.<br>2 தென் சென்னை. |
| 2 செங்கை-அண்ணா | 3 செங்கை-அண்ணா. |
| 3 தென்னாற்காடு | 4 தென்னாற்காடு. |
| 4 வேலூர்-அம்பேத்கார் | 5 வேலூர்-அம்பேத்கார். |
| 5 சம்புவராயர் | 6 சம்புவராயர். |
| 6 சேலம் | 7 சேலம். |
| 7 தர்மபுரி | 7 சேலம். |
| 8 கோயம்புத்தூர் | 8 கோயம்புத்தூர். |
| 9 பெரியார் | 8 கோயம்புத்தூர். |
| 10 நீலகிரி | 8 கோயம்புத்தூர். |
| 11 திருச்சிராப்பள்ளி | 9 திருச்சிராப்பள்ளி. |
| 12 புதுக்கோட்டை | 9 திருச்சிராப்பள்ளி. |
| 13 தஞ்சாவூர் | 10 தஞ்சாவூர். |
| 14 மதுரை | 11 மதுரை. |
| 15 திண்டுக்கல்-காயிதேமில்லத் | 12 திண்டுக்கல்-காயிதேமில்லத் |

| மாவட்டம் (1) | கோட்டம் (2) |
|---|---|
| 16 காமராசர் 17 தேவர் திருமகன் 18 இராமநாதபுரம். | 13 காமராசர். |
| 19 நெல்லை-கட்டபொம்மன் | 14 நெல்லை-கட்டபொம்மன். |
| 20 கன்னியாகுமரி | 15 கன்னியாகுமரி. |
| 21 சிதம்பரனார் | 16 சிதம்பரனார். |

2. மாவட்டந்தோறும் ஒரு கோட்டம் வீதம் ஏற்படுத்துவது என்பது, தேவையையும், நிதி நிலைமையையும் பொறுத்தது.

59—

**வறட்சி நிவாரணப் பணிகள்.**

**வினா எண்.** 7305—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1989-ஆம் ஆண்டு செங்கை-அண்ணா மாவட்டத்தில் செய்யப்பட்டுள்ள வறட்சி நிவாரணப் பணிகள் என்னென்ன?

(ஆ) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

(அ) 1989-ஆம் ஆண்டு செங்கை-அண்ணா மாவட்டதில் செய்யப்பட்டுள்ள வறட்சி நிவாரணப் பணிகளின் விவரம்:—

குடிநீர் வழங்கும் திட்டங்கள்—

1 புதிய கிணறுகள் வெட்டுதல்.

2 உறை கிணறுகள் அமைத்தல்.

3 கிணறுகள் ஆழப்படுத்துதல்.

4 லாரி மூலம் குடிநீர் வழங்குதல்

5 ஆழ்துளைக் கிணறுகள் சுத்தம் செய்தல்.

6 பில்டர் பாயிண்ட்.

7 தனி மின்பாதை அமைத்தல்.

8 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்.



வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் திட்டங்கள்—

1 வன இலாகா சம்பந்தப்பட்ட வேலைகள்.

2 நீர்ப்பாசன வேலைகள்.

3 சிறுபாசன வேலைகள்.

4 சாலை வேலைகள்.

5 விவசாய இலாகா சம்பந்தப்பட்ட வேலைகள்.

(ஆ) அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 203.43 இலட்சங்கள் ஆகும்.

60—

**தொழிலாளர்கள் நிரந்தரம்.**

**வினா எண்.** 7339—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

வண்டலூர் மிருகக்காட்சிச் சாலையில் தினக் கூலிகளாக பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் தினக்கூலி அடிப் படையில் பணிபுரியும் தொழிலாளர்களில் எழுபத்திரெண்டு தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்வது பற்றி அரசு பரிசீ லித்து இதற்கான ஆணைகள் 19-4-1990-ஆம் தேதியிட்ட சுற்றுப் புறம் மற்றும் வனத்துறை அரசாணை எண். 240-இல் வெளி யிடப் பட்டுள்ளன.

61—

**கூட்டுறவுத் தேர்தல் சம்பந்தமாக அறிவிப்புகள்.**

**வினா எண்.** 7351—திரு. எஸ். டி. உகம்சந்த்; மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1989-ல் கூட்டுறவுத் தேர்தல் சம்பந்தமாக அறிவிப்பு கள் எந்தெந்த பத்திரிகைக்கு எவ்வளவு தொகைக்கு விளம்பரம் அளிக்கப்பட்டது?

62—

தேசிய நெடுஞ்சாலைப் பராமரிப்பு.

**வினா எண். 7352** திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தேசிய நெடுஞ்சாலைத் துறை சாலைகளை பராமரிக்க மத்திய அரசு அதன் நீளத்திற்கு ஏற்ப நிதி ஒதுக்குகின்றதா ?

(ஆ) தேசிய நெடுஞ்சாலைகளாக தமிழகத்தில் எந்தெந்த சாலைகள் உள்ளன ?

(இ) அவைகளின் நீளம் எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளாக உள்ள சாலைகளின் பெயர்களும் அவற்றின் நீளங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) தேசிய நெடுஞ்சாலை எண். 4—சென்னை-சித்தூர் பெங்களூர் சாலை (தமிழ்நாடு எல்லை வரை)—நீளம் 133.40 கி.மீ.

(2) தேசிய நெடுஞ்சாலை எண். 5—சென்னை-கல்கத்தா சாலை (தமிழ்நாடு எல்லை வரை)—நீளம் 51.95 கி.மீ.

(3) தேசிய நெடுஞ்சாலை எண். 7—

(1) மைசூர் எல்லை—கிருஷ்ணகிரி-சேலம்—மதுரை பகுதி 407,485 கி.மீ.

(2) மதுரை—கன்னியாகுமரி பகுதி—231.60 கி.மீ.

(4) தேசிய நெடுஞ்சாலை எண். 7-அ—பாளையங்கோட்டை-தூத்துக்குடி சாலை—51.00 கி.மீ.

(5) தேசிய நெடுஞ்சாலை எண். 45—சென்னை—திருச்சி—திண்டுக்கல் சாலை—நீளம்4 20.45 கி.மீ.

(6) தேசிய நெடுஞ்சாலை எண். 46—கிருஷ்ணகிரி-இராணிப்பேட்டை சாலை—நீளம் 146.703 கி.மீ.





(ஆ) அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) 1989-ஆம் ஆண்டில் அனைத்து தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அது சமயம் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் ஏனைய 13 இயங்கு பதிவாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள 10,418 தொடக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் சம்பந்தமான அறிவிப்புகள் 10 தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள் மூலமாக வெளியிடப்பட்டதற்கான மொத்த செலவு ரூ. 32,46,722 ஆகும்.

(ஆ) நாளிதழ் வாரியாக கொடுக்கப்பட்ட விளம்பரங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| வரிசை எண்ணும், நாளிதழின் பெயரும். | நாளிதழ் மூலமாக அறிவிப்பு நோட்டீஸ் வெளியிட்ட தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள். | நாளிதழ்களுக்கு வழங்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) ரூபாய் |
| 1 தினகரன் .. .. | 2,953 | 9,70,03 |
| 2 தினத்தந்தி .. .. | 2,246 | 9,00,450 |
| 3 தினமலர் .. .. | 2,258 | 6,21,982 |
| 4 மாலைமுரசு .. .. | 1,692 | 3,32,142 |
| 5 மாலைமலர் .. .. | 683 | 1,78,999 |
| 6 முரசொலி .. .. | 452 | 1,74,220 |
| 7 தினமணி .. .. | 94 | 50,000 |
| 8 தினசரி .. .. | 24 | 8,379 |
| 9 மக்கள் குரல் .. .. | 15 | 7,473 |
| 10 இந்து .. .. .. | 1 | 3,045 |
| மொத்தம் .. | 10,418 | 32,46,722 |

(7) தேசிய நெடுஞ்சாலை எண். 47—

(1) சேலம்–கொச்சின் சாலை பகுதி–நீளம் 181.936 கி.மீ.

(2) கேரள எல்லை–கன்னியாகுமரி பகுதி–56.00 கி.மீ.

(8) தேசிய நெடுஞ்சாலை எண். 49—மதுரை-தனுஷ் கோடி சாலை—நீளம் 186.80 கி.மீ.

(9) தேசிய நெடுஞ்சாலை எண். 45 அ.—விழுப்புரம்-பாண்டிச்சேரி சாலை—நீளம் 16.140 கி.மீ.

(10) தேசிய நெடுஞ்சாலை எண். 49-ன் நீட்டிப்பு.

மதுரை-கொச்சின் சாலையை தேசிய நெடுஞ்சாலை யின் தரத்திற்கு உயர்த்தி தேசிய நெடுஞ்சாலையாக மாற்றம் செய்வது (வழி தேனி-போடி-போடிமெட்டு)—119.00 கி.மீ.

தமிழ் நாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் : 2,002.464 கி.மீ.

63—

கிராமங்களில் பாம்பு, தேள்கடி சிகிச்சை

வினா எண். 7360—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமங்களில் பாம்பு, தேள்கடி சிகிச்சை அளிக்க மருத்துவம் தெரிந்த ஒருவர் நியமிக்கப்பட்டதை அரசு தற்பொழுது ரத்து செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசு ஆணை (நிலை) எண். 1156, சுகாதாரம், நாள் 11-7-1983-ல் 1,260 பாம்புக்கடி முதலுதவியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு 878 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. அவர் களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் 5 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு 2 வட்டாரங்கள் வீதம் 10 வட்டாரங்களை தேர்ந்தெடுத்து அதில் உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு பாம்புக்கடி முதலுதவியாளர்களின் மூலம் உதவி செய்யவும்



தென் ஆற்காடு, தஞ்சாவூர், மதுரை, பெரியார் மற்றும் வட ஆற்காடு ஆகிய ஐந்து மாவட்டக் கலெக்டர்களுக்கு பாம்புக்கடி உதவியாளர்களை தெரிந்தெடுக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டது. அவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட பாம்புக்கடி உதவியாளர்களுக்கு தலா ரூ. 100 மதிப்பூதியம் மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டது.

ஆனால்! பாம்பினால் கடிபட்டவர்கள் சிகிச்சைக்காக நேரடியாக அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அனைத்து சிகிச்சைகளும் அரசு மருத்துவமனையிலேயே வழங்கப் படுகின்றன. எனவே, மேற்படி உதவியாளர்களின் உதவியை எவரும் நாடுவதில்லை என்பதோடு, அவர்களால் தன்னிச்சையாக சிகிச்சை அளிக்க இயலாத சூழ்நிலை இருப்பதாலும், மேற்கண்ட உதவியாளர்களின் பணியினால் எந்தவித பயனும் ஏற்படவில்லை என்பதாலும் இந்தத் திட்டம் பயனளிக்கவில்லை. எனவே, அரசு ஆணை எண் 868, சுகாதாரம், நாள் 25-5-1989-ல் இத்திட்டம் கைவிடப்பட்டது.

64—

தேயிலை விற்பனை செய்யும் கூட்டுறவுத் தொழிற்சாலைகள்.

வினா எண். 7362— திரு எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் தேயிலை விற்பனை செய்யும் கூட்டுறவு தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன ?

(ஆ) அவைகளின் விவரம் என்ன ?

(இ) 1988–89-ல் அதன் மொத்த விற்பனை மற்றும் லாபம் எவ்வளவு ?

விடை—

(அ) தமிழகத்தில் தேயிலை உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் 14 தொழிற் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் உள்ளன. நீலகிரி மாவட்டம், பிக்கட்டியில் ஒரு புதிய தொழிற் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலை கட்டப்பட்டு வருகிறது.

(ஆ) மற்றும் (இ) :—

| தொழிற்சாலையின் பெயர் மற்றும் இடம். | உற்பத்தி. | | விற்பனை. | | லாபம் (+) நட்டம் (—) (இலட்சம்) |
|---|---|---|---|---|---|
| | அளவு. (கிலோ) | மதிப்பு. (லட்சம்) | அளவு. (கிலோ) | மதிப்பு. (இலட்சம்) | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | ரூபாய். | | ரூபாய் | ரூபாய். |
| 1 குந்தா தேயிலை தொழிற் கூட்டுறவுத் தொழிற்சாலை, நீலகிரி. | 12.61 | 210.12 | 12.88 | 249.19 | (+) 1.40 |
| 2 கோட்டகிரி | 6.86 | 103.56 | 7.17 | 133.15 | (—) 27.64 |
| 3 கரும்பாலம் | 5.09 | 92.64 | 5.25 | 94.03 | (—) 25.36 |
| 4 கீழ்கோட்டகிரி | 5.76 | 93.13 | 5.98 | 111.54 | (—) 39.99 |
| 5 மேற்குநாடு | 6.30 | 103.68 | 6.58 | 114.97 | (+) 0.30 |
| 6 மகாலிங்கா | 6.87 | 109.47 | 7.78 | 135.54 | (+) 0.05 |
| 7 மஞ்சூர் | 15.97 | 232.83 | 16.69 | 314.83 | (—) 1.48 |
| 8 பந்தலூர் | 6.61 | 97.28 | 7.23 | 143.91 | (—) 13.72 |
| 9 இத்தலார் | 7.39 | 124.59 | 7.66 | 140.07 | (+) 1.12 |
| 10 கைகாட்டி | 7.57 | 112.52 | 7.90 | 147.30 | (—) 13.91 |
| 11 கட்டபெட்டு | 6.41 | 114.03 | 6.64 | 129.18 | (—) 30.76 |
| 12 சாலிஸ்பெரி | 7.86 | 127.31 | 8.19 | 163.89 | (+) 3.14 |
| 13 ஃப்ராண்டியர் | 6.46 | 110.16 | 6.68 | 128.32 | (—) 0.49 |
| மொத்தம் | 101.76 | 1,631.32 | 106.63 | 2,005.92 | (+) 7.49<br>(—) 151.87 |



1986—87-ம் ஆண்டு இறுதியில் தொழிற் கூட்டுறவு தேயிலை பாக்டரிகளினால் நஷ்டம் ரூ. 252.79 இலட்சம் ஆக இருந்தது. இந்த நட்டம் 31-3-1989-ல் ரூ. 144.38 இலட்சமாகவும், மேலும் 31-10-1989-ல் ரூ. 73.22 இலட்சமாகவும் குறைக்கப் பட்டுள்ளது.

65— **ஊரணிகள் கட்டும் பணி**

**வினா எண்—7363.** திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1989ஆம் ஆண்டு தமிழகத்தில் மண்வளப் பாது காப்புத் துறையின் மூலமாக ஊரணிகள் அமைக்க எந்தெந்த இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது ?

(ஆ) அதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) இதனால் பாசன வசதி பெறும் நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ?

விடை—

(அ) வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1989—90-ம் ஆண்டில் ஊரணிகள் கட்டும் பணி ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் பாசன வசதிக்கான ஊரணிகள் கட்டப்படுவதில்லை, மண்ணரிப்பைத் தடுத்து வீணாகும் மழை நீரைத் தேக்கி வைப்பதன் மூலம், நீர்வளம் பெருக்கும் நோக்கத் துடன் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் பணி வேளாண்மை பொறியியல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கசிவு நீர்க் குட்டைகளில் தேங்கும் நீர், நேரடி நீர்ப்பாசனத்திற் காகப் பயன்படுத்தப்படுவதில்லை. இங்கு தேங்கும் நீர் நிலத்திற் குள் கசிந்து, நிலத்தடி நீர்வளத்தை மேம்படுத்தி கசிவு நீர்க் குட்டைகளின் அருகிலுள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயர வழி வகுக்கிறது. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் சென்னை, நீலகிரி, தஞ்சை மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் 445 கசிவு நீர்க் குட்டைகள் ரூ. 581.00 லட்சம் செலவில் கட்டும் பணி 1989—90-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு தற்போது முடியும் தருவாயில் உள்ளது. 31-1-1990 முடிய ரூ. 557.43 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூபாய் இந்த நிதியாண் டிற்குள் செலவு செய்யப்படும்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(இ) இக்கசிவு நீர்க்குட்டைகள் நேரடி பாசனத்திற்கு பயன் படுவதில்லை. ஆகையினால் இவ்வினாவிற்கு இடமில்லை.

66— [1991 சனவரி 22

### நகரப் பேருந்து இயக்குதல்.

வினா எண். 7369—திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருமங்கலம்-செக்காணூரணி (வழி) கப்பலூர் கூத்தியார் குண்டு விலக்கு தனசேகரன் பாலிடெக்னிக் ஆஸ்டின்பட்டி, டி.பி. ஆஸ்பத்திரி, கரடிக்கல் சிக்கம்பட்டி நகரப் பேருந்து இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நகரப் பேருந்து எப்பொழுது இயக்கப் படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருமங்கலத்திலிருந்து நேரடியாகச் செக்காணூரணிக்கு கரடிக்கல் வழியாகச் செல்லுவதுதான் பயணிகளுக்கு பயனளிக்கக் கூடியதாக இருக்கும் என கருதப் படுகிறது. இந்த வழித் தடத்தில் 70 தனி நடைகள் செலுத்தப் படுகின்றன. திருமங்கலத்திலிருந்து கூத்தியார்குண்டு விலக்கு வழி யாக செக்காணூரணி செல்வது ஒரு சுற்றுப் பாதையாகும். மேலும் திருமங்கலத்திலிருந்து கூத்தியார்குண்டு விலக்குவரை சுமார் 180 நடைகளும், மதுரை-ஆஸ்டின்பட்டி வழி கூத்தியார்குண்டு விலக்கு 38 நடைகளும், மதுரை-கரடிக்கல் மேற்படி அதே வழித்தடத்தில் 8 தனி நடைகளும் இருப்பதால் திருமங்கலம் செக்காணூரணி வழி கூத்தியார்குண்டு விலக்கு, ஆஸ்டின்பட்டி, கரடிக்கல் வழி யாகப் பேருந்து விட தற்சமயம் எந்த ஒரு நடவடிக்கையும் பரிசீல னையில் இல்லை.

67—

### ஆதிதிராவிடர் காலனிக்கு மின்வசதி,

வினா எண். 7428—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, நயினார்கோவில் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர் காலனிக்கு (மூவலூர் காடனந்தகுடி, தாலையடிக் கோட்டை) மின்வசதி எப்போது கொடுக்கப்படும் ?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, நயினார் கோயில் ஒன்றியத்திலுள்ள மூவலூர், காடனந்தகுடி, தாலையடிக் கோட்டை ஆகிய மூன்று ஆதிதிராவிடர் காலனிகளில் மூவலூர் காலனியில் உள்ள இரண்டு வீடுகளுக்கு மீட்டர் பொருத்திய வீட்டு உபயோகத்திற்கான (I a tariff) மின் இணைப்பு ஏற் கெனவே வழங்கப்பட்டுள்ளது.



1991 சனவரி 22]

இம்மூன்று காலனிகளிலும் தெரு விளக்குகள் பொருத்தக் கோரி இதுவரை விண்ணப்பங்கள் ஏதும் வாரியத்திற்கு வர வில்லை. விண்ணப்பங்கள் வந்தபின் வரிசைப்படி தெரு விளக்கு களுக்கு மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

மேலும் மூவலூர் காலனியில் 20 குடிசைகளுக்கும், காட னந்தகுடி காலனியில் 21 குடிசைகளுக்கும், தாலையடிக் கோட்டை காலனியில் 21 குடிசைகளுக்கும் '' ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு '' திட்டத்தின் கீழ் மின் இணைப்புக்கோரி மனுக்கள் வரப்பெற் றுள்ளன. 1989–90-ம் நிதியாண்டிற்குரிய இலக்கீடு ஏற்கெனவே எய்தப்பெற்று விட்டபடியால் இந்த நிதியாண்டில் (1990—91) மேற்கூறிய குடிசைகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்ட வரிசைக் கிரம அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்படும்.

68—

### கண்மாய்கள் மராமத்து.

வினா எண். 7446. டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதியில் உள்ள அரியக்குடி, ஏ. புத்தூர், குறிஞ்சாகுளம், வெங்கடா குறிச்சி, பொட்டகவயல், பி. கொடிக்குளம், அரசனூர் கண்மாய் கள் மராமத்து செய்து தரப்படுமா ?

விடை—

அரியக்குடி கண்மாயையும், பொட்டகவயல் கண்மாயையும் பொறுத்தவரை கரை, மடைகள், கலிங்குகள் ஆகிய அனைத்தும் நல்ல நிலைமையில் உள்ளன. மடைகளில் ஒரு சில மற்றும் கலிங்கு மராமத்து செய்ய வேண்டிய நிலையில் உள்ள குளங்கள்.

ஏ. புத்தூர், குறிஞ்சாகுளம், வெங்கடாகுறிச்சி, பி.கொடிக் குளம் ஆகியவையாகும். அரசனூர் கண்மாயின் கரைக்கு மட்டும் மராமத்து தேவைப்படுகிறது. நிதி ஒதுக்கம் இடம் தரும் அள வுக்கு 1990-91-லும் பின்வரும் ஆண்டுகளிலும் மராமத்து எடுத்துக் கொள்ள வேண்டிய பணிகளின் பட்டியலை முன்னுரிமை அடிப்படையில் நிர்ணயிக்கும் பொழுது இக்கண்மாய்களின் தேவை களையும் பொதுப் பணித்துறை கருத்திற் கொள்ளும். வெங்கடா குறிச்சி சின்னக் கண்மாய் 42 ஏக்கர் ஆயக்கட்டுள்ளது. அதனைப் பராமரிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும்.

69—

### ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண்—7450—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

[1991 சனவரி 22

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி ஏ.புத்தூரில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கப்படுமா ?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதி ஏ. புத்தூரில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

70—

பரமக்குடி செவ்வூர் நகரப் பேருந்து.

வினா எண். 7456—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி செவ்வூருக்கு நகரப் பேருந்து விடப்படுமா ?

விடை—

பரமக்குடி தொகுதி. செவ்வூர் (வழி), நயினார்கோயில் வழித்தடத்தின் நீளம் 32.4 கி.மீ. ஆகும். இது நகரப் பேருந்து ஓட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட 30.00 கி.மீ. தூரத்தை விட அதிகமாக இருப்பதால் மேற்படி வழித் தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது

71—

நகரப் பேருந்து விடுதல்.

வினா எண். 7460—டாக்டர் ச. சு சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதி போகலூர் ஒன்றியத்தில் டி. கருங்குளம் கிராமத்திற்கு நகரப் பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மருதுபாண்டியன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் இராமநாதபுரத்திலிருந்து டி. கருங்குளத்திற்கு தினசரி 4 நடைகள் வீதமும், பரமக்குடியிலிருந்து டி. கருங்குளத்திற்கு 6 நடைகள் வீதமும், முறையே 8-9-1985 மற்றும் 5-1-1987 ஆகிய தேதிகளிலிருந்து இயக்கப்பட்டு வருகின்றன.

72—

நகரப் பேருந்து விடுதல்.

வினா எண். 7474—டாக்டர் ச. சுந்தரராஜ : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



1991 சனவரி 22]

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதியில் பரமக்குடி சத்திரக்குடிக்கு கிழம்பல், மாவிலங்கை பூவிளத்தூர் வழியாக நகரப் பேருந்து விடப்படுமா ?

விடை—

குறிப்பிட்ட வழித்தடத்தில் பூவிளத்தூர் கிழம்பல் ஆகிய ஊர்கள் இரண்டு இடங்களில் 2.4 கி.மீ. மற்றும் 2.8 கி.மீ. பிரதான சாலையிலிருந்து முறையே உட்சென்று மீண்டும் திரும்பி வர வேண்டிய வகையில் அமைந்துள்ளன. பிரிவுச் சாலைகள் மண் சாலையாகவும் பேருந்து சென்று வர தகுதியற்ற நிலையிலும் உள்ளன. மேலும் பிரதான சாலையிலிருந்து கிழம்பல் செல்லும் சாலையில் ஆள் இல்லாத ரயில்வே கேட் ஒன்று குறுக்கிடுகிறது.

எனவே பரமக்குடி-சத்திரக்குடி டச்சிங் கிழம்பல், மாவிலங்கை பூவிளத்தூர் தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் பரமக்குடி-சத்திரக்குடி பிரதான சாலையில் போதுமான அளவு புறநகர் மற்றும் நகரப்பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

73—

பரமக்குடி - பரமக்குடி நகரப் பேருந்து.

வினா எண். 7475—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி - பரமக்குடி நகரப் பேருந்து விடப்படுமா ?

விடை—

பரமக்குடி நகரம் 4 அல்லது 5 கி.மீ. சுற்றளவு உடைய ஒரு நகராட்சி. நகரின் எல்லைப் பகுதியிலிருந்து நான்கு திசைகளிலும் மோட்டார் செல்லும் இணைப்புச் சாலைகள் இல்லை. நகருக்குள் நுழைவதற்கு எல்லைப் பகுதியிலுள்ள பிரதானச்சாலை வழியாகத்தான் திரும்ப வேண்டும்.

பரமக்குடி பேருந்து நிலையத்திலிருந்து நான்கு திசைகளிலும் நகரப் பேருந்துகள் 30.0 கி. மீட்டர் வரை மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படுகின்றன. பரமக்குடி ஒரு சிறிய நகரமாக இருப்பதால் மோட்டார் செல்லும் இணைப்புச்சாலைகள் நகர எல்லைக்குள் இல்லாத காரணத்தாலும் நகர எல்லைக்குள் பேருந்து செலுத்த இயலாமல் உள்ளது. எனவே, பரமக்குடி - பரமக்குடி நகரப் பேருந்து செலுத்துவதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

74—

[1991 சனவரி 22

பரமக்குடி - பகைவென்றி நகரப் பேருந்து.

வினா எண். 7476—டாக்டர் சு. சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதியில் பரமக்குடி - பகைவென்றி வரை நகரப் பேருந்து விடப்படுமா ?

விடை—

பரமக்குடியிலிருந்து பகைவென்றி கிராமம் செல்வதற்கு இரண்டு வழித்தடங்கள் உள்ளன :—

(1) பரமக்குடி - பகைவென்றி (வழி) நயினார்கோவில் முக்கூட்டுச் சாலை.

(2) பரமக்குடி - பகைவென்றி (வழி) நயினார்கோவில் வல்லம் கோட்டப் பொறியாளர் அவர்கள் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகத்துறை) பரமக்குடி, பரமக்குடியிலிருந்து முக்கூட்டுச் சாலை வழியாக பகைவென்றி வழித்தடத்தின் தூரம் 31.4 கி.மீ என சான்றிதழ் வழங்கியுள்ளார். நகரப் பேருந்து ஓட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட தூரமான 30.0 கி. மீட்டரைக் காட்டிலும் இது அதிகமாக உள்ளது.

இரண்டாவது வழித்தடமான பரமக்குடி - பகைவென்றி வழி நயினார்கோவில், வல்லம் வழித் தடத்தின் தூரம் 2.46 கி.மீ. இதில் பரமக்குடியிலிருந்து வல்லம் வரை மருது பாண்டியர் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஓடிக் கொண்டிருக்கிறது. வல்லத்திலிருந்து பகைவென்றி வரை சுமார் 3.2 கி.மீ. பேருந்து செல்ல தகுதியற்ற நிலையில் மண் சாலையாக உள்ளது. எனவே பகைவென்றி கிராமத்திற்கு பேருந்து இயக்க இயலவில்லை.

75—

டிரான்ஸ்பார்மர் அமைத்தல்.

வினா எண். 7486—டாக்டர் சு. சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதி நயினார் கோவில் ஒன்றியத்தில் மூவலூரில் டிரான்ஸ்பார்மர் அமைத்துத் தரப்படுமா ?

விடை—

இல்லை. பரமக்குடி தொகுதி நயினார்கோவில் ஒன்றியத்தைச் சேர்ந்த மூவலூர் கிராமத்திற்கு, உடையாக்குடி கிராமத்தில் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள மின்மாற்றி மூலம் மின்சாரம் விநி



யோகிக்கப்படுகிறது. மூவலூர் கிராமத்தில் மின் அழுத்தம் திருப்திகரமாக உள்ளது. எனவே மூவலூர் கிராமத்தில் மேலும் ஒரு மின்மாற்றி நிறுவ வேண்டிய அவசியமில்லை எனக் கருதப் படுகிறது.

76—

கூலி நிர்ணயச் சட்டம் அமுல் செய்தல்.

வினா எண். 7498—டாக்டர் சு. சுந்தரராஜ் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

24-6-1989 கூலி நிர்ணயச் சட்டம் அறிவித்தும் அமுல் ஆக்கப் படாமல் இருப்பது அமுல் செய்யப்படுமா ?

விடை—

கைத்தறி நெசவாளர்களுக்கு 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் குறைந்த அளவு ஊதிய விகிதங்கள் அரசு நிலை ஆணை எண். 1249, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 26-6-89-ல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. அவ்வூதிய விகிதங்கள் 26-6-89 முதல் அமுலுக்கு வந்துள்ளன.

2. மேற்குறிப்பிட்டுள்ள அரசாணையில் குறைந்த அளவு ஊதிய விகிதங்களைத் திருத்தி அமைத்ததை எதிர்த்து இத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல நிர்வாகங்கள் உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுத்தாக்கல் செய்து திருத்தியமைக்கப்பட்டுள்ள குறைந்த அளவு ஊதிய விகிதங்களை அமுல்படுத்துவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஆணை பெற்றுள்ளன.

77—

ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண். 7535—டாக்டர் சு. சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி நயினார் கோவில் ஒன்றியம், மூவலூர் கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

30,000 மக்கட் தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பது என்ற அரசின் கொள்கைக்கேற்ப 51,200 மக்கட் தொகைக்கொண்ட இராமநாதபுரம் மாவட்டம், நயினார்

கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே நயினார் கோவில் மற்றும் பி.கொடிக் குளம் ஆகிய இரண்டு இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதால் மூவலூர் கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

78—

வடக்கன்குளம்—சென்னை பேருந்து.

**வினா எண். 7559—திருமதி ராணி நல்லதம்பி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வடக்கன்குளத்திலிருந்து இராதாபுரம், ஆத்தங்கரைப் பள்ளிவாசல், திசையன்விளை, இட்டாமொழி, சாத்தான்குளம் திருச்செந்தூர் வழியாக சென்னைக்கு பேருந்து (டி.டி.சி. புது வழித்தடம்) இயக்க அரசு முன்வருமா ?

**விடை—**

வடக்கன்குளத்திலிருந்து இராதாபுரம், ஆத்தங்கரைப் பள்ளிவாசல், திசையன்விளை, இட்டாமொழி, சாத்தான்குளம் திருச்செந்தூர் வழியாக சென்னை வர சுற்றுத்தடம் ஆகும். எனவே இத்தடத்தில் பேருந்து இயக்குவது நடைமுறையில் சாத்தியமற்றதாகும்.

79—

பட்டா வழங்கல்.

**வினா எண். 7616—திரு. க. சொ. கணேசன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா;

செயங்கொண்டம் தொகுதியைச் சேர்ந்த கீழ்க்கண்ட கிராமங்களுக்கு மனைப்பட்டா வழங்க அரசு முன்வருமா:

(1) குழவடையான்.
(2) அணைக்கரை.
(3) கோடாலிக்கருப்பூர்.
(4) வக்கரமாரி.
(5) ஆயிபாளையம்.
(6) பாலசுந்தரபுரம்.
(7) மதனத்தூர்
(8) வேளாநல்லூர்.
(9) காரைகாட்டக்குறிச்சி.
(10) பருக்கல்.
(11) த. கீழவெளி.
(12) சோழங்குறிஞ்சி.
(13) வானதிரையன்பட்டனம்
(14) தேவாமங்கலம்.



5) பொட்டவெளி.
6) மெய்க்காவல்புத்தூர்.
7) குமிளங்குழி.
8) பாகல்மேடு.
(19) வங்குடி.
(20) வெண்ணங்குழி.
(21) பிலிச்சிகுழி மற்றும்
(22) கரடிகுளம் இருளர் தெரு

**விடை—**

மேலே வினாவில் குறிப்பிடப்பட்ட 22 கிராமங்களில் ள்ள ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க ணியார் பட்டா நிலங்களை கையகப்படுத்த படிப்படியாக டவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10—

டவுன் பஸ் வசதி.

**வினா எண். 7636—திரு. எஸ். எஸ். இராமசுப்பு:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் தொகுதியில் மேட்டுப்பிராஞ்சேரி அருகில் உள்ள சித்தன்பச்சேரிக்கு டவுன் பஸ் வசதி இல்லாமல் இருப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) : சுமார் 300 ஜனத்தொகை கொண்ட சித்தன்பச்சேரி என்ற கிராமம் ஏற்கனவே நகரப்பேருந்துகள் இயங்கி வரும் பிரதான சாலையிலிருந்து பிரிந்து சுமார் 0.7 கி.மீ. தொலைவில் நடந்து செல்லும் தூரத்திலேயே அமைந்துள்ளது. மேற்படி பிரதானசாலை வழியாக இரு நகரப் பேருந்துகள் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் தினசரி 8 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப் பேருந்து களுக்கு சித்தன்பச்சேரி கிராமத்திற்குச் செல்லும் சாலைப் பிரிவிற்கு ''கட்டணநிலை'' உள்ளதால் சித்தன்பச்சேரி விலக்கில் பயணிகள் ஏற்றி இறக்கிச் செல்லப்பட்டு வருகிறார்கள். மேற்படி விலக்கிலிருந்து 0.7 கி.மீ. தூரத்திலேயே சித்தன்பச்சேரி கிராமம் அமைந்துள்ளதாலும் பிரதான சாலையிலிருந்து பிரிந்து 1 கி.மீ. தூரத்திற்குள் அமைந்துள்ள கிராமங்கள் போக்குவரத்து வசதி பெற்றதாகவே கருதப்படுவதாலும் இக்கிராமம் பேருந்து வசதி பெற்றதாகவே கருதப்பட வேண்டும்.

81— [1991 சனவரி 22

ஆதிதிராவிடர் காலனிக்கு மின் இணைப்பு.

வினா எண். 7686—திரு. இரா. சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கட்டயங்காடு ஆதிதிராவிடர் காலனிக்கு மின் இணைப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் உள்ள கட்டயங்காடு ஆதிதிராவிடர் காலனிக்கு ஒரு தெருவிளக்கு பொருத்தப்பட்டு ஏற்கெனவே மின் இணைப்பு கொடுக்கப்பட்டு இவ்விளக்கு நல்ல நிலையில் எரிந்து கொண்டிருக்கிறது. இது தவிர இக்காலனியில் உள்ள குடிசை வீடுகளில், 26 குடிசை வீடுகள் ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்க தகுதியுடையதாக இருக்கின்றன. இவைகளில் 20 குடிசை வீடு களுக்கு மட்டும்தான் இலவச மின் இணைப்பு கோரிவிண்ணப் பங்கள் பெறப்பட்டுள்ளன. இவைகளுக்கு பதிவு வரிசைக்கிரமப் படி அடுத்த ஆண்டு (1990-91) மின் இணைப்பு வழங்கத்தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். மீதமுள்ள ஆறு குடிசை வீடுகளுக்கான விண்ணப்பங்கள் வரப்பெற்றபின் மேற்கூறியவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

82—

ஒரே மாதிரியாக சம்பளம்.

வினா எண். 7692—திரு. இரா. சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் செயலாளர், உதவி செயலாளர், எழுத்தர், அட்டெண்டர், விற்பனையாளர், ஏவலர், காவலர் என்று தகுதிக்கேற்ப மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியாக சம்பளம் வழங்கிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.



1991 சனவரி 22]

83—

ஆதி திராவிடர் காலனிக்கு மின் இணைப்பு.

வினா எண். 7702.—திரு. இரா. சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்த நாடு ஆதிதிராவிடர் காலனிக்கு மின்விளக்கு வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு ஆதிதிராவிடர் காலனி கிழக்குப்பகுதியில் ஏற்கெனவே இரண்டு (2) தெரு விளக்குகளும், மேற்குப்பகுதியில் மூன்று (3) தெருவிளக்குகளும், பொருத்தப்பட்டு இக்காலனிக்கு மின் இணைப்பு வழங்கப் பட்டுள்ளது. அவை நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. இக் காலனியில் மேற்பகுதியில் 17 சிறிய வீடுகளும், கிழக்குப் பகுதியில் 35 சிறிய வீடுகளும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளன. இச்சிறிய வீடுகள் ஒரு வீடு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் மின் இணைப்பு பெற தகுதியுடையவை யாயினும் மின் இணைப்பு கோரி விண்ணப்பங்கள் ஏதும் இதுவரை வரவில்லை. விண்ணப்பங்கள் வரப்பெற்றபின் பதிவு வரிசைப்படி மின் இணைப்பு வழங்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

84—

நகரப் பேருந்து.

வினா எண் 7718 :—திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து சீதாம் பாள்புரம், இடையாத்தி வழியாக கரம்பக்குடி செல்லும் நகரப் பேருந்து எண். 16 எண்ணிக்கையை அதிகரிக்க அரசு முன் வருமா ?

விடை—

சோழன் போக்குவரத்துக் கழகத்தால் பட்டுக்கோட்டை தடம் எண். 16 பட்டுக்கோட்டை-கரம்பக்குடி (வழி) சீதாம்பாள் புரம், இடையாத்தி தடத்தில் தினசரி 14 நடைகள் இயக்கப் படுகின்றது. தடம் எண். 16ஏ நான்கு நடைகள் இத்தடத்தில் இயக்கப்படுகின்றன. தற்பொழுது இயக்கப்படும் நடைகளே போதுமானதாக உள்ளதால் கூடுதல் பேருந்து இத்தடத்தில் இயக்க வாய்ப்பில்லை.

85—

சமையல் எண்ணெய்.

வினா எண் 7740 —திரு. கு. ரவி அருணன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ சமையல் எண்ணெய் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் தற்போது 129 லட்சம் குடும்ப அட்டைகள் உள்ளன. ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ சமையல் எண்ணெய் வழங்கினாலும் இம்மாநிலத்திற்கு மாத மொன்றுக்கு சுமார் 13,000 டன் சமையல் எண்ணெய் தேவைப் படுகிறது. மத்திய அரசு மாநில அரசுக்கு மாதந்தோறும் ஒதுக்கீடு செய்யும் அளவை பொறுத்தே குடும்ப அட்டைகளுக்கு சமையல் எண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது மத்திய அரசால் மாநில அரசுக்கு மாதந்தோறும் சுமார் 1, 250 டன்கள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எனவே சமையல் எண்ணெய் தற்போது சென்னை மாநகரத்துக்கும் மற்றும் மாவட்ட தலைமையகங்களுக்கும் மட்டுமே வழங்கப்படுகிறது. மத்திய அரசின் ஒதுக்கீடு அதிகப்படுத்தப்பட்டால் ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் சமையல் எண்ணெய் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

ஆலயங்களின் தூய்மை.

86—

வினா எண் 7807— திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பல ஆலயங்களும், ஆலயங்களின் சுற்றுப்புறங்களும் தூய்மையற்ற நிலையில் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) சுத்தமாகவும் எழிலாகவும் வைத்திருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?



விடை—

(அ) ஆம்.

(ஆ) திருக்கோயில் மற்றும் சுற்றுப்புறங்களும் தூய்மையாக இருக்க அவ்வப்போது பிரகாரங்கள் மற்றும் சன்னதிகள் தண்ணீரால் கழுவப்பட்டு போதுமான துப்புரவு தொழிலாளர் களைக் கொண்டு கூட்டப்பட்டு சுத்தம் செய்யப்படுகிறது. உற்சவ காலங்களில் திருக்கோயில் பிரகாரங்கள் கூட்டப் பட்டும், செய் சேவார்த்திப் பெருமக்களால் செய்யப்படும் அசுத்தங்கள் துப்புரவு மூலம் அவ்வப்போது அகற்றப்பட்டும் சுண்ணாம்புடன் கிருமிக்கொல்லி மருந்து கலந்து தெளிக்கப்பட்டும் மற்றும் தெளிப்பான் மூலம் கிருமிநாசினி தெளிக்கப்பட்டும் சுத்தம் செய்யப்படுகிறது. திருக்கோயில்கள் மற்றும் சுற்றுப்புறங்கள் அசுத்தப்படுத்தப்படுவதைத் தடுக்க தனியாக கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளன. திருமதில்களில் வளரும் செடிகள், அவ்வப்போது 'அக்நி' மற்றும் 'குளோப்' மரக்கொல்லி மருந்துகளைக் கொண்டும், திராவகங்களை உபயோகித்தும் அப்புறப்படுத்தப்படுகின்றன. சில திருக்கோயில் களில் சலவைக்கல், மெருகேற்றப்பட்ட கருங்கல் ஆகியவைகளில் அசுத்தம் சேராவண்ணம் அவ்வப்போது அவைகள் சுத்தம் செய்யப்படுகின்றன். பக்தர்கள் அதிகமாக வந்து வழிபாடு செய் யும் திருக்கோயில்கள் தூய்மையாக வைக்கப்படுவதற்காக (Carwashing Machine) தண்ணீர் கொண்டு சுத்தம் செய்யும் இயந்திரம் வாங்கப்பட்டு, பிரகாரம் அவ்வப்போது கழுவி சுத்தம் செய்யப்படுகிறது. திருக்கோயில்களின் சுற்றுப்புறங்கள் மற்றும் தேர் வீதிகள் துப்புரவாக இருக்க அவ்வப்போது துப்புரவு தொழிலாளர்களைக் கொண்டு துப்புரவு செய்யப்படுவதுடன் திருக்கோயில்களில் மரங்கள், நந்தவனங்கள் ஆகியவைகள் வைக்கப்பட்டும் பழனி போன்ற சில கோயில் இடங்களில் பூங்கா அமைக்கப்பட்டும் பராமரித்து வரப்படுகிறது.

87—

பாம்பன் சுவாமிகளின் பாடல்கள்.

வினா எண் 7810—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாம்பன் சுவாமிகளின் பாடல்கள் பல அச்சேறாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) அவைகளை அச்சிட்டு வெளியிடும் உத்தேசமுண்டா?

விடை—

(அ) ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் இயற்றிய பாடல்கள் அனைத்தும் அச்சிடப்பட்டுள்ளன. ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் என வழங்கும் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிய 6666 பாடல்கள் ஆறு மண்டலங்களாக வகுக்கப்பட்டு அவர் காலத்திலேயே 6666 பாடல்களும் அச்சிடப்பட்டன. அவற்றில் பல தற்போது விற்பனைக்கு கிடைக்கவில்லை.

(ஆ) சென்னை திருவான்மியூரில் உள்ள மயூரநாதசுவாமி கோயில் நிர்வாகம் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறைக்கு 9-9-1984 முதல் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்படி கோயில் நிர்வாகமே தற்போது விற்பனைக்கு கிடைக்காத ஆறு மண்டலங்களை விரைவில் அச்சிட்டு வெளியிட ஆவன செய்யப்படும்.

88—

வேலைவாய்ப்பு.

வினா எண் 7828—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1987-ல் பணி நீக்கம் செய்யப்பட்ட பொதுப்பணித் துறையைச் சார்ந்த 247 டிப்ளமோ படித்த இளநிலை பொறியாளர்களில் அரசு ஆணை (பல்வகை) எண் 766/11-8-1987-ன்படி மீண்டும் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) இன்னும் வேலை கொடுக்கப்படாதவர்களுக்கு வேலை கொடுக்கும் வாய்ப்பு பற்றிய அரசின் நிலை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): தேர்வாணையத் தெரிவு பெறாமல் தற்காலிக அடிப்படையில் பணியாற்றிய 57 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 234 இளநிலை பொறியாளர்கள் பணிமுடிப்பு செய்யப்பட்டார்கள். பணிமுடிப்பு செய்யப்பட்ட பொறியாளர்களில் 49 உதவிப் பொறியாளர்களுக்கும் 33 இளநிலைப் பொறியாளர்களுக்கும் அரசுத் துறை நிறுவனங்கள் மற்றும் சுயாட்சி மன்றங்கள் ஆகியவற்றில் மீண்டும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 27-11-89 தேதியிட்ட பொதுப்பணித் துறை அரசாணை (பல்வகை) எண். 2/379-இல் காலாவதியான 12 தொழில் நுட்ப உதவியாளர் பதவிகள் உயர்ப்பிக்கப்பட்டு அதில் பணிமுடிப்பு செய்யப்பட்ட 12 இளநிலைப் பொறியாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர்களாக மீண்டும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. பணிமுடிப்புக்கு ஆளானவர்களுள் மீதமுள்ள தற்காலிக இளநிலை பொறியாளர் பதவிக்கு நியமனம் வழங்க இயலாததால் அவர்களது கல்வித் தகுதியினைக் கருத்தில் கொண்டு பிற கீழ்நிலைப் பதவிகளான சர்வேயர், சர்வேயர் மற்றும் வரைவாளர், இளநிலை வரைதொழில் அலுவலர், தொழில் நுட்ப உதவியாளர் ஆகிய பதவிகளில் அவர்களுக்கு நியமனம் அளிக்கத் தேவையான துரித நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது. அவ்வாறு 300 தொழில் நுட்ப உதவியாளர்கள் பதவிக்கு ஒப்புதல் வழங்குவது குறித்த கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.



89—

மானிய உதவி.

வினா எண். 7935—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1988-89-ல் வறட்சி காரணமாக திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு நில விவசாயிகள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இந்த வகையில் பாதிக்கப்பட்டு மான்ய உதவி பெற்றோர் எவ்வளவு ?

விடை—

(அ) 1988-ல் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்வாரியான நிலப்பரப்பு மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்படி பாதிக்கப்பட்ட

| | |
|---|---|
| சிறு நில விவசாயிகள் .. | 6,475 பேர். |
| குறு நில விவசாயிகள் .. | 4,493 பேர் |
| மொத்த எண்ணிக்கை .. | 10,968 பேர் |

(ஆ) மானிய உதவி பெற்றவர்கள் :

| | |
|---|---|
| நெல் மற்றும் சிறு தானியங்கள் பயிரிட்ட விவசாயிகள் .. .. | 8,972 |
| எண்ணெய் வித்துக்கள் பயிரிட்ட விவசாயிகள். | 1,996 |
| | 10,968 |

94—

தீண்டாமை வழக்கத்தை ஒழித்தல்.

வினா எண். 8362—திரு. கெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தீண்டாமை வழக்கத்தை ஒழிக்க விளம்பரங்கள் செய்ய விசேஷமாக எந்தெந்த மாவட்டங்களை அரசு தேர்ந்தெடுத்துள்ளது ?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

(அ) தீண்டாமை வழக்கத்தை ஒழிக்க விளம்பரங்கள் செய்யும் பணி அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எந்த மாவட்டத்தையும் விசேஷமாக அரசு தேர்ந்தெடுக்கவில்லை.

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் நிதியுடன், தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்ட ''தீர்த்த யாத்திரை'' என்னும் திரைப்படமும், மைய அரசு திரைப்படப் பிரிவினரால் தயாரிக்கப்பட்ட ''டாக்டர் அம்பேத்கார் அவர்களின் வாழ்க்கை வரலாறு'' பற்றிய திரைப்படமும் அனைத்து மாவட்டங்களிலும் திரையிட்டுக் காண்பிக்கப்பட்டு வருகிறது. மக்களின் மனத்தில் தீண்டாமை ஒழிப்புக் கருத்தினை வலியுறுத்தும் வண்ணம் ஆதிதிராவிடர் நல இயக்கத்திலிருந்து இயங்கும் விளம்பரக் குழுவின் மூலம் பிரச்சாரப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தீண்டாமை ஒழிப்புப் பணி மேற்கூடுதலாக விளம்பரக் குழு ஒன்று திருச்சிராப்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தீண்டாமை ஒழிப்புப் பற்றிய விளம்பரப் பணி அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் சனவரி 24 முதல் 30 முடிய கொண்டாடப்படும். ஆதிதிராவிடர் நல வாரத்தில் மிகவும் முனைப்புடன் செயற்படுத்தப்படுகிறது.

95—

அறநிலையத் துறையில் ஆதிதிராவிட மக்களுக்கு வேலை வாய்ப்பில் 18 சதவீத ஒதுக்கீடு.

வினா எண். 8524—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



(அ) அறநிலையத்துறையில் ஆதிதிராவிட மக்களுக்கு வேலைவாய்ப்பில் 18 சதவீதம் ஒதுக்கீடு முறை அமுல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) இல்லையெனில், அதன் காரணங்கள் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை பணியாளர்கள்? அரசு ஆணைகளில் நிர்ணயிக்கப்பட்ட பணி முறைப்படி (Roster) ன்படி, தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் நேரடி தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்படுகின்றனர். ஆதிதிராவிட மக்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கீடு முறை செயல்படுத்தப்படுகிறது.

ஆதிதிராவிடர்களுக்குப் பட்டா வழங்கல்.

வினா எண். 8553—திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆதிதிராவிடர்களுக்கு குட்டை புறம்போக்கு போன்ற இடங்கள் வசதியான இடமாக இருந்தால் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

ஆண்டுக்கு ஆண்டு மழையின் அளவு குறைந்துகொண்டு வருகின்ற இச்சூழ்நிலையில் செழிப்பான விளைநிலங்கள் மழையின்மையினால் வறண்ட நிலங்களாக மாறிவருகின்ற இன்றைய நிலையில் மழை நீரைச் சிறிதும் வீணாக்காமல் மற்றும் வீணாகி கடலில் சென்று கலக்க விடாமல் குளம், குட்டை, ஏரி போன்ற நீர் நிலைகளில் அதன் முழு கொள்ளளவு மட்டும் தேக்கி வைத்து நிலத்தடி நீர் மட்டத்தினை சமுதாயத்தின் பொது நலனைக் கருத்தில் கொண்டு பாதுகாக்க வேண்டியது மிக மிக அவசியமாகிறது. கிராமங்களில்கூட குடிநீர் வறட்சி ஏற்படுவதைத் தவிர்க்க நிலத்தடி நீர்மட்டத்தைப் பாதுகாப்பதும், உயர்த்துவதும் அவசியமாகிறது. எனவே, இதனைக் கருத்தில் கொண்டு அரசாணை நிலை எண் 41, வருவாய்த் துறை, நாள் 20.1.87-இல் நீர்நிலைப் புறம்போக்குகள் ஒப்படை செய்வதிலிருந்து முழுமையான ஒரு தடை வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் சில நேர்வுகளில் அவற்றின் சிறப்புத் தன்மையைக் கருத்தில் கொண்டு பல ஆண்டு காலமாக நடைமுறையில் நீர்நிலையாக உரிய காரியத்திற்குப் பயன்படாத பட்சத்தில், ஏட்டளவில் மட்டுமே நீர்நிலையாக

பதிவாகியுள்ள நேர்வுகளில் ஒப்படை குறித்தான கருத்துருக்கள் அரசு மட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு முன்னால் கூறப்பட்ட தடையாணைகளைத் தளர்த்தி ஒப்படை ஆணைக வழங்கப்படுகின்றன.

97—

பர்கூர் மலையில் கொலையுண்ட வனச் சிப்பந்திகளின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட தொகை.

**வினா எண்.** 868—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் தொகுதியில், பர்கூர் மலையில் சந்தன மரம் திருடும் கும்பலால் இறந்துபோன பாரஸ்டு கார்டு, வாச்சர் மற்றும் அவருக்கு துணைக்குச் சென்ற ஒருவர் ஆக மூவர் குடும்பத்திற்கும் அரசு வழங்கிய தொகை எவ்வளவு ?

(ஆ) நன்கொடை மூலம் வழங்கிய தொகை எவ்வளவு ?



**விடை**—

(அ) கொலையுண்ட வனச் சிப்பந்திகளின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| பெயர். | குடும்ப நல நிதி. | சிறப்பு சேமநல நிதி. | பொது சேமநல நிதி. | ஈட்டிய விடுப்புக்கு ஊதியம். | ஓய்வூதியம் மற்றும் பணிக் கொடை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| திருமதி அருள் செல்வி, க/ பெ என். பழனிச் சாமி, வனக் காப்பாளர். | ரூ. 40,000 18-9-89-ல் வழங்கப் பட்டது. | ரூ. 1,590 23-11-1989-ல் வழங்கப் பட்டது. | ரூ. 806 18-9-1989-ல் வழங்கப் பட்டது. | ரூ. 5,027 20-9-1989-ல் வழங்கப் பட்டது. | ஓய்வூதியம் ரூ. 475 பணிக் கொடை ரூ. 11,388 வழங்கப் பட்டது. |
| திருமதி பூங்கொடி க/பெ. எம். எஸ். சுப்பிரமணியன் வனக்காவலாளி. | ரூ. 40,000 4-10-1989-ல் வழங்கப் பட்டது. | ரூ. 613 4-10-1989-ல் வழங்கப் பட்டது. | மாநில கணக் காயரின் ஒப்பளிப்பு எதிர்பார்க்கப் படுகிறது. | ரூ. 606 20-9-1989-ல் வழங்கப் பட்டது. | ஓய்வூதியம் ரூ. 375 பணிக் கொடை 5,334 மாநிலக் கணக் காயரின் ஒப்பளிப்பு 26-2-1990-ல் வழங்கப் பட்டது. |

[1991 சனவரி 22

இதைத் தவிர முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து நபர் ஒன்றுக்கு ரூ. 10,000 வழங்க அரசு ஆணை 28 வனம் மற்றும் மீன்துறை, நாள் 8-1-90-ல் வழங்கப்பட்டுள்ளது. இது மாவட்ட ஆட்சித் தலைவரால் விரைவில் வழங்கப்படும்.

(ஆ) தமிழ்நாடு வனத் துறையைச் சேர்ந்த அனைத்துப் பணியாளர்களும் தங்களால் இயன்ற நிதியுதவி தந்துள்ளனர். இத்தொகையில் திரு. பழனிச்சாமி மற்றும் திரு. சுப்பிரமணியன் குடும்பத்தினருக்கு தலா ரூ. 20,000-மும் தொகுதி வேலையாள் திரு. மாஸ்தையன் குடும்பத்தினருக்கு ரூ. 18,938-ம் வழங்கப் பட்டது.

98—

கலைக்கல்லூரி அமைத்தல்.

வினா எண் 8924—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நத்தம் நகரில் அரசினர் கலைக்கல்லூரி அமைப்பது பற்றி அரசு (இவ்வாண்டேனும் பரிசீலித்து) உரிய நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

அவ்வாறான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

99—

கைதிகளுக்கு ஒரு நாளைக்கு செலவிடப்படும் தொகை.

வினா எண் 8989—திரு. கே. ரமணி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) இரண்டாம் வகுப்பு சிறைக் கைதிகளுக்கும் சாதாரண கைதிகளுக்கும் ஒரு நாளைக்கு உணவுக்காக ஒருவருக்கு என்ன செலவழிக்கப்படுகிறது ?

(ஆ) அரிசி தவிர வேறு என்ன உணவு தானியங்கள் அவர்களுக்கு வழங்கப்படுகிறது ?

(இ) அளவு என்ன ?



1991 சனவரி 22]

விடை—

(அ) இரண்டாம் வகுப்பு சிறைக் கைதிகளுக்கும், சாதாரண கைதிகளுக்கும், ஒரு நாளைக்கு, ஒருவருக்கு, கீழ்க்கண்டவாறு செலவழிக்கப்படுகிறது :

வேலை செய்பவர் மற்றும் வேலை செய்யாதவர்கள் :

1. அரிசி உணவு ரூ. 8.00

2. கோதுமை உணவு ரூ. 7.60

(ஆ) தமிழ்நாடு சிறைச்சாலை நடைமுறை, நூல் தொகுதி–II அத்தியாயம்-XXII-ல் நிர்ணயிக்கப்பட்ட அளவின்படி சிறைவாசி களுக்கு உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அரிசி உணவை விரும்பும் சிறைவாசிகளுக்கு, அரிசியுடன் கீழ் குறிப்பிட்ட உணவு தானியங்களுக்கும், அரிசி உணவை விரும் பாமல் கோதுமை உணவை விரும்பும் சிறைவாசிகளுக்கு, கோதுமை யுடன் வார நாட்களில், கீழ்க் குறிப்பிட்ட உணவுப் பொருட் களும், வழங்கப்பட்டு வருகிறது :

| (இ) உணவு தானியங்கள். | நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு. | |
|---|---|---|
| (1) | (2) | |
| 1 உப்பு | 30 | கிராம். |
| 2 புளி | 15 | ,, |
| 3 சாம்பார் பொடி | 10 | ,, |
| 4 வெங்காயம் | 45 | ,, |
| 5 காய்கறிகள் | 250 | ,, |
| 6 கீரை (வியாழன் மட்டும்) | 100 | ,, |
| 7 கடலெண்ணெய் | 30 | ,, |
| 8 துவரம்பருப்பு | 100 | ,, |
| 9 பால் (மோர் வகைக்காக) | 80 | ,, |
| 10 காய்ந்த மிளகாய் | 4 | ,, |
| 11 கடுகு | 2 | ,, |

| | (1) | (2) |
|---|---|---|
| 12 | கருவேப்பிலை | 3 கிராம். |
| 13 | விறகு | 750 ,, |
| 14 | உருளைக்கிழங்கு (புதன் மட்டும்) | 60 ,, |
| 15 | மிளகு (செவ்வாய், சனி மட்டும்) | 1 ,, |
| 16 | தேங்காய் (ஞாயிறு மற்றும் வெள்ளி தவிர). | 20 நபருக்கு 1 தேங்காய் வீதம். |
| 17 | வேர்கடலை பருப்பு(சுண்டல் வகைக்காக). | 60 கிராம். |
| 18 | மஞ்சள் (திங்கள் மட்டும்) | 1/2 கிராம் |
| 19 | கடலைப்பருப்பு (திங்கள் மற்றும் வியாழன் மட்டும்.) | 20 ,, |
| 20 | பாசிபருப்பு (செவ்வாய் மற்றும் சனிக்கிழமை மட்டும்.) | 20 ,, |
| 21 | பொட்டுக்கடலை (ஞாயிறு, புதன், வெள்ளி தவிர). | 20 ,, |

100—

## பெண்கள் கல்லூரி அமைத்தல்.

**வினா எண்—9039—டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் அரசு பெண்கள் கலைக்கல்லூரி ஒன்று நிறுவ அரசு ஆணைகள் பிறப்பிக்குமா?

விடை—

அவ்வாறான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(உடுக் குறியிடாத வினாக்கள் முடிவுற்றன)

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*)உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்

**(அ) சேஷசாயி இன்சுலேட்டர் தொழிற்சாலை லே-ஆப் செய்யப் பட்டுள்ளதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.**

***திரு. கே. ரமணி:** தலைவரவர்களே ஒரு 'Mention' என்ற முறையில் ஒரு விஷயத்தை நான் கிளப்ப விரும்புகிறேன். வடலூர் சேஷசாயி இன்சுலேட்டர் தொழிற்சாலையில் நீண்ட காலமாக 1600-க்கும் மேற்பட்ட தொழிலாளிகள் வேலையும் சம்பளமும் கிடைக்காத பெரும் துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர். அரசாங்கத்தினிடத்திலே 600 தொழிலாளர்களை லே-ஆப் செய்ய அனுமதி பெற்று 1,000 பேர்களை லே-ஆப் செய்தும் இப்பொழுது ஒர்க்ஷாப் பகுதியிலே 4 பிரிவுகளை அவர்கள் மூடி விடுவது என்ற முடிவுக்கும் கொண்டுவந்து அந்தத் தொழிற் சாலையையே அநேகமாகச் சீரழித்து, அந்தத் தொழிலாளர்களும் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

பல தொழிலாளர்கள் தங்களுடைய கையில் இருக்கிற அற்ப, சொற்ப காசுகளையும், உடமைகளையும் இழந்து பட்டினிக்கு ஆளாகி, ஊரைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தை இந்த அவையிலே கிளப்பி நமது மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்களே, அந்த 'லே-ஆஃப்-ஐத் தடுப்பதற்கு நட வடிக்கை எடுப்பதாகச் சொல்லி, அந்த நடவடிக்கைகளுக்குக் கூட அந்த நிர்வாகம் மதிப்புக் கொடுக்காமல் அவர்கள் இஷ்டம் போல நடந்து கொண்டிருக்கிறார்கள். 'லே-ஆஃப்-க்கு சட்டப் படி அவர்கள் கொடுக்கின்ற, கொடுக்கவேண்டிய சம்பளத்தைக் கூட 1990-ஆம் வருஷம் ஜூலை மாதத்திலேயிருந்து கொடுக்க வில்லை. அதையும் நிறுத்தி விட்டார்கள். இந்த நிலைமை அங்கே ஏற்பட்டு, அதனால் அந்தப் பகுதி முழுவதும் ஒரு மிகப் பெரிய பதட்டமான நிலைமையும் ஏற்பட்டு, அனைத்துத் தொழிலாளிகளும் பல போராட்டங்களிலேயும் ஈடுபட்டு, ஜனநாயக முறையிலே தங்களுடைய பிரச்சினையைத் தீர்க்க முயற்சியெடுத்து அதற்கும் அவர்கள் ஒத்துக்கொள்வதாக இல்லை. இப்படிப்பட்ட மோசமான நிலைமை ஏற்பட்டிருப் பதன் விளைவாக நமது அவையினுடைய மதிப்புமிக்க உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் உடல்நலம் கூடக் குன்றியிருக்கும் படியான நிலையில் அதாவது அந்தச் சங்கத்தினுடைய தலைவ ரான நெல்லிக்குப்பம் கோவிந்தராஜன் அவர்கள் இன்றைக்கு உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை மிகவும் வேதனைக்குரிய ஒரு விஷயம். இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும். எல்லாவிதத்திலும் சட்டத்தை மீறி —நமது முதலமைச்சருடைய வாக்குறுதியைக் கூட நிறைவேற்று வதற்குத் தயார் இல்லாமல் அவர்கள் இஷ்டம் போல நடந்துகொண்டிருக்கும்படியான அந்தத் தொழிற்சாலை நிர் வாகத்தின் மீது கடுமையான நடவடிக்கை என்ன எடுக்க முடியுமோ

அதை எடுத்து அந்தக் கம்பெனியைச் சீர்குலைக்கவிடக்கூடாது. 1,600 பேருக்கு வேலை கிடைக்கிறது; அப்படியானால் குறைந்த பட்சம் அந்தக் கம்பெனியைக் கூட்டுத்துறையிலேயாவது கொண்டு வர முடியுமா என்று பார்க்கவேண்டும் அல்லது அரசே எடுத்து நடத்த முடியுமா, அதை வேறு எந்தத் துறையிலேயாவது எடுக்க முடியுமா என்று பார்க்கவேண்டும். இந்த மேனேஜ்மெண்டிடம் அந்தக் கம்பெனி இருந்தால் இனிமேல் அந்தக் கம்பெனி பிழைக்காது என்ற நிலை வந்திருக்கிறது. அதனால் தான் தோழர் கோவிந்தராஜனே உண்ணாவிரதம் இருக்கவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இதற்கு ஒரு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கிறேன். அந்த வேண்டுகோளுக்கு நமது அமைச்சரவர்கள் பதில் அளிப்பார் என்று நான் எதிர்பார்க்கிறேன் தங்கள் மூலமாக.

மாண்புமிகு திரு கே. என். நேரு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுப்பிய பிரச்சினையைப்பற்றி ஏற்கெனவே முதலமைச்சரவர்களிடம் கலந்தாலோசித்து அரசின் சார்பாக ஹியரிங்குகள் நடத்தப்பட்டு அரசிலிருந்து அவர்களுக்கு லே-ஆப் அளிக்கப்பட்டிருந்ததை ரத்து செய்து அங்கிருக்கின்ற தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் வேலை அளிக்கப்படவேண்டுமென்று, முதலமைச்சருடைய உத்தரவின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், அரசு சொன்ன நடவடிக்கைகள் மீது அவர்கள் இன்றைக்கு நீதிமன்றம் சென்றிருக்கிறார்கள். இதற்கிடையில் 'லே-ஆப்' விட்ட நாட்களில் கூட அவர்களுக்குத் தரக்கூடிய சம்பளம், அதாவது தொழிலாளர்களுக்குத் தரக்கூடிய அந்தப் பாதிச் சம்பளம்கூடத் தரப்படவில்லை என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரசின் சார்பாக உரிய முறைப்படி நடவடிக்கை மேற்கொண்டு அத்தனை தொழிலாளர்களுக்கும் சம்பளம் கிடைப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றபடி, அரசே இந்த ஆலையை எடுத்துக்கொள்வதோ, அல்லது கூட்டுறவுத் துறையிலே இதை எடுக்கலாமா என்பதைப் பற்றியெல்லாம் ஆய்வு செய்து நல்ல ஒரு முடிவை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-30 மணி.

(ஆ) அம்பாசமுத்திரத்தில் சப்-கோர்ட்டு அமைக்கக் கோரி வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்தி வருவது குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் அம்பையில் வழக்கறிஞர் பெருமக்கள் எல்லாம் சப்-கோர்ட் வேண்டுமென்று கடந்த 2, 3 மாத காலமாக நீதிமன்றத்தைப் புறக்கணித்து வருகிறார்கள்.





தற்போது, நீதிபெற வேண்டுமேயானால், தென்காசி சப்-கோர்ட்டுக்கு மக்கள் எல்லாம் செல்ல வேண்டிய துயரம் இருக்கிறது. நீதி எளிதாகக் கிடைக்க வேண்டுமென்றும் இந்த ஆண்டு சமுதாய நீதி ஆண்டாக விளங்க வேண்டுமென்றெல்லாம் தமிழக அரசு, நம்முடைய மத்திய அரசு இரண்டும் மக்களுக்குத் தெரிவித்திருக்கிற காரணத்தினால், ஏழை எளிய மக்கள் எளிதாக, குறைந்த தூரத்தில் குறைந்த நேரத்தில் நீதியைப் பெறுவதற்கு சப்-கோர்ட்டை அம்பையில் நிறுவுவதற்கு அரசாங்கம் உயர் நீதிமன்றத்தோடு கலந்தாலோசித்து ஒரு நடவடிக்கை—துரித நடவடிக்கை—எடுக்க வேண்டுமென்பதை நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு 'மென்ஷன்' மூலமாகக் கொண்டு வருகிறேன்.

திரு. கு. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தில் சப்-கோர்ட் அமைக்கக் கோரி, கடந்த மூன்று மாத காலமாக அங்கேயுள்ள வழக்கறிஞர்கள் போராட்டத்திலே ஈடுபட்டு வருகின்றனர். ஏறத்தாழ அம்பாசமுத்திரத்தில் பாதிக்கும் மேற்பட்ட வழக்குகள் இன்றையதினம் தென்காசி சப்-கோர்ட்டிலே நடந்து கொண்டிருக்கின்றன. அம்பாசமுத்திரத்திலே சப்-கோர்ட் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து ஏற்கெனவே பலமுறை அந்த வழக்கறிஞர் சங்கப் பிரமுகர்கள், அமைச்சர் பெருமக்களையும், அதிகாரிகளையும் சந்தித்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அங்கு புதிதாக அமைக்கப்படவிருக்கிற சப்-கோர்ட்டை அம்பாசமுத்திரத்திலே அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தில் ஒரு சப்-கோர்ட் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை, அம்பாசமுத்திரம் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பாக அரசுக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல் அம்பாசமுத்திரத்தில் ஒரு சப்-கோர்ட் அமைப்பதற்கான குறிப்பு, அரசிடமிருந்து உயர்நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்க அனுப்பப்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்றத்திடமிருந்து கிடைத்த தகவல்படி, அங்கு சப்-கோர்ட் அமைக்கின்ற அந்தக் குறிப்பு, உயர்நீதிமன்றத்தின் ஆய்வில் இருப்பதாகத் தெரிகிறது. இன்றைக்கும்கூட, 'ஹைக்கோர்ட் ரிஜிஸ்ட்ரார்' இடம் நான் தொடர்பு கொண்டிருக்கிறேன். இதற்கான அறிவிப்பைக் காலதாமதம் இல்லாமல் அனுப்புவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அம்பாசமுத்திரத்தில் சப்-கோர்ட் அமைப்பதற்கான குறிப்பு பற்றி, உயர்நீதிமன்றத்தின் அறிவிப்பு வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) நாகர்கோவில் மாவட்ட நீதிபதி—வழக்கறிஞர்கள் பிரச்சினையையொட்டி வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப் புறக்கணிப்பதால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

**திரு. மா. சுந்தரதாஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் மாவட்ட நீதிபதி அவர்களைக் கண்டித்து, ஏறத்தாழ மூன்று மாதகாலமாக வழக்கறிஞர்கள் நாகர்கோவில் நீதிமன்றங்களிலே எந்தக் கோர்ட்டுக்கும் போவதில்லை. அது தொடர்பாக மாவட்டத்தில் இருக்கின்ற தக்கலை, இரணியல், குளித்தலை போன்ற கோர்ட்டுகளிலேயும் ஏறத்தாழ 10,20 நாட்களாக எந்த வழக்கறிஞரும் போவதில்லை. ஏறத்தாழ மூன்று மாதகாலமாக வழக்கறிஞர்கள் கோர்ட்டுக்குப் போகாது இருக்கிற காரணத்தால், 'Anticip t ry Bail' எந்த வகையிலும் வாங்க முடியாமல் பொதுமக்கள் அவதிப் படுகிறார்கள். மேலும், வழக்கறிஞர்கள் சங்கம், ரிஜிஸ்ட்ராரையும், ஹைக்கோர்ட் ஜட்ஜையும் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். அவர்களும் நீங்கள் ஒரு அளவுக்காவது கோர்ட்டுக்குச் செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கிணங்க, அவர்கள் 'Bench and Ba discussion' வைத்துக் கொண்டார்கள்.

வழக்கறிஞர்கள் மாவட்ட நீதிபதியைப் பார்த்துப்பேசியும்கூட, அவர், உங்கள் வேலையைப் பார்த்துப் போங்கள். நான் இப்படித்தான் நடந்து கொள்வேன் என்று தரக்குறைவாகப் பேசிய பின்னர்தான், அந்த வழக்கறிஞர்கள் இப்போது உண்ணாவிரதம், நீதிமன்றத்தின் முன்னால் 14 நாட்களாக இருக்கிறார்கள். மூன்று மாதகாலமாக இந்த நீதிமன்றத்திற்கு வழக்கறிஞர்கள் போவதில்லை. நாகர்கோவில் மாவட்ட நீதிமன்றம் மட்டுமல்ல; மாவட்டத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களும் இதனால் இயங்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களினுடைய கவனத்திற்கும், வழக்கறிஞர்கள் சங்கம் கொண்டு வந்திருக்குமென்று நம்புகிறேன். மேலும், ஹைக்கோர்ட் நீதிபதிக்கு முன்னாலே பேச்சுவார்த்தைகள் நடந்த பின்னாலும்கூட, எந்த நடவடிக்கையும் இதுவரையில் எடுக்காமல் இருப்பது, நிச்சயமாக, தவறானது மட்டுமல்ல; ஒரு நல்ல எண்ணமல்ல என்பதற்காக நான் இந்தக் கருத்தை நம்முடைய இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்கிறேன். நிச்சயமாக அவர்களுடைய கோரிக்கைகளை எந்தக் காரணத்தினாலும், அந்த மாவட்டத்தினுடைய தனுஷ்கோடி என்கிற நீதிபதி ஒப்புக்கொள்ளமாட்டார். நானும் அவருடன் பேசினேன். முடியாது என்கிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், உடனடியாக அந்த நீதிபதியை மாற்றிவிட்டால், அந்தப் பிரச்சினை ஓய்ந்து விடும். ஆகை





யினால் அமைச்சர் அவர்கள் உடனடியாக அதற்கு ஆவன செய்ய வேண்டும். அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்பி அமைகிறேன்.

**திரு. செ. நூர்முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் இருக்கிற வழக்கறிஞர்கள் கடந்த இரண்டு மாத காலமாக, வழக்கறிஞர்களுக்கும் மாவட்ட நீதிபதிக்கும் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக, கோர்ட்களைப் புறக்கணித்து வருகிறார்கள். இந்த மாதம் முதல் குமரி மாவட்டத்தில் உள்ள எல்லா கோர்ட்டுகளுமே வழக்கறிஞர்களால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. எனவே அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். வழக்கறிஞர்கள் தங்களுடைய பிரச்சினைகளுக்காக நீண்ட காலமாகவே போராடி, அரசுக்கும் உயர்நீதிமன்றத்திற்கும் முறையிட்டும் கூட, இதுநாள் வரையில் அந்தப் பிரச்சினை முடிக்கப்படாத காரணத்தால் வழக்கறிஞர்கள் பாதிப்பு, பொதுமக்கள் பாதிப்பு, சட்ட ஒழுங்குப் பிரச்சினை என்று பல பிரச்சினைகள் ஏற்படுவதற்கு காரணமாக இது அமைந்திருக்கிறது. எனவே இது உயர்நீதிமன்றம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும்கூட மக்கள் பாதிக்கப்படுவதால் அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டு உடனடியாக அதற்குத்தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

10-35 மணி

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் மாவட்ட நீதிபதியாக திரு. தனுஷ்கோடி அவர்கள் பணியாற்றுகிறார்கள். நாகர்கோவில் வழக்கறிஞர்கள் சங்கம் அவர் மீது சில குறைபாடுகளைச் சொல்லி, குற்றச்சாட்டுகளைச் சொல்லி அரசுக்கும் தெரிவித்தது. உயர்நீதிமன்றத்திற்கும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். வழக்கறிஞர் மன்ற நண்பர்கள் சுமார் 2 வாரங்களுக்கு முன்பு என்னைச் சந்தித்தபோதும் உயர்நீதிமன்றத்தோடு தொடர்பு கொண்டு, இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. வழக்கறிஞர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியையும் சந்தித்து இருக்கிறார்கள். உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியும் அதன்மீது நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்ததாக எனக்கு தகவல் தரப்பட்டிருக்கிறது.

இப்போது நிலைமை என்னவென்றால் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களும் அந்த மாவட்டத்திற்குப் பொறுப்பேற்று இருக்கின்ற மாவட்ட நீதிபதி அவர்களை அழைத்துச்

சொல்லி இருக்கிறார்கள். மூன்று நாட்களுக்குள்ளாக அந்த வழக்கறிஞர்கள் சங்க நண்பர்களோடு பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதுமட்டு மல்லாமல் அந்த நீதிபதியைப்பற்றி ஜுடிசியல் விஜிலன்ஸ் மூலமாக ஒரு அறிக்கை கேட்டிருப்பதாகவும் சொல்லியிருக் கிறார்கள். அந்த அறிக்கையை எதிர்பார்த்துக்கொண்டிருக் கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வு களை மதித்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

(ஈ) எந்தக் கட்சியையும் சாராதவர்கள் என்று சில உறுப்பினர்கள் குறித்து பேரவைத் தலைவர் 21 . 1 1991 ஆம் நாளன்று அளித்த தீர்ப்பு பற்றி.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சட்டமன்றக் கூட்டத்தின்போது தாங்கள் இங்கே தீர்ப்பளிக்கிறபோது போதிய நேர அவகாசம் இல்லாத காரணத்தால் முழுமையாக எங்களால் எங்களுடைய நிலையை விளக்க இயலவில்லை. மேலும் எதிர்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் போன்ற இன்னும் சில சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்தின் நேரத்தை வீணாக்கவேண்டாம், எழுதிக் கொடுத்து விடுங்கள் என்று சொன்ன ஆலோசனைகளின் பேரிலும் தாங்கள் கேட்டுக்கொண்டதின் பேரிலும் எங்களுடைய நிலையை முழுமையாக விளக்கி நேற்று உங்களுக்கு நானும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், திரு. எஸ். டி. உகம்சந்த் ஆகியோரும் கடிதம் தந்து இருக்கிறோம். அதன்மீது தங்களுடைய முடிவை, தீர்ப்பை இன்றைக்கு நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பரிசீலனையில் உள்ளது. இன்று பகல் 1.15 மணிக்கு மூவரும் என்னுடைய அறையில் சந்தித்து நேரில் மற்ற விளக்கங்களை அளிக்கவும். அதன்பிறகு தீர்ப்பளிக்கப்படும்.

(உ) கர்நாடக அரசு காவிரி நீர் விடாததால் விவசாயிகளும் உணவு உற்பத்தியும் பாதிக்கப் பெற்றுள்ளது குறித்து.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் குறிப்பாகத் தமிழகத்தில் காவிரிப் பாசனத்திற்குத் தண்ணீர் விடுவது சம்பந்தமாக பல்வேறு பட்ட தகவல்களும், செய்திகளும் வந்துகொண்டிருக்கின்றன. இன்றைக்குக் காவிரிப் பாசனப்பகுதி விவசாயம் நிச்சயமற்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அதுவும் கடைமடைப் பகுதியில் இருக்கக்கூடிய கிராமங்களும், தாலுகாக்களும் மானா வாரிச் சாகுபடி செய்யக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்





கின்றன. நீண்டகாலமாக இருந்துவந்த பாசன உரிமை இப்போது மறுக்கப்படுவதாலே பல பாதிப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன. குறிப்பாக விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. உணவு உற்பத்தியில் தமிழகத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. இந்த நேரத்தில் சட்டரீதியாக அந்த உரிமையைக் கோரக்கூடாது என்று கர்நாடக அரசு நிபந்தனை வேறு விதிக்கிறது. ஆனால் முன்பெல்லாம் கடைசி நேரத்தில் பாசனம் பாதிக்கப்படும் நேரத்தில் முன்பிருந்த அந்த கர்நாடக மாநில முதலமைச்சர்கள் எல்லாம் குறிப்பாக திரு. பொம்மை, அதேபோல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. வீரேந்திரபாட்டீல் போன்றவர்கள் எல்லாம் தமிழக அரசினுடைய வேண்டுகோளை ஏற்று தண்ணீர் அளித்தார்கள். ஆனால் இப்போது இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள் தண்ணீர் கொடுக்க முடியாது, சட்டரீதியாக அந்த உரிமையைக் கோரக்கூடாது என்று மறுத்து வருகிறார்கள். முன்னாள் கர்நாடக முதலமைச்சர் திரு. குண்டுராவ் அவர்கள்கூடத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று சொன்ன வேண்டுகோளை மறுத்து, எந்த வேண்டுகோளையும், எந்த நியாயத்தையும் ஏற்க முடியாது என்று இப்போது அவர்கள் மறுத்து வருவதால் கடைமடைப்பகுதி விவசாயம் பெரும் பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறது. நம்முடைய நாட்டின் பிரதமர் அவர்கள் கூட தலையிட்டுத் தீர்வு காண வேண்டும், தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று சொன்னதாகச் செய்தி வந்திருக்கிறது. இருந்தாலும் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் டெல்லிக்குச் சென்று பேச்சு வார்த்தை நடத்தியதாக செய்திகள் வந்து இருக்கின்றன. இப்படி பலதரப்பட்ட செய்திகள் வந்தாலும், செய்திகள் வருகின்றதே தவிர, தண்ணீர் வரவில்லை. தண்ணீர் இல்லாமல் அந்தப் பகுதி விவசாயம் பெரும் பாதிப்பிற்குள்ளாகி இருக்கின்றது. அந்தப் பகுதி விவசாயிகள் ஒரு நிச்சயமற்ற நிலையில் இருக்கின்றார்கள். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றுகூட பேச்சு வார்த்தை நடத்திவிட்டு வந்திருக்கின்றார். அதனுடைய முழு விவரங்களைத் தமிழக மக்களுக்குச் சொல்வது அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயத்தைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கு உதவி செய்யும் என்று நான் கேட்டுக்கொள் வதோடு, எந்த ஒரு நேரத்திலும், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நம்முடைய அடிப்படை உரிமையை, நமக்கு அதிலே இருக்கக் கூடிய பாசன உரிமையை விட்டுக்கொடுக்காமல் பேச்சு வார்த்தையை மாநில அரசு தொடரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

10-40 மணி

மாநில அரசின் சார்பில் நடந்த பேச்சுவார்த்தை விவரங்களை நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையின் மூலமாக இந்தத் தமிழகத்திற்குச்

சொல்வது அந்தப் பகுதி மக்களுக்கு, விவசாயிகளுக்கு ஒரு நம்பிக்கை அளிப்பதற்கு உதவும் என்று தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிற்கு ஏறத்தாழ 50 விழுக்காட்டிற்கு மேலாக அரிசி வழங்கி வரும் தஞ்சை மாவட்டத்திலே இன்றைக்குக் காவிரி நீரினைக் கர்நாடக மாநில அரசு தராத காரணத்தினாலே நம்பிக்கை அற்ற நிலை இருக்கிறது. குறிப்பாக மயிலாடுதுறை, சீர்காழி, நன்னிலம், கடைமடைப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள், முன்னாலே தண்ணீர் கிடைக்காமல் இருந்து, இப்போது ஏதோ கொஞ்சம் மழை பெய்து நட்ட பயிரைக் காப்பாற்றக்கூட தண்ணீர் இல்லாத நிலையில் இருக்கின்றார்கள். தஞ்சை மாவட்டம் குறிப்பாக, தொழிற்சாலை இல்லாத ஒரு மாவட்டம், அந்த மாவட்டம் விவசாயத்தையே நம்பி இருக்கிறது. அந்த மாவட்டத்திலே இருக்கக் கூடிய விவசாயிகளின் விவசாயத்திற்கு நிச்சயமற்ற நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. இயற்கையாக உருவாகிக் கொண்டிருக்கின்ற நிலைமை இல்லாமல், செயற்கை நிலையும் உருவாகிக் கொண்டிருக்கின்ற அந்த நிலையை அரசு உணர்ந்து தஞ்சை மாவட்டம் தண்ணீர் பெறுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வதோடு, குறிப்பாக அந்த மாவட்டத்திற்காக பிரதமரை வலுக்கட்டாயமாக மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி ஒரு நியாயமான நிலையை, தண்ணீர் வரும் நிலையை உருவாக்கித் தந்து தற்காலிகமாக இப்போது உடனடியாகத் தேவையை நிறைவு செய்வதற்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து நடத்தி தண்ணீர் பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது தொடர்பாக மட்டும் நீங்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள்.

***திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மிக முக்கியமானதாக விளங்கக் கூடிய காவிரி ஆற்று நீரானது வழங்கப்பட வேண்டுமென்பது தமிழக அரசினுடைய கோரிக்கையாக இருந்தாலும், இன்றைக்கு அங்கே ஆளுகின்ற அரசு, அதைச் செய்து முடிக்காமல், எப்படியெல்லாம் அரசுக்கு நிர்பந்தத்தை ஏற்படுத்த வேண்டுமோ அந்த வகையிலே நிர்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய அந்த நிர்பந்தத்திற்கு ஆட்பட்டால் தமிழகத்திற்கு நாம் செய்கின்ற ஒரு



மாபெரும் துரோகமாக அது அமையும் என்ற காரணத்தினால், மத்திய அரசே இதிலே தலையிட்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் மத்திய அரசு தமிழகத்திற்கும் சேர்த்துத்தான் என்ற முறையில் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் வழிக்கு வராது இருந்தால்—ஏழை மக்களை எப்படியெல்லாமோ நசுக்குகின்ற அந்த வகையிலே தமிழகத்தை நிர்ப்பந்தம் செய்து வருகின்றார்கள். அந்த நிர்ப்பந்தத்திற்கு அடிபணியாமல், இன்றைக்கு 5 டி. எம். சி. தண்ணீராவது வழங்குவதாக சொல்கிறார்கள்—நம்முடைய தேவை 20 டி.எம்.சி. என்று சொன்னால், அதைப் பெறுவதற்கு வேண்டிய தீர்மானத்தை நம்முடைய இந்த மாமன்றத்திலே நிறைவேற்ற வேண்டும். அதற்காக ஒரு வெள்ளை அறிக்கையைக்கூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலே தாக்கல் செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் பலர் கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும் ஒத்திவைப்புத் தீர்மானங்களையும் இந்தப் பிரச்சினை பற்றிக் கொடுத்திருந்தார்கள். எல்லாவற்றிற்கும் ஒட்டுமொத்தமாகச் சேர்த்து இப்போது விளக்கம் அளிப்பதற்கு ஒரு வாய்ப்பைத் தாங்கள் அளித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இது தமிழக மக்களுடைய முக்கியமான ஒரு பிரச்சினை. அந்த வகையில், இதைப்பற்றி கொஞ்சம் தெளிவாகவே சில மணித் துளிகளில் தெரிவித்து விடவேண்டுமென்று நான் கருதுகிறேன்.

பொதுவாக, மேட்டூரிலேயிருந்து காவிரி ஆற்றில் ஜூன் மாதம் 12-ம் தேதி தண்ணீர் பாசனத்திற்கு திறந்து விடுவோம். இது வழக்கம். ஆனால் கர்நாடக அரசு 1924 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தை மீறி தமிழகத்திற்குத் தண்ணீரை விடாமல் தேக்கி வைத்ததன் விளைவாக இந்த ஆண்டு நாம் பாசனத்திற்காக 22—8—1990 அன்றுதான் திறந்து விட்டோம். விடுகிறபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக தண்ணீர் நிலைமை இப்படி பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தினால் ஜனவரி 28 ஆம் தேதிக்குள் தங்களுடைய பயிரை, விவசாயத்தை முடித்துக் கொள்கின்ற அளவுக்கு நடவு செய்ய வேண்டும். அறுவடையை 28ஆம் தேதிக்குள் முடித்துவிட வேண்டும் என்று நாங்கள் அறிவித்திருந்தோம்.

10-45 மணி

பொதுவாகவே, இந்த ஆண்டு நமக்கு ஜூன் மாதம் முதல் ஜனவரி 21 ஆம் தேதி வரை மேட்டூர் அணையிலே 126 டி.எம்.சி. தண்ணீர்தான் கிடைத்தது. இது சென்ற ஆண்டு, அதாவது 1989-90 ஆம் ஆண்டு கிடைத்ததைவிட 25 டி.எம்.சி. குறைவாக இருந்தது. மழையின் அளவைப் பொறுத்தவரையிலும், வடகிழக்கு, தென்மேற்கு பருவக் காற்றுக்களின் மூலமாகப் பெய்த மழை காவிரி டெல்டா பகுதியில் 520 மில்லி மீட்டர் ஆகும். இது சராசரி மழையினுடைய அளவைவிட 323 மில்லிமீட்டர் குறைவான தாகும். எனவே, இப்படி நீர்ப் பற்றாக்குறையின் காரணமாக அக்டோபர் மாதத்திலேகூட விவசாயிகள் பயிர் நடவு செய்து கொண்டிருந்தார்கள். நீர் வேண்டுமென்று கேட்கிற அந்த நேரத்தில், மீண்டும் கர்நாடக அரசை அணுகலாமென்று நம்முடைய முதல்வர் அவர்கள் அக்டோபர் 18 ஆம் தேதி ஒரு கடிதத்தை கர்நாடக முதல்வருக்கு எழுதினார்கள். ஆனால் எங்களுக்கே நீர் போதவில்லை, எனவே உங்களுக்குத் தண்ணீர் தருவதற்கு இல்லை என்ற பதிலைக் கர்நாடக முதல்வர் அவர்கள் தெரிவித்துவிட்டார்கள். இதற்கிடையில் நடுவர் மன்றம் அதாவது டிரிபியூனல் அமைக்கப்பட்டது. அந்த நடுவர் மன்றத்தில் நம்முடைய அரசின் சார்பில் ஒரு மனுவை தாக்கல் செய்தோம். அதாவது இதனுடைய இறுதித் தீர்ப்பு வருகிறவரையில், பழைய 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி எங்களுக்குத் தண்ணீர் திறந்துவிடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நாம் கேட்டிருந்தோம். அப்படி ஒரு மனு. அதன்னியில், வேறு ஒரு மனு, அதாவது எமர்ஜென்சி பெட்டிசன் ஒன்று போட்டோம். அது என்ன வென்றால் இந்த ஆண்டு, இப்போது வயலில் நிற்கிற பயிர்கள் காய்ந்து கொண்டிருக்கின்றன, அதைத் தடுப்பதற்கு 20 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்துவிட உடனடியாகக் கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்று நடுவர் மன்றத்திடம் அதில் குறிப்பிட்டிருந்தோம்.

அதற்கு டிசம்பர் மாதம் 4, 5, 6, 12-ஆம் தேதிகளில் ஒரு விசாரணை நடந்தது. விசாரணை வருகிற நேரத்தில் இங்கே நீர் நிலைமை மிகவும் மோசமாக இருந்த காரணத்தால் 20 டி.எம்.சி. தண்ணீர் போதாது, 33 டி.எம்.சி. தண்ணீராவது தேவை என்று நாம் அவர்களிடத்திலே வாதாடினோம். ஆனால் நடுவர் மன்றம் 5—1—1991 அன்று ஒரு தீர்ப்பு வழங்கியது. கர்நாடக அரசை நிர்பந்தம் செய்யும் அதிகாரம் இந்த நடுவர் மன்றத்திற்கு இல்லை, மத்திய அரசு அதுபற்றி எங்களுக்கு தெரிவித்தால் ஒழிய எங்களுக்கு வழி இல்லை என்று அவர்களும் கைவிரித்து விட்டார்கள். எனவே, நடுவர் மன்றத் தீர்ப்பினை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் ஸ்பெசல் லீவ் பெட்டிசன் 10—1—1991 அன்று தாக்கல் செய்திருக்கிறோம். அதன்மீது விசாரணை



மார்ச் 19 ஆம் தேதி வர இருக்கிறது. அதற்கிடையிலே நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது என்று 6—1—1991 அன்று நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் கர்நாடக முதல்வருக்கு ஒரு டெலக்ஸ் அனுப்பினார்கள். நிலைமை இங்கே மிகவும் மோசமாக இருக்கிறது, நீங்கள் கொஞ்சம் தண்ணீர் இப்பொழுதுவிட வேண்டுமென்று அதில் கேட்டோம். அதற்கு, பத்திரிகையில்தான் நாங்கள் செய்தி பார்த்தோம். அதாவது தண்ணீர் தருவதற்குப் பதிலாக, தமிழ்நாடு மின்சாரம் தருமானால், நாங்கள் திறந்துவிடத் தயாராக இருக்கிறோம் என்று கூறியதாகப் பத்திரிகையில் செய்தி வந்ததே தவிர நமக்கு எந்தச் செய்தியும் வரவில்லை.

10.50 மணி

இதற்கிடையில், 16 ஆம் தேதி, இந்த மாதம் நடந்த நீர்ப்பாசனத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள நான் டெல்லிக்கு சென்றிருந்தேன். அந்த மாநாட்டின்போது நம்முடைய பிரதமர் அவர்கள், மாநிலங்களுக்கிடையேயான நீர் பிரச்சினைப் பற்றி வந்தபோது கர்நாடகாவில் தண்ணீர் இருக்கிறது. தமிழகத்திற்குத் தண்ணீர் தேவைப்படுகிறது. அதைத் திறந்துவிடும்படி நான் கர்நாடக முதல்வர் திரு. பங்காரப்பாவைக் கேட்டேன். அவர் திறந்துவிட்டாரா ல்லையா என்று தெரியவில்லை என்று குறிப்பிட்டார்கள். அவர் பேசி முடித்துவிட்ட பிறகு, பக்கத்து அறைக்கு வந்தபோது, பிரதமர் என்னைப் பார்த்து தண்ணீர் வந்துவிட்டதா என்று கேட்டார்கள். அப்போது அங்கே கர்நாடக முதல்வர் மாண்புமிகு பங்காரப்பா அவர்கள் வந்தார்கள். அவரையே நீங்கள் கேளுங்கள் என்று நான் பிரதமரிடம் சொன்னேன். அவரே கர்நாடக முதல்வரைக் கேட்டார். அவர் இல்லை யென்று சொன்னார். ஏன் என்று கேட்டார். நாங்கள் போடுகின்ற நிபந்தனைகளை தமிழக அரசு ஏற்றுக்கொள்ள வில்லை என்று கர்நாடக முதல்வர் சொன்னார். உடனே பிரதமர் என்ன நிபந்தனை என்று கேட்டார். அவர் சொன்னார், இவர்கள் போட்டிருக்கிற, நடுவர் மன்றத்திலே தமிழக அரசு கொடுத்திருக்கிற மனுக்களை வாபஸ் பெற வேண்டும்; உச்ச நீதி மன்றத்திலே கொடுத்திருக்கிற மனுவையும் வாபஸ் பெற வேண்டும்; கொடுக்கிற தண்ணீருக்கு அவர்கள் எங்களுக்கு மின்சாரத்தை அளிக்க வேண்டுமென்ற நிபந்தனைகளை அவர் சுட்டிக்காட்டினார். அந்த நிபந்தனைகள் என்ன என்று கேட்டார் பிரதமர் அவர்கள். நான் அவருக்கு தெரிவித்தேன், நாங்கள் நடுவர் மன்றத்திலே சில மனுக்களைக் கொடுத்திருக்கிறோம். என்ன? ஒன்று கர்நாடக அரசு, எங்களுக்கு இறுதித் தீர்ப்பு வருகிற வரையில் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி தண்ணீரைத் திறந்துவிட நடுவர் மன்றம் உறுதி அளிக்க வேண்டும். இது ஒரு கோரிக்கை. இரண்டாவது கோரிக்கை, மேற்கொண்டு

on going projects— இப்போது அணைகள் கட்டிக் கொண்டிருக்கிறார்களே, அவற்றை எல்லாம் கட்டக் கூடாது, தடுத்து நிறுத்த வேண்டும்; மின்சாரம் கொடுத்தால் தான் தண்ணீர் கொடுப்போம் என்று சொல்லக்கூடாது என்று இப்படிப்பட்ட மனுக்களை நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னேன். அவர் ''இதெல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம்'' என்று சொல்லிவிட்டு, மாண்புமிகு கர்நாடக முதலமைச்சரைப் பார்த்து, first, save them அவர்களைக் காப்பாற்றுங்கள் என்று சொன்னார். இவர்கள் மின்சாரம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்களா என்று கேட்டார். பிரதமர் என்னைக் கேட்டார், ''உங்களிடம் மின்சாரம் இருக்கிறதா'' என்று. Tamil Na u i no a u plu State, எங்களிடத்தில் மின்சாரம் உபரியாக இல்லை என்று சொன்னேன். இருந்தாலும் we ar prepa ed to switch off our ligh s. எங்களை இருளிலே தள்ளிக்கொண்டு மின்சாரத்தைக் கர்நாடகத்திற்குக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம், எங்களுக்கு தண்ணீர் கொடுக்கும்படி அவர்களிடத்திலே தெரிவியுங்கள் என்று நான் அவரிடம் கேட்டேன். மின்சார மந்திரியே சொல்கிறார், மின்சாரம் கொடுக்கிறார், தண்ணீரைக் கொடுங்கள், மற்ற பிரச்சினைகளை எல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம், fi st save them என்று பிரதமர் அவர்கள் தெரிவித்து விட்டுப் போய்விட்டார்கள். உடனே நான் திரு. பங்காரப்பா அவர்களிடம் கேட்டேன், பிரதமர் அவர்களே தெரிவித்திருக்கிறார், நிலைமை மோசம், தண்ணீரைத் திறந்துவிட ஏற்பாடு செய்யுங்கள் என்று சொன்னேன். இதை உங்கள் முதலமைச்சரிடம் கேட்டுச் சொல்லுங்கள் என்று சொன்னார். நான் சொன்னேன், எங்கள் முதலமைச்சரிடத்திலே வருகிற போதே பல விஷயங்களைப் பேசிவிட்டு வந்திருக்கிறேன், அவர்கள் நிச்சயமாக ஒத்துக்கொள்வார்கள் என்று சொன்னேன். இல்லை, இல்லை; உங்கள் முதலமைச்சரைக் கேட்டு வாருங்கள் என்று சொன்னார்.

நான் உடனடியாகத் தமிழ்நாடு ஹவுசுக்கு வந்து, நம்முடைய முதல்வரோடு தொடர்பு கொண்டு, இப்படி கர்நாடக முதலமைச்சர் தெரிவிக்கிறார் என்று சொன்னேன். சரி ஒத்துக்கொள் என்று அவர்கள் என்னிடத்திலே தெரிவித்தார்கள். மீண்டும் இதை நான் அவரிடம் தெரிவிப்பதற்காகச் சென்றேன். அதற்குள் அவர்கள் ஆந்திரா சென்று விட்டார்கள். மறுநாள் முதலமைச்சர்கள் கலந்துகொள்ளும் முதலமைச்சர் மாநாட்டுக்கு அவர்கள் திரும்ப வந்தார்கள். நானும் திரும்பி வந்தேன். பிறகு நான் மீண்டும் திரு. பங்காரப்பா அவர்களைக் கேட்டேன், முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள், அதை நான் சொல்வதற்குள் நீங்கள் ஐதராபாத் சென்றுவிட்டீர்கள் என்று சொன்னபோது அவர்கள், நான் 5 டி.எம்.சி. தான் கொடுப்பேன் என்று



சொன்னார்கள். 5 டி.எம்.சி. போதாது, நிலைமை மோசம், எனவே நீங்கள் 20 டி.எம்.சி.—யாவது கொடுக்க வேண்டும் நாங்கள் 33 டி.எம்.சி. கேட்டிருக்கிறோம்; 20 டி.எம்.சி.—யாவது கொடுங்கள் அல்லது சற்று ஏறத்தாழ கொடுங்கள் 5 டி.எம்.சி. நீங்கள் விட்டால் 2 டி.எம்.சி. வருகிற வழியிலேயே ஆற்றிலே உறிஞ்சப்பட்டு விடும்; மீதி 3 டி.எம்.சி. மேட்டூருக்கு வந்து கடைசியிலே நான் கடைமடையிலே நிறுத்துகிறபோது தண்ணீர் ஒருசொட்டுத்தான் போய்ச் சேரும்; நிலைமையைக் கொஞ்சம் பாருங்கள் என்று சொன்னேன். எதற்கும் உங்கள் முதலமைச்சரை நீங்கள் கடிதம் எழுதச் சொல்லுங்கள் என்று சொன்னார். அவரைக் கேட்டேன் என்று சொன்னேன். இருக்கட்டும் எழுத்து மூலமாக என்று அவர் சொன்னவுடன் இங்கே வந்து முதலமைச்சரிடத்திலே சொன்னேன்.

முதலைமைச்சர் அவர்கள், 19 ஆம் தேதி மாண்புமிகு பங்காரப்பா அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். தமிழ்நாடு மின்சாரம் வழங்குவதை கர்நாடகம் நீர் வழங்குவதோடு சம்பந்தப்படுத்தக்கூடாது என்பதை தெளிவுப்படுத்தி மனிதாபிமான அடிப்படையிலேயும் மற்றும் இரு மாநில நல்லுறவின் அடிப்படையிலேயும் வாடும் பயிர்களைக் காக்க உடனடியாக 15 டி. எம். சி. நீரை அளிக்க வேண்டுமென்றும், கர்நாடகத்தின் உடனடி மின்சாரத் தேவைக்கு தமிழக அரசு எந்த அளவுக்கு மின்சாரம் அளித்து உதவ முடியும் என்பதைப்பற்றி இரு மாநிலச் செயலாளர்களும் கூடிப் பேசி தீர்மானித்த பின்னர் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தமிழக முதல்வர் அவர்கள் 19 ஆம் தேதி கர்நாடக முதல்வருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். நாம் இன்னும் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதற்கிடையிலே 18, 19 தேதிகளில் அந்தப் பகுதியிலே வானம் தூறி இருக்கிறது. அது உயிரையே காக்கும் என்று சொல்ல மாட்டேன். வறண்டு போன நாக்கை நனைத்திருக்கிறது. இந்தத் தூறல் என்றுதான் நான் சொல்வேன். மீதி இருக்கும் பயிர்களுக்கு இந்த மாதம் இறுதிவரையிலே நாம் தண்ணீர் கொடுத்தாக வேண்டும். மேட்டூரைப் பொறுத்த வரையில் 2 டி.எம்.சி. கூட இல்லாத அளவுக்கு வறண்டு போயிருக்கிறது. இன்றைக்கு 1000 கியூ-செக்ஸ் இருக்கும் நிலைமை வந்திருக்கிறது. எனவே நிச்சயமாக இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய இந்தக் கோரிக்கைகள், இன்று காலை இந்துப் பத்திரிகையிலே கூட வந்திருக்கிற செய்திகள்.

இந்த மன்றத்திலே நான் தந்து இருக்கிற இந்த விளக்கம் இந்த மன்றத்தின் சார்பாகவும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய சார்பாகவும், நம்முடைய கர்நாடக முதலமைச்சருக்கு இந்த மன்றத்திலிருந்து விடுக்கிற வேண்டு

[திரு. துரைமுருகன்] [1991 சனவரி 22

கோள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியிருக்கிற கடிதம், இவற்றுக்கும் மேலாக பிரதமர் அவர்கள் தெரிவித்திருக்கிற அந்த யோசனை, இவை அனைத்தையும் ஏற்று கர்நாடகத்தின் மனம் இளகும் என்று நான் கருதுகிறேன். எனவே, நல்ல செய்தி கர்நாடகத்திலிருந்து வருமென்று எதிர்பார்க்கிறேன் என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**10.55 மணி**

### 3. அறிக்கை அளித்தல்.

### அரசு உறுதிமொழிக் குழு.

**திரு. கு. ரவி அருணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் ஆறாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஈ) எந்தக் கட்சியையும் சாராதவர்கள் என்று சில உறுப்பினர்கள் குறித்து பேரவைத் தலைவர் 21—1—1991 ஆம் நாளன்று அளித்த தீர்ப்புப்பற்றி—தொடர்ச்சி.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் 1.15 மணிக்கு அறைக்கு வரச் சொல்லியிருக்கிறீர்கள். 'அன்-அட்டாச்ட்' மெம்பர்ஸ் என்கிற பெயரிலே நாங்கள் இங்கு பணியாற்ற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்குமேல் வேறெதுவும் வேண்டாம். (குறுக்கீடு) இல்லை, இல்லை; வெளி நடப்புச் செய்யப்போகிறீர்களா? சொல்லுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** 'அன்-அட்டாச்ட் மெம் பர்ஸ்' என்கிற பெயரிலே நாங்கள் இங்கே பணியாற்ற முடியாது. எங்களை அ.இ.அ.தி.மு.க. என்றுதான் அறிவிக்க வேண்டுமென்று கேட்டு அதை வலியுறுத்தி நாங்கள் வெளி நடப்புச் செய்கிறோம்.

**(திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. கே. கே. எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் மற்றும் திரு. எஸ். டி. உகம்சந்த் ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்.)**



1991 சனவரி 22]

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மணிக்கு எங்களை வரச்சொல்லி. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெளிநடப்புச் செய்வதாக அவர்கள் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். அதிலே என்ன உங்களுக்கு ஆராய்ச்சி? (குறுக்கீடு) உட்காருங்கள். இதையெல்லாம் நீங்கள் கேட்கக் கூடாது. அவசியமா, இல்லையா என்பதை நீங்கள் முடிவு செய்யக்கூடாது. இது என்ன விளையாட்டு?

### 4. சட்ட முன்வடிவுகள்—அறிமுகம் செய்தல்.

### (அ) வேளாண் விளை பொருள் சந்தைகள் சார்ந்த சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் சார்ந்த சட்டங்கள் (திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

**Thiru M. SUNDARADAS .** Sir, I oppose the Bill at the introduction stage itself.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி.

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் சார்ந்த சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

[1991 சனவரி 22

(ஆ) வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1991.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ). டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1991 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழகம் என்ற அந்தப் பெயரை மாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் ஒரு தவறான நோக்கத்தோடு . . . . .(மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவ்வளவு தான்; ஏன் அதற்கு மேலே போகிறீர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க. கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு திரு. இராதா அவர்கள் இங்கே சொல்லும்போது, எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தினுடைய பெயரை மாற்ற வேண்டும் என்பதற்காக இந்தத் திருத்தம் வருவதாகச் சொல்கிறார். பத்திரிகையிலே வரும்போது, ஏதோ குறுகிய நோக்கத்தோடு, பெயர்களை





மாற்ற வேண்டுமென்று ஒரு சாதாரண மனப்பான்மையோடு இந்த அரசு நடந்து கொள்வதாக யாராவது தவறாகக் கருதக்கூடும். அந்தப் பெயரையே மாற்றுவதாக இல்லை. —எப்படி ஜி.டி. நாயுடு பெயர்—தமிழ்நாடு ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக கழகம் என்று பெயர் சூட்டப் பட்டதோ, அதுபோலத்தான் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் என்றும் பெயர் சூட்டப்படுகிறது.

ஏற்கெனவே மதுரையில் இருக்கின்ற பல்கலைக் கழகத்திற்கு "மதுரை காமராஜர் பல்கலைக் கழகம்" என்று முன்பு மதுரை என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. எனவே டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் என்ற பெயர் நிச்சயமாக மாற்றப்படவில்லை, மாற்றப்படமாட்டாது.

11-00 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாகவே உறுப்பினர்கள் ஆரம்ப நிலையில் எதிர்க்கிறேன் என்பதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். உள்ளே போனால் வாதத்தில் ஆரம்பித்து பின்னர் பிரச்சினைகள் எல்லாம் வரும். ஆகவே எல்லோரும் மரபுகளைப் பின்பற்ற வேண்டும். எதற்கெடுத்தாலும் சொற்பொழிவு ஆற்றினால் பிறகு வரம்பே இருக்க முடியாது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"1991 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. இரண்டாம் துணை நிதிநிலை அறிக்கை, 1990-91 அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990—91ஆம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளைவிளக்கிக் கூறும் விரிவான அறிக்கை

இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடு மொத்தம் ரூ. 74.94 கோடி நிதியொதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில், ரூ. 69.17 கோடி வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூ. 5.77கோடி மூலதன மற்றும் கடன் கணக்குகளிலும் அடங்கும். இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டப்பணிகள் குறித்து சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

2. நீலகிரி மாவட்டத்தில் ஒரு பகுதியில், 1990 அக்டோபரில் இதற்கு முன் இருந்திராத அளவிற்குப் பெருமழை பெய்ததன் காரணமாக, அங்குள்ள சாலைகள். பள்ளிக் கட்டிடங்கள், நீர் வழங்கு ஏற்பாட்டமைப்புகள், மின் இணைப்புகள் முதலியவற்றிற்குப் பெரும் சேதம் ஏற்பட்டது. இம்மாவட்டத்தில் நிவாரணப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன. இதற்காக ரூ. 80 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இத்துடன், எட்டு மாவட்டங்களில் வெள்ளத்தால் சேதமுற்ற ஏரிகளைப் பழுது பார்ப்பதற்கான 118 பணிகளை மேற்கொள்ள ரூ.49.85 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. இத்தொகை ''கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு'' என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

3. மத்திய அரசு, அதன் அலுவலர்களுக்கு ஊதியக் கொடை (Bonus) வழங்குவதைக் கருத்தில் கொண்டு, இவ்வரசு, இந்த ஆண்டு மாநில அரசு அலுவலர்களுக்கு ஊதியக் கொடை(Bonus) வழங்கியுள்ளது. இதற்காக, ''கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான செலவு அந்தந்த கோரிக்கைகளின் கீழ் செய்யப்படும். தேவையான கூடுதல் தொகை, இறுதித் துணை மதிப்பீடுகளில் அவைமுன் ஒப்புதலுக்கு வைக்கப்படும்.

4. குடும்ப பாதுகாப்புத் திட்டம், தமிழக அரசின் சத்துணவுத் திட்டத்தில் பணி ஆற்றக்கூடிய அனைத்து அலுவலர்கள் மற்றும் தொகுப்பூதியம் பெறக்கூடிய இதர அலுவலர்கள் ஆக மொத்தம் 2.34 இலட்சம் அலுவலர்களுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளது. இதற்காக இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு வழங்க ரூ. 3.2 கோடி ''கோரிக்கை எண் 43—பல்வகை'' என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

5. கரும்பு விலையை மத்திய அரசு டன் ஒன்றுக்கு ரூ. 230 என்று நிர்ணயித்தபோதிலும் மாநில அரசு இதைவிட டன் ஒன்றுக்கு ரூ. 50 அதிகமாக இருக்க வேண்டும் என்று கொள்கை முடிவு எடுத்ததோடு, கரும்பு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் டன் ஒன்றுக்கு ரூ. 10 ஊக்கத் தொகையாக வழங்க அனுமதித்து மொத்தமாக டன் ஒன்றுக்கு ரூ. 290 என்று எப்பொழுதுமே இல்லாத அளவிற்கு கரும்பு விலையை உயர்த்தி வழங்கியுள்ளது. டன் ஒன்றுக்கு ரூ. 10 என்ற ஊக்கத்தொகை





இந்த விளைச்சல் பருவத்திற்கு வழங்கப்படும். இந்த ஊக்கத் தொகையான ரூ. 6 கோடி ''கோரிக்கை எண் 24—தொழில்கள்'' என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. தஞ்சாவூர் மாவட்டத்தல் கல்லணைக் கால்வாய் பகுதியில் ஏரிகளைச் சீரமைக்கவும், குழாய்க் கிணறுகளை அமைக்கவும் புதிய திட்டமொன்றுக்கு மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு ரூ. 55 இலட்சம் ''கோரிக்கை எண். 36—பாசனம்'' என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. தொழில் வளர்ச்சிக்கான ஊக்கத் தொகைகளைத் தாமதமின்றி வழங்குவதில் இந்த அரசு எப்பொழுதும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. தகுதியுள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு மூலதன உதவித் தொகையாக ரூ. 3 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் தொழில் முனைவோர் மின் உற்பத்தி எந்திரங்களை வாங்குவதற்கு உதவித் தொகை வழங்குவதற்காக அரசு ரூ. 1 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை முறையே ''கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள்'', கோரிக்கை எண். 24—தொழில்கள்'' என்ற தலைப்புகளின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

8. ஊராட்சி நிர்வாகத்தை சீரமைக்கும் நோக்கத்துடன் ஊராட்சி உதவியாளர் பதவிகளைஇவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. முன்னாள் கிராம அதிகாரிகளும் பணியில் மீண்டும் சேர்க்கப்பட்டு ஊராட்சி உதவியாளர்களாக பதவியேற்றுள்ளார்கள். இதற்காக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 0.77 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை''கோரிக்கை எண். 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும்'' என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

9. குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காக புதிய மின் இணைப்புக்கான கட்டணத் தொகையை உள்ளாட்சி மன்றங்கள் செலுத்த இயலாமல் தாமதம் ஏற்படுகின்றது. குடிநீர்த் திட்டங்களுக்கு விரைவில் மின் இணைப்புகள் கொடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் மாநில அரசு ரூ. 10 கோடி தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு வழங்குவதற்காக அனுமதித்துள்ளது. ''கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல் ''என்ற தலைப்பின் கீழ் தேவையான நிதியொதுக்கம் ரூ. 5 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

10. துணை மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களில் முக்கியமானவற்றைப்பற்றி நான் இதுவரை எடுத்துக் கூறினேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புகளில் இந்த இனங்களுக்கான விவரங்களைக் காணலாம். 1990—91 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளை இம்மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

வணக்கம்.

### 6. அறிவிப்பு.

### இரண்டாம் துணை நிதிநிலை அறிக்கை, 1990-91 — வெட்டுத்தீர்மானங்கள் அளிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990—91 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளில் கண்டுள்ள மானியக் கோரிக்கை மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் மாண்புமிகு உறுப்பினர்கள், பேரவையில் 190-வது விதிக்குட்பட்டு 23, சனவரி 1991 புதன் கிழமை மாலை 3.00 மணிக்குள், பேரவைச் செயலகத்தில் கொடுக்கவேண்டும்.

11-05 மணி.

### 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக ஓர் அறிவிப்பு. நேற்று இத்தீர்மானத்தில் 2 பேர்தான் பேசியிருக்கிறார்கள். இதேவேகத்தில் போனால் அநேகமாக இன்றோடு உறுப்பினர்கள் முடித்து, நாளைக்கு முதல்வரிசைக்கு வரநேரிடும். பேசுகின்ற வாய்ப்பை அறவே இழந்துவிடுவீர்கள் என்பதை நான் சொல்லித் தெரிந்துகொள்ளவேண்டியதில்லை, நீங்களே தெரிந்துகொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். பேசுகின்ற ஒவ்வொரு உறுப்பினரும் அவர்களுக்கு அளித்துள்ள 15 மணித்துளிகளிலோ அல்லது 10மணித்துளிகளிலோ அதற்குள் தங்களது உரையை முடிப்பதற்குக் கண்டிப்பாக முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். மற்ற உறுப்பினர்கள் அருள் கூர்ந்து, மிகவும் கடுமையான குற்றச் சாட்டு என்பதால் குறுக்கிட்டுத்தான் ஆகவேண்டுமென்ற இன்றியமையாமை ஏற்படுகிற சூழ்நிலை தவிர, எல்லா இடத்திலும் குறுக்கிட்டுத்தான ஆகவேண்டுமென்று வற்புறுத்தி, தாங்களே வலிந்து வற்புறுத்திக்கொண்டு குறுக்கிடுவதைத் தவிர்க்கவேண்டும். அப்படியில்லாவிட்டால், பின்னால் 4—5 பேர்தான் பேசினார்கள், மற்றவர்களுக்கு பேச வாய்ப்பு இல்லை என்ற சூழல் ஏற்பட்டால் அதற்குப் பேரவைத் தலைவர் நிச்சயமாகப் பொறுப்பாக மாட்டார், நீங்களே அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டியிருக்கும் என்பதை மென்மையாகவும் அதே நேரத்தில் அழுத்தமாகவும் தெரிவித்துக்கொண்டு, இப்போது திரு. க. அர்ச்சுனன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் எனக்குப் பேசுகின்ற வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர்



உரையைத் தயாரிப்பதற்கு இந்த அரசுக்குத் தகுதியில்லை என்
பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த
ஆட்சிக்கு இந்த அவையில் மெஜாரிட்டி பலம் இருக்கலாம்.
ஆனால் மக்கள் மன்றத்தைப் பொறுத்த வரையில் இது
மைனாரிட்டி அரசு என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்பு
கிறேன். இங்கே தமிழ்நாட்டு மக்களுக்கு இது ஒரு பயனற்ற
அரசு; இந்திய அரசுக்கு இது ஒரு விசுவாசமற்ற அரசு என்பதை
பாரதப் பிரதமரே பாராளுமன்றத்தில் குற்றச்சாட்டாகக் கூறி
யிருப்பதை நாம் எல்லாம் அறிவோம்.

வட மாநிலங்களில் வகுப்புக் கலவரங்கள், தமிழ்நாட்டில்
பூரண அமைதி நிலவுகிறது என்று ஆளுநர் உரையிலே குறிப்பிட்டி
ருக்கிறீர்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, ஜூலை 1989லிருந்து
செப்டம்பர் 1990 வரைக்கும், 14 மாதங்களில் மட்டும் 484
சாதிச் சண்டைகளும், 78 இனக் கலவரங்களும் நடந்துள்ளதாக,
கலெக்டர்கள் மாநாட்டில் தகவல் சொல்லப்பட்டுள்ளது.
அதுமட்டுமின்றி இந்த மோதல்களில் 90 பேர் இறந்திருக்கிறார்
கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுதான் நீங்கள்
பெருமைப்படுகிற அமைதியின் லட்சணம். நீங்கள் ஆண்டி
ருக்கிற இரண்டாண்டு கால அளவில் நடந்திருப்பதைச் சொன்
னால், இரண்டு வருடங்களில் 744 ஜாதிச் சண்டைகளும், 180
இன மோதல்களும் நடந்திருப்பதாகத்தான் நான் குறிப்பிடவேண்
டும். எனவே, இங்கே ஜாதிச் சண்டைகள் இல்லாமல்
அமைதியாகத்தான் இருக்கிறது என்று ஆளுநர் அறிக்கையில்
குறிப்பிடப்பட்டிருப்பவை உண்மைக்குப் புறம்பான செய்திகள்
என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

11–10 மணி

இங்கே தமிழகத்திலே தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பாது
காப்பு இல்லையென்பது அனைவரும் அறிந்த உண்மை. எங்கே
பார்த்தாலும் அவர்கள் மீது தாக்குதல்கள் தொடர்ந்து நடந்து
கொண்டிருக்கின்றன. தாழ்த்தப்பட்டவர்கள் மட்டுமின்றி
ஒரு ஜாதியை இழிவுபடுத்துகிற வகையில், தூண்டுகிற வகையில்
பேசுபவர்களையும் கைது செய்யாமல் உங்களுடைய நிர்வாகம்
விட்டு வைத்ததன் விளைவாக இன்றைக்கு எத்தனை உயிர்பலிகள்
ஏற்பட்டிருக்கின்றன என்பதை நான் சொல்லித் தெரியவேண்டிய
அவசியம் இல்லை. ஆளும் கட்சியின் பரிபூரண ஆதரவு
இருக்கிறது என்ற காரணத்தால் இன்றைக்கு பூணூல்கள்
அறுக்கப்படுவதும், வேதபாடசாலைகளில் புகுந்து அவர்கள்
தாக்கப்படுகிற சம்பவங்களும் தொடர்ந்து நடைபெற்றுக்
கொண்டிருப்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். எங்களுடைய
மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு எந்த அளவிற்குச் சீர்கெட்டிருக்
கிறது என்று சொன்னால் வனச்சரக அதிகாரிகள், விஜிலன்ஸ்
அண்ட் ஆண்டி- கரப்ஷன் விட்னஸ்களைக் கடத்தி கொண்டு

போய் அவர்களை உயிரோடு ஒவ்வொருவராக ஒருவர் முன்னால் இன்னொருவரை பெட்ரோல் ஊற்றி, அடித்துத் துன்புறுத்திக் கொலை செய்த சம்பவங்கள் பற்றி நாமெல்லாம் அறிவோம். ஆகவே, இன்றைக்கு அரசாங்க அதிகாரிகளே சட்டத்தை தங்களுடைய கையிலே எடுத்துக்கொண்டு சமூக விரோதிகளைப் போன்று இப்படிப்பட்ட காரியத்திலே ஈடுபடுகிற நிலைமை இந்த ஆட்சியிலே இருப்பதை ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்கிற வகையிலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

படிக்கிற இடங்களில், அதுவும் பெண்கள் படிக்கிற இடங்களில், தஞ்சாவூர் மெடிக்கல் கல்லூரி, சேலம் மெடிக்கல் கல்லூரியில் அதன் வளாகத்தில் இருக்கிற நர்ஸ் குவார்ட்டர்சில் இருக்கிற பெண்ணை இரவு ஒரு மணிக்கு—அதிலே அரசியல் பின்னணி இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதிலே உள்ளே நுழைய நான் விரும்பவில்லை—அவர்களைக் கொலை செய்கிறார்கள். சேலம் மருத்துவக் கல்லூரியிலே பயிற்சி நர்சைக் கொலை செய்த சம்பவத்திற்குப் போலீஸ் அதிகாரிகளுக்குத் தான் விசாரணை செய்து இன்வெஸ்டிகேட் செய்கிற பவர் இருப்பதாக நான் நினைக்கிறேன். ஆனால் அதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு 'ஒன்மேன் கமிஷனைப்' போட்டு குற்றம் செய்தவர்களைக் காப்பாற்றுகிற வகையில், அந்த 'ஒன் மேன் கமிஷனில்' குற்றவாளி என்று சொல்லப்படுகிற ஒரு நபரை—நீங்கள் வேண்டுமானால் குற்றவாளி என்று ஒருவரை—கைது செய்திருக்கலாம். ஆனால் அதை மக்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. அதை இந்த நேரத்தில் குறிப்பிட வேண்டுமென்றால், இதை உண்மை குற்றவாளி தப்பிப்பதற்காகச் செய்துகொண்டிருக்கிற சூழ்ச்சியாகத்தான் தமிழகமே வருந்தி நினைத்துக் கொண்டிருக்கிறது. அதிலே 'ஒன் மேன் கமிஷன்' என்று சொல்லி ஒரு ரிடையர்ட் ஜட்ஜைப் போட்டு விசாரணை செய்கிற அதிகாரத்தை உருவாக்கி, இன்றைக்கு ஒரு கான்ட்ரடிக்டரி ஸ்டேட்மென்ட்டைப் பெற்று, காவல் துறை பதிவு செய்யக் கூடிய 162 சி. ஆர்.பி.சி. ஸ்டேட்மென்டிற்கும், ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட் பதிவு செய்யக்கூடிய 164 ஸ்டேட்மென்டிற்கும், இந்த ஒன்மேன் கமிஷன் பதிவு செய்யக்கூடிய அந்த ஸ்டேட்மென்டிற்கும் கான்ட்ரடிக்டரி ஸ்டேட்மென்ட்களை விசாரணை என்கிற போர்வையில் உருவாக்கி எதிர் காலத்தில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படுகிறபோது அந்தக் குற்றவாளி தப்பிக்கிற சூழ்ச்சியை, உண்மைக் குற்றவாளிகளைக் காப்பாற்றுகிற சூழ்ச்சியை நீங்கள் செய்திருக்கிறீர்கள் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

தஞ்சாவூர் மெடிக்கல் கல்லூரியில் இறந்த பெண்கூட, எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த பைனல் இயர் எம்.பி.பி.எஸ். ஸ்டுடண்ட், அதிலே அந்தப் பெண் இறந்து விட்டாள், இன்னொரு பெண் இன்னும் கோமா ஸ்டேஜில்





நினைவிழந்து கிடப்பதாகவும், இன்னும் சில பெண்கள் அடிபட்டதாகவும், நகைகள் பறிக்கப்பட்டதாகவும் செய்தி. இது வரையில் குற்றவாளி யார் என்பதைக்கண்டுபிடிக்க முடியவில்லை. தமிழ் நாட்டுப் போலீசினுடைய திறமையைப் பற்றி நான் அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. தமிழ் நாட்டுப் போலீஸ் என்று சொன்னால் ஸ்காட்லேண்ட் யார்ட் போலீசுக்கு அடுத்த ஸ்தானத்திலே இருக்கிற திறமையான போலீஸ். அப்படிப்பட்ட போலீசை இன்றைக்குச் செயலிழக்க வைத்திருக்கிறீர்கள் என்றால் அது உங்களுடைய ஆட்சியினுடைய கோளாறே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதை நான் தெளிவுபடுத்த வேண்டும்.

11-15 மணி.

அடுத்து, எங்கே பார்த்தாலும் வெடி மருந்து விபத்துக்கள் இன்றைக்குப் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. திண்டிவனத்தில் வெடிமருந்து விபத்து, கிருஷ்ணகிரியில் வெடி மருந்து விபத்து; உளுந்தூர்பேட்டையில் வெடிமருந்து விபத்து; இதன் விளைவாக பல்வேறு கட்டிடங்கள் நாசம்; பல்வேறு உயிர்கள் பறிக்கப்பட்டு இருக்கின்றன. காவல்துறையை நீங்கள் கட்டிப்போட்டிருக்கிற காரணத்தால், அதைச் சரியாகப் பயன் படுத்தாத காரணத்தால், இந்த வெடி மருந்து விபத்துக்கள் எல்லாம் இன்றைக்கு நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இத்தனை உயிர்கள் பாழாகக்கூடிய நிலைமைக்குப் போய்க்கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதே நேரத்தில், அதற்குக் காரணகர்த்தாவாக இருப்பவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா என்று சொன்னால், இல்லை. காரணம் இந்த ஆட்சியில், சம்பந்தப்பட்டவர்கள் சிலரோடு தொடர்பு இருக்கிற காரணத்தால், இப்படிப்பட்ட வெடிமருந்து விபத்திற்கு காரணமானவர்கள் மீது, உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

அதே நேரத்தில் அவைகளைப் பற்றிப் பிரசுரிக்கக்கூடிய பத்திரிகைகள், குறிப்பாக தினமலர், தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ், தராசு போன்ற பத்திரிகைகள் மீது தொடர்ந்து தாக்குதல், இப்படிப்பட்ட தாக்குதல் மூலமாக பத்திரிகைகளின் குரல்வளை நசுக்கப்பட்டு இருக்கிறது.

அடுத்து கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஒன்று நடைபெற்றது. இது மாதிரி ஒரு தேர்தல் உண்டா? அதற்குத் தேர்தல் என்று சொல்வதைவிட பேசாமல் அதிகாரிகளை நியமித்திருக்கலாம். நீங்கள் சட்டமன்றத்திலே சொன்னீர்கள். பெருமையாகக்கூட இருந்தது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு 18 சதவீதம், தாய்மார்களுக்கு 30 சதவீதம். நான் கேட்க விரும்புகிறேன்.

அதைவிட அவர்களுக்குத் தனித் தொகுதியாக உருவாக்கியிருந்தால், அவர்களுக்கு உண்டான பிரதிநிதித்துவம் தேர்தல் மூலமாகவே கிடைத்திருக்கும். ஆனால் ஒட்டுமொத்தமாக வைத்ததன் காரணமாக, தாழ்த்தப்பட்டவர்கள் அங்கே வெற்றி பெற முடியவில்லை. பெண்களும் வெற்றி பெற முடியவில்லை.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தைச் சட்டமன்றத்திலே கொண்டு வந்தபோது, அப்போது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள்—ஏகமனதாக நிறைவேற்றி—எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை, இந்த 'ரெப்ரசன்டேசன்' முறையில் நீங்கள் அவர்களுக்கு வழங்கலாம் என்று ஏற்றுக்கொண்ட பின்னால், திரு. அர்ச்சுனன் அவர்கள் இப்போது அந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கு என்ன காரணம்? விளக்கம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, விவாதம் வருகிற நேரத்திலே, அந்தக் கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டு இருக்கின்றன. எங்கள் தரப்பிலேகூட அந்தக் கருத்துக்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. ஆனால் நடைமுறையில் இன்றைக்கு எப்படி இருக்கிறது? அதில் சிக்கல் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்கிறோமே தவிர, இது விவாதத்திற்குரிய பிரச்சினை அல்ல.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, அந்தக் கருத்தை மாண்புமிகு முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அப்போது எடுத்துத் தெரிவிக்கவில்லை என்பதை இப்போது தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பில் அதை நாங்கள் தெரிவிக்கவேண்டும் என்ற அடிப்படையில் அந்தக் கருத்துக்களை வலியுறுத்தி, அன்றைக்குப் பேசுவதற்கு யாருக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறதோ, அவர்களை வைத்துப் பேசி இருக்கிறோம். நான் சபைக் குறிப்பிலிருந்து வேண்டுமானால் அந்த நடவடிக்கைகளைக் காட்டுகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கைக் குறிப்பை, அவர்களே எடுத்துப்பார்த்துவிட்டு, சபைக்கு விளக்கம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பின்னாலே வைத்துக் கொள்ளலாம்.

திரு. க. அர்ச்சுனன் : அவர்களுக்கு தனித் தொகுதியை உருவாக்கியிருந்தால், தகுதி பெற்றவர்கள் கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலே பங்கேற்று அவர்கள் வந்திருக்க முடியும், அந்த வாய்ப்பை அவர்களுக்கு ........(குறுக்கீடு).

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், இதுவரையில் 43 ஆண்டுகாலம் கிடைக்காத அளவிற்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு வாய்ப்பை வழங்கி பல்வேறு மாவட்டங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் கூட்டுறவுச் சங்கத் தலைவராக வந்திருப்பது டாக்டர் கலைஞர் ஆட்சியில்தான் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. க. அர்ச்சுனன் : ரொம்ப நன்றி. அதைத்தான் எங்கள் குழுவின் தலைவரும் வரவேற்றார்கள். அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் குறுக்கிடவில்லை. உங்களுக்கு எடுத்துக் காட்டுகிறார்.

திரு. க. அர்ச்சுனன் : அதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து இருந்தால்தானே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நானும் ஒத்துக் கொண்டேன்.

திரு. க. அர்ச்சுனன் : தனித் தொகுதியாக உருவாக்கி
யிருந்தால், தகுதி பெற்றவர்கள் அங்கே வந்திருக்க முடியும்.
அதன் விளைவாக என்ன ஏற்பட்டது என்று சொன்னால்
(குறுக்கீடு) நான் இன்னும் சப்ஜெட்டுக்கே வரவில்லை, இதிலே
என்ன விஷயம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தயவுசெய்து
மாண்புமிகு உறுப்பினர் அர்ச்சுனன் அவர்கள் இந்தச் சட்டத்
தைச் சரியாகப் படித்துவிட்டுப் பேசவேண்டும். சபைக்கு
சரியான தகவலைத் தரவேண்டும். தேர்தலிலே போட்டியிட
லாம். தேர்தலிலே அவர்களுக்குப் போட்டியிடுவதற்கு வாய்ப்பு
உண்டு. சட்டப்படி, போட்டியிட்டு, தேர்ந்தெடுக்கப்படாவிட்
டால், எவ்வளவு இடங்கள் காலி இருக்கின்றனவோ, அந்த
அளவிற்கு நியமிக்கலாம். எனவே சட்டத்தை ஒழுங்காகப்
புரிந்து கொண்டு, சபைக்கு விவரங்களைத் தெரிவித்தால் நலமாக
இருக்கும்.

திரு. க. அர்ச்சுனன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்று சொன்னால், பொதுத் தொகுதியிலே ஒட்டு மொத்தமாக 8 பேர்கள் போட்டி போடுகிறார்கள் என்று சொன்னால், அதிலே பெண்களும், தாழ்த்தப்பட்டவர்களும், மற்றவர்களோடு போட்டியிட்டு வெற்றிபெற முடியவில்லை. அதன் விளைவாக என்ன ஏற்படுகிறது என்றால்..........

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, சட்டத்தைப் பற்றிப் பேசும்போது தீர்க்கமாகப் புரிந்து கொண்டு பேசவேண்டும். இந்தச் சட்டம் உங்களுடைய ஆட்சியிலே கொண்டுவரப்பட்ட சட்டம். அந்தச் சட்டத்தைத் தான் மீண்டும் நாங்கள் இந்த ஆட்சியிலே கொண்டு வந்து, அதிலே தேர்தல் நடைபெற்றிருக்கிறது. தெளிவான விளக்கம் இருக்கிறது. படித்துவிட்டுப் பேசினால், விளக்கம் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன் : அடுத்து கள்ளச் சாராயம் இன்றைக்கு ஆறாக ஓடிக்கொண்டிருக்கிற நிலைமையை நான் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. தஞ்சாவூர் கலெக்டரே தன்னுடைய பிரஸ் ஸ்டேட்மெண்டில் சொல்கிறார். பேராவூரணியிலே கள்ளச் சாராயம் ஆறாக ஓடுவதாகவும், பேராவூரணியிலே மட்டுமல்ல, தஞ்சாவூர் மாவட்டம் முழுவதிலும் இந்தக் கள்ளச் சாராயம் இருக்கிறது. நடவடிக்கை எடுக்கிறோம் என்று கலெக்டரே பிரஸ் ஸ்டேட்மெண்டிலே சொல்கிறார். ஆக இந்த அளவிற்கு இன்றைக்குக் கள்ளச் சாராயம் பெருகியிருக்கிறது.

11-20 மணி.

இன்னும் சொல்லப்போனால் அவிநாசி வட்டம், நடுவஞ்சேரி பஞ்சாயத்து தி.மு.க. இளைஞர் அணித் தோழர் கருப்பசாமி என்பவர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மட்டுமின்றி தமிழக முதல்வர் அவர்களுக்கும் கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் எந்த அளவிற்கு வருத்தப்பட்டிருக்கிறார் என்று சொன்னால், நான் திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் களிலே இரவு பகலாக உழைத்த உண்மையான தொண்டர். இன்றைக்கு அந்தப் பகுதியிலே என்னால் நடமாட முடியாத அளவிற்கு கள்ளச் சாராயம் ஆறாக பெருகிக் கொண்டிருப்பதை தடுத்து நிறுத்தவேண்டுமென்று கேட்டிருக்கிறார். இன்றைக்கு நான் சொன்னால் அதைக் குற்றச்சாட்டாகக் கருதக்கூடும். இன்றைக்கு உங்களுடைய ஆட்சியிலே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரும், உங்களுடைய கட்சியின் நிர்வாகிகளுமே கள்ளச் சாராயத்தைப்பற்றி ஆறாகப் போய்க்கொண்டிருக்கிற நிலைமைகளை எடுத்துரைப்பதை நான் தெளிவுப்படுத்த விரும்பு கிறேன். (குறுக்கீடு).



மாண்புமிகு பேரவைத் தலைவர் : 3 மணித் துளிகள். 12 மணித்துளிகள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இன்றைக்கு நான் கண்டிப்பாக இருப்பேன்.

திரு. க. அர்ச்சுனன் : சேலம் மாவட்டத்தில் ஒரே நாளில் ஒரே இரவில் 4 இடங்களில் கொள்ளை நடைபெற்றிருக்கிறது. கொங்கணாபுரம், குமாரபாளையம், சங்ககிரி, திருச்செங்கோடு ஆகிய 4 இடங்களில் ஒரே நேரத்தில், ஒரே இரவில் கொள்ளை நடைபெற்று, அந்தக் கொள்ளையில் 103 பவுன் நகைகளும், பல இலட்சக்கணக்கான மதிப்புடைய பொருள்களும் களவு போயிருக்கின்றன. அதிலே பல பேர் துப்பாக்கிகளாலும், கத்திகளாலும் காயம்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள், இந்தச் சம்பவத்தையொட்டி, விசாரணை நடைபெற்று இதுவரைக்கும் யாரும் கைது செய்யப்படவில்லை. இந்தத் திறமையான போலீஸ் இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தது இன்றைக்கு கான்கிரீட் வீடுகளைப் பற்றி நம்முடைய உறுப்பினர் சின்னசாமி அவர்கள் பேசுகின்ற போது பெருமையாகப் பேசிக்கொண்டார்கள். இன்றைக்கு அந்த கான்கிரீட் வீடுகளைப் பற்றி, ரத யாத்திரைக்கு வேண்டு மானால், அந்தத் திறப்பு விழாவிற்கு அதைப் பற்றி பெருமை யாகச் சொல்லிக்கொள்ளலாமேயொழிய, இன்னும் அவைகளில் பாதி முடிக்கப்படாத நிலையிலே திறக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அந்த வீடுகள் எல்லாம் ஒழுகக் கூடிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் குறிப்பிட விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவு செய்து அப்படிப்பட்ட புகார்களை அப்போதைக்கப்போது தெரிவித்தால் நலமாக இருக்கும். இப்பவும் ஒன்றுமில்லை. அதை என்னிடத்தில் எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்து, அது உண்மையாக இருந்தால், விதிகளின்படி தக்க நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கான்கிரீட் வீடுகள் மத்திய அரசாங்கத்தினுடைய மானியமும், மாநில அரசாங்கத்தினுடைய மானியமும் சேர்த்துக் கட்டப்படுவன. 1989—90 ஆம் ஆண்டுகளில்தான் 2 ஆண்டு காலமாகத்தான் கான்கிரீட் வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அதற்கு முன்பு ரூ. 6,800-ல் ஓட்டு வீடுகள், 3 ஆண்டுக்காலம் கட்டப்பட்டன. வேண்டுமானால் இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தக் கூடியவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டால் பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அனுமதித்தால் இந்த மன்றத்தில்

[திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்] [1991 சனவரி 22

இருக்கக் கூடிய உறுப்பினர்களிடையே ஒரு விசாரணைக் குழு போட்டு, கடந்த ஆட்சியிலே கட்டப்பட்ட கட்டிடங்களிலே எவ்வளவு ஊழல் நடைபெற்றது, இப்போது கட்டியிருக்கிற வீடுகள் எல்லாம் எப்படித் தரமானவை என்பதையும் பார்த்து, ஒரு அறிக்கை பெற்று முடிவிற்கு வரலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு நல்ல வழிமுறையை ஏற்படுத்தியிருக்கிறார். நானும் அவர் . வழியைப் பின்பற்றி அந்தக் காலத்தில் நடைபெற்ற ஊழலையும் இப்போது கட்டப்பட்டிருக்கிற வீடுகளிலே எவ்வளவு பெரிய ஊழல் நடைபெற்றிருக்கிறது என்பதையும் சேர்த்து விசாரணை வைத்து, இந்த விசாரணையின் மூலம் உரியவர்களுக்குத் தண்டனை தரவேண்டும். அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த வழிகளில் ஊழல் நடந்திருக்கிறது எங்கே நடந்திருக்கிறது என்பதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் இப்போதே எழுதிக் கொடுத்தால் நாளைக்கே விசாரணைக்குத் தயார்.

திரு. எஸ். ஆர். இராதா : கட்டப்பட்டிருக்கிற வீடுகள் அத்தனையிலேயும் 40 சதவீதத்திற்கு மேல் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று கேள்வி நேரத்திலேயே சொன்னார்கள்.

11-25 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை வேண்டாம். அவர்களே எழுதிக் கொடுக்கச் சொல்லி விட்டார்கள். அதனால் எழுதிக் கொடுத்து விடுங்கள். திரு. அர்ச்சுனன் இரண்டு மணித்துளிகள். மணித்துளிகளை அதிகமாகக் கூட்டிக் கொடுத்துக்கொண்டே இருக்கிறேன். அதையும் கவனித்துக் கொள்ளுங்கள்.

திரு. க. அர்ச்சுனன் : ஜனநாயகத்திலே கருப்புக் கொடி காண்பிப்பது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நடைமுறை. ஆனால் இன்றைக்கு கருப்புக் கொடி காண்பிப்பவர்களையெல்லாம் கைது செய்ததோடு மட்டும் அல்லாமல் செருப்பால் அடிக்கிற நிலைமைக்குப் போய்க் கொண்டு இருந்தால் ஜனநாயகமே வீணாகிவிடும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அடுத்து இலவச மின்சாரம் என்று அறிவித்திருக்கிறீர்கள். பெருமைப்படக்கூடிய விஷயமாக இருந்தாலும கூட கம்பியிலிருந்து நட்டு முதற்கொண்டு வாங்கிக் கொடுத்தாக வேண்டும். இன்னும் சொல்லப்போனால் அந்த மின்சார வாரியத்திலே பணியாற்றக்கூடிய கடைசி ஊழியர் இருக்கிறாரே



1991 சனவரி 22] [திரு. க. அர்ச்சுனன்]

அவருக்கு வேட்டி சட்டை தோய்த்துக் கொடுக்கக்கூடிய நிலைமை கூட விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாக இன்றைக்கு இந்த இலவச மின்சாரத்தினால் பல மடங்கு விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன வரதராசன் ''Point of order'' கோருகிறீர்களா?

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளைப் பற்றி அவர்களுடைய குறைபாடுகளைச் சொல்வதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் அங்கே போகக்கூடிய மின் ஊழியர்கள் அங்கே இருக்கிற விவசாயிகளைத் தங்களுடைய வேட்டி, சட்டைகளை தோய்க்க சொல்லுகிறார்கள் என்கிற குற்றச்சாட்டுகளை உறுப்பினர் அவர்கள் தவிர்க்க வேண்டும். அது ஒழுங்கான நடைமுறை ஆகாது, என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இழிவு படுத்துவதுபோல் இல்லையா திரு. அர்ச்சுனன் ? எப்படிச் சொல்கிறீர்கள் ?

திரு. க. அர்ச்சுனன் : இழிவு படுத்துவதற்காக நான் சொல்லவில்லை, அந்த ஊழியர்கள் விவசாயிகளை வாட்டி வதைக்கிறார்கள் என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால் மின்சார ஊழியர்கள் இந்த மாதிரி எல்லாம் செய்கிறார்கள் என்று சொல்லுகிறீர்களா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை அளித்திருப்பது கலைஞர் அவர்களுடைய அரசு தான். நாடு கலைஞரை வாழ்த்துகிறது, விவசாயப் பெருமக்கள் வாழ்த்துகிறார்கள். வயிறு எரிகின்றவர்கள், புழுதி வாரித் தூற்றுகிறார்கள், அதைப்போய்ப் பெரிது படுத்த வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. க. அர்ச்சுனன் : இலவச மின்சாரம் என்ற கொள்கையின் அடிப்படையில் இலவசமாகவே முந்தைய ஆட்சியில் செய்ததைப் போல இலவசக் கம்பம், அரசாங்கத்தினுடைய செலவிலேயே இலவசக் கம்பம், கம்பி, போல்ட், நட்டு போன்றவற்றை கொடுத்து, அவர்களுக்கு மின் இணைப்பு கொடுத்திருப்பீர்களேயானால் ஆட்சேபிப்பதற்கு இல்லை. ஆனால் இன்றைக்கு மின் இணைப்பும் கிடைப்பது இல்லை. அப்படிக் கிடைப்பதாக இருந்தால் அத்தனைப் பொருள்களையும் விவசாயிகளே வாங்கிக் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிற காரணத்தினாலே, ஒன்றுக்கு மூன்றாக அதன் விலைகளில் உயர்வு ஏற்பட்டு,

அந்த மின்சார வாரிய அதிகாரிகள் சொல்லுகிற இடத்திலே தான் அந்தக் கம்பங்களையும், கம்பிகளையும் வாங்குகிற சூழ் நிலை உருவாகியிருக்கிறது.......

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, எங்கே கம்பம் வாங்கினார்கள்? எங்கே கம்பி வாங்கினார்கள். (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கீடுகள், கத்துவது எல்லாம் கூடாது. அமைச்சர் பேசுகிறார். அர்ச்சுனன் பதில் சொல்லிவிடுவார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : விவசாயிகளுக்கு 40 ஆயிரம் மின்சார இணைப்புகளைத் தருவதற்காக டார்கெட் கொடுத்து இருக்கிறோம், பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற் காக. இந்த 40 ஆயிரம் மின் இணைப்புகளில் யார் கிட்டேயும் கம்பம் வாங்க வேண்டும், கம்பி வாங்க வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. ஆகையினாலே மின்சார இணைப்புக்குக் கம்பி வாங்கச் சொன்னார்கள், கம்பம் வாங்கச் சொன்னார்கள் என்று சொல்வது இருக்கிறதே, அது எங்கே எப்போது நடைபெற்றது என்பதைச் சொன்னால் நான் நடவடிக்கை எடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அர்ச்சுனன் அவர் களுக்கு இன்னும் ஒரு மணித்துளி, வாக்கியத்தை முடித்துவிட வேண்டும்.

திரு. க. அர்ச்சுனன் ; நீங்கள் விவசாயிகளுக்கு மின் இணைப்பே கொடுப்பது இல்லை என்பது வேறு விஷயம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்று சொன் னால் நானா?

திரு. க. அர்ச்சுனன் : வீட்டு சர்வீஸ்களுக்கு எல்லாப் பொருள்களையும் வாங்கிக் கொடுத்து கொண்டுதான் இருக்கிறார் கள்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாக்கியத்தை முடித்து விடுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஒரு முடிவோடுதான் வந்திருக்கிறார்கள். அவர் முதலில் விவசாயிகளுக்கு என்று சொன்னார்; விளக்கம் சொன்ன உடனே இல்லை இல்லை வீட்டுக்கு என்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அர்ச்சுனன் அவர் களுக்கு இன்னும் ஒரு மணித்துளிதான், வாக்கியத்தை முடித்துவிட வேண்டும்.



திரு. க. அர்ச்சுனன் : சேலம், தர்மபுரி மாவட்டத் திலே மற்ற மாவட்டங்களில் வெள்ளப் பிரச்சினையால் பாதிக் கப்பட்டிருக்கிற நேரத்தில், இந்த இரண்டு மாவட்டங்களில் 60 சதவீத விழுக்காடு மழை குறைவு. அதன் விளைவாக கடுமையான வறட்சி, ஆகவே, அங்கே குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு வழி செய்ய வேண்டும். விவசாயிகள் விவசாயம் செய்வது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். முதலில் குடிக்கத் தண்ணீர் இல்லை. அதை இந்த அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காடம்பாறை மின் உற்பத்தி நிலையத்திலே ஒரு விபத்து ஏற்பட்டது. அதன் நஷ்டம் எவ்வளவு என்று தெரியவில்லை. எனக்குக் கிடைத்த தகவலின் படி, இன்சூரன்ஸ் செய்ததை ரினியூவல் செய்யாததன் காரண மாக, அனைத்து நட்டத்தையும் இன்சூரன்ஸ் கம்பெனியிலி ருந்து நிவாரணமாகப் பெற முடியாது என்ற தகவல் கிடைத்திருக் கிறது. எனவே அது அரசாங்கத்தினுடைய கவனக் குறைவு என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன் (மணியடிக்கப் பெற்றது).

11-30 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாக்கியத்தை முடித்து விடலாம். முடிக்கவில்லையென்றால் அடுத்தவரை அழைத்து விடுவேன். புதுச்செய்திக்குப் போக வேண்டாம். ஏற்கெனவே நிறைய நேரம் கொடுத்துவிட்டேன். 11-09 மணித்துளிக்குத் தொடங்கி 21 மணித்துளி ஆகிவிட்டது. வாய்ப்புக்கொடுத்துக் கொண்டே வருகிறேன். காலையிலேயே சொல்லிவிட்டேன்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) சோதனைகளைச் சாதனைகளாக மாற்றக் கூடிய ஆற்றல் படைத்த தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலே இயங்குகின்ற இந்த அரசினுடைய கொள்கைப் பிரகடனமாய்........ (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அர்ச்சுனன் இனிமேலும் நின்றுகொண்டிருந்தால் நன்றாக இருக்காது. இரண்டு, மூன்று முறைகள் எச்சரிக்கை செய்து விட்டேன். உட்காருங்கள். அவையினுடைய அலுவலில் குறுக்கிடுவது மாதிரி ஆகிறது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மேதகு ஆளுநர் உரையின் மீது நான் உரையாற்றுகிற வாய்ப்பைப் பெற்றமைக்கு உங்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு நல்ல அரசுக்கு அடையாளம் தன் நாட்டு மக்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க ......... (குறுக்கீடு).

[1991 சனவரி 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அர்ச்சுனன் சொல்வதைக் கேட்டு உட்கார்ந்தால் சரியாக இருக்கும். இல்லையென்றால் கண்டிப்பாக நான் நடவடிக்கை எடுத்துவிடுவேன். இதே வேலையாக இருந்தால் நான் சும்மா பார்த்துக்கொண்டு, பொறுமையாக உட்கார்ந்து கொண்டு, விளையாட்டுக் காட்டிக் கொண்டு இருக்க முடியாது. முதலிலேயே சொல்லிவிட்டேன். திருப்பித் திருப்பிப் பேசிக் கொண்டிருப்பது முறையாக இருக்காது. அவ்வளவுதான் சொல்வேன். 11-09 மணித்துளிக்குத் தொடங்கி, 21 மணித்துளி ஆகிவிட்டது. 15 மணித்துளிகள் தான் ஒதுக்கியிருக்கிறேன். குறுக்கீடு எல்லாம் சேர்த்துக் கொடுத்திருக்கிறேன். சும்மா எல்லோரும் கேட்டுக்கொண்டிருந்தால் கொடுக்க முடியாது. ஏற்கெனவே முன் எச்சரிக்கை கொடுத்து இருக்கிறேன். நாளைக்கு உங்களுக்கு வாய்ப்பு வரும்போது நீங்கள் விரிவாகப் பேசிக் கொள்ளலாம். நேரத்திற்காக வாதாடிக் கொண்டிருக்காதீர்கள். நேரத்திற்காக வாதாடிக் கொண்டிருந்தால் எல்லோருக்கும் இதுதான் நிலைமை.

**திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** ஒரு நல்ல அரசுக்கு அடையாளம், தன் நாட்டு மக்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க உறையுள் இவைகளோடு அமைதியான வாழ்க்கை அளிப்பதாகும் என்கிற வகையில், அதற்கு அடையாளமாக வெளிவந்திருக்கின்ற இந்த மேதகு ஆளுநருடைய உரைக்கு முதலில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு நாட்டுத் தலைவர்களுடைய முயற்சிகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராக்கப்பட்டு, வளைகுடாப்போர் மூண்டுக் கிடக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தினுடைய மதிப்புமிகு பிரதமர் அவர்கள் இந்த நேரத்திலே அனைத்து மாநிலத்திலும் இருக்கின்ற முதலமைச்சர்களை எல்லாம் கூட்டி வைத்து, போரினுடைய பூதாகாரமான நிலைமைகளை, இந்திய துணைக் கண்டத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, ஒற்றுமைகள் குறித்து சிறந்த அறிவுரைகளை இங்கே வழங்கி அனுப்பியிருக்கிறார்கள். பதுக்கல் பேர்வழிகள், கொள்ளை லாபக்காரர்களை அடக்குவதற்காக இந்த அரசு மத்திய அரசோடு ஒத்துழைக்கும் என்று மேதகு ஆளுநர் உரையிலே இந்த அரசு தன்னுடைய கொள்கையாகக் குறிப்பிட்டிருக்கிறது. இங்கே பேசியவர்கள் பல பேர் ஆரம்பத்திலேயே சொன்னார்கள். இந்த அரசு தேசியத்திற்கு எதிர்ப்பான அரசு, மத்திய அரசினுடைய நம்பிக்கையை இழந்துவிட்ட அரசு, தேசிய ஒற்றுமைகள் மீது நம்பிக்கையில்லாத அரசு என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1962 ஆம் ஆண்டு காங்கிரஸ்காரர்கள் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் விலைவாசிப் போராட்டத்தை துவக்கியது. அந்த விலைவாசிப் போராட்டத்தில் எங்களை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் உள்ளிட்டு அனைவரும்



1991 சனவரி 22] [திரு. மீ. அ. வைத்தியலிங்கம்]

சிறைவாசம் ஏற்றுக்கொண்ட நேரத்தில் அந்தப் போராட்டத்திலே ஈடுபட்ட கோபாலபுரத்தைச் சேர்ந்த கோ. சி. மணி, கட்டிளங்காளை சென்னை சிறைச் சாலையிலே பலியாக்கப்பட்டான், காங்கிரஸ் ஆட்சியாளர்களால். அதே போல ஸ்ரீவில்லிபுத்தூர் பொற்செழியன் என்ற கட்டிளங்காளை மதுரை சிறைச் சாலையிலே பலியாக்கப்பட்டான், விலைவாசி போராட்டத்தில் காங்கிரஸ் ஆட்சியாளர்களால். இந்த நிலையிலே வெளியிலே வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தியத் திருநாட்டின்மீது சீனா போர் தொடுத்து இருக்கிறது என்பதை அறிந்தவுடன் இரண்டு கட்டிளங்காளைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம், சிறைச் சாலையிலே பலியாகக் கொடுத்திருந்தாலும் கூட, சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும், வீடு இருந்தால்தான் ஓடு மாற்ற முடியும் என்கிற வரிகளை எடுத்துச் சொல்லி, நேருவினுடைய கரத்தைப் பலப்படுத்துங்கள் என்று 1962-லேயே, இந்தக் கட்சி ஆட்சியில் இல்லாத நேரத்திலேயே தேசீயத்தின் மீது இருக்கின்ற ஒற்றுமையை அதற்கு இருக்கின்ற வலிமையினை வலியுறுத்திக் காட்டினார்கள். 1970-க்குப் பின்னர் பாகிஸ்தான் போர் மூண்ட நேரத்திலே, இன்றைய முதலமைச்சர், அன்றைக்கு முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் இந்திய துணைக் கண்டத்தில், வேறு எந்த மாநிலமும் அளிக்காத அளவுக்கு அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களை இங்கே வரவழைத்து $7\frac{1}{2}$ கோடி ரூபாயை நிதியாகத் தந்து, இந்த அரசு உரிமைக்குக் குரல் கொடுக்கும், உறவுக்கு கை கொடுக்கும் என்று சொல்லி அனுப்பிய பாங்கினையும் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எனவே இந்த ஆளுநர் உரையின்மீது குற்றம் கண்டுபிடிக்க முடியாதவர்கள், இந்த அரசின்மீது எந்தவிதமான கொள்கை எதிர்ப்பையும் தெரிவிக்க முடியாதவர்கள் ஒட்டுமொத்தமாக தேடித் தேடிப் பார்க்கிற வழிகளிலே ஒன்றாகத்தான் இந்த அரசை தேசீயத்தின்மீது நம்பிக்கை இல்லாத அரசு என்று குறிப்பிடுகிறார்களே தவிர இந்த அரசு யாருக்கும் தேசீய நம்பிக்கையிலே சளைத்தவர்கள் அல்ல என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

11.35 மணி

கடந்த ஆண்டிலே இந்தியத் துணைக் கண்டத்திலே சாதிக் கலவரங்கள், இனக் கலவரங்கள் காரணமாக பல்லாயிரக்கணக் கான் வீடுகள் பலியிடப்பட்ட நிலைமை, இவைகள் எல்லாம் இந்தியத் திருநாட்டில் இருக்கிற தமிழ்நாட்டில் மட்டும் நடைபெறாதது மட்டும் அல்ல; அப்படி இங்கொன்றும், அங்கொன்றும் ஆக காழ்ப்புணர்ச்சி மிக்கவர்கள் வயிற்று எரிச்சல்காரர்கள் உருவாக்க வேண்டுமென்று எண்ணிய நேரத்தில்கூட யார், எவர் என்று பார்க்காமல் உரிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டதன் வாயிலாக தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. ஆனால் இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்ற காரணத் திற்காக எதிர்க்கட்சிக்காரர்கள் அதுவும் நம்முடைய மாண்புமிகு

[திரு. மீ. அ. வைத்தியலிங்கம்] [1991 சனவரி 22

உறுப்பினர் திரு. சிங்காரம் போன்றவர்கள் எல்லாம் தேடித் தேடி ஒரு நாட்டிலே அங்கொன்றும், இங்கொன்றுமாக சமுக விரோதிகளால் நடைபெற்ற காரியங்களை எல்லாம் சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக்கி சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று பேசுவதைப் பார்க்கிறபோது மிக மிக வேடிக்கையாக இருக்கிறது. சட்டம் ஒழுங்கு தமிழ்நாட்டில் இருக்கிற காரணத்தால்தான் தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு வர முடிகிறது அவரால். இதுவே ஆந்திராவாக இருந்தால் சட்டமன்ற உறுப்பினர் வெளியே வந்தால் அவரைக் கடத்திக் கொண்டு சென்று விடுவார்கள். எனவே தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு இல்லை என்று சொல்வதற்குக் காரணங்களைத் தேடிப் பிடித்து இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

இந்த ஆட்சி மக்களுடைய நம்பிக்கையை இழந்து விட்ட ஆட்சி என்று சொல்கிறார்கள். இந்த ஆட்சி உடனடியாகக் கலைக்கப்படுகிறது என்று எடுத்துக்கொண்டால்கூட நான் எதிர்க் கட்சிக்காரர்களுக்குச் சொல்லிக் கொள்வேன், திரைமறைவு சரணாலயங்களைத் தேடி தஞ்சம் புகுகிற தலைவரை இந்த ஆட்சி பெறவில்லை, இந்தக் கட்சி பெறவில்லை. எனவே, இந்த ஆட்சி கலைக்கப்பட்டால்கூட மக்கள் மன்றத்தைச் சந்திப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகமும், அதனுடைய தலைவரும் தயாராக இருக்கிறார்கள். 13 ஆண்டு காலம் இந்தக் கட்சி எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில், ஏன், அவசரகாலம் வெளியிட்ட நேரத்தில்கூட—இப்போது சொன்னார்களே, தமிழ் நாட்டில் பத்திரிகைகள் குரல் வளையை எல்லாம் நெரிக்கிறார்கள என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அர்ச்சுனன் அவர்கள் சொன்னார்கள். அவசர காலத்தில்.. இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற மாநில முதலமைச்சர்கள் எல்லாம் வாய்மூடி இருந்த நேரத்தில் தமிழ்நாட்டில் மட்டும்தான் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களுக்காக அல்ல, இந்த நாட்டின் விடுதலைக் காகப் .போராடிய தலைவர்களைக் கைது செய்தது தவறு என்று சுட்டிக் காட்டியது மட்டுமல்ல, பத்திரிகைகளின் குரல் வளையை நெரித்ததற்காக 9 ஆண்டு காலம் அமைச்சராக இருந்த, 7 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்த இன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மவுண்ட் ரோட், அண்ணா சாலையில் இறங்கி துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டு அதைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகப் போராடினார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பிற்படுத்தப்பட்ட மக்கள், மாநில அரசால் இட ஒதுக்கீடு பெற்றுப் பல சலுகைகளை இந்த மாநிலத்திலே பெறுகிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம், பல ஆண்டுகளாகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்திய அரசு அலுவலகங்களில் பணி களில் இடம் பெற வேண்டும் என்பதற்காக மிகவும் பின் தங்கிக் கிடக்கிற அந்த மக்களுடைய வாழ்வில் ஒளியேற்ற வேண்டும் என்பதற்காக பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 1973-ஆம் ஆண்டில்



1991 சனவரி 22] [திரு. மீ. அ. வைத்தியலிங்கம்]

அலகாபாத்தில் கூடிய மாநாட்டில் இன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு உரை நிகழ்த்தினார்கள். பிற்படுத்தப்பட்ட மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களுக்காக இட ஒதுக்கீடு செய்வதற்கு ஒரு கமிட்டி அமைக்க வேண்டுமென்று 1973-ஆம் ஆண்டில் அலகாபாத்தில் நடைபெற்ற மாநாட்டில் அறைகூவல் விடுத்தார்கள். 1977-ஆம் ஆண்டு ஜனதா ஆட்சியில் மண்டல் கமிஷன் அமைக்கப்பட்டு, அந்தக் கமிஷனுடைய அறிக்கை 1980ஆம் ஆண்டு அன்றைக்கு மீண்டும் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் கட்சியில் அன்னை இந்திரா காந்தி அம்மையாரைப் பிரதமராக ஏற்றுக்கொண்ட நேரத்தில் தரப் பட்டு 10 ஆண்டுகள் அந்த அறிக்கை கேட்பாரற்றுக் கிடந்தது. ஆனால் 10 ஆண்டுகளுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வருகிறபோது தேசிய முன்னணியோடு இந்த அரசு, கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் உறவு வைத்திருந்தது என்பதற்கு அடையாளமாக மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல் செய்வோம் என்று தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட வேண்டும் என்று கேட்டு, அதன்படி குறிப்பிடப்பட்டு, மண்டல் கமிஷன் அறிக்கை தேசிய முன்னணி ஆட்சி வந்த உடனே மீண்டும் தமிழ்நாட்டில், சட்டமன்றத்தில், இந்த மாமன்றத்தில் 1989ஆம் ஆண்டு மே மாதத்தில் மண்டல் கமிஷன் அறிக்கைக்கு உரு தரவேண்டும் என்று நிறைவேற்றிய தீர்மானத் தினுடைய விளைவாக 1990-ஆம் ஆண்டு மண்டல் கமிஷன் பரிந் துரை அமல் செய்யப்பட்டது.

இந்த நாட்டில் இருக்கிற, இந்திய துணைக் கண்டத்தில் இருக்கிற 52 சதவீத பிற்படுத்தப்பட்ட மக்கள் 27 சதவீதம் மத்திய அரசினுடைய வேலைவாய்ப்பில் இடம் பெற வேண்டும் என்பதற்காக, மத்திய அரசு அலுவலகங்களில் இடம் பெற வேண்டும் என்பதற்காகக் கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டத்தை எதிர்ப்பதற்கு சக்தி இல்லாதவர்கள், நேரடியாக எதிர்க்க முடியாததன் விளைவாகத்தான் இங்கே அன்றைக்கு எல்லாம் சொன்னார்கள், நாங்கள் 27 சதவீதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை, 50 சதவீதம் அறிவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம், எனவேதான் இதை நாங்கள் மாற்றி அறிவிக்க வேண்டுமென்று சொல்கிறோம் என்று எல்லாம் சொன்னார்கள்.

11-40 மணி

நான் எதிர்பார்த்தேன். அங்கே தேசிய முன்னணி ஆட்சி கலைக்கப்பட்டு புதிய பிரதமர் பொறுப்பு ஏற்றுக்கொண்ட உடனேயே அதற்கு ஆதரவாக இருக்கிற இவர்கள் 50 சதவீதம் கேட்டு சாலை மறியல் செய்வார்கள் என்று நான் எதிர்பார்த் தேன். ஆனால் அதற்கு மாறாக—அரசியலிலே ஒரு ஆட்சியை ராஜினாமா செய்ய வேண்டுமென்று கேட்டு கோரிக்கை விடுபவர் களைப் பார்த்திருக்கிறோம், மறியல் நடத்துபவர்களைப் பார்த் திருக்கிறோம். ஆனால்—ஒரு ஆட்சியைக் கலைக்கவேண்டுமென்று,

ஜனநாயகத்திற்கு எதிராக மறியல் செய்கிற ஒரு காட்சியை தமிழ் நாட்டிலே இப்போதுதான் புதிதாகப் பார்க்கப்போகிறோம். அப்படி மறியல் செய்வதன் மூலமே, அது ஒன்றே உதாரணமாக அமைகிறது. இங்கே சட்டம் ஒழுங்கு இருக்கிற காரணத்தினாலே தான் நீங்கள் சாலைக்கு வர முடிகிறது. மறியல் செய்வோம் என்று அறிவிக்க முடிகிறது. இங்கே பேச்சுரிமை, எழுத்துரிமை இருக்கிற காரணத்தினாலேதான் உங்களால் மேடைபோட்டு, முதல்வரைக்கூட தனிப்பட்ட முறையிலே தாக்கிப் பேசமுடிகிறது. இவைகளெல்லாம் இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்கு இருக்கிறது, மக்கள் அமைதியாக இருக்கிறார்கள் என்பதற்கான அடையாளம் என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த அரசினுடைய நீண்ட நாள் கோரிக்கை, இந்திய அரசியல் சட்டத்தினுடைய 263-ஆம் பிரிவின்படி இன்டர்-ஸ்டேட் கவுன்சில் அமைக்க வேண்டுமென்பதாகும். அதை மாண்புமிகு முன்னாள் பிரதமர் அவர்கள் ஏற்றுக்கொண்டு மாநில உரிமைகளுக்காக வாதாட வாய்ப்பினை உருவாக்கித் தந்தமைக்காக இந்த நேரத்திலே நான் அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட நாட்களாக, பல்லாண்டு காலமாக, இப்போதுகூட இந்த அவையிலே எழுப்பப்பட்டு, அச்சுறுத்தலாக இருந்த காவிரி நீர்ப் பிரச்சினைக்கு விடிவு கிடைக்கவில்லை. பேச்சுவார்த்தையின் மூலமாக காலம் கடத்தப்பட்டு வந்தது. அதுமட்டுமல்ல, காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டிற்கு எதிர்ப்பாகக்கூட அறிக்கைகள் தந்தவர்கள்தான் இன்றைக்கு இங்கே பேசிக்கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. நம்முடைய சட்டமன்றத்திலேயே அவை வாதப்பொருள் ஆக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் முன்பிருந்த பிரதமர் மாண்புமிகு திரு. வி. பி. சிங் அவர்கள் அதை நடுவர் மன்றத்துக்கு விட்டது, தமிழகத்திற்கு குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குக் கிடைத்திருக்கிற மாபெரும் வெற்றி என்று சொன்னால் அது மிகையாகாது. அதே நேரத்தில் இன்றைக்கு நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல நம்முடைய பிரதமர் காவிரியிலே இருந்து தண்ணீரைத் திறந்துவிடுவதற்கு ஏற்பாடு செய்திருப்பதற்காக அவருக்கு இந்த மன்றத்தின் மூலம் நன்றி தெரிவித்துக் கொள்வதிலே நானும் என்னை இணைத்துக் கொள்கிறேன்.

முன்பிருந்த மத்திய அரசு அறிவித்த வேளாண்மை, கிராம புதிய கடன் நிவாரணத் திட்டத்தை இந்தியத் துணைக் கண்டத்திலே முழுமையாக நிறைவேற்றி விவசாயப் பெருங்குடி மக்களை, 19 இலட்சம் பேர்களைக் கடன் சுமையிலேயிருந்து நிவர்த்தி செய்த பெருமை இந்த அரசுக்கு உண்டு என்கின்ற வகையில் இந்த ஆளுநர் உரைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியத் திருநாட்டில் வேறு எங்கும் இல்லாத முறையில் அனைத்து விவசாயிகளுக்கும் பாசனத்திற்கு இலவசமாக மின்சாரம் வழங்கி இருக்கிறோம். தமிழ் நாட்டிலேயுள்ள விவசாயிகளுக்கு இலவச



மாக மின்சாரம் வழங்க வேண்டுமென்று இங்கே கூட சிலபேர் கேட்டார்கள். ஆனால் அதை வழங்கியதற்குப் பின்னால் அதைக் குற்றம் சொல்ல முடியாமல் அதற்குக் காரணம் கற்பிக்க முடியாமல், முன்னுக்குப்பின் முரண்பாடாக, விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கியிருக்கிறீர்கள். ஆனால் அதிலே நட் வாங்குகிறோம் போல்ட் வாங்குகிறோம் என்று மிகச் சாதாரணமான விஷயங்களைப் பேசி, எங்கே என்று கேட்கிறபோது, வீடுகளுக்கு என்று சொல்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூன்று மணித் துளிகளில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவைகளெல்லாம் இந்த அரசின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாகப் பேசுகின்ற பேச்சுக்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த நாட்டிலே இருக்கிற அடித்தளத்து மக்கள் அன்றாடம் உபயோகப்படுத்துகிற அரிசியினுடைய விலையை 2½ ரூபாயாக மாற்றி, 256.62 கோடி ரூபாய் சுமையினை இந்த அரசு தாங்கிக்கொண்டாலும்கூட, அடித்தளத்து மக்கள், அன்றாடம் அரிசி வாங்கி உபயோகிக்கிறவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்பதோடு, அப்படி அரசு பல சலுகைகளை அளித்தாலும், உணவுப் பொருள்களை வேண்டிய அளவிற்குத் தந்தாலும்கூட, அதை விநியோகிக்கிற, அந்தக் கடைகளிலே பணியாற்றுகின்றவர்கள் சரியான முறையிலே இல்லையென்பதைப் போக்குவதற்காக, தண்டனை மட்டுமே அவர்களுக்கு வழியாக இருந்துவிடக் கூடாது என்பதற்காக அவர்களுடைய கருத்தையும் பரிசீலித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆளுநர் அறிக்கையிலே அவர்களுடைய ஊதியத்தை 500 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். அந்த விற்பனை ஊழியர்கள் தங்களைத் திருத்திக் கொள்வதற்கு, மனசாட்சிக்கு இடமளிப்பதற்கு, இந்த நாட்டிற்குப் பற்றுடையவர்களாக நடந்து கொள்வதற்கு அதை ஒரு ஆதாரமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில், தமிழ் நாட்டில் விளம்பரத்திற்காகவே பல மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகள் நின்றுகொண்டிருந்த நிலைமைகளை மாற்றி, மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை நகர மன்றத் தலைவர்களை, ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர்களையெல்லாம் கூட்டி அங்கே இருக்கிற தொகுதிகளுடைய நிலைமைகளை அறிந்து, தமிழ்நாட்டிலே பெரும்பாலும் தண்ணீர் பஞ்சம் தீர்க்கப்பட்டிருக்கிறது.

தற்போது 5,885 குடியிருப்புகளுக்கு இந்த ஆண்டு, அவைகளுக்கும் சேர்த்து தண்ணீர் பெறுகின்ற அளவிற்குச் செய்வேன் என்று அறிவித்து இருப்பது இந்த அரசினுடைய திறமைக்குச்

சான்றாகும். 1974-ஆம் ஆண்டு மாநில அரசால்—இங்கே குறிப்பிட்டார்களே—தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிட மக்கள் ஆகியோர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம் கொண்டுவரப்பட்டு ஓராண்டுக் காலத்தில் 35 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. 13 ஆண்டுக் காலம் இந்த நாட்டிலே ஆட்சியிலே இருந்தவர்கள் கட்டி முடித்த ஒட்டு வீடுகள் 35,000 வீடுகள். ஆனால், கட்டிய வீட்டிலே குறை சொல்ல வேண்டும் என்பதைப்போல, இந்த இரண்டாண்டுக் காலத்தில். ..

11-45 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணித் துளி.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மீண்டும் 89,000 வீடுகளைக் கட்டி முடித்து, ஒரு இலட்சம் வீடுகளை ஏப்ரலுக்குள் முடிக்கத் திட்டம் தீட்டி, ஒரு லட்சம் வீடுகளைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளித்ததோடு அல்லாமல், இந்த ஆண்டிலேயிருந்து மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அந்தச் சலுகை அதிகரிக்கப்படும் என்று அறிவித்திருப்பது இந்த நாட்டினுடைய முதல்வரை, இந்த ஆட்சியைப் புகழின் உச்சிக்கே கொண்டு சென்றிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. சத்துணவுத் திட்டத்தைப் பற்றி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாக்கியத்தை முடித்துவிடலாம்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : ஒரு நிமிஷம். சத்துணவுத் திட்டத்தைக் குறிப்பிடுகிறபொழுது சொன்னார்கள். இந்த ஆட்சி வந்தால் சத்துணவுத் திட்டமே நிறுத்தப்பட்டு விடும் என்றெல்லாம் விளம்பரம் செய்தார்கள். ஆனால், அதற்கு மாறாக, நம்முடைய முதல்வரவர்கள் இந்த ஆட்சியிலே சத்துணவுத் திட்டத்திலேயிருந்த தற்காலிகப் பணியாளர்களையெல்லாம் நிரந்தரமாக்கி, அதோடு விட்டு விடாமல், முட்டை 15 நாளைக்கு ஒன்று என்று தந்து, சத்தான உணவாக மாற்றியதோடு, இப்பொழுது உலக வங்கியோடு தொடர்பு கொண்டு, 350 கோடி ரூபாய் செலவில் புதிய ஊட்டச் சத்துணவுத் திட்டம் ஒன்றினை உருவாக்கி இருப்பது உள்ளபடியே தாழ்ந்து கிடக்கிற மக்கள் மீது இந்த அரசு கொண்டிருக்கின்ற அக்கறைக்கு ஒரு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. பெண்களுக்குப் பட்டப் படிப்பு . . . . . . . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாக்கியத்தை முடித்துவிடலாம்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : அனைத்துத் தரப்பு மக்களையும் சமாதானம் செய்கிற அளவிற்கு, நெசவாளர்களுக்கு,



தொழிலாளர்களுக்கு, விவசாயிகளுக்கு, பட்டப்படிப்பு பயில்கிற வர்களுக்கு, பெண்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு என்று அனைத் துத் துறையினருக்கும் பயன்படுகிற திட்டங்கள் கொள்கைக் குறிப்பாக வந்திருக்கிற இந்த மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு என்னுடைய நன்றியினை நான் சார்ந்திருக்கிற பெரு மைப்படத்தக்க திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரி வித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியி னுடைய சார்பிலே சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இந்த உரையிலே, தற்போது உலகத்தையே கவலையிலே ஆழ்த்தியிருக்கக்கூடிய வளைகுடாப் போரைப்பற்றிக் குறிப் பிடப்பட்டிருக்கிறது. இந்திய அரசு எடுக்கக்கூடிய எல்லா வகையான முயற்சிகளுக்கும் தேசிய நலனிலே அக்கறை கொண்ட தமிழக அரசு உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பை வழங்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வளைகுடாப் போர் என்பது ஒரு ஆக்கிரமிப்புப் போர். ஈராக் குவைத்தின் மீது ஆக்கிரமிப்பு செய்தது ஒரு தவறு. அரசியல், பொருளாதார நிர்ப்பந்தங்களின் மூலமாகவே அந்த ஆக்கிர மிப்பை அகற்றி குவைத்தை விடுவிப்பது என்பது சாத்தியம். ஆனால், அமெரிக்கா இதற்காக ஒரு போரைத் தொடுத்துள்ளது. எதற்கு என்று சொல்லுகிறபொழுது, குவைத்தை ஆக்கிரமிப்பிலே யிருந்து விடுதலை செய்வதற்காக என்று அமெரிக்கா அறிவித் திருக்கிறது. பாலஸ்தீனிய மக்களுக்குச் சொந்தமான மண்ணை 43 ஆண்டுகளாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கக்கூடிய இஸ்ரேலை உருவாக்கி அந்த ஆக்கிரமிப்புக்குத் துணை நிற்கிற அமெரிக்கா, 4 மாத ஆக்கிரமிப்பைச் சகிக்க முடியாது என்று போர் தொடுப்பது எந்த வகையிலே நியாயம்?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

சதாம் தவறு செய்தால் அந்தத் தவறைத் தண்டிக்க உலகத்தி னுடைய காவல்காரனாக—World Police ஆக அமெரிக்காவை யார் நியமித்தார்கள்? வளைகுடா நாட்டிலே இலட்சக்கணக் கானவர்களைக் கொன்று குவிக்கிற அமெரிக்காவினுடைய ஆக்கிர மிப்பு யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். உலகப் பொருளாதாரமே சீர்குலையக்கூடிய அளவிற்கு இன்றைக்கு நிலைமை வந்திருக் கிறது. நமது நாடு பெரும்பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய நிலைமை வந்திருக்கிறது. எனவே, அமெரிக்கப் படைகள் ஆக்கிரமிப்புப் போரை நிறுத்த வேண்டும். வளைகுடாவை விட்டு அமெரிக்கப்

[திரு. உ. ரா. வரதராசன்] [1991 சனவரி 22

படைகள் வெளியேற்றப்பட வேண்டுமென்பதையும் சேர்த்து வலியுறுத்தி, சமாதானத்தைப் பாதுகாத்து, குவைத்தை ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிப்பதற்கு உலக நாடுகள் ஒன்று சேர்ந்து முயற்சிகளைத் தொடர வேண்டுமென்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே யுத்தத்தைப் பயன்படுத்தி, பதுக்கல், கள்ளச் சந்தை, விலைவாசி உயர்வு, இவை அத்தனையையும் நம்முடைய மக்கள் சந்திக்க வேண்டும். இவற்றால் பாதிக்கப்படுகிற மக்களுக்குப் பாதுகாப்பாக இந்த அரசு இருக்க வேண்டும். அபாயம் நேரிடுகிறதே என்ற அச்சத்திலே, ஏராளமாக இப்பொழுதே வாங்கி வைத்துக் கொள்வோம் என்ற முறையிலே ஒரு செயற்கையான தட்டுப்பாட்டைக் கூட உருவாக்குவதற்கு நிலைமைகள் வருகிறபொழுது, அந்தப் பதுக்கல்காரர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதன் மூலமாக மட்டுமல்ல ; மக்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் பொது விநியோக முறையின் மூலம் அளிப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்ற உத்தரவாதத்தை நல்குவதன் மூலமாகத்தான் இவற்றைத் தடுக்க முடியும் என்பதையும் நான் இங்கே சேர்த்து வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

தேசீய நலனிலே அக்கறை உள்ள அரசு என்று ஆளுநர் உரை சொல்கிறது. ஆனால், இங்கே இந்த அரசைத் தேசத் துரோக அரசு என்று காங்கிரஸ்காரர்கள், அ.தி.மு.க. வினர் சித்தரிக்கிறார்கள். இது காங்கிரஸ்காரர்களுக்கு எப்பொழுதுமே வாடிக்கை. தேசபக்தி என்பது ஏதோ காங்கிரஸ்காரர்களுடைய மொத்தக் குத்தகை என்பதுபோல அவர்களுக்கு நினைப்பு. தி.மு.க.வோடு உறவு கொள்கிறபொழுது அது தேசபக்தி இயக்கம் ஆனால் தி.மு.க.வோடு உறவு இல்லாதபோது அது ஒரு பிரிவினை சக்தி, தேச விரோத சக்தி என்று அவர்கள் லாவணி பாடுவார்கள். இன்றைக்கு மட்டுமல்ல, 1974-லே இப்படித்தான். இந்த மன்றத்திலே மாநில சுயாட்சி பற்றி விவாதம் வந்தபோது இப்படித்தான் சொன்னார்கள், பிரிவினை சக்தி, தேச விரோத சக்தி என்று.

11-50 மணி

அன்றைக்கு இந்த அவையிலே பேசுகிறபோது இன்றைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். '' ஒரு காலத்திலே வைத்தது உண்மைதான். அதை விட்டுவிட்ட பிறகும் கூட எங்களைப் பிரிவினைவாதிகள் என்று சொல்லுகிறார்களே, எப்படி நியாயம் '' என்று கேட்டுவிட்டு, அவர்கள் இரண்டு வாதங்களைச் சொன்னார்கள். '' போர், போர் '' என்று அலைந்த அசோகன் களம் பல கண்டதற்குப் பிறகு கலிங்கத்திலே பல பிணங்களைக் குவித்ததற்குப் பிறகு தான் போரை நிறுத்து புளத்தனாக மாறினான். ஆனால் அந்த அசோகனை நாங்கள



991 சனவரி 22] [திரு. உ. ரா. வரதராசன்]

ஏற்றுக்கொள்ள முடியாது; ஏற்கெனவே இருந்த போர் வெறியன் தான் அசோகன் என்று சொன்னால், அசோகனுடைய அந்த அசோகச் சக்கரச் சின்னத்தை இந்திய நாட்டினுடைய தேசியக் கொடியில் ஏற்றி இருக்க முடியுமா ? அதுபோல் '' வழிப்பறிக் கொள்ளை அடித்த இரட்சன், வால்மீகி ஆகி இராமாயணத்தை எழுதினானே, அவனை ஏற்றுக்கொள்கிறபோது ஏன் எங்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது ? '' என்று முதலமைச்சர் அவர்கள் இங்கே கேட்டார்கள். நான் காங்கிரசுக்காரர்களுக்கு ஒன்றுசொல்லிக்கொள்வேன். பிரிவினை சக்தி, பிரிவினை சக்தி என்று முத்திரை குத்துவதன் மூலமாக, நீங்களே ஒற்றுமையோடு இருக்கக்கூடிய மக்களை பிரிவினை சக்திகளுக்குப் பின்னாலே தள்ளுகிற செயலைச் செய்துவிட வேண்டாம். வரலாற்றினுடைய குற்றவாளிக் கூண்டிலேறி நீங்கள் பதில் சொல்ல வேண்டி நேரிடும் என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

ஒத்துழைப்புத் தருகிறேன் என்று இந்த அரசு சொல்கிறது. ஆனால் மத்தியிலே செயல்படுகிற அரசோ மோதலுக்குத் துடிக்கிறது ; கலைத்து விடுவோம் என்று மிரட்டுகிறது அல்லது மிரட்டுகிறவர்களுக்கு ஊக்கம் அளிக்கிறது. இங்கே மட்டுமல்ல, அனைத்து மாநிலங்களிலேயும் ஒரு ஸ்திரமற்ற தன்மையை மையத்திலே இருக்கக்கூடிய அரசு உருவாக்குகிறது. அஸ்ஸாமிலேயே கலைத்தார்கள், கவிழ்த்தார்கள் ஏ.ஜி.பி. அஸ்ஸாம் கனபரிஷத் பின்னாலே திரண்டிருக்கக்கூடிய மக்களையும்கூட, உல்பாவின் பின்னாலே விரட்டுகிற விபரீத விளைவைத்தான் அது தோற்றுவித்து இருக்கிறது. கோவாவிலே கவிழ்த்தார்கள். புதுவையிலே கவிழ்த்தார்கள். காங்கிரசு ஆட்சியை ஏற்படுத்த அங்கே இருக்கக்கூடிய துணைநிலை ஆளுநரை மாற்றி உதவி புரிந்தார்கள். ஒரு வார காலத்துக்குள் நம்பிக்கை ஓட்டுக் கோருகிறேன் என்றார் புதுவை முதல்வர். ' முடியாது ; என் முன்னாலே கொண்டு வந்து நிறுத்து ' என்று மிரட்டினார் துணைநிலை ஆளுநர் ; பிறகு பணிந்தார். ஆனால் காங்கிரசுக்கு ஆட்சி அமைப்பதற்கு இரண்டு வாரக் காலம் காத்து இருந்தார் அந்தத் துணை நிலை ஆளுநர் என்பதை நாம் மறக்க முடியாது. இப்பவும் கூட இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய உள்கட்சிச் சண்டையைத் தீர்ப்பதற்காக சட்டமன்றம் முடக்கி வைக்கப்படுகிறது. இவ்வளவும் எதற்காக ? ஆளுகின்ற சந்திரசேகர் அரசு ஆள வைக்கிற காங்கிரசுக்குக் குற்றவேல் பணிவிடை செய்கிறது என்பதைத் தவிர இதற்கு வேறு என்ன விளக்கம் இருக்க முடியும் ?**

திரு. ஜி.ஜி. குருமூர்த்தி : பாய்ண்ட் ஆஃப் ஆர்டர். துணைச் சபாநாயகர் அவர்களே, நண்பர் வரதராஜன் அவர்கள் பேசுகின்ற போது, எல்லா மாநில அரசுகளையும் மிரட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். மத்திய அரசு ஆட்சியில் இருக்கக்கூடிய பிரதமர் அவர்கள் யாரையும், எந்த ஆட்சியையும் விரட்டுவதும் கிடையாது

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மிரட்டுவதும் கிடையாது. ஆகவே பல சந்தர்ப்பங்களிலே அவர்கள் அதைப்போன்ற தவறுகளையும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் இன்று பேசுகின்றபோது அதுபோன்ற கருத்துக்களைச் சொல்கின்றார்கள். அதை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : துணைத் தலைவர் அவர்களே, மத்தியிலே இருக்கிற அரசு மிரட்டி வருவது என்பது வெளிப்படையாகத் தெரியக் கூடிய விஷயம். உறுப்பினர் அவர்கள் தெரிந்தே செய்கிற பாவமாக இந்தக் கூற்றைச் சொல்கிறார்கள். அவ்வளவு தான். மத்தியிலே இன்றைக்கு இருக்கிற அரசு . . . .

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் தலைமை தாங்கிய நேரத்தில் நான் ஒருமுறை இந்தச் சொல்லைப் பயன்படுத்தி, அந்தச் சொல்லை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டும் என்று பேரவைத் தலைவர் இரண்டுமுறை தீர்ப்பு அளித்ததற்குப் பின்னாலேயும், அந்தச் சொல் அகற்றப்பட்டே தீரவேண்டும் என்று அவருடைய கட்சித் தலைவர் சொல்லி பேரவைத் தலைவர் அந்தச் சொல்லைப் பயன்படுத்தக் கூடாது என்று அவைக் குறிப்பிலே இருந்து நீக்கி விட்டார். 'மிரட்டுவது' என்ற சொல் கூடாது என்று சொல்லி இருக்கிறார். எனவே அந்தச் சொல்லை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். The Speaker has given his ruling.

திரு. உ. ரா. வரதராசன்: I have a submission to the Speaker, then he can give his ruling. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 'மிரட்டுவது' என்கிற வார்த்தைக்குப் பதிலாக 'அச்சுறுத்துகிறது' என்று நான் மாற்றிக்கொள்கிறேன். இன்றைக்கு மத்தியிலே இருக்கக்கூடிய அரசு எப்படிப்பட்ட அரசு? பினாமி என்று சொன்னாலே இங்கே இருக்கிற காங்கிரசுகாரர்களுக்குக் கொஞ்சம் கோபம் வரும். இதுவரை நிலம் தான் பினாமி.*** அவர்களுக்கு வக்காலத்து வாங்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசிய நண்பர் திரு. அர்ச்சுனன் அவர்கள் இந்த அரசு, மத்தியிலே இருப்பவர்களுக்கு விசுவாசம் அற்ற அரசு என்று குறிப்பிட்டார்கள் (குறுக்கீடு) 'I am not yielding' ஏனென்றால் என்னுடைய நேரம் வீணாகிறது. எனவே அவர்கள் பேசுகிறபோது பேசட்டும் (குறுக்கீடுகள்).

**11-55 மணி**

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, அவர்கள் பொதுவாகச் சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில் நாங்கள் எல்லாம் அமைதியாக இருந்தோம் என்பதை

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





நீங்கள் பார்த்தீர்கள், ஆனால் குறிப்பாக நிலத்தை வைத்து பினாமி வைத்தவர்கள் * * * என்றெல்லாம் சொல்கிற நேரத்திலே கூட நாங்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள். இந்த இரண்டும் தவறு என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். ஒருவர் ஆதரிப்பதற்காகவே, * * என்று சொன்னால் கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சியைக் கூட காங்கிரஸ் கட்சி * * ஆதரித்து இருக்கிறது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தவறான தகவலைத் தருகிறார்கள். கேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் காங்கிரஸ் கட்சியினுடைய ஆதரவைப் பெற்று ஆட்சியில் அமர்ந்தது இல்லை (குறுக்கீடுகள்) தமிழகத்தில் பினாமி என்று சொன்னாலே நிலத்தில் பினாமி செய்து இருப்பவர்களின் பெயர் கட்டாயம் ஞாபகத்தில் வரும். அதனால்தான் நிலத்தைப் பினாமியாக வைத்திருந்தவர்கள் ** என்று திரு. வரதராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி பினாமி இருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசு. எனவே அதை இவர்கள் யாரும் இங்கே சொல்ல வேண்டியது இல்லை. இது ஒன்று. இரண்டாவது, இப்போது நான் பொதுவுடமை என்று சொன்னதற்குக் காரணம், எப்படி திரு. சந்திரசேகருக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் தொடர்பு இருக்கிற காரணத்தால் இப்போது தொடர்புபடுத்துகிறார்களோ, அதைப்போலே, இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தொடர்பு இருக்கிற காரணத்தாலே பொதுவுடமைக் கட்சி என்று நான் சொல்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதுவரையில் நிலம்தான் பினாமி என்று குறிப்பிட்டேன். ** ** (குறுக்கீடுகள்). I am not yielding,

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்று எப்படிச் சொல்ல முடியும்? காரணம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) தவறு என்றால் அதற்கு விளக்கம் எங்கள் துணைத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியை நீக்கவேண்டும் (குறுக்கீடுகள்).

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. கே. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். திருவாளர் ரமணி அவர்களை விளக்கம் கேட்க அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் நேரத்தைச் சேமிக்க வேண்டும். (கூச்சல் - குழப்பம்).

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் என்னைப் பேச அனுமதித்த பிறகு, இவர்கள் இப்படி வந்தால் என்ன பண்ண முடியும். நான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்டு தாங்கள் அனுமதித்த பிறகு இவர்கள் பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம் ? நீங்கள் என்னைக் கூப்பிட்ட பிறகு அவர்கள் பேசுவது என்ன சட்டம் ? என்ன ஒழுங்கு? (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ரமணி அவர்கள் சொல்லட்டும், அவர் Point of Order கேட்கிறார் சொல்லட்டும்.

திரு. கே. ரமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இதே அவையில் இந்த அரசு சட்டசபையில் மெஜாரிட்டி, வெளியில் மைனாரிட்டி என்று சொல்கிறார்கள். அதை யாரும் கேட்கவில்லை. அதேமாதிரி அங்கே பாராளுமன்றத்தில் மெஜாரிட்டி, வெளியிலே மைனாரிட்டி. 193 பேர் இருக்கிற ஒரு கட்சியினர் அரசாங்கத்தை நடத்த மாட்டார்கள். ஆனால் 62 பேர் இருக்கிற ஒரு கட்சி அரசாங்கத்தை நடத்துவார்கள். ** ** சட்டத்திலே எழுதி வைக்கவில்லை. சட்டத்தில் எழுத முடியாது. அரசியல் சட்டத்தில் அப்படி எழுத முடியாது. வேறு ஒரு சட்டத்திலும் எழுத முடியாது. அதனால் தான் ** என்று சொல்கிறோம். (குறுக்கீடுகள்) வெளியில் மைனாரிட்டி, உள்ளுக்குள்ளேயும் மெஜாரிட்டி இல்லை. ** ** என்று பத்து தடவை நாங்கள் சொல்வோம். (கூச்சல் - குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னது அவருடைய வாதத்தை வலுப்படுத்துவதற்காக என்று இருந்தாலும் கூட, அவர்களே சொன்னார்கள், 'ஒரு மைனாரிட்டி அரசு' என்று. அந்த அளவிலே வார்த்தைகளை பயன்படுத்தினால் போதுமானது என்று நானும் கருதுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



12-00 மணி

இங்கேயுள்ள காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் அல்லது மற்ற உறுப்பினர்கள் யாரும் யாருடைய உள்ளத்தையும் புண்படுத்தக்கூடிய அளவுக்குச் சொற்களைப் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது என்ற முறையிலேதான் நான் காங்கிரஸ் நண்பர்களுடைய அந்த உணர்வை மதிக்கிறேனே அல்லாமல் வேறல்ல. 'பினாமி' என்பது தவறான வார்த்தை அல்ல. அதை நிலத்தோடு சம்பந்தப்படுத்தி, சொத்தோடு சம்பந்தப்படுத்திச் சொல்லும்போது அது தவறான வார்த்தையல்ல. ** என்பது தேவையற்றது. ஏனென்றால் பிறகு அதையே மாறி மாறிச் சொல்லக்கூடும். பல விஷயங்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. தகுதியற்ற அரசு என்றெல்லாம் கூட சொல்லப்பட்டிருக்கிறது. அதை எல்லாம் நாம் தாங்கிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் தாங்கிக் கொள்வதற்கும் ஒரு பக்குவம் வேண்டும். இருந்தாலும் நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர்களையும் குறிப்பாக திரு. உ. ரா. வரதராசன் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். தங்களையும் நான் வேண்டி கேட்டுக் கொள்கிறேன். ** ** என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதை அகற்றிவிடலாம் என்பது தான் என்னுடைய கருத்தாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ** என்று சொன்ன சொற்குறிப்பை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு உத்தரவிடுகிறேன்.

திரு. க. அர்ச்சுனன் : 'Point of Order' கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எதைப் பற்றி என்று சொல்லுங்கள். அது முடிந்துவிட்டது. அதிலே 'ruling' கொடுத்தாகிவிட்டது.

திரு. கே. ரமணி : நான் திரு. அர்ச்சுனன் அவர்களை ரெபர் பண்ணிப் பேசவில்லை. அவரைப்பற்றி ஒன்றும் சொன்னதில்லை.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'மத்திய அரசுக்கு விசுவாசம் அற்ற அரசு' என்று நான் குறிப்பிடவில்லை. 'நாட்டிற்கு விசுவாசம் அற்ற அரசு' . . . . . . (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தவைவர் : நிறுத்துங்கள் உறுப்பினர் சொன்னது குறிப்பிலே இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள். திரு. வரதராசன் அவர்கள் தொடர்ச்சியாகப் பேசலாம்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. உ. ரா. வரதராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் சொல்கிற போது யோசிக்க வேண்டும். சொன்னதற்கு பதில் வருகிறபோது யோசித்தால் இந்தப் பிரச்சினை வரத்தான் செய்யும்.

இந்த அரசு யாருக்கும் கொத்தடிமை அரசு அல்ல. தமிழக மக்களுக்கு விசுவாசமான அரசு இது. இன்றைக்கு மத்தியிலே உட்கார்ந்திருக்கின்ற அரசு இருக்கிறதே, அது நாடாளுமன்றத் தேர்தலிலே எந்த நம்பிக்கையோடு மக்கள் காங்கிரஸ் அல்லாத ஆட்சி வரவேண்டுமென்று வோட்டுப் போட்டார்களோ அந்த விசுவாசத்திற்குத் துரோகம் இழைத்த அரசுதான் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மக்கள் தீர்ப்பைப் பற்றி எண்ணிப் பாராதவர்கள், மக்கள் தீர்ப்பை மாற்றி எழுதுவதற்குத் துணை நிற்கக்கூடிய அரசு சந்திரசேகர் அரசு, ராஜீவ் காந்தி, அத்வானி, சந்திரசேகர் ஆகிய மூன்று பேரும் அவர்கள் சேர்ந்திருக்கக்கூடிய மூன்று கட்சிகளும் சேர்ந்து நடத்திய முக்கூட்டுச் சதியாலே பிறந்த அரசுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு. இந்த அரசே முக்காலியிலேதான் உட்கார்ந்து இருக்கிறது. நாற்காலியிலே கூட உட்காரவில்லை. மூன்று கட்சிகளின் கூட்டுச் சதி மூலமாக வந்தது. அந்த முக்காலியிலே கூட ஒரு கால் கொஞ்சம் உடைந்து இருக்கிறது. அதுவே எப்போது சாயுமோ என்று தெரியாது இருக்கக்கூடிய நிலைமையிலே மாநில அரசைச் சவாலுக்கு அழைப்பது மாநில அரசை அச்சுறுத்தக் கூடிய முறையிலே பிரதமர் பேசுவது என்பதெல்லாம் சரியல்ல. ஒருவேளை ராஜீவ் காந்தி, சந்திரசேகர் இவர்களுடைய மிரட்டலுக்கு சிமன் பாய் அடிபணிந்து சரணடையலாம். முலாயம் சிங் யாதவ் அடிபணிந்து சரணடையலாம், ஆனால் நிச்சயமாக இந்தத் தமிழக அரசோ, மேற்கு வங்க, கேரள மாநில அரசுகளோ சரண் அடையாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலக்கியச் செல்வருக்குப் புரியக்கூடிய முறையிலே சொல்கிறேன். '' கும்பிட்டு வாழ்கிலேன் யான் '' என்று சொல்லி சமர்க்களம் புகுந்தானே, அதுபோலவே தான் சொல்கிறேன், '' கும்பிட்டு வாழ்கிலோம் யாம் '' என்று நெஞ்சுயர்த்தி சொல்லக்கூடிய அரசுகள்தான் என்பதை, தேசிய முன்னணி, இடதுசாரி அரசுகள் என்பதை நான் நிச்சயமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் 2 மணித் துளிகளில் முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. உ. ரா. வரதராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது முறைதானா என்பதைநீங்கள் சிந்திக்க வேண்டும். சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்று இங்கே சிலர் கோரஸ் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ், அது ஆள வைக்கிற கட்சி, அந்தக் கட்சி ஆளுகின்ற எந்த மாநிலத்தையும்



விட சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ள மாநிலங்கள்தான் மேற்கு வங்கம், கேரளா, தமிழ்நாடு உள்ளிட்ட தேசிய முன்னணியும், இடதுசாரி கட்சிகளும் ஆளக்கூடிய மாநிலங்கள். ஆந்திராவிலே என்ன வாழ்கிறது ? ஏன், டெல்லிப் பட்டணத்திலே சட்டம் ஒழுங்கு குலையக்கூடிய முறையிலே கலவரங்கள் நடந்ததே, அதற்கு சந்திரசேகர் அரசை யார் டிஸ்மிஸ் செய்வது ?

கலைப்பதற்கு மனுக்கள். மனுக்களைப் பெற்றுக்கொண்டிருக்கிற பிரதமர் திரு. சந்திரசேகர் சொல்கிறார், நீங்கள்தானே கோரிக்கை எழுப்புகிறீர்கள், மக்களிடமிருந்து கோரிக்கை வரவில்லையே என்று. அதற்கு என்ன பொருள்? மக்களைக் கலகம் செய்யத் தூண்டுங்கள் என்று பிரதமரே சொல்லுகிறாரோ என்கின்ற சந்தேகத்தை நிச்சயமாக அது எழுப்புகிறது. பிரதமர் அப்படி சொல்லலாமா? நான் அதை இங்கே எழுப்ப நினைக்கிறேன். விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று இன்னொரு புகார்.

12-05 மணி.

புலி, புலி என்று பூச்சாண்டி காட்டியே இந்த ஆட்சியைச் சாய்த்துவிடலாமென்ற நைப்பாசையிலே சில நயவஞ்சக நரிகள் திட்டம் தீட்டுகின்றன. அந்த நரிகளுக்குத் தமிழக மக்கள் நாட்டாண்மை நல்க மாட்டார்கள் என்பதைத் திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு யாருடையது? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: உறுப்பினர் திரு. வரதராசனுக்கு நான் சொல்கிறேன். நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். வரதராசன் அவர்களே, மனிதர்களையே உதாரணம் காட்டுங்கள் (சிரிப்பு).

THIRU M. SUNDARADOSS : Sir, it must be expunged. (Interruption)

THIRU W. R. VARADARAJAN : Mr. Deputy Speaker. Sir, I have not named anybody (Interruption) **

THIRU S. R. BALASUBRAMANIAM : Sir, it is damaging. We never said like that. Unless he withdraws, we will not permit him. Mr. Deputy Speaker, Sir, this should not be allowed. (Interruption)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1991 சனவரி 22

12-10 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பாக அவர்கள் குறுக்கிட்டுப் பேசிய பிறகு, ** என்று சொன்ன வாசகத்தை எடுத்துவிடலாம். புலி என்று சொல்லும்போது நரி என்று சொல்வதிலே தவறு இல்லை என்று நான் கருதுகிறேன். ஆனால் அவர்கள் பொதுவாகத்தான் குறிப்பிட்டார்கள். அது காங்கிரஸ் கட்சிக்கு என்று குறிப்பிடப்படவில்லை. அதை எதிர்த்து இங்கே மறுப்புகள் தெரிவிக்கப்பட்ட பிறகு நண்பர் வரதராசன் அவர்கள் ** என்று குறிப்பிட்டார்கள். அந்த வாசகத்தை எடுத்து விடுவது நல்லது. (குறுக்கீடு).

திரு. உ. ரா. வரதராசன் : அவர்கள் குறுக்கீட்டையும் நீக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : குறுக்கீட்டை எப்படி நீக்க முடியும்?

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது மாண்புமிகு முதல்வரவர்கள் சொல்கிற போது புலி என்று சொல்கிற காரணத்தாலே, நரி என்று சொன்னார்கள். அவர்களுக்குத் தெரியாதது அல்ல. ஏறு போன்ற பீடு நடை என்று ஓர் ஆண் மகனைச் சொல்வது வேறு அதற்காக இன்னொரு பக்கத்திலே பாம்பு மாதிரி வளைந்து வளைந்து போகிறான் என்று சொல்வது என்பது வேறு. எனவே உவமைகள் சில நேரங்களிலே பொருந்துவதாக இருக்குமானால், அந்த வார்த்தையைச் சொன்னது இந்த வார்த்தையைச் சொல்வதற்கு சமமாகாது என்பதற்காகச் சொல்கிறேன். அதனாலே புலிகள் செய்கின்ற காரியங்களை எல்லாம் நாங்கள் ஒத்துக்கொள்கிறோம் என்று பொருளல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, அவர்களே இலக்கிய நடையிலே என்னுடைய வாதத்திற்கு வலு ஏற்றியிருக்கிறார்கள். பாம்பு போல நெளிந்து நெளிந்து போகிறான் என்று சொல்வது தவறல்ல. இன்னும்கூட இந்த அவையிலே கழுவிய மீனில் நழுவிய மீன் என்றெல்லாம்கூடச் சொல்லியிருக்கிறோம். அதனாலே அது யாரையும் இழிவுபடுத்துவதற்காக அல்ல. சிலருடைய திறமைகளுக்காக அதைச் சொல்லியிருக்கிறோம். (சிரிப்பு) அதைப் பற்றியல்ல. அவர்கள் குறிப்பிட்டது காங்கிரஸ்காரர்கள் மாத்திரம்தான் இன்றைக்கு சட்டம், ஒழுங்கு, அமைதி கெட்டுவிட்டது என்று சொல்வதாகப் பொருளல்ல. வெளியிலே எத்தனையோ பேர்கள் எழுதுகிறார்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



991 சனவரி 22] [டாக்டர் மு. கருணாநிதி]

ள். சில பத்திரிகை ஆசிரியர்கள் எழுதுகிறார்கள். அதற்ாகவே சில வாரப் பத்திரிகைகள் நடைபெற்றுக்கொண்டிநக்கின்றன. அவைகளை எல்லாம் பொதுவாகத்தான் குறிப்பிட்டார்கள். அவர் குறிப்பிட்ட பிறகு காங்கிரஸ் கட்சிார்பிலே எழுப்பிய மறுப்புக்கு அவர் சொன்ன அந்த வாசகத்தை ரடுத்துவிடுவதுதான் முறையானது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த வாசகத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உவமையையும், செய்கிற காரியத்திற்குப் பொருத்தமாகத்தான் சொல்ல முடியும் என்பதை மட்டும் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே அமைதியான சூழ்நிலை உருவாகவேண்டும், விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும், தவறான காரியங்களைத் தமிழக மண்ணிலே செய்யக்கூடாது என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அது யாருடைய பொறுப்பு ? அகில இந்திய அண்ணா தி.மு.க.-வினுடைய உயர் மட்டக் குழுவினர் 27, சூன் 1990 அன்று ஒரு தீர்மானம் இயற்றி இருக்கிறார்கள். ''தமிழகத்தில் அமைதியான சூழ்நிலையை உருவாக்கிட, நவீன ஆயுதங்களால் கொலை, கொள்ளைகள் நடந்திடாமல் இருக்க தீவிரமான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென்று மத்திய மாநில அரசுகளை இந்த உயர்மட்டக் குழு கேட்டுக்கொள்கிறது'' என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அவர்களே, அன்றைக்கு மத்திய, மாநில அரசுகளுக்கு கூட்டுப் பொறுப்பு உண்டு என்று ஒப்புக்கொண்டார்கள். இன்றைக்கு அந்தக் கூட்டுப் பொறுப்பு மத்திய அரசுக்கு இல்லையா? தமிழகத்தினுடைய நிலப்பரப்பை, தமிழக அரசு, தமிழக முதல்வரவர்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவேண்டிய கடமை இருக்கிறது. ஆனால் நம்முடைய கடலோரம் யாருடைய பொறுப்பில் இருக்கிறது? கடற்படை யாருடைய பொறுப்பில் இருக்கிறது? கடலோரக் காவற்படை யாருடைய கையிலே இருக்கிறது? அங்கே இருக்கக்கூடிய, இவர்கள் ஆள வைக்கிறார்களே, அவர்களுடைய கையிலேதானே அந்தக் கட்சியின் கையிலேதானே இருக்கிறது? அதை யார் தடுப்பது? கடத்தல் நடப்பது கடல் மார்க்கமாகத்தானே, அதைத் தடுக்க வேண்டியது மத்திய அரசினுடைய பொறுப்புதானே? கடலோரத்தை மத்திய அரசு காக்கட்டும், தரைப் பகுதியை மாநில அரசு நிச்சயமாகக் கண்காணிக்க வேண்டும். இணைந்து நிறைவேற்றப்பட வேண்டிய இந்த பொறுப்பில் மாநில அரசைப் பலிகடா ஆக்குவது எப்படிச் சரியாகும் என்பதைத்தான் நான் இங்கே எழுப்ப நினைக்கிறேன்.

கடலோரக் காவலுக்கு எல்லைக் காவல் படை போட வேண்டுமென்று தமிழக முதல்வரவர்கள் கோரிக்கை விடுத்தார்கள்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வரதராசன், பொதுவாகவே நீங்கள் பேசிவிட்டுப் போங்கள்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே யார் எந்த வாதங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் நிச்சயமாகத் தீர்மானிக்க முடியாது. அவை மரபை ஒட்டிப் பேசப்படுகின்றனவா இல்லையா என்பதைப் பொறுத்துதான், அவைக் குறிப்பிலே அது இடம் பெற வேண்டுமா, இல்லையா என்பது தீர்மானிக்கப்பட வேண்டும் (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கும்பிட்டு வாழ்கிலேன் யான் என்ற கூற்றைச் சொல்கிறபோது கூட நான் மறுமொழி சொல்லியிருக்க முடியும். நான் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாமென்று நினைக்கிறேன். கும்பிட்டு வாழ்கிலேன் யான், கூற்றுவனையும் ஆடக் கண்டேன் என்று சொல்லுகின்ற அந்த வீரம் இருக்கிறதே, அது கூற்றுவனையும் ஆடக் கண்ட இலங்கை மாவீரனுக்குப் பொருந்துவதாக இருக்கலாம் என்று நான் திருப்பிச் சொல்லியிருக்கலாம். அப்படி என்று சொன்னால், கூற்றையே நம்பாதவர்கள் ஆயிற்றே, நமது முதல்வராக இருக்கட்டும், வங்காள முதல்வராக இருக்கட்டும், உவமைப் பொருத்தமில்லை என்று கூட நான் நேரத்தை எடுத்துக்கொள்ளலாம். வாதங்கள் வரலாம். அது ஒரு பக்கம் இருக்கட்டும். நான் நம்பவில்லை என்றுதான் சொன்னேன். இங்கே நேற்று எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களும், தோழமைக் கட்சியைச் சார்ந்தவர்களும் உள்ளேயும், வெளியேயும் நாங்கள் காணுகின்ற சில செய்திகளைச் சட்டமன்றத்திலே எடுத்துப் பேசுவதற்கு எங்களுக்கு உரிமையுண்டு. அப்படிப் பேசுவதனாலேயே நாங்கள் நயவஞ்சகர்கள் ஆகிவிடுவோமா? ** ஆகிவிடுவோமா? இப்படி ஒவ்வொருவரும் குற்றம் சாட்டினால் இங்கே உட்கார்ந்து இருப்பவர்கள் மனிதர்கள்தானா என்ற எண்ணம் வெளியே வந்துவிடுமோ என்ற காரணத்தால் நான் சொல்கிறேன், இந்த வாசகங்களை எல்லாம் எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசக்கூடிய வார்த்தை சட்டமன்ற விதிகளுக்குப் பொருந்துவனவா என்பதைத் தாங்கள் தான் தீர்மானிக்க வேண்டுமே தவிர, காங்கிரஸ் கட்சி சொல்லுகின்ற வார்த்தைகளைத்தான் இந்தச் சபையிலே நாங்கள் பேச வேண்டுமென்று சொன்னால் இந்தச் சபையிலே நாங்கள் இருப்பதிலே அர்த்தமே இல்லை.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதற்கு அப்படி அர்த்தம் இல்லை. திரு. வரதராசன் பேசுங்கள். (Interruption)

THIRU S. R. BALASUBRAMANIAM: Sir, we want a ruling from the Chair. What is your ruling?

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகளை, அவர்கள் தமிழகத்தைத் தவறான காரியங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது என்று சொல்வதிலே, கட்டுப்படுத்த வேண்டும் என்பதிலே யாருக்கும் ஆட்சேபணையில்லை. ஆனால் இது யாருடைய பொறுப்பு என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்றுதான் நான் கருதுகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த மாதிரி refer பண்ண வேண்டாம், திரு. வரதராசன் அவர்களே.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்ததற்கு நான் போய்விட்டேன். ஏன் அதைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார்கள்? (குறுக்கீடுகள்) அடுத்ததற்கு நான் போயாயிற்று. இப்படிக் குறுக்கிட்டால் நான் பேசவே முடியாது. (குறுக்கீடுகள்) இப்படிக் குறுக்கிட்டால் நான் பேசி முடிக்கவே முடியாது. (குறுக்கீடுகள்) இதிலே ஆத்திரப்பட வேண்டிய, பாராளுமன்றத்தில் பயன்படுத்தக் கூடாத சொல் எதுவுமே இல்லை. There is no unparliamentary word in this, (குறுக்கீடுகள்) அவர்களில் யாராவது ஒருவர் சொல்லட்டும் (குறுக்கீடுகள்) மரியாதைக்குரிய துணைத் தலைவர் அவர்களே, பாராளுமன்ற மரபுக்கு ஒவ்வாத சொற்றொடர் எதையேனும் நான் பயன்படுத்தியிருந்தால் அதை அகற்றுவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு. நான் அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துகிற பழக்கம் இல்லாத கட்சியைச் சார்ந்தவன் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) I am not yielding. (Interruption) They are intimidating me. (Interruption)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொதுவாக நரிகள் என்று சொன்னாரே தவிர, நரிக் குணங்கள் என்று யாரையும் அவர் ஒப்பிட்டுப் பேசவில்லை(குறுக்கீடுகள்).

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவர்கள் குறுக்கீட்டை நீக்கிவிட்டால் நான் சொன்னதையும் நீக்கிவிடலாம்.

144896

தமிழ்நாட்டுக்கு பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்கள் வந்து போனார்கள். அவருக்குக் காஞ்சிக்குச் சென்று, மரியாதைக்குரிய பெரியவர் ஜகத்குரு அவர்களைச் சந்திக்க நேரம் இருந்தது. போயஸ் தோட்டத்திற்குப் போய் அரசியல் விஷயங்களைப் பேசுவதற்கு நேரம் இருந்தது. விமான நிலையத்திலே பத்திரிகையாளர்கள் 'பி.எஸ். எஃப்' வேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்கள் கேட்கிறார்களே, அது பற்றி உங்கள் நிலை என்ன? என்று கேட்டபோது, 'அவர் கோருகிற அளவுக்கு அனுமதிக்க முடியாது' என்று பிரமதர் கூறுகிறார். பிறகு 'எவ்வளவு அனுமதிக்கலாம் என்பதையாவது முதலமைச்சரோடு பேசி இருக்கலாமே' என்று கேட்டபோது. 'இந்த விஜயத்திலே தமிழக முதல்வர் அவர்களோடு பேசுவதற்கு நேரமில்லை,' என்று சொல்லியிருக்கிறார்கள். காஞ்சி மடமும், போயஸ் தோட்டமும், டெல்லி பீடத்திலே இருப்பவர்களுக்கு, இருக்க நினைக்கிறவர்களுக்கு, இப்போது புனிதத் தல யாத்திரை இடங்களாக மாறிவிட்டன. போகட்டும்; அது அவர்களுடைய விருப்பம்; நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் எதற்குப் பேசினார், என்ன பேசினார் என்பதுதான் அங்கே இருக்கக்கூடிய கேள்வி. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை—இந்த ஆட்சியை ஆதரிக்கிற பத்திரிகை அல்ல......

**12.15 மணி.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. உ. ரா. வரதராசன்:** குறுக்கீடுகளையெல்லாம் கவனித்து கொஞ்சம் கூடுதல் நேரம் ஒதுக்குங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான், சீக்கிரம் முடித்து விடுங்கள் என்று சொல்கிறேன்.

**திரு. உ. ரா. வரதராசன்:** 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை இந்த ஆட்சியை ஆதரிக்கிற பத்திரிகை அல்ல அது தலையங்கம் எழுதுகிறது. (Matter of Propriety) என்ற தலைப்பிலே அதாவது பிரதமர் அங்கே போனதே முறையல்ல என்று. ஒருவேளை ராஜபவனத்திலே அழைத்துப் பேசியிருக்கலாம். ஆனால் போகிற நேரத்திலே, டெல்லியிலே அரசாங்க 'அட்டர்னி-ஜெனரல்'-லாக இருக்கக்கூடிய ஒருவரையும், அங்கே அழைத்துச் சென்று பேசியது ஒரு முறைகேடான செயல் என்று பத்திரிகை எழுதியிருக்கிறது. அடுத்து காங்கிரஸ். கட்சியினுடைய தலைவர் திரு. ராஜீவ் காந்தியும் வந்தார். வந்துவிட்டு, காஞ்சி மடத்திற்கும், போயஸ் தோட்டத்திற்கும் சென்று விட்டு, பிறகு தி.மு.க.-வை ஒரு சாடு சாடிவிட்டுச் சென்றிருக்கிறார். இந்தச் சந்திப்புகளினுடைய தொடர்ச்சியாக, சீராக உள்ள சட்டம், ஒழுங்கைச் சீர்குலைக்கத் தொடர்ந்து



சதிகள் தீட்டப்பட்டு வருகின்றன என்ற நிலைமை நிலவிக்கொண்டிருக்கிறது. ஒன்று காங்கிரஸ்காரர்களினுடைய, மலிவு விலை மதுவை எதிர்த்துப் போராட்டம்; அதைக்கூட அவர்கள் நேரடியாக நடத்தவில்லை. சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் முதல் போராட்டம் என்று முதலில் நடத்தினார்கள் ........(குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்........(குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், நீங்கள் சொல்லாமலே அதைச் செய்வோம்.†

**திரு. உ. ரா. வரதராசன்:** இதைக்கூட அவர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட விஷயத்தை வைத்துத்தான் நடத்தினார்கள். (சிரிப்பு) (குறுக்கீடு) சரி, நான் இதை மாற்றிக் கொள்கிறேன், அதைக்கூட அவர்கள் நேரடியாக நடத்தவில்லை என்று சுதந்திர போராட்டத் தியாகிகள் என்ற பெயராலேதான் நடத்தச் சொன்னார்கள். *

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே இந்த மதுவை எதிர்த்துப் போரிட்டவர்களிலே, பல ஆயிரக் கணக்கான பேர்களிலே, நானும் ஒரு தொண்டனாக இருந்து 20 நாட்கள் சிறையில் இருந்தவன். என்னைப் போய்.. (குறுக்கீடு) அப்படி இருக்க, அவர் சொல்வது, .... (குறுக்கீடு) உடனே சொல்வார்; யாருடைய தலைக்கு அது பொருந்துமோ அவர்தான் எழுந்திருக்கிறார் என்று சொல்லிவிடக்கூடாது என்று அச்சமாக இருக்கிறது. நான் அவருக்குச் சொல்வது என்னவென்றால், மாண்புமிகு திரு வரதராசன் அவர்களே, நீங்கள் உண்மையான கொள்கைப் பற்றோடு, நல்லக்கருத்தைச் சொல்கின்ற அந்தத் தியாகிகளையும், என்னைப் போன்ற தொண்டர்களையும் நீங்கள் பாராட்டவிட்டாலும், குற்றம் சொல்லி அவமானப்படுத்த வேண்டாம் என்று மட்டும் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. உ. ரா. வரதராசன்:** நான் அவமானப்படுத்துவதற்காகச் சொல்லவில்லை. உண்மையிலேயே அந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளை மதிக்கிறவன் நான். இங்கே என்னுடைய பக்கத்திலே அமர்ந்திருக்கிறாரே, திரு. கோவிந்தசாமி: சட்டமன்ற உறுப்பினர், அவரைத் துணைத் தலைவராகக் கொண்டிருக்கக்கூடிய இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், இந்தத் தேசத்தைப் பாதுகாக்க, வகுப்புக் கலவரத்திலே இருந்து, மதக் கலவரத்திலே இருந்து, இந்த மக்களுடைய ஒற்றுமையைப் பாதுகாக்க, சென்னையிலே தீச்சுடர் ஏந்தி ஊர்வலம் போன போது, "தியாகிகளே, சுதந்திரப் போராட்டத் தியாகிகளே உங்கள் பெயரால் நாங்கள் சபதம் ஏற்கிறோம்" என்று மரியதையோடு ஏற்றுக்கொண்டவர்கள்தான் நாங்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நான் சொல்வதற்குக் காரணம், அவர்கள் நேரடியாக அந்தப் போராட்டத்தை நடத்தவில்லை.

* பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

[ திரு. உ. ரா. வரதராசன் [ 1991 சனவரி 22

சுதந்திரப் போராட்டத் தியாகிகள்தான் முதலில் போராட்டத்தை நடத்தினார்கள். அந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளை சிறையில் அடைத்ததைக் கண்டித்துதான். மரியாதைக்குரிய திரு. குமரி அனந்தன் அவர்கள் போராட்டத்திலே ஈடுபட்டு சிறை சென்றார்கள்.

திரு. குமரி அனந்தன் : அந்தத் தியாகிகள் சிறப்பிக்கப்பட வேண்டுமென்பதும், அவர்கள் கௌரவமாக நடத்தப்பட வேண்டுமென்பதும் ஒன்றாக இருந்தாலும், அதோடு சேர்த்து— நான் அதைப்பற்றி இந்தச் சட்டமன்றத்திலே பேசியவன்—எனவே, மதுவை எதிர்க்க வேண்டுமென்பதிலே ஆழமான உணர்வோடுகூடதான் நான் எபபோதும் இருந்து கொண்டிருக்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மதுவை எதிர்க்க வேண்டும் என்ற ஆழமான உணர்வு தமிழ்நாட்டில் மட்டும் காங்கிரஸ்காரர்களுக்கு இருப்பது, பாராட்டுக்குரிய ஒன்று.

திரு. குமரி அனந்தன் : அதாவது 'தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு'.

திரு. உ. ரா. வரதராசன் : அந்தத் தியாகிகள் கைதானதற்குப் பிறகுதான், திரு. குமரி அனந்தன் அவர்கள் தலைமையிலே நடைபெற்றது, நான் கேட்க விரும்புகிறேன். சுதந்திரப் போராட்டத் தியாகிகள் .என்ன தமிழ்நாட்டிலே மட்டும்தான் இருக்கிறார்களா? மற்ற மாநிலங்களிலே சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கெல்லாம் 43 ஆண்டுகளிலே முடிவு கட்டப்பட்டு விட்டதா? ஏன் தமிழ்நாட்டிலே மட்டும் இந்த ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கமாக துணைப் போகிற ஒரு துணைப் போராட்டத்திலே, விடுதலைப் போராட்டத் தியாகிகள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய கேள்வி (மணியடிக்கப்பெற்றது). துணைத் தலைவர் அவர்களே, என் உரையை முடித்துக்கொள்ள ஒரே ஒரு நிமிடம்தான் தேவை (குறுக்கீடுகள்).

12-20 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; இனிமேல் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்), அடுத்த உறுப்பினரை நான் பேசக் கூப்பிடுகிறேன். மற்றவர்கள் எல்லோரும் உட்கார வேண்டும். திரு. பீட்டர் ஆல்போன்ஸ் பேசுவார். (குறுக்கீடுகள்). பீட்டர் ஆல்போன்ஸ் பேசுவார் (குறுக்கீடுகள்).

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.



1991 சனவரி 2° ]

திரு. உ. ரா. வரதராசன் : நீங்கள் என்னை அனுமதிக்க வேண்டும். துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னை முடிக்க அனுமதிக்க வேண்டும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : 1990—91ஆம் ஆண்டுக்கான ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக விவாதத்தில் கலந்து கொள்ள தாங்கள் அனுமதி அளித்ததற்காக உங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாமன்றத்திலே........ (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்சைப் பேச அழைத்துவிட்டேன் அவரும் பேசத் தொடங்கிவிட்டார். மற்றவர்கள் உட்காருங்கள். இதிலே ( Point of Order ) எதுவும் வராது, (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள். திரு ரமணி உட்கார வேண்டும். பீட்டர் அல்போன்ஸ் பேச வேண்டும்.

திரு. சா. பீட்டர். ஆல்போன்ஸ் : துணைத்தலைவர் அவர்களே, 1990—91 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் பங்கு கொள்வதற்காக வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின்...... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார வேண்டும். அடுத்த உறுப்பினரைப் பேச அழைத்து இரண்டு, மூன்று மணித்துளிகள் ஆகிவிட்டன. உங்களுக்கு உரிய நேரம் ஒதுக்கியாகிவிட்டது. திரு. வரதராசன் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ் தொடர்ந்து பேச வேண்டும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : 1990—91 ஆம் ஆண்டுக்கான ஆளுநர். உரையின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய........ (குறுக்கீடுகள்).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை) :—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே ( dis-o ( )-இல் இருக்கிறது. எல்லோரும் உட்காருங்கள் (குறுக்கீடுகள்). ( Poin of Odr )-இல் கண்டதையெல்லாம் திணிக்கக்கூடாது என்று இருக்கிறது. உட்காருங்கள், திரு ரமணி.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, திரு. வரதராசன் பேசிக்கொண்டிருந்தார், அவர் இன்னும் முடிக்கவில்லை. பல பேர் சொன்னவுடனே மற்றவர் பேசட்டும் என்றால் எப்படி

அவருடைய காலம் மீறி இருந்தாலும் கூட ஒரு நிமிடம் பேசி முடிவுரையை முடிக்கிற வார்த்தையைச் சொல்லுகிறேன் என்று அவர் சொல்கிறார். அதை மட்டும் அனுமதிக்க வேண்டும். நீங்கள் அப்படிப் பலருக்கு அனுமதி அளித்திருக்கிறீர்கள். பராளு மன்ற முறையில் நியாயம் அப்படித்தான் இருக்கிறது. ஆகவே அவர் பேசி முடிக்க அனுமதி அளியுங்கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் யாரும் பேச வேண்டாம். நான் ஏற்கெனவே தொடக்கத்திலேயே சொல்லி விட்டேன். ஒரு எச்சரிக்கை கொடுக்கும்போது வாக்கியத்தை முடிக்க வேண்டும். அப்படி வாக்கியத்தை முடிக்காமலே ab upt ஆக அடுத்தவரைக் கூப்பிட்டிருக்கிறோம். இங்கே 11.46-க்கு திரு. வரதராசனுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அவர் 12-01-க்கு முடித்திருக்க வேண்டும். குறுக்கீடுகளையும் சேர்த்து 12-20 மணி வரைக்கும் போய் இருக்கிறது. அதற்கு மேலும் எந்த வகையிலும் நீடிக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பது முறையாக இருக்காது. திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் பேசலாம். (குறுக்கீடுகள்.)

12-25 மணி.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் உரையின் மீது விவாதத்தில் கலந்துகொண்டு, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில்........(குறுக்கீடுகள்.)

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, தொடக்கத்திலேயே தாங்கள் நேரத்தைக் குறித்து உறுப்பினர்களுக்கு அறிவுரை தந்திருக்கிறீர்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். திரு. வரதராசன் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒரு நிமிடத்தில் முடிக்க வேண்டுமென்று துணை தலைவர் அவர்கள் சொன்னபிறகு, ஒரு நிமிடம் பேச அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்றுதான் அதற்குப் பொருள். அந்த நேரத்தில் துணைத்தலைவர் அவர்களின் தீர்ப்பிற்குப்பிறகு, சில உறுப்பினர்கள், இவரைப் பேசக்கூடாது என்று சொல்வதும், அதன் அடிப்படையில் துணைத் தலைவர் அவர்கள் (கூச்சல்-குழப்பம்).

மாண்மிகு பேரவைத் தலைவர் : வேறு விளக்கங்கள் வேண்டாம். யாராவது குறுக்கிட்டால் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன். திரு. பீட்டர் ஆல்போன்ஸ் பேசுங்கள்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : 1990—91 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் கருத்துக்களைச் சொல்ல எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் நன்றியைச்



சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்). இந்த உரையைப்பற்றிச் சொல்வதானால், இந்த உரைக்கும், கடந்த காலத்தில் உள்ள உரைக்கும் வித்தியாசத்தை நாங்கள் பார்க்கிறோம். இந்த உரைகளின் மீது உள்ள வேறுபாட்டைப் பார்க்கிற போது இந்த அரசு என்ன நினைத்துக்கொண்டிருக் கிறது, எப்படி........(கூச்சல்-குழப்பம்)....... இப்படிக் குறுக்கிட்டால் எப்படி நான் ஏற்றுக்கொள்வது? (கூச்சல்-குழப்பம்)

Thiru. M. Abul La heef : Sir, what is your ruling on my point cf orcer ? What is the ruling ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைவரும் உட்காருங்கள். திரு. குமரி அனந்தன் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

Thiru. K. Ramani ; Does ihis mean tha all of them are superior Members and we are all inferior Members ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேவையில்லாமல் பேச வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்).

Thiru.M. ABDUL LATHEEF : Whot is your ruling on my point of o.d r? I will not aliow unless you give your ruling on my point of order.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடை நேரத்தில் வீணாகி யிருக்கிற மணித் துளிகளை எண்ணிப்பார்த்து, ஒரு நல்ல முடி வினைத் தாங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கி கிறேன். காலையிலேயே தாங்கள் மிகுந்த கண்டிப்போடு ஒவ்வொருவரும் இவ்வளவு நேரம் தான் பேசவேண்டுமென்று நிர்ணயித்திருக்கின்றீர்கள். அது சில நேரங்களில் அளவுகடந்து போகும்போது கண்டிப்போடு தாங்களும், துணைத் தலைவர் அவர்களும் நடந்துகொண்டிருக்கிறீர்கள் என்றாலுங்கூட, அடுத் துப் பேசவிருக்கின்ற திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் பேச முயன்றும் பேசமுடியவில்லை. எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்து அவர்கள் பேசினாலும் கூட, அவருடைய பேச்சைக் கேட்க நானும் காத்துக்கொண்டிருக்கிறேன். அவர் நன்றாகப் பேசக்கூடிய உறுப்பினர்களில் ஒருவர். தாக்கிப் பேசினாலும் நன்றாகப் பேசுவார். எனவே, எனக்கிருக்கிற கவலையெல்லாம் அவர் பேசுவதை முழுமையாகக் கேட்க முடியாத ஒரு சூழ்நிலை தொடக் கத்திலேயே வந்து விடக்கூடாது என்பது தான். எனவே, நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவரிடத்தில் கூட இதுபற்றிச் சொன் னேன். இப்படி ஒரு கலவர சூழ்நிலையில் அவர் பேசுவதைவிட ஒரு அமைதியான சூழ்நிலையில் பேசுவது நல்லது என்பதற்காக நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இரண்டு, மூன்று வரி களில், ஒரு கன்குளூஷன் என்பார்களே அதைப்போல, திரு. வரதராசன் அவர்கள் தன்னுடைய முடிவுரையைச் சொல்வதற்கு தாங்கள் அனுமதித்துவிட்டால் நல்லது. எல்லா உறுப்பினர்

களும் என்னுடைய எண்ணத்தை உணர்ந்து எனக்கு ஆதரவளிப் பார்களேயானால் அவர் கன்குலூஷன் சொன்ன பிறகு திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் இங்கே அமைதியான முறையில் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அதை யோசிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

12-30 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங் கள். திரு. குமரி அனந்தன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர் களே, திரு. அர்ச்சுனன் போன்றவர்கள் கொஞ்சம் ஆவேசப் படுவதற்கு என்ன காரணம் இருந்தாலும், எங்கள் கட்சியினு டைய சார்பில் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் பேச வேண்டுமென்ப தற்காக, உடனே அவர் பேச வேண்டுமென்ற உணர்வோடு எங்கள் கட்சித் தோழர்கள் எல்லாம் இருந்தாலும், அவையை நடத்திச் செல்வதில், ஆளுங்கட்சியினுடைய தலைவராக இருந்து கொண்டிருக்கிற முதல்வர் அவர்கள் சொல்வதையும் ஏற்று எதிர்க்கட்சியிலே நாமெல்லாம் இங்கே அமர்ந்து கொண்டிருக்கிற நிலையிலே ஒத்துழைப்பை நல்குவது என்ற வகையில் முதலமைச்சர் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டு 2, 3 வரிகளில் அதை முடிப்புரையாக அவர் அறிவித்தால் நாங்களும் அதை ஏற்றுக்கொள்ளலாம் என்று உங்களுக்கு எங்களுடைய எண்ணத்தை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வரதராசன் அவர் கள் ஒரே வாக்கியத்தில் முடிக்க வேண்டும். மரியாதைக்காகவும், ஒரு மரபுக்காகவும் தான் இந்த வாய்ப்பை அளிக்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நன்றி. இப்படி ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு தமிழகத்தை வன்முறைக் களமாக ஆக்குவதற்கு, பல திட்டங்கள் போட்டிருந்தாலும்கூட தமிழக மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதை 'அறத்தினால் வீழ்ந்து விட்டாய்' என்று பாரதி பாடினானே, அதைப் போல மதச் சார்பின்மையை பாதுகாப்பதற்கும், பிற்பட்டவர்களுக்கு சமூக நீதி வழங்குவதற்கும் தன்னுடைய பதவியைத் துறந்த திரு. வி.பி. சிங் அவர்களுக்கு தமிழக மக்கள் அளித்த மகத்தான வரவேற்பு, இந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிகளை அனுமதிக்க மாட்டார்கள் என்பதைத்தான் காட்டுகிறது என்று சொல்லி அளித்த வாய்ப்பிற்கும், அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்திய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்தலைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, இந்த மன்றம் அமைதியாக நடக்க வேண்டுமென்பதால் நானும ஏற்றுக்கொண்டேன். எங்களுக்கும் இந்த நிலை பின்பற்றப்பட





வேண்டும். திரு. அர்ச்சுனன் அவர்களை இங்கே பேசவிடாமல் செய்தது நல்லதல்ல. இனிமேல் இந்த முறையை பின்பற்றுங் கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசவிடாமல் செய்தேன் என்கிறீர்களா, அல்லது வாக்கியத்தை முடிக்கச் சொல்லி நான் ஐந்து தடவைகள் சொல்லியும் முடிக்காததால் நிறுத்தினேன் என்கிறீர்களா? மறுபடியும் சொல்லுங்கள். நீங்கள் சொல்வது என்னைக் குற்றம் சாட்டுகிறமாதிரி அல்லவா ஆகிவிடும்?

திரு. எஸ். ஆர். இராதா ; வாக்கியத்தை முடிக்கவேண்டு மென்று ஒரு நிமிடம் அல்ல, அரை நிமிடம்தான் கேட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 11.09 மணிக்குத் தொடங்கி 15 மணித் துளிகளுக்கு பதிலாக 21 மணித் துளிகள் வரையில் போய் வாக்கியத்தை முடிக்கச் சொல்லியிருக்கிறேன். இப்போது திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் பேசுவதற்கு முன்னால் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு அவை பிற்பகல் ஒரு மணிக்கு முடிகிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் பேசியபிறகு இன்னொருவரும் பேச வேண்டும். மாலையில் 4-00 மணிக்கு அவை மீண்டும் கூடுகிறது என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எனவே, திரு. பீட்டர் ஆல்போன்ஸ் பேசியபிறகு ஒரு உறுப்பினருக்குத்தான் வாய்ப்பு வரும். திரு. பீட்டர் ஆல்போன்ஸ் பேசுகிறவரையில் எல்லோரும் அமைதியாக உட்கார்ந்து நன்றாகக் கேட்பீர்கள், ரசித்துக் கேட்பீர்கள் என்று நினைக்கிறேன். எனவே ரசனைக்கு வாய்ப்பாக திரு. பீட்டர் ஆல்போன்ஸ் பேசுவார்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டிலே மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றியிருக்கிற உரையின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில் கலந்துகொண்டு, கருத்துக்களைத் தெரி விக்க வாய்ப்புத் தந்த தங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

12-35 மணி

இந்த ஆளுநர் உரையைப் பற்றியும், இந்த ஆளுநர் உரை யிலே சொல்லியிருக்கக்கூடிய செய்திகளைப் பற்றியும் விவாதத் திலே பங்கு கொள்ளவேண்டும் என்று விரும்பிய நான், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பாக உரையாற்றி அமர்ந்து இருக்கிற அருமைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்கள் ஆற்றிய உரையைக் கேட்ட பிறகு, காங்கிரஸ் கட்சியின் சார்பாக, அவர்கள் சொன்ன கருத்துக் களுக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

உலகப் போர் அபாயத்தைப் பற்றிச் சொல்லி, பாலஸ்தீன மக்களின் விடுதலை உணர்வைப்பற்றிச் சொல்லி, அமெரிக்கா ஏற்றுக் கொண்டு இருக்கிற தன்னிலை விளக்கத்தைப் பற்றி எல்லாம் சொன்ன அந்த தரமான நண்பர், காங்கிரஸ் கட்சியை எப்படி யாவது குறைகூறிப் பேசவேண்டும் என்கிற ஒரு எண்ணத்திலே பேசினார். அவர்களுக்கு இருக்கிற கட்டாயங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். அவர்களுக்கு இருக்கிற நிர்பந்தங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். ஏன் என்று சொன்னால்

* * *

ஆனால் அப்படி நான் சொல்ல விரும்பவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவர் அவர்களே, ஒரு பெரிய போராட்டத்திற்குப்பிறகு * * என்கிற வார்த்தையே எடுக்கப்பட்டுவிட்டது, அவைக்குறிப்பிலே இடம் பெறக்கூடாது என்று, மீண்டும் அதை நண்பர் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் இங்கே வலியுறுத்துவது, குறிப்பிடுவது நல்லதல்ல. அதுவும் எடுக்கப்பட வேண்டும் அவைக் குறிப்பி லிருந்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டதோடு நிற்கவேண்டும், பிறகு அவையிலிருந்து எடுப்பதாக வந்துவிடக்கூடாது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : ஒரு பழமொழி சொல் வார்கள், 'தாளம் கொட்டுகிற மாமியாருக்கு மேளம் கொட்டு கின்ற மாப்பிள்ளை' என்று. அதைப்போல, அவர்கள் இப்போது இருக்கிற இடத்திலே அப்படித்தான் பேச வேண்டும். அவர், சில விஷயங்களை நியாயப்படுத்தித்தான் ஆகவேண்டும், சில விஷயங்களுக்கு வக்காலத்து வாங்கித்தான் ஆகவேண்டும். அதைப் பார்த்து நாங்கள் பரிதாபப்படத்தான் முடியுமே தவிர, நண்பர் திரு. வரதராசன் அவர்களுக்கு நாங்கள் என்ன சொல்ல முடியும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அனுகூலச் சத்துரு என்று ஒரு வார்த்தையைச் சொல்வார்கள். நண்பர் திரு. வரதராசன் அவர்கள் இன்று ஏதோ இந்த அரசை ஆதரித்துப் பேசுவது போல, இந்த அரசுக்கும், இன்றுள்ள மைய அரசுக்கும் ஒரு பெரிய மோதலை உருவாக்கிவிட்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு செத்துவிட்ட பிரச்சினையைப் பற்றி, இல்லாத பிரச்சினையைப் பற்றி, நீங்கள் கலைப்பீர்களா, கலைக்க விடுவோமா, தமிழக மக்கள் அனுமதிப்பார்களா என்று யாரையோ தூண்டுவதைப் போல, அனுகூலச் சத்துரு என்று சொல்வார்களே அதைப் போலச் சொன்னார்கள். அவர் சொன்னார், நான்கூட நினைத்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



தேன், இந்தக் கட்சியிலே இருக்கிற நண்பர்கள் எல்லாம் நினைத்தார்கள் 2, 3 நாட்களாக பிரதமருடைய பேச்சுக் களிலே அதைப் பற்றியில்லையே என்று. அதற்கு நான் நினைத்தேன். சதாம் உசேனுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். சதாம்உசேன் யுத்தத்தை ஆரம்பித்திருக்கிற காரணத்தால் பிரதமருடைய கவனம் வேறு பக்கத்திற்குத் திரும்பிவிட்டது என்று நினைத்துக் கொண்டு இருக்கின்றபோது சதாம் உசேனுக்கு நன்றி சொல்வதற்கு இந்த அவையிலே சில நண்பர்கள் முயற்சி செய்கிறபோது, நம்முடைய அருமை நண்பர் திரு. வரதராசன் அவர்கள், அல்ல அல்ல, இதை நீங்கள் கலைத்துத் தான் ஆகவேண்டும் என்று ஒரு சவால் விடுவதைப் போல இன்றைக்குப் பேசி இருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஐயா, பேசட்டும் ஐயா. இப்போது என்ன பெரிய குற்றச்சாட்டு? சும்மா குறுக்கிட்டுக் கொண்டு இருக்கக்கூடாது. இதே வேலைதானா ? பேசட்டும், விடுங்கள். இப்போது என்ன பெரியதாகச் சொல்லிவிட்டார்? அவர்கள் கருத்தை அவர்கள் சொல்கிறார்கள், விடுங்கள். (குறுக் கீடு) இப்படித் தொடர்ந்து பேசிக்கொண்டு இருந்தால், நான் அவையை ஒத்தி வைத்துவிட்டுப் போய்விடுவேன். அதுதான் வழக்கமாக இனிமேல் ஆகிவிடும். போகிற போக்கைப் பார்த் தால், அவையை நடத்த முடியாது போல் இருக்கிறது. விடுங்கள், அவர் பேசட்டும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பிரதமர் அவர்கள், இந்த தேசத்தினுடைய பிரதமர் அவர்கள், இந்தத் தேசத்தினுடைய முன்னாள் பிரதமர் மதிப்பிற்குரிய ராஜீவ் காந்தி அவர்கள், காஞ்சிக்குச் சென்று, அங்கே வயோதிகத்தினாலேயும், நோயினாலேயும் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிற காஞ்சி மா முனிவரைப் பார்ப்பதற்காகப் போய்விட்டு வந்ததையும், இந்தத் தமிழ்நாட்டிலே அங்கீகரிக்கப்பட்ட கட்சியினுடைய, எதிர்க்கட்சி யினுடைய தலைவராக இருக்கிற அம்மையார் அவர்களை மரி யாதை நிமித்தம் வீட்டிற்குச் சென்று சில நிமிடங்கள் அளவளாவி யதையும், இவ்வளவு கொச்சைப்படுத்த முடியும் என்று சொன் னால் நாங்கள் அதற்கு ஆயிரம் ஆயிரம் விளக்கங்களைச் சொல்ல முடியும். நான் ஒன்றைச் சொல்கிறேன். தமிழ் நாட்டினுடைய எதிர்காலம் . . . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. கொச்சைப் படுத்துதல் என்பது ஒரு குற்றச்சாட்டு போல இருக்கிறது என்று அவர் கருதுகிறார்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : அவர்கள் எல்லாம் திருத் தலங்கள் என்று சொன்னார்கள். வடக்கிலிருந்து வருகிற தலைவர் களுக்கு எல்லாம் போயஸ் தோட்டமும், காஞ்சியும் திருத்தலங்கள் என்று சொன்னார்கள். இந்த நாட்டிலே ஜனநாயகம் அனுமதித் தால், அவைகள்தான் திருத்தலங்கள். இனி நீங்கள் ஒன்றும் . . . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தலங்கள் என்று சொல்வதை கொச்சைப்படுத்துதல் என்று ஏன் நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்கள் ? வேறு வாக்கியத்தைச் சொல்லுங்கள்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : இந்த நாட்டிலே அதிகாரமும், ஆட்சியும் யாரிடமிருந்து வரவேண்டும் என்று . . . . (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு). அது வேறு விஷயம். இந்த நாட்டிலே அதிகாரம் எங்கிருந்து வரவேண்டும் என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அதிகாரம் போயஸ் தோட்டத்திலேயிருந்து வர வேண்டும் என்று மக்கள் தீர்மானித்தார்கள் என்று சொன்னால், நீங்களும், நாங்களும் குறுக்கே நின்று என்ன செய்துவிட முடியும் ? அது இந்த நாட்டினுடைய வரலாற்றுக் கட்டாயம். இந்த நாடு போடுகின்ற வரலாற்றுப் பாதை. அதை நீங்களும் நானும் மாற்றிவிட முடியாது. ஆகவே ஜனநாயக உணர்வுகளிலே அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சியினுடைய தலைவியை, இந்த நாட்டினுடைய பிரதமரும், முன்னாள் பிரதமரும் சென்று பார்த்தார்கள் என்று சொன்னால், இதையெல்லாம் நீங்கள் விமர்சனத்திற்கு உள்ளாக்குவீர்கள் என்று சொன்னால், நாங்களும் ஆயிரம் ஆயிரம் காரியங்களைச் சொல்ல முடியும். அதைவிட பெரிய விஷயங்களை இந்த மாமன்றம் விவாதிக்க வேண்டும் என்று எண்ணுகிறோம். இந்த தேசத்திலே, தேச பக்தி என்பது காங்கிரஸ் கட்சிக்கு ஒட்டு மொத்தமான குத்தகையா என்று கேட்டார்கள்.

12-40 மணி

மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்களுக்குச் சொல்வேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்களே, இதை ஒட்டுமொத்தமான குத்தகை என்று சொல்லவில்லை. நீங்களும் எங்களோடு சேர்ந்து நின்று இதைப் பற்றிச் சற்று சிந்தியுங்கள் என்றுதான் சொல்கிறோம். தேசத் துரோகம் என்று யார் சொன்னது ? நாங்கள் இந்த நாட்டிலே தமிழக அரசினுடைய முதலமைச்சர் அவர்களைக் குறை சொல்வதற்காக பேசவில்லை. தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கான முதலமைச்சர் மட்டுமல்ல, 4½ கோடி தமிழ் மக்களுடைய முதலமைச்சர். அந்த முதலமைச்சரைப் பார்த்து இந்த தேசத்திலே பாராளுமன்றத்திலே இருக்கின்ற பிரதமர் அவர்கள் இந்த நாட்டினுடைய ரகசியங்கள் வெளியே போய்விட்டது என்று சொன்னால், அதைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்த அவமானமாக நாங்கள் நினைக்கவில்லை. இந்த நாட்டிலே உள்ள 4½ கோடி தமிழருக்கும் விடப்பட்ட சவாலாகத்தான் நினைக்கிறோம். அந்த முதலமைச்சர் என்ற ஆபீஸ், 'டு தட் ஆபீஸ்' —ஆனந்த விகடன் கூட இந்த வாரம் தலையங்கத்தில் எழுதியிருக்கிறது. அந்தத் தலையங்கத்தைக் கூட தயவு செய்து படித்துப் பாருங்கள், நாங்கள் அதைத்தான் கேட்கிறோம்—நாங்கள் அதைச் சாதாரண



மாக நினைக்கவில்லை. ஒரு நாட்டிலே முதலமைச்சர் என்ற முறையிலே பிரதமர் அவர்கள் சில ரகசியங்களைச் சொல்கிறார் கள். அந்த ரகசியங்களை வெளியே சொல்லிவிட்டதாக பிரதமரே பாராளுமன்றத்திலே குற்றம் சாட்டுகிறார். அதை நாங்கள் கேட்க வேண்டாம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா ? அந்த வார்த்தைகளை நாங்கள் அப்படியே மறந்துவிட வேண்டுமென்று நீங்கள் எண்ணுகிறீர்களா ? இல்லை, அதை ஏன் சொன்னார் என்று கேட்டால், அதை நீங்கள் தேசத் துரோகம் என்று சொன் னால், நண்பர் வரதராசன் அவர்களே, நான் பேரவைத் தலைவ ரிடம் சொல்கிறேன். ஓராயிரம் முறை இந்த தேசத் துரோகத் தைச் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடு) நீங்கள் தேசத் துரோகம், தேசத் துரோகம் என்று சொன்னீர்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வரதராசன் அவர் கள். (குறுக்கீடு) இல்லை. அவர் இதை மறுக்கிறார். திரு. பீட்டர் ஆல்போன்ஸ் கொஞ்சம் உட்காருங்கள், அவர் இதை நேரடியாக மறுக்கிறார் என்பதால்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை மையமாக வைத்து திரு. பீட்டர் ஆல் போன்ஸ் அவர்கள் பேசிக் கொண்டிருப்பதால் குறுக்கிட நேரிடு கிறது. இந்த அவையினுடைய நேரத்தை நான் வீணடிக்க விரும்பவில்லை. தேசத் துரோக அரசு என்று நான் சொல்ல வில்லை. இங்கே தேசத் துரோக அரசினுடைய உரையைப் படிக்காதே என்று குரல் எழுப்பியவர்களே அவர்கள்தான். அந்த ஆனந்த விகடன் தலையங்கமே சொல்கிறது. இந்தக் குற்றச் சாட்டை சாட்டிய பிரதமர், ஒன்று அதைப் பகிரங்கப்படுத்த வேண்டும், இல்லையேல் அதை வாபஸ் பெற வேண்டும் என்று. அதைப் படித்துவிட்டு, அதை, அவர்கள் ஆதரிக்கிற பிரதமர் செய்யத் தயாரா என்பதை நான் கேட்கிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : நான் நண்பர், மாண்பு மிகு உறுப்பினர் திரு. வரதராசன் சொல்வதை ஒத்துக்கொள் கிறேன். ஆனந்த விகடன் பத்திரிகை தலையங்கம் அதிலே எழுதியிருக்கிறது. சமீபத்திலே இதன் உச்ச கட்டமாக தமிழக முதல்வர் திரு. கருணாநிதிக்கு மட்டுமே தெரிவிக்கப்பட்ட தனிப் பட்ட ஒரு தகவல், யாழ்ப்பாணத்திலுள்ள விடுதலைப் புலிகளின் தலைமை நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது என்று பிரதமர் பகிரங்மாக நாடாளுமன்றத்திலே குற்றம் கூறியிருப்பது தமிழக மக்களை அதிர்ச்சி அடைய வைத்திருக்கிறது என்று சொன்னார்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, மாண்பு மிகு பாரதப் பிரதமர் அவர்கள், பாராளுமன்றத்தில் பேசும்போது தமிழக அரசுக்கு தெரிவித்த சில தகவல்

கள் யாழ்ப்பாணத்திற்குத் தெரிந்திருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறாரே தவிர, முதலமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்த கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று சொல்லவில்லை, ஒன்று. இரண்டாவது பிரதமர் அவர்கள் சென்னைக்கு வந்தபோது முதலமைச்சர் அவர்களை மட்டும் சந்திக்கவில்லை. வேறு சிலரையும் சந்தித்து இருக்கிறார்கள் ரகசியமாக. அவர்கள் மூலமாக அந்தத் தகவல் போயிருப்பதாக ஏன் சொல்ல முடியாது? 'ரச' மூலமாகப் போயிருக்கிறது. அதுவும் தமிழக அரசைக் களங்கப்படுத்த வேண்டுமென்பதற்கு. அந்த 'ரா' மூலமாக போயிருக்கக் கூடாது என்பதற்கு ஏன் முகாந்திரங்கள் இல்லையா? அந்த மாதிரியும் அர்த்தம் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா? நீங்கள் முதலமைச்சரைச் சொல்லும்போது வேறு சிலரையும் சந்தித்திருக்கிறார், ரகசியமாக அவர். அவர்கள் மூலமாகவும் போயிருக்கலாம் என்று நான் சொல்கிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும், ஒவ்வொரு எழுத்தையும் நான் ஒத்துக்கொள்கிறேன். நான் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவன் என்ற முறையில் இந்த சட்டமன்றத்தில் பேசவில்லை. நான் சொல்கிறேன். பிரதமர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான குழப்பத்திற்கும் இடம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. மேலும் இந்த மாமன்றத்திலே இருக்கிற மரியாதைக்குரிய உறுப்பினர், வரதராசன் அவர்களிடம் சொல்வேன். சர்வ கட்சித் தலைவர்களை பிரதமர் அவர்கள் அழைத்துப் பேசியிருக்கிறார். அதற்குப் பிறகு திருமதி ஜெயந்தி நடராஜன் எங்கள் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், சந்திரசேகரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார், பிரதமரைப் பார்த்து. நீங்கள் ட தைப்பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்ட பிறகு, அதிலே ஒவ்வொரு எழுத்திற்கும் நான் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன் என்று இந்த நாட்டினுடைய பிரதமர், வேறு எங்கும் அல்ல, இந்த நாட்டினுடைய பாராளுமன்றத்திலே சொல்லியிருக்கிறார். அதிலே அவர் எப்படிச் சொல்லியிருந்தார் என்று சொன்னால், இப்போது நம்முடைய மரியாதைக்குரிய லத்தீப் அவர்கள் சொல்வது போல் அங்கே பேசுகின்றபோது, இங்கே பேசுகின்றபோது, 'ரா'விடம் பேசுகின்றபோது சொன்னார் என்று சொன்னால், அந்த வார்த்தைகள் வேறு விதமாக இருந்திருக்கும். ஆனால் பிரதமர் அவர்கள் ஒரு எழுத்து, ஒரு அட்சரம் கூட வித்தியாசம் இல்லாமல் ஒரு எழுத்திலே கூடச் சந்தேகம் வராமல் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார் "நான் முதல்வர் அவர்களோடு விவாதித்த விஷயங்கள்" என்று. அதுதான் இங்கே பிரச்சினை. அதைத்தான் நான் சொல்கிறேன். நான் கலைஞர் அவர்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் என்ற முறையில் பார்க்கவில்லை. தமிழகத்தினுடைய முதலமைச்சர், இந்திய தேசிய



அரசியலிலே அகெளரவப்படுத்தப்பட்டு இருப்பதை எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதிலே அவர்கள் அக்கினிப் பிரவேசம் செய்து வெளியே வரவேண்டும். அவர்கள் அதை நிரூபிக்கவேண்டும். இந்த நாட்டிலே முதலமைச்சராக இருக்கின்ற அவர்கள் இந்த நாட்டினுடைய அரசியல் காப்பு, ரகசியக் காப்புப் பிரமாணத்தின்படி பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்ட அவர்கள் . . . .(குறுக்கீடு).

12-45 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அக்கினிப் பிரவேசம் செய்து வெளியே வர வேண்டும் என்று நண்பர் ஆல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். நிச்சயமாக அக்கினிப் பிரவேசம் செய்ய நான் தயார், 25 ஆம் தேதி, (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: இந்தக் குற்றச்சாட்டை இந்த மாமன்றத்திலே சொல்லுகிறேன் என்று சொன்னால் அதை ஏதோ ஒருகுறுகிய அரசியல் காரணங்களுக்காக நான் பேசவில்லை. The issue that is involved; the office he held; and the speech tha was made in the highest forum of land அதைத்தான் நாங்கள் சொல்லுகிறோம். இதை வந்து நீங்கள் தேசத் துரோகம், தேசத் துரோகம் என்று சொன்னால் அதற்கு நாங்கள் என்ன பதில் சொல்லமுடியும் (கூச்சல் - குழப்பம்).

திரு. உ. ரா. வரதராசன்: அவர்தான் தேசத் துரோகம் என்று சொன்னார், நாங்கள் சொல்லவில்லை.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: இரண்டாவதாக விடுதலைப் புலிகள், விடுதலைப் புலிகள் என்று காங்கிரஸ் காரர்கள் ஓயாமல் பேசுவதாகச் சொன்னார்கள். ஆனால் நாங்கள் சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றும் எவ்வளவு தூரம் உண்மை என்று நாங்கள் இப்போது உணர்ந்து கொண்டிருக்கிறோம். நடைபெறுகிற சம்பவங்கள் அதை உணர்த்திக் கொண்டிருக்கின்றன. உல்ஃபா என்கிற தீவிர இயக்கத்திற்கும் Peoples war Group. என்று சொல்லக்கூடிய ஆந்திராவிலே இருக்கக்கூடிய வன்முறை இயக்கத்திற்கும் ஆயுதங்கள் தமிழ் நாட்டின் மூலமாகத்தான் வந்து போகின்றன என்பதை நான் சொல்லவில்லை, இந்த நாட்டிலே பாராளுமன்றத்திலே பேசிய பிரதமர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேல் நாங்கள் என்ன சொல்ல முடியும் . . .

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிரதமர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னதற்குப் பின்னரும் ஆல்போன்ஸ்

அவர்கள் இவ்வளவு கஷ்டப்படுவானேன். இவ்வளவு சிரமப்பட்டு, இவ்வளவு கஷ்டப்பட்டுப் பேசி—இவ்வளவு உணர்ச்சி வயப்பட்டுப் பிரதமருக்கு தெரிந்த செய்திக்கு இவ்வளவு அவர் கஷ்டப்படத் தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களே, பிரதமரே தெரிவித்து விட்டார் என்கிறீர்களே, வேறு ஏதாவது தெரிவியுங்கள்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : இந்த தேசத்தினுடைய சட்டம் ஒழுங்குப் பிரச்சினை மிக அமைதியாக இருப்பதாக ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நாடெல்லாம் அமைதியாக இருக்கிறது. ஆயுத நடமாட்டம் இல்லை, தீவிரவாத இயக்கங்கள் இல்லை என்றெல்லாம் ஆளுநர் உரையிலே சொல்லப் பட்டிருக்கிறதே அதனால் சொல்லுகிறேன். பிரதமர் தெரிவித்த தை நீங்கள் அப்படியே ஒத்துக்கொண்டீர்கள் என்றால் நான் திரும்ப வாதம் நடத்த வேண்டிய அவசியமே ஒன்றும் இல்லை. பிரதமர் சொன்ன பிறகுதான் ஆளுநர் உரையாற்றுகிறார். அந்த ஆளுநர் ஆற்றுகிற உரையில்தான் நீங்கள் சொல்லுகிறீர்கள், அமைதி தமிழ்நாடு பூராவும் இருக்கிறது என்று.

முன்னாள் உள்துறை அமைச்சர் சிதம்பரம் அவர்கள் மிகத் துல்லியமாக தகவல்களைத் தந்திருக்கிறார். ஏதோ அப்படி இப்படி என்று மூன்றாம்தர மேடையில் பேசுவது போலப் பேசிவிடவில்லை. அது பத்திரிகையில் கூட வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆல்போன்ஸ் அவர்களே, என்னுடைய கணக்கு இன்னும் 3 மணித்துளிகள்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : நமது மரியாதைக்குரிய சிதம்பரம் அவர்கள் ஒரு சவாலையே விட்டிருக்கிறார்கள். அந்தத் தகவல்கள் இந்த அரசுக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னால், அந்தத் தகவல்களை நானே தருகிறேன் என்று சொல்லியிருக் கிறார்கள். அதற்கு நாங்கள் பதில் கேட்கிறோம். அந்தத் தகவல் கள் இந்த அரசுக்கு இதுவரை வரவில்லையா ? வரவில்லை என்று சொன்னால் யார் காரணம் ? முதலமைச்சருக்குக் கிடைக்க வேண்டிய தகவல்கள் வேண்டுமென்றே மறைக்கப்படுகிறதா ? அந்தத் தகவல்கள் வேண்டுமென்றே கிடைக்காமல் செய்யப்படு கிறதா என்றெல்லாம் நாங்கள் பிரச்சினைகளைக் கிளப்புகிறோம். ஆகவே ஏதோ மேலோட்டமாக நின்றுகொண்டு அரசியலுக்காக ஆற்றுகின்ற உரையாக இதை நான் எண்ணவில்லை. எதிர்காலத் தமிழகமே வெடித்து கேள்விக்குறியாக நிற்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அரசே முடங்கிக் கிடக்கிறது. 'It is in a tandstill. The e is no movemen . Ther; i. no motion அரசினுடைய இயந்திரமே முடங்கிக் கிடக்கிறது. ஏன் இந்த



நிலை? இதற்கு யார் காரணம்? அமைச்சர்களே மேடைகளில் பேசுகிறார்கள். கலைத்தால் மீண்டும் தேர்தலுக்கு வருவோம் என்று சொல்லுகிறார்கள். எனக்கு இன்னும் ஒரு வேதனை. முதலமைச்சரே பேசுகிறார், கலைத்தால் நான் மீண்டும் கருவாவேன், திருவாவேன் என்று பேசுகிறார். என்ன அவசியம் உங்களுக்கு ஏன் அந்தப் பயம் ? மடியிலே கனம் இருந்தால் வழி யிலே பயம் என்று சொல்லுவார்கள். இந்த விஷயத்திலே மடி யிலே கனம் இருக்கிற காரணத்தினால் தான் ஆளுநர் உரையே ஆளுநர் உரையாக இல்லை, அது ஒரு தன்னிலை விளக்கமாகத் தான் இருக்கிறது. * *

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது நம்முடைய முன்னாள் உள்துறை இணை அமைச்சர் சிதம்பரம் அவர்கள் அரசுக்கு, தான் காட்டுகின்ற கருத்துக்களை அல்லது வெளியிடுகின்ற தகவல் களை மறுத்தால் அதற்கான ஆதாரங்களைத் தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பதில் என்ன என்று கேட்கி றார்கள். மாண்புமிகு சிதம்பரம் அவர்கள் இப்போது அமைச்ச ராக இல்லை. மத்திய அரசியலிலேயும் இடம் பெறவில்லை. அவருக்கு யார் தகவல்கள் கொடுக்கிறார்கள். அவர்கள் கொடுக் கின்ற தகவல்கள் உண்மையான தகவல்கள், அரசு தகவல்கள் என்று சொன்னால், வெளியே இருக்கின்ற ஒருவருக்கு மத்திய அரசாங்கத்திலேயிருந்து தகவல்கள் கொடுக்கிறார்களா? அல்லது இரகசியத் துறை தகவல்கள் கொடுக்கிறதா? அப்படி என்று சொன்னால் இந்த நாட்டிலே இருக்கிற மத்திய அரசாங்கம் நடக்கிறதா? மற்றவர்களுக்குத் தகவல்களை விநியோகம் செய்து நாட்டுக்கு மிகப் பெரிய ஆபத்தை ஏற்படுத்திக் கொண்டிருக் கிறார்களா என்பதற்கு எல்லாம் விளக்கம் சொல்ல வேண்டும். சிதம்பரம் அவர்கள் தனக்குக் கிடைத்த தகவல் எங்கேயிருந்து கிடைத்தது என்று சொல்ல, இந்த நாட்டுக்கு அறிவிக்க கடமைப் பட்டவராக இருக்கிறார். சிதம்பரத்திற்குக் கிடைக்கிற தகவல் மற்றவர்களுக்குக் கிடைக்கக் கூடாது என்பதற்கு என்ன நியாயம் இருக்கிறது? எனக்குக் கூட கிடைக்கலாம்.

12 -50 மணி

திரு. குமரி அனந்தன்: மாண்புமிக்க சபாநாயகர் அவர்களே இப்பொழுது நமது அருமைக்குரிய மாண்புமிகு அப்துல் லத்தீப் அவர்கள் . . . . . .(குறுக்கீடு) சபாநாயகர் அவர்களே உங்களுடைய தீர்ப்புகள் இப்படி அப்படி மீறப்பட்டால் நான் என்ன பண்ணுவது . . . . . (குறுக்கீடு).

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1991 சனவரி 22

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசட்டும். நான் பிறகு சொல்கிறேன்.

திரு. குமரி அனந்தன் ; இங்கே திரு. அப்துல் லத்தீப் அவர் கள், முன்னாள் மத்திய இணை அமைச்சர் திரு. சிதம்பரம் அவர்களுக்கு எங்கிருந்து இந்தத் தகவல் கிடைத்தது, யார் சொல்கிறார்கள் என்பதைச் சொல்கிறபோது சிதம்பரம் அவர்க ளுடைய கருத்துக்களுக்கே சில நோக்கங்கள் கற்பிப்பதைப்போலே அவர்கள் இங்கே சொன்னார்கள். அவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தது என்பது அல்ல, அவர்கள் சவாலாக, தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த இந்த இடங்களிலே இந்த உல்ஃபா வுக்கு என்று பயிற்சி நிலையங்கள் இருந்தன என்றும், (குறுக்கீடு) இருங்கள் சொல்கிறேன், இங்கிருந்து புலிகளிலே சிலர் அங்கே பயிற்சி கொடுக்கச் சென்றார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதை அரசாங்கம்—அதாவது தமிழ்நாட்டு அரசாங்கம்—வெளி யிட விரும்பவில்லை என்று சொன்னால் நானே வெளியிடுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று அவர் சொன்னால், இந்தத் தகவல் எங்கிருந்து வந்தது என்று நாம் கேட்கக் கூடாது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். அன்னை இந்திரா வினுடைய கணவராக இருந்த மரியாதைக்குரிய ஃபெரோஸ் காந்தி அவர்கள் (குறுக்கீடு)—கொறடா ஏதோ சொல்ல வந்த மாதிரி இருந்தது, அதற்காகத் திரும்பினேன். பாராளுமன்றத்திலே சொல்கிறபோது சி.பி.ஐ. ரிப்போர்ட்டை வைத்தார்கள். நான் சொல்ல வருவதைத் தயவு செய்து நீங்கள் கவனமாகக் கேட்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். பாராளுமன்றத்திலே வைத்தபோது எப்படிக் கிடைத்தது உங்களுக்கு என்று கேட்டார் கள். அந்த நேரத்திலே சபாநாயகர் தீர்ப்புச் சொன்னார். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இங்கே சொல்கிறபோது அந்தத் தகவல் சரியாக இருக்கிறதா என்று பாருங்கள், எங்கிருந்து வந்தது என்று நீங்கள் கேட்பதற்கு முடியாது என்று தீர்ப்பளித்து இருக் கிறார்கள். எனவே சிதம்பரம் அவர்கள் சொல்கிற தகவல் சரி யானதா என்று நீங்கள் பாருங்கள். உங்களால் முடியவில்லை என்றால் அல்லது நீங்கள் கேட்டால் அவர் தர இருக்கிறார். அதை விட்டுவிட்டு அவருக்கு எப்படிக் கிடைத்தது என்று அதற்கு உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது என்பது, தீர்ப்பின் அடிப்படை யிலே, சபாநாயகர் அவர்களே, நான் சொல்ல விரும்புகிற செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள், சொன்னமாதிரி **

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை முடித்துவிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1991 சனவரி 22] [டாக்டர் மு, கருணாநிதி]

முன்னாள் மத்திய அமைச்சர் நண்பர் சிதம்பரம் அவர்கள் வெளி யிட்டுள்ள கருத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் இங்கு எழுப்பி, அதன் தொடர்பாக சில கருத்துக்கள் இங்கே கூறப்பட்டு இருக்கின்றன. எப்படிக் கிடைத்தது, எங்கிருந்து கிடைத்தது என்ற அந்தப் பிரச்சினையில் எல்லாம் நான் நுழைய விரும்பவில்லை. அப்துல் லத்தீப் அவர்கள் அதிலே ஒரு பிரச்சினையை எழுப்பி, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதற்கு அவருடைய விளக்கத்தைத் தந்திருக் கிறார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது ஒரு நாட்டில் இது போன்ற அராஜகங்கள், இந்தியாவிற்குள்ளே தான் அஸ்ஸாம் இருக்கிறது என்றாலும் கூட அஸ்ஸாமிலே உள்ள தீவிரவாதிகள் தமிழ்நாட்டிலே மாத்திரம் அல்ல, வேறு பல மாநிலங்களிலும் ஊடுருவினார்கள் என்றெல்லாம் கூடச் சொல்லப்பட்டது. தமிழ் நாட்டிலே அப்படிப்பட்ட ஊடுருவல் அவர்கள் பயிற்சி முகாம்கள் வைத்துக் கொண்டு, ராணுவ முகாம்கள் வைத்துக் கொண்டு பயிற்சி பெறுகின்ற அளவுக்கு இல்லை என்ற கருத்துத்தான் போலீசாரால் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வேலூ ரிலே அஸ்ஸாம் தீவிரவாதி ஒருவர்—உல்ஃபா—உல்ஃபா என்றால் அதைச் சொல்லும்போது ஏதோ ' உல்ஃப் ' என்பதைப் போன்ற ஒரு பயங்கரமான பொருள் அதற்கு வந்தாலும் கூட 'United Libaration Front of Assam, என்பது தான் உல்ஃபா என்று சொல்லப்படுகிறது. அதைக்கூட, இப்பொழுதுதான் நாங்கள் கேள்விப்படுகிறோம். அந்தச் சொல்லைப் பற்றிக் கூட இப் பொழுதுதான் கேள்விப்படுகிறோம். அங்கே யாரோ குண்டடி பட்ட ஒருவர் வேலூரில் சி.எம்.சி. ஆஸ்பத்திரியிலே சிகிச்சைக்கு வந்திருக்கிறார். அவரைக் கைது செய்ய வேண்டும் என்று அஸ்ஸாம் போலீசார் வந்தார்கள். அவர்கள் நம்முடைய போலீ ஸாருடைய துணையைக் கேட்டார்கள். நம்முடைய போலீ ஸார் அவர்களைக் கைது செய்ய அருகில் இருந்து துணை புரிந்து கைது செய்து கொடுத்தார்கள். அவருடைய வாக்குமூலத்தைப் பெற்று, வேறு இரண்டு பேர்கள் அங்கே ஓட்டலிலே தங்கியிருந்த வர்களும் கைது செய்யப்பட்டார்கள். பின் 3 பேர்களும் அஸ்ஸா முக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். எனவே, இங்கே இருந்த ' உல்ஃபா ' தீவிரவாதிகளைப் பிடித்துக் கொடுப்பதில் போலீசார் எந்தத் தயக்கமும் காட்டவில்லை. இந்தச் செய்தியை நான் ஏறத்தாழ ஒன்றரை மாதங்களுக்கு முன்பே நிருபர்களிடம் பகிரங்கமாகச் சொல்லியிருக்கின்றேன். திரு. சிதம்பரம் அவர்க ளுக்கு மேலும் சில இடங்கள் இருந்தன அல்லது இருக்கின்றன என்று தெரிந்தால் அதை ஒரு அறைகூவலாக எடுத்துக்கொண்டு அரசுக்குச் சவால் விடுவதை விட்டு, நாட்டின் மீது பொதுப் பிரச்சனையிலே உள்ளபடியே நல்ல எண்ணம் இருக்குமானால், அவர்கள் அதை எனக்கு அறிவிக்க வேண்டும் அல்லது அரசுக்குச் சொல்ல வேண்டும். நான் சொல்கிறேன் ; அதை முதலமைச்சர் மறுத்தால் பிறகு வெளியிடுகிறேன் என்றெல்லாம் இதிலே பந்தயம் கட்டக்கூடாது. இது ஒரு பயங்கரமான விஷயம். இதை அரசுக்கு சொல்வதுதான் நல்ல எண்ணம் உடையவர்களுடைய காரியமாக இருக்கும்.

[டாக்டர் மு, கருணாநிதி] [1991 சனவரி 22.

12-55 மணி

இங்கே கூட ஒருமுறை நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒரு பிரச்சினையைச் சொல்லி, நான் குற்றாலம் போன போது அங்கே கூட எல்.டி.டி.இ.-னர் இருப்பதாகக் கேள்விப்பட் டேன்; அவர்கள் எல்.டி.டி.இ-னர்தானா, இல்லையா என்று தெரியவில்லை என்று இடத்தைக் குறிப்பிட்டுக் கூறினார்கள். நாங்கள் அதை வீணாக விட்டுவிடவில்லை. உடனே, மறுநாளே போலீசாரை அனுப்பி அதைப் பார்க்கச் சொன்னோம். அப்படிப் பயனுள்ளதாக, நல்ல எண்ணத்தோடு இந்த அரசுக்குப் பயன் பட்டு, அப்படிப்பட்டவர்கள் எல்லாம் பிடிபட வேண்டுமென்ற எண்ணத்தோடு மத்தியிலே பொறுப்பான இடத்திலே அமைச்ச ராக இருந்தவர் கருத்துக்களை வெளியிட்டிருந்தால் நான் வர வேற்றிருப்பேன். எனக்குத் தெரியும்; ஆனால் சொல்லமாட் டேன்; அதை முதலமைச்சர் மறுத்தால் நான் இதைப் பந்தயம் கட்டிக் கொள்கிறேன் என்று குறிப்பிடுவதெல்லாம் நாட்டு நலனில் அக்கறை கொண்டவர்கள் சொல்லக்கூடிய காரியமாக இருக்க முடியாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு குறிப்பு. ** என்று குறிப்பிட்ட வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படு கிறது. அதைப் போலச் சொல்லக்கூடாது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே தேர்தல் நடந்ததைப் பற்றி இங்கே பலபேர் பேசினார்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கூட அதற்குப் பதில் சொன்னார்கள்; பெருமைப்பட்டுக் கொண்டார்கள். 16, 17 வருடங்களாக நடக்காத தேர்தலை நாங்கள் நடத்துகிறோம்; இந்த மன்றத் திலே அதை எல்லோரும் ஒத்துக் கொண்டீர்கள்; அதற்காக பெருமனதோடு நீங்கள் எல்லாம் வாக்குவாதம் செய்யாமல் ஏக மனதோடு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார் கள். நாங்கள் அதை எல்லாம் ஒத்துக்கொள்கிறோம். ஆனால் அப்படித் தேர்தல் நடத்துகிறோம் என்று சொல்லி நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதை நீங்கள் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு குமரியான கன்னிப் பெண் கல்யாணம் ஆகாமல் வீட்டிலே இருக்கிறாள்; ஒரு மாப்பிள்ளையைப் பார்த்துக் கலியாணம் செய்து வையுங்கள் என்று கேட்டால் குஷ்டரோகியை அழைத்துக் கொண்டு வந்து திருமணம் செய்து வைத்திருக்கிறீர் கள். தேர்தல் எப்படி நடந்தது ? கூட்டுறவு இயக்கத்திற்கு சம்பந்தப்படாதவர்கள் எல்லாம் பின் வாசல் வழியே வந்து உள்ளே உட்கார்ந்துகொண்டு, அந்த இயக்கத்தினுடைய நாடி நரம்புகளை எல்லாம் அறுத்து எறிகின்ற கொடுமையை நடத்தி வைத்திருக்கிறீர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1991 சனவரி 22]

திரு. இரா. மோகன்: சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, குஷ்டரோகியைக் கொண்டுவந்து கூட்டுறவுத் துறையிலே உட்கார வைத்திருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) அதுதான் பொருள். அதனால் சொல்கிறேன். காங்கிரஸ்காரச்கள் கூட்டுறவுத் தேர்தலிலே பல இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் குஷ்டரோகி களா? (குறுக்கீடுகள்) வெற்றி பெற்றவர்கள் எல்லாம் ...... (மணியடிக்கப்பெற்றது) தலைவரவர்களே, நான் பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் பேசுகிறேன். ஒரு நிமிடம் கொடுங்கள், அல்லது அரை நிமிடம் கொடுங்கள், சொல்லி முடித்து விடுகிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெருமைப்பட்ட தைப் பற்றிச் சொல்கிறேன். தேர்தலை நடத்தினீர்கள், வாஸ்தவம்தான். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பேசும்போது கையாளப்படுகின்ற உவமைகளுக்கு எல்லாம் நாம் பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. எப்படி 'நரி' மறுக்கப் படவில்லையோ அதைப் போல 'குஷ்டரோகி'யும் மறுக்கப்படக் கூடாது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: தேர்தல் எப்படி நடை பெற்றது என்பதற்கு என்னால் உதாரணம் காட்ட முடியும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கூட்டுறவுச் சங்கத் திலே ஒருவர் போட்டியிட்டார். கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கிற உறுப்பினர்கள் அவரை ஒட்டு மொத்தமாக நிராகரிக்கிறார்கள். மறுநாள் என்ன செய்தார்கள்? அவருடைய மனைவியை 'நாமினேஷன்' மூலமாக உள்ளே கொண்டு வருகிறார்கள். இது என்ன கூட்டுறவு? (குறுக்கீடுகள்) இது கெட்டிக்காரத்தனமா? கெட்டிக்காரத்தனமாகக் கொண்டுவந்துவிடலாமா? அப்படி ஒத்துக்கொள்கிறீர்களா? இது கெட்டிக்காரத்தனம் என்று சொன்னால் ஒத்துக்கொள்கிறேன், சொல்லுங்கள். நான் இதை ஆதாரத்தோடு சொல்ல முடியும். ஆனால் இந்த மன்றத் திலே பெயர்களைச் சொல்ல யோசிக்கிறேனே தவிர, நான் தகவல் சொல்லத் தயாராக இருக்கிறேன். சிவில் நீதிமன்றங் களில் அரசு வழக்கறிஞர்கள் அதற்காக வலியுறுத்துகிறார்கள். கூட்டுறவுச் சங்கத் தேர்தலைப் பற்றி, அந்த வழக்குகள் பற்றி சிவில் நீதிமன்றங்களுக்குப் போகக் கூடாது; இதுதான் விதி. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தைச் சேர்ந்தவர் கள் தேர்தலிலே தோற்றுவிட்டால், மாற்றுக் கட்சி நண்பர்கள் ஜெயித்து விட்டால், அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று 'ஸ்டே' வாங்கி விடுகிறார்கள். Government Pleader intentionally Keeps away. அவர் வக்காலத்து 'ஃபைல்' பண்ணுவதில்லை. ஸ்டேயை வெக்கேட் பண்ணுவதற்கு ஸ்டேட் மெண்ட் போடுவதில்லை. இது எல்லாம் ஏன் என்று கேட்டால் எங்களுக்கு ஆளும் கட்சியினுடைய தொந்தரவு என்று சொல்லு கிறார்கள். நான் இதை வழக்குகள் மூலம் நிரூபிக்க முடியும்.

[1991 சனவரி 22

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைத் தேர்தலிலே சில இடங்களில் சிவில் நீதிமன்றங்களுக்கு செல்ல முடியாத அளவுக்கு 'பிளீடர்கள்' அங்கே வராமலே இருந்து விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் ஒரு வழக்கறிஞர். இந்த விவரத்தை அவர் நீதிமன்றத்திலே சொல்லலாம். நீதிமன்றத்திற்குப் போக அவருக்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, நீதிமன்றத்தில் சொல்ல வேண்டிய விவரங்களைச் சட்டமன்றத்திலே சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பெண் உறுப்பினரை நியமித்து இருப்பதாகச் சொன்னார்கள். பெண் உறுப்பினரை நியமிப்பதற்குச் சட்டத்திலே இடம் இருக்கிற காரணத்தாலே பெண் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஒட்டுமொத்தமாக நம்முடைய உறுப்பினர் திரு. ஆல்போன்ஸ் அவர்கள், தன்னுடைய இயலாமைகளை எல்லாம் குற்றச்சாட்டுகளாக உருவகப்படுத்தக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

13-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் ஒப்புதலோடு அவையின் அலுவல் நேரம் 2 மணித்துளிகள் நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: தலைவர் அவர்களே, நான் சொல்கிறேன், இந்த ஆளுநர் உரையிலே மதுரையில் இருக்கின்ற உயர்நீதிமன்றத்தைப் பற்றி அறிவிப்பு வரும் என்று நான் எதிர்பார்த்தேன். மத்திய அரசினுடைய சட்டத் துறை அமைச்சர் திரு. சுப்பிரமணியசாமி அவர்கள் மதுரையில் உயர் நீதிமன்றத்தைத் திறப்பதற்கு, எல்லா கோப்புகளும் தயாராக இருப்பதாகவும், தமிழக அரசினுடைய தகவல் வராத காரணத்தால் அந்த நீதி மன்றத்தினுடைய பணிகள், துவக்கப்பட வேண்டிய பணிகள் முடங்கிக் கிடப்பதாகவும் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். அவர் இன்னும் ஒருபடி அதிகமாகச் சொல்லியிருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவன் நான், நான் இருக்கும் போதே....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை. அதுவும் மத்தியிலுள்ள ஒரு பெரிய அமைச்சரை அவர்கள் இங்கே சுட்டிக்காட்டிச் சொல்லுகிற காரணத்தாலும் நான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இது ஹைகோர்ட்டில் எடுக்க வேண்டிய முடிவு. தமிழக அரசின் சார்பாக உயர்நீதி மன்றத்திற்கு எத்தனை முறை நாம் வலியுறுத்திச் சொல்ல வேண்டுமோ அத்தனை முறை வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். உயர்நீதிமன்றத்தினுடைய அனுமதி கிடைத்தவுடன் உடனடியாக மதுரையில் அவர் கூறுகின்ற அந்த பெஞ்ச் வருவதற்கு எல்லா வகையான முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும்.



[991 சனவரி 22]

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : தலைவர் அவர்களே எனவே, நாம் இதைப் போன்ற ஆதாரபூர்வமான விஷயங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அனுகூலமான நடவடிக்கைகளைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். ஆட்சியில் இருப்பதுதான் பெரிது என்று எண்ணாமல், கட்சிக்காக ஆட்சி நடத்துவது என்று இல்லாமல், ஆட்சிக்காகக் கட்சி நடத்தக்கூடிய மனப்பான்மையை நாம் பெற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம். ஜெய்ஹிந்த்.

## 8. உரிமைப் பிரச்சினை.

### உறுப்பினர் திரு. இரா. சிங்காரம்மீது

விடுதலைப்புலிகள் நடவடிக்கைகள் பற்றி முரண்பட்ட தகவல்கள் தெரிவித்துள்ளது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. சிங்காரம் நேற்று அவையில் கூறிய ஒரு செய்தியைத் தொடர்ந்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பியுள்ளார். பொதுவாகவே அவையில் பேசும்போது ஏதேனும் ஒரு ஆதாரத்தைக் காட்ட வேண்டுமென்றால் அது பத்திரிகைச் செய்தி என்றால் அந்தப் பத்திரிகைப் பகுதியைப் பேரவைத் தலைவரிடம் காட்டி முன் இசைவு பெற்று அவையில் படிக்கலாம். திரு. இரா. சிங்காரம் அப்படிப் பத்திரிகை எதையும் காட்டி, முன் இசைவையும் பேரவைத் தலைவரிடம் பெறவில்லை. வெறும் பத்திரிகைச் செய்தி என்று மட்டும் பேசினார். இந்த நேர்வில் நான் ''சொல்வது பத்திரிகைச் செய்தியா, அல்லது எழுதப்பட்ட ஆவணமா'' என்று பேரவையில் கேட்டபோது, ''எழுதப்பட்ட ஆவணம்'' என்றார்.

''எழுதப்பட்ட ஆவணம்'' என்றால் பேரவைத் தலைவருடைய இசைவைப் பெற்றிருக்க வேண்டும். அவரிடம் காட்டியிருக்க வேண்டும். அவரிடம் தெரிவிக்காமல் பேசக்கூடாது'' என்று நான் தெரிவித்தேன். உடனேயே ''எழுதப்பட்ட ஆவணம் அல்ல'' என்று உறுப்பினர் திரு. இரா. சிங்காரம் குறிப்பிட்டார். இது முதல் முரண்பாடாகும். மீண்டும் அழுத்திக் கேட்டபோது ''இது நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட தாக்கல்'' என்று தெரிவித்தார். இது நீதிமன்றத்தில் உள்ளது என்றால், நீதிமன்றத்தில் உள்ள ஒரு பொருள் குறித்து விவாதம் செய்வது கூடாது என்று தெளிவுபடுத்தப்பட்டது. இந்த நிலையில் முன்னுக்குப் பின் முரணாக அடுத்தடுத்துச் செய்திகளைச் சொல்லியிருப்பது பேரவைத் தலைவராலும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களாலும் உறுப்பினருக்குச் சுட்டிக் காட்டப்பட்டது. ''நீங்கள்

முரண்பாடாகச் சொல்லியிருந்தால் முரண்பாடாக இருக்கிறது என்று சொல்லி அதைத் தவிர்த்து விடுங்கள்'' என்று மீண்டும் பேரவைத் தலைவரால் அறிவுறுத்தப்பட்டது. ஆனால் உறுப்பினர் திரு. இரா. சிங்காரம் ''எழுதப்பட்டதா, படாததா, என்று தெரியாது'' என்று மேலோட்டமாகக் கூறியுள்ளார். இந் நிலையில் உறுப்பினர் திரு. இரா. சிங்காரம் அவர்களுடைய இந்தப் பகுதியில் அமைந்த பேச்சு முன்னுக்குப் பின் முரணானது என்று முடிவாகிறது. விதி முறைகளை மீறி, இதுபோன்று செய்திகளை அவையில் பேசுவது முற்றிலும் தவறாகும். அவைக்கு வேண்டுமென்றே தவறான செய்தியை அளிப்பதாகும்.

உறுப்பினர் அனைவரும் இதனை மனதில் கொள்ள வேண்டும் என்பதற்காகவும், உறுப்பினர் திரு. இரா. சிங்காரமும், இனி இதுபோன்று ஈடுபடமாட்டார் என்ற நம்பிக்கையிலும் உறுப்பினர் செயலுக்கு ஓர் எச்சரிக்கை என்ற அளவோடு இப்பிரச்சினை முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது.

பேரவையின் இன்றைய முற்பகல் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 16-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 13-04 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

16-00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் 16-00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

9. சட்ட முன்வடிவுகள்—(ஆய்வு செய்தல்).

(அ) பொது விற்பனைவரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1990) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

---

*23-8-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



*திரு. பெ. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரியின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'அரிஷ்டம்' போன்ற பொருட்களுக்கு விற்பனை வரி, அதாவது சேல்ஸ் டேக்ஸ் விதிக்க வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. டிரக்ஸ்களைப் போல டாக்டர்களுடைய அனுமதியின் பேரில்தான், அரிஷ்டத்தையும் விற்பனை செய்ய வேண்டுமென்று அரசு ஆணையிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி இல்லாவிட்டால் மலிவு விலை மதுவைப் போல கடைகளிலே அரிஷ்டம் என்ற பெயரால் விஷப் பொருட்களை, விஷம் கலந்த சாராயத்தை வைத்து விற்பனை செய்து விடுவார்கள். அதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு பலர் உயிரிழக்க நேரிடலாம். குறிப்பாகச் சொல்லப்போனால், கோவை, பெரியார் மாவட்டங்களில் உள்ள பகுதிகளில் மலிவு விலை மதுக் கடைகளை ஏலத்தில் எடுத்தவர்களும் சரி, ஃபாரின் லிக்கர்ஸ் அதாவது ஒயின் ஷாப்புகளை ஏலத்தில் எடுத்தவர்களும் சரி கடைகளிலே வைத்துக் கொண்டு, கர்நாடகத்திலேயிருந்து கடத்தி வந்த ஸ்பிரிட்டைக் கலந்து அங்கே விற்பனை செய்கிறார்கள். அதன்மூலம் மலிவு விலை மதுவை மதுக்கடைகளிலே அருந்துபவர்கள்......(குறுக்கீடு) என்ன சொல்லுங்கள்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : யாராவது பேச வேண்டுமென்றால் என்னைக் கேட்டுத்தான் பேசுவார்கள். நீங்கள் பேசுங்கள். (சிரிப்பு).

திரு. பெ. மாரப்பன் : அதன்மூலமாக, மலிவு விலை மதுவை அருந்தியவர்களில் பலர் ஒன்றிரண்டு நாட்களிலேயே இறந்து விட்டார்கள். இந்தப் பிரச்சினையை அரசினுடைய கவனத்திற்கு யாரும் ரிப்போர்ட் செய்யவில்லை. காரணம், இரண்டு நாள் மூன்று நாட்கள் கழித்துதான் இறக்கிறார்கள். மெல்ல மெல்லக் கொல்கின்றது இந்த மலிவு விலை மது. அதனால் பலர் இறந்து விட்டார்கள். என்னுடைய தொகுதியிலே உள்ள சென்னிமலை நகரத்திலேயே இப்படிப்பட்ட மலிவு விலை மரணங்கள் ஏற்பட்டிருக்கின்றன.....

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கனம் சபாநாயகர் அவர்களே,......(சிரிப்பு) அரிஷ்டத்தைப் பற்றி வெகு பேருக்கு இன்னும் புரியவில்லை. மதுவுக்கும், சாராயத்துக்கும் அரிஷ்டத்துக்கும் ஏக வித்தியாசம் உண்டு. அரிஷ்டம் என்பது ஆயுர்வேதிக் மருந்துகளிலே அதுவும் ஒரு மருந்து. இங்கிலீஷ் மருந்துகளிலே ஆல்கஹால் சேர்க்காத மருந்தே கிடையாது. அதேமாதிரி ஆயுர்வேதிக் மருந்துகளிலே அரிஷ்டத்தைச் சேர்த்தால்தான் அந்த மருந்து 1 வருடம், இரண்டு வருடம் கெடாமல் இருக்கும். ஆகவே, மதுவைக் குடித்தால் இறந்து போகலாம்; கள்ளச் சாராயத்தைக் குடித்தால் செத்துப் போகலாம். இந்த

அரிஷ்டத்தை குடித்து செத்து போனதாக எனக்கு தெரியவில்லை. இப்போது இருக்கிற மதுவுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. அரிஷ்டம் என்பது ஆயுர்வேதிக் மருந்துதான். அந்த ஆயுர் வேதிக் மெடிசினில் எந்தவிதமான தவறுதலும் இருக்காது. அதை குடித்துவிட்டு செத்துப் போகிறார்கள் என்று உறுப்பினர் சொல் கிறார்; அதையும் நீங்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். அதனால்தான் நான் பதில் சொல்ல எழுந்தேன்.

திரு. பெ. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலிவு விலை மதுவுக்கும், அரிஷ்டத்துக்கும் நமது பெரியவருக்கு எப்படி வித்தியாசம் தெரிந்தது என்று நான் ஐயப்படுகின்றேன். (சிரிப்பு). உபயோகித்ததன் அடிப்படை யிலே சொல்கிறார்களா அல்லது நிறத்தைப் பார்த்துச் சொல் கிறார்களா? எத்தனை பர்சென்டேஜ் அதிலே........

16-05 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் இதற்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும். ஏனென்றால் குற்றச்சாட்டு உங்கள் மேலே அல்லவா? (சிரிப்பு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : கிராம முன்சீபாக இருக் கும்போதெல்லாம்—அப்பொழுதே, இந்தக் கள்ளச் சாராயம்—இப்பொழுது ஏற்பட்டது அல்ல, எப்பொழுது சுதந்திரம் கிடைத் ததோ அன்றைக்கு ஆரம்பித்து விட்டது. என்றைக்குச் சுதந்திரம் கிடைத்து, நாங்கள் மது விலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்தோமோ அன்றைக்குக் கள்ளச் சாராயம் ஆரம்பித்து விட்டது; இதற்கு எந்த வாத்தியாரும் கிடையாது; எந்த எக்ஸ்பர்ட்டும் கிடையாது; பள்ளிக்கூடம் கிடையாது; காலேஜ் கிடையாது; எப்படித்தான் அது விருத்தியாகியது என்று எனக்கே தெரிய வில்லை. இதற்கெல்லாம் வாத்தியார் கிடையாது. மற்றதற் கெல்லாம் சொல்லிக் கொடுக்க வேண்டும் அழைத்துக் கொண்டு போய். ஆனால் இந்த மது காய்ச்சுபவன் மட்டும் தானே கற்றுக் கொண்டிருக்கிறான். எங்களுக்கெல்லாம் கிராம முன்சீப்களுக் கெல்லாம் இதைப் பிடிப்பதற்கு அதிகாரம் கொடுத்திருந்தான். ஏன் அப்படிக் கொண்டு போகிறாய் என்று கேட்டால் பயந்து கொண்டே போவான். நாங்கள் யாரையும் பிடித்து உபத்திரவம் எண்ணுவதில்லை. சரி, அவன் பிழைக்கிறான், நாம் நிறுத்தினால் பிழைக்க முடியுமா என்று. இலட்சக் கணக்கான பேர் காய்ச்சு கிறான், இலட்சக் கணக்கான பேர் குடிக்கிறான். அதைக் குடிப்பதற்கு........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சார், மது நீங்கள் சாப்பிட்டீர்களா இல்லையா என்று கேட்கிறார். நீங்கள் அதற்குப் பதில் சொல்லுங்கள். (சிரிப்பு).





திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : என்னைப் பார்த்தால் அப்படித் தெரிகிறதா அவருக்கு. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படியே உட்கார்ந்து விடுங்கள் சார்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: அரிஷ்டத்திற்கும் இதற்கும் உள்ள வித்தியாசத்தைச் சொல்கிறேன். அரிஷ்டம் என்றால் தெரியவில்லை; மது என்றால் தெரியவில்லை. அதற் காகத் தான் சொல்ல வருகிறேன்.

திரு. பெ. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மலிவு விலை மதுவின் காரணமாக குடித்து 2, 3 நாட்களிலே ஏகப்பட்ட மரணங்கள் நடைபெற் றிருக்கின்றன. இது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. என்னுடைய தொகுதியிலேயே சிலர் இறந்திருக்கிறார்கள். ரிப்போர்ட் கொடுத்தால் போலீஸ் ஸ்டேஷனுக்கு நடக்க வேண்டுமே என்று ரிப்போர்ட்டே கொடுக்காமல் விட்டு விட்டார்கள். ஆகவே, அதை நான் இந்த மன்றத்தின் மூலமாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த அரிஷ்டத்தைப் பொறுத்த வரையில் இந்த அரிஷ்டத்தின் மூலமாக கள்ளச் சாராயத்தை அதிகமாக விற்பதற்கு ஒரு வாய்ப்பிருக்கிறது.

திரு. நா. கணபதி : மலிவு விலை மதுவைக் குடித்துவிட்டு இரண்டு நாள், மூன்று நாளிலேயே செத்துப் போய்விட்டார்கள் என்று சொன்னார் மாண்புமிகு உறுப்பினர். இது அதிகமாகச் சாப்பிட்டுக் குடித்தார்களா அல்லது வேறு காரணத்திற்காகக் குடித்தார்களா? உறுப்பினருக்கு இது பற்றித் தெரியுமா? கொஞ்சம் சபைக்குச் சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. பெ. மாரப்பன் : டெய்லி ஒரு பாட்டிலோ, இரண்டு பாட்டிலோ குடிக்கிற ஆட்களெல்லாம் சாவதில்லை. மொடாக் குடியர்கள் என்று சொல்வார்கள் சில பேர்களை. சின்ன சின்ன பாக்கெட்டுகளாக, 2, 3 என்று வைத்துக் கொண்டு, 100 எம்.எல்., 200 எம்.எல்., என்று 2, 3 வாங்கி வைத்துக் கொண்டு பஸ்ஸிலே போகும்பொழுதேகூட பல்லில் வைத்துக் கிழித்துக் குடித்து விடுகிறான். இப்படி நிறையக் குடித்து விட்டு........(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. நூர் முகமது....

திரு. செ. நூர்முகமது : நண்பர் மாண்புமிகு மாரப்பன் அவர்கள் சொல்வதைப் பார்க்கின்ற பொழுது இரண்டுக்குமேல் எப்பொழு தும் வேண்டாம் என்ற கொள்கையை அரசு அங்கேயும் அமல் படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு)

திரு. பெ, மாரப்பன்: நூர் முகமதுவினுடைய கருத்தை வரவேற்க முடியவில்லை என்றாலும்கூட ஏற்றுக் கொள்ளலாம். அதிகம் குடிப்பதைவிட இதை ஏற்றுக் கொள்ளலாம். இந்த 400 மில்லி, 500 மில்லி அடிக்கிற ஆட்கள் 2, 3 நாட்களுக்குச் சரியாக சாப்பிடாமல் அப்படியே இருந்து 2 நாள், 3 நாள் அப்படியே தெரு ஓரத்திலேயே மயங்கி விழுந்து இறந்து விடுகிறான். அனாதைப் பிணமாக ரிப்போர்ட் ஆகியிருக்கிறது. அனாதைப் பிணம் என்று சொல்லி போலீஸ் ஸ்டேஷனிலே இப்பொழுது நிறைய ரிக்கார்டு ஆகியிருக்கிறது. மலிவு விலைக் கடையை ஓப்பன் பண்ணுவதற்கு முன்னாலே இருந்த நிலைமையை நீங்கள் கம்பேர் பண்ணிப் பார்த்தீர்கள் என்றால் தெரியும். ரிப்போர்ட் கொடுப்பதற்கு ஏன் பயந்து கொண்டு இருக்கிறான் என்றால், சாராயத்தைக் குடித்துவிட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு நடந்து கொண்டு, போஸ்ட் மார்ட்டம் அது, இது என்று சிரமம் ஏற்படும் என்ற காரணத்தாலே ரொம்பப் பேர் புகார் கொடுப்பது இல்லை.

ஆகவே, இந்த அரிஷ்டத்திற்கு லைசென்ஸ் கொடுக்கும்பொழுது ஜாக்கிரதையாகக் கொடுக்க வேண்டும். டாக்டரின் பெர்மிஷன் இருந்தால்தான் அதை அருந்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, விற்பனை வரி போன்ற வரிகளையெல்லாம் வசூல் செய்யும்பொழுது, அதிகாரிகள் சரியாக வசூல் செய்வதில்லை. யார் வரியை ஏய்க்கிறார்களோ, அவர்களுடனேயே சேர்ந்து கொண்டு, இன்னும் சொல்லப்போனால், ஈவினிங் நேரத்தில் இவர்களும் சேர்ந்து அரிஷ்டம் அடித்துவிட்டு சுற்றிக் கொண்டிருப்பார்கள் பெரும்பகுதி அதிகாரிகள். அதனாலே நம்முடைய வரிப்பணம் நாட்டிலே பெரும் பகுதி வீணாகி விடுகிறது. ஆகவே அரசு ரொம்ப விஜிலன்ட்டாக இருந்து....

மாண்புமிகு திரு, எஸ், ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அதிகாரிகளைக் குற்றம் சொல்வது சரியல்ல. அப்படி ஏதாவது குறிப்பாக அதிகாரிகள் இருந்தால், குறிப்பிட்டுச் சொன்னால், நடவடிக்கை எடுக்கலாமே தவிர, பொத்தாம் பொதுவாக, விற்பனை வரித் துறையில் பணியாற்றுகிற அதிகாரிகளை மொத்தமாகக் குறை கூறுவது சரியல்ல. மேலும், இங்கு கொண்டு வந்திருக்கிற மசோதா, 'அரிஷ்டம்' போன்றவற்றிற்கான வரி விதிப்பிற்கான மசோதாவே தவிர, மலிவு விலை சாராயத்தைப் பற்றி அல்ல. எனவே, சப்ஜெக்டுக்குள்ளே இருந்து பேசினால் நன்றாக இருக்கும்.

**16-10 மணி**

திரு. பெ, மாரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரிவசூல் செய்வதிலேகூட, இந்த



'அரிஷ்டத்திற்கான' வரிவிதிப்பிற்குத்தான் இந்த மசோதா எந்திருக்கிறது. அந்த வரிவசூலில் நடக்கக்கூடிய ஊழலைத்தான் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதைப் போல, குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், ஒன்றிரண்டு பேராக இருந்தால் சொல்லலாம்; இருக்கக்கூடிய அதிகாரிகள் அதிகமாக அனைவருமே தப்பு பண்ணக்கூடியவர்களாய் இருப்பதால், எங்கு போய் குறிப்பிட்டுச் சொல்வது? ஆகவே, குறிப்பிட்டுச் சொல்வதற்கு பிரச்சினையே அல்ல இது. இது என்னுடைய கவனத்திற்கு வந்தது; எங்கள் பகுதியிலே இருக்கக் கூடிய ஒரு சில பிரச்சினைகள் வந்திருக்கின்றன. ஆக, தமிழகத்திலே முழுவதிலும் ஆட்சியிலே இருக்கிற நீங்கள்தான் பார்த்துப் போக்கக் கூடியது. 'இன்வெஸ்டிகேஷன் பவர்' உங்களிடம் தான் இருக்கிறது. அரசுதான் இதனை 'விஜிலென்ட்'-ஆகக் கவனித்து, அந்த வரிவசூலில் நல்ல நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவி 1

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 1 சட்டமுன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.'

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In Clause 1, in sub-clause (1), for the expression "Tamil Nadu General Sales Tax (Fourth Amendment) Act 1990", *substitute* the exp ession 'Tamil Nadu General Sales Tax (Amendment) Act, 1991."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

" பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 43/1990) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1990ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1990)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

* 23-8-1990ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளி விடப் பெற்றுள்ளது.





தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 1 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்;

"In Clause 1, in sub-clause (1) for the figures "1990" *sbbstitute* the figures "1991".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 1 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

1991 சனவரி 22]

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1990) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

16-15 மணி

(இ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு 1991.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

'' 1991ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1991) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''

திரு. கே. ஆர். சுந்தரம்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் முன் மொழியப் பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவில் என்னுடைய கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன். மாநகராட்சியில் உள்ள தனி அலுவலர்களின் ஆயுட்காலத்தை நீட்டிக்க வகை செய்வது என்பதை, அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய நிலை இல்லாத காரணத்தால் அதை நீட்டிப்பதை, ஓரளவுக்கு நியாயம் என்று நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அதே போல் உள்ளாட்சி மன்றங்களில் இட ஒதுக்கீடு சம்பந்தமாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற திருத்தத்தையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது. ஆனால் நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களினுடைய காலம் இந்த மார்ச் மாதம் 3-ந் தேதி முடிவடைவதையொட்டி ஏப்ரல் மாதம் 10-ஆம் தேதி தேர்தலுக்கு ஏற்பாடு செய்து, அதுவரையில் தனி அலுவலர் களை நியமனம் செய்து, அந்த வகையில் வைக்கப்பட்டிருக்கிற ஆலோசனையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொள்ள வில்லை. எனவே அதை ஆட்சேபித்து எதிர்க்கிறோம் நாங்கள். ஏனென்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த அமைப்புகள் இருப்பதுதான் நல்லது. தமிழகத்தில் பல ஆண்டுகளாக இருந்த நிலைமை நமக்குத் தெரியும். 1979 முதல் 1986 வரையில்

* 21-1-1991ஆம் நாளிட்டதமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1991 சனவரி 22] [திரு. கே. ஆர். சுந்தரம்]

உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் இல்லாமல் இருந்து, பிறகு அந்த உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்த வேண்டும் என்று கேட்டு, பல்வேறு இயக்கங்களை நடத்தி, உள்ளாட்சி மன்றங்களுக்கு 1986-ல் தேர்தல் நடத்தப்பட்டது. அப்படித் தேர்தல் நடத்தப்பட்ட நேரத்திலே கூட 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்த வேண்டும் என்றிருந்த முறையை அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 4 ஆண்டு என்றும், 3 ஆண்டு என்றும் காலத்தை நிச்சயித்துத் தேர்தல் நடத்தினார்கள். ஆனால் கலைஞர் ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு அந்த 3 ஆண்டு என்பது 5 ஆண்டாக நிச்சயிக்கப்பட்டது. எனவே நமக்கெல்லாம் தெரியும். அந்த 5 ஆண்டுக் காலத்தில் நகராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர் இருக்கிற காரணத்தால் அந்த மக்களுடைய அன்றாடத் தேவைகளை அறிந்து நல்ல முறையில் பணி செய்ய முடிந்தது என்பதை அறிவோம். அது நமக்கு ஐந்தாண்டு காலமாக ஏற்பட்ட அனுபவம். விளக்கு எரியவில்லை என்றால், தண்ணீர் வரவில்லை என்றால் கூட ஊராட்சி மன்றத் தலைவர்களை நகராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர் அதிகாரிகளைப் பார்த்துப் பேசி, அமைச்சர்களைப் பார்த்துப் பேசி காரியங்களை செம்மையாக நடத்த உதவிகரமாக இருந்து வந்திருக்கிறது.

ஆனால் அத்தகைய நிலைமைகள் இல்லாமல், தனி அலுவலர் கள் கையில் இந்தப் பொறுப்பை ஒப்படைப்பது என்பது மக்க ளுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக நிர்வாகத்தில் சீர்கேடு ஏற்படக் கூடிய ஒரு நிலைமையைத்தான் ஏற்படுத்தும். ஆகவே இந்த 15 வார காலத்தில், அதாவது தேர்தல் நடத்தப் படுகிற வரையில், இந்தத் தனி அலுவலர்களின் காலத்தை நீட் டிக்கிறோம் என்று சொல்கிற நிலைமைக்குப் பதிலாக ஊராட்சி மன்றத் தலைவர்களுடைய, நகராட்சி மன்றத் தலைவர்களுடைய காலத்தையே அந்தக் காலம் வரையில் நீட்டிப்பதற்கு நீங்கள் வகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் இந்த ஜனநாயக முறைகளைப் பாதுகாக்க முடியும். இன்றைக்கு ஏப்ரல் மாதம் வரை என்று சொல்கிற காரணத்தால் ஏதோ தேர்தல் நடத்துவதற்கு முடியவில்லை என்று சொல்லி அல்லது சென்சஸ் எடுக்கிறோம், அதற்குக் காலம் வேண்டும் என்று சொல்கிற முறையில், ஏப்ரல் மாதத்தில் கூட தேர்தலை நடத்தாமல், தனி அலுவலர்களின் காலத்தையே நீட்டித்துவிடக் கூடிய ஒரு ஆபத்தான நிலைமை ஏற்படுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டு விடும். ஆகவே அதற்கும் கூட சந்தர்ப்பம் அளிக்காமல், நாம் எல்லாம் தேர்தலைப் பார்த்துப் பயப்படு கிறோம் என்றெல்லாம் மக்கள் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்காமல் அந்த ஊராட்சி மன்ற, நகராட்சி மன்ற அமைப்பு களையே நீட்டிக்கக் கூடிய முறையில் அதைச் செய்ய வேண்டு மென்று கேட்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய கருத்தைக் கூறி அமைகிறேன்.

16-20 மணி

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, இந்த எம்.டி.எம். ஆக்ட் 1920 என்பதன்படி இந்தச் சட்டத் திருத்தத்தில் ஒரு மாதத்திற்கு எக்ஸ்டென்ட் பண்ணியிருக்கிறார்கள். ஏற்கனவே 1969-லே தான் தேர்தல் நடந்தது. 1969-லே நான் நின்று இருக்கிறேன். எனக்கு நன்றாகத் தெரியும்.

அதற்கு அப்புறம் எமர்ஜென்சி ஒன்று வந்திருக்கிறது. அது எல்லோருக்கும் தெரியும். சில பேர்களுக்கு, இளைய வயதினருக்கு அது தெரியாமல் இருக்கலாம். அது கடுமையானது. நாட்டிலே எமர்ஜென்சி வந்தபோது, மத்தியில் காங்கிரஸ் இருந்தபோது, கவர்னர் கலைத்துவிட்டார். கலைத்ததில் இருந்து 1986 வரை தேர்தலே நடக்கவில்லை. அப்போதெல்லாம் பேசாமல்தான் இருந்தோம். அப்போது என்ன ஆயிற்று? முனிசிபாலிட்டி ஓடிப்போயிற்றா? பஞ்சாயத்து பறந்து போயிற்றா? இல்லை வேறு என்ன ஆயிற்று? ஒரு சங்கடமும் இல்லை. நன்றாகத்தான் நடந்தது. இப்போது இந்த ஒரு மாதம் எக்ஸ்டென்சன் பண்ணுவதற்கு எதிர்க்கட்சி என்ன சொல்கிறார்கள் ? எதிர்க்கட்சித் தலைவர் அப்படி சொல்கின்றார்கள். அதையும் ஒத்துக்கொள்ளவேண்டியதுதான். அவருக்கு உரிமை இருக்கிறது, சொல்கிறார். இந்த ஒரு மாதம் எக்ஸ்டென்ட் பண்ணுவதற்கு சொல்கின்றார்கள். ஏதாவது விளக்கு எரியாமல் போனால் என்ன பண்ணுவது? குப்பை கூட்டாது போனால் என்ன பண்ணுவது என்றால் அதை நான் ஒத்துக்கொள்வதற்கில்லை. மறுபடியும், மறுபடியும் செய்கின்றார்கள். ஏற்கெனவே 3 வருடம் தான். அதை 4 வருடம் என்று ஆக்கினார்கள். இப்போது கலைஞர் வந்து மேலும் 2 வருடம் எக்ஸ்டென்சன் கொடுத்தார். அது நல்ல காரியம். அவர் செய்த காரியம் நல்ல காரியம். இதற்கு மேலேயும் எக்ஸ்டென்சன் கொடுத்தால் மக்கள் என்ன நினைப்பார்கள்? ஏதோ 92 முனிசிபாலிட்டிகளில் 76 முனிசிபாலிட்டிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையிலே இருக்கின்றன. எனவே தங்களுடைய கட்சிக்காக, ஏதோ எக்ஸ்டென்சன் பண்ணியிருக்கிறார்கள் என்ற அளவுக்கு ஒரு அவச்சொல் வரும். அதற்காக இதை ஒரு மாதம்கூட எக்ஸ்டென்சன் பண்ணாமல், இதன்படி தனி அலுவலர்கள் நியமிப்பதை ஜனதா தள் சார்பிலே நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தைப் பொறுத்தமட்டில் அண்மையில் நகரியமாக இருந்து, நகராட்சியாக உயர்த்தப்பட்ட அம்பத்தூர் நகராட்சி பற்றிய திருத்த





சட்டமுன்வடிவு. ஆகையினால், அடுத்து வருகிற நகராட்சி திருத்தச் சட்டமுன்வடிவில் நான் பதில் சொல்கிறேன். இதை நிறைவேற்றித் தருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகரர்ட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 3/1991) நிறைவேற்றப்பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த), சட்டமுன்வடிவு 1991.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

[திரு. கோ. சி. மணி] [1991 சனவரி 22

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 4/1991) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும். "

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு, தனி அலுவலர்களை நியமனம் செய்ய வேண்டுமென்ற சட்டத் திருத்தத்திலே மார்ச் 3-ஆம் தேதி வரை அவர்களுடைய பதவிக்காலம் முடிவடைந்து, ஏப்ரல் 10 ஆம் தேதி தேர்தல் முடிந்து தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் பதவி ஏற்கவேண்டிய நிலைமை இருக்கிறது. இன்றைக்கு கிராமப்புறங்களிலே, ஊராட்சிகளிலே கிராமப் பணியாளர்கள் என்று சொல்லி பல பேர்களை ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களையே நியமனம் செய்திருக் கிறார்கள். அப்படி நியமனம் செய்யப்பட்டவர்கள், இந்தத் தலைவருடைய பதவி போனதற்குப் பின்னால், அவர்களே தலைவர் மாதிரி நடக்கவேண்டிய ஒரு நிலைமை ஏற்படக் கூடும்.

16.25 மணி

இன்றைக்குக் கிராமங்களில் பலவாறான முற்போக்குக் காரியங்கள் எல்லாம் தடைப்பட்டு இருக்கின்றன. மின்சார வசதி இல்லாத கிராமங்கள் ஏராளம் இருக்கின்றன. மற்றும் பல்வேறு வகையான, தேவையான நல்ல காரியங்களையும் செய்ய முடியாத நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு எல்லாம் வேலை கொடுத்துவிட்டு, அந்தப் பஞ்சாயத்துப் பணத்தை பல்வேறு வகையான, தேவையான, நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த ஊராட்சிகளில் நியமனம் செய்யப்பட்ட அந்த ஊழியர்களைப் பொறுத்தவரையில், ஊராட்சி ஒன்றியப் பணிகளில், குடும்ப நலத் திட்டம் போன்ற பணிகளில் நியமனம் செய்வது தான் நியாயமாக இருக்கும். இந்த ஊராட்சிகளில் உள்ள அதிகாரங்களை எல்லாம் ஏற்று, அவர்கள் நிர்வாகம் நடத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படுமானால் அது தவறான நிலையில் போய் முடியும். ஆகவே, கடந்த காலத்தைப் போன்று நகராட்சிகளுக்குக் காலத்தை நீட்டிக்கக் கூடாது. கோர்ட்டிலே தடை, அங்கே தடை என்று எல்லாம் காரணத்தைச் சொல்லி நீட்டிக்காமல் குறிப்பிட்ட காலத்திலே தேர்தலை நடாத்தி நல்ல முறையிலே நகராட்சிகளும், பேரூராட்சிகளும் செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

---

*21—1—1991 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1991 சனவரி 22]

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் பெயரால் அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறேன். இதற்கு முன்னால் கடந்த வருடம்கூட குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டுமென்று அமெண்ட்மெண்ட் கொடுத்திருந்தேன். அப்போது நடந்தது அமைச்சர் அவர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று கருது கிறேன். ஆனால் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி அந்தக் காலத்திற்குள் தோதலை நடததவில்லை. ஆகவேதான், திருப்பியும் இப்போது நான் அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறேன். நான் அமெண்ட்மெண்ட் கொடுத்திருந்தாலும் கூட பல ஆண்டுகளாக தேர்தலை நடத்தாமல் நீடித்துக்கொண்டே போவதனால், சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் குப்பை மேடாகவும், தண்ணீர் இல்லாமலும், கொசுக்கள் நிரம்பிய தெருக்களாகவும் மாறிக்கொண் டிருக்கின்ற அவலநிலை இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்து ஓராண்டுக் காலத்திற்குள்ளேயே தேர்தலை நடத்துவார்கள் என்று நினைத்தேன். ஆனால் இரண்டு ஆண்டுகள் ஆகியும் அதிகாரி களைப் போட்டு நீட்டித்துக்கொண்டிருக்கிற நிலைமைதான் இருக்கிறது. அவரும் தேர்தலை நடத்தவில்லை. கடந்த முறை நான் அமெண்ட்மெண்ட் கொடுத்தபோது குறிப்பிட்ட தேதிக்குள் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொன்னேன். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட தேதிக்குள் தேர்தலை நடத்துவோம் என்று சொன்னதால்தான் அதனை வாபஸ் பெற்றேன். இந்த முறையும் அதுபோல அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறேன்.

I have given notice of the following amendments :

" In Clause 2, after the words '30th day of April 1991' *add* the following words :— 'and that no further extension shall be granted for extending the term of Special Officers :

Provided that the elections to the Municipal Corporation shall be held on or before the 31st day of March, 1991'.

In Clause 3, after the words '30th day of April, 1991', *add* the following words :— 'and that no further extension shall be granted for extending the term of Special Officers :

Provided that the elections to the Municipal Corporation shall be held on or before the 31st day of March, 1991'.

In Clause 4, after the words '30th day of April 1991', *add* the following words :— 'and that no further extension shall be granted for extending the term of Special Officers :

Provided that the elections to the Municipal Corporation shall be held on or before the 31st day of March, 1991 ".

அதனால்தான் என்னுடைய அமெண்ட்மென்டைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, இந்தக் குறிப்பிட்ட நாளைக்குள்ளாவது தேர்தலை நடத்தி முடித்து மாநகராட்சிகள் நல்ல காரியங்களைச் செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

16-30 மணி.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகளினுடைய தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடிய முறையில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பல முறை நம்மால் தேர்தல் நடத்துவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், உரிய காலத்திலே தேர்தலை நடத்த முடியாமல் தொடர்ந்து பல்வேறு காரணங்களால் அது தொடர்ந்து தடைப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் தேர்தல் நடத்துவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு நீதிமன்றத்திலே தடைகள் வாங்கப்பட்ட நிலையில், இந்த முறையும் உரிய அறிவிப்பு கொடுக்கப்பட்ட காலத்திலே தேர்தல்கள் நடத்த முடியாத நிலையில், மேலும் ஒரு மாத காலத்திற்கு தனி அதிகாரிகளினுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடிய வகையில் ஏப்ரல் மாதம் தேர்தல்கள் நடத்தப்படுமென்று தற்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நீதிமன்றத்திலே வாங்கப்பட்டிருக்கக்கூடிய அந்தத் தடை இன்னும் நீங்கவில்லை. ஆகவே அந்தத் தடையை நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை நம்முடைய தமிழக அரசு எடுத்து தற்போது குறிப்பிட்டிருக்கிற ஏப்ரல் மாதத்தில் கட்டாயம் மாநகராட்சிகளுக்கான தேர்தல்களை நடத்தி, அதில் மக்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளைக் கொண்டு அந்த நிர்வாகத்தை நடத்துவதற்கு அரசு வழிவகுக்க வேண்டும். கோவை போன்ற மாநகராட்சிகள் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டதிலிருந்து இதுவரையில் தேர்தலே இல்லாமல் அதிகாரிகள் மூலமாக அங்கே நிர்வாகம் நடக்கும் நிலைமை தொடர்ந்து இருக்கிறது. ஆகவே அதற்கு முடிவு கட்டும் வகையில் இப்போது அரசு அறிவித்துள்ள அடிப்படையிலே, ஏப்ரல் மாதம் கட்டாயம் அந்தத் தேர்தல்களை நடத்துவதற்குத் தடையாக இருக்கும் அந்த நீதிமன்றத் தடையை நீக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து, அந்தத் தேர்தல்களை உரிய முறையில் நடத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் 31—3—1991-க்குள் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். 9—1—1991-ல்



ஆரம்பித்து 5—3—1991 வரை மக்கள் கணக்கெடுப்பு களப் பணிதான் நடக்கிறது. களப் பணி முடிந்த பிறகு அறிவிப்புகள் வெளியிட வேண்டியிருக்கிறது. எனவே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தத் துறைக்குத் தேர்தல்களை நடத்துவதற்கு ஒரு நாள் இடைவெளிகூட வைக்கவில்லை. ரொம்பத் துரிதமாக நடத்த வேண்டுமென்ற அவர்கள் கருத்துப்படி நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். நாங்கள் 31 ஆம் தேதி நடத்தலாம், அதற்குள் முடிக்கலாம் என்றிருந்தால் அதற்குள் முடிக்கத் தயாராக இருப்போம். மாநகராட்சித் தேர்தலுக்குக்கூட 2 மாதங்களுக்கு முன்னாலே நாங்கள் தேதி எல்லாம் பிரகடனப்படுத்தினோம். உயர்நீதி மன்றத் தடை ஆணை இருந்தது. இப்போது அதற்குரிய நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அட்வகேட்-ஜெனரல் அவர்களே ஆஜராக இருக்கிறார்கள். தடை உடனே நீக்கப்பட்டு நிச்சயமாக அந்தத் தேர்தல்களை நடத்துவதற்கான ஆக்கப் பணிகளில் உறுதியாக இந்த அரசு இருக்கிறதென்பதைத் தெரிவித்து, மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 4/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு-2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும். "

Thiru M. SUNDARADOSS: Sir, I move the following amendment.

" In clause 2, after the words '30th day of April 1991,' *add* the following words and the proviso:

'and that no further extension shall be granted for extending the term of Special Officers :

Provided that the elections to the Municipal Corporation shall be held on or before the 31st day of March 1991 '. "

[பேரவைத் துணைத் தலைவர்] [1991 சனவரி 22

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திருத்தம், பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி :

" பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு 2 நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு-3

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" பிரிவு 3 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும். "

Thiru M. SUNDARADOSS : Sir, I more the following amendment ;

"In clause 3, after the words 30th day of April 1991", *add* the following words and the proviso:

"and that no further extension shall be granted for extending the term of Special Officers :

Provided that the elections to the Municipal Corporation shall be held on or before the 31st day of March 1991'."

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" பிரிவு 3 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு 3 நிறைவேற்றப்பெற்றது.



1991 சனவரி 22]

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" பிரிவு 4 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும். "

THIRU M. SUNDARADOSS : Sir, I move the following amendment:

"In clause 4, after the words '30th day of April 1991', add the following words and the proviso :

' and that no further extension shall be granted for extending the term of Special Officers,

Provided that the elections to the Municipal Corporation shall be held on or before the 31st day of March, 1991'."

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 4 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு 4 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 4/1991) நிறைவேற்றப்பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(உ) நகராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 5/1991) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

16-35 மணி

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருகின்ற மார்ச் மாதம் 3 ஆம் தேதியோடு நகராட்சிகளிலும் ஊராட்சிகளிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளினுடைய பொறுப்புக் காலம் முடிவுக்கு வருகிறது. உடனடியாக தேர்தல் நடத்த முடியா வண்ணம், மத்திய அரசினுடைய வேண்டுகோளுக்கொப்ப ஜனத்தொகைக் கணக்கெடுப்பு முடிந்த பிறகுதான் தேர்தலை நடத்த வேண்டுமென்ற காரணத்திற்காக மேலும் சுமார் ஒரு மாத காலம் அந்தத் தேர்தலை தள்ளிப்போட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ஒன்று, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடைய பொறுப்புக் காலத்தை நீட்டித்துக் கொடுக்கலாமா அல்லது அந்த இடைப்பட்ட காலத்தில், தனி அலுவலர்களை அதிகாரிகளை அரசு நியமிக்கலாமா என்ற கருத்தின் அடிப் படையிலே இங்கே இந்த மசோதா தாக்கல் செய்யப் பட்டிருக்கிறது.

மக்கள் பிரதிநிதிகள் இருப்பது, எக்காலத்திலும் நல்லது என்ற அடிப்படையிலே இந்த மசோதாவிற்கு நேற்று அறிமுகக் கட்டத்திலே எங்களுடைய தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டது. ஆனால், மேலும் இதில் விளங்கச் சொல்ல வேண்டுமானால், உள்ளாட்சி அமைப்புகள் எல்லாம் மாநில அரசாங்கத்தினுடைய முழுமையான கட்டுப்பாட்டிலும், அது அவ்வப்போது இயற்றுகின்ற சட்டத்தின் முழுமையான கட்டுப் பாட்டிலும் இருக்கக்கூடியது தான். ஆகவே, மாநில அரசே பார்த்து, தனி அதிகாரிகளை நியமிப்பதற்கு அதற்கு முழு

*21—1—1991 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி
அவர்கள் தனி அதிகாரிகளை நியமிக்கும்போது அதனை
நாங்கள் எதிர்ப்பதற்கு இல்லை. இந்த எளிதான விஷயத்
திற்கு, ஏன் மக்கள் பிரதிநிதிகளையே நீட்டித்துக் கொடுத்
திருக்கலாமே ! ஏன், தனி அதிகாரிகளை நியமித்திருக்
கிறீர்கள் என்ற ஐயப்பாடு எங்கள் மத்தியிலே இருந்தது.
உள்ளாட்சி அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு ஆசானாக
இருந்து விளங்கக்கூடிய தமிழக முதலமைச்சர் அவர்கள் இதில்
காரணம் இல்லாமல் செய்திருப்பார்கள் என்று என்னால்
எண்ண முடியவில்லை. இதை அப்படியே பார்க்கும்போது,
சுட்ட தேங்காயினுடைய வாடை அடிக்கிறது; சுற்றி எலிப்பொறி
தெரிகிறது. வாடையை நோக்கி நாங்கள் உள்ளே போனால்,
அங்கே இது கூடாது என்று சிக்கிக் கொள்வோமோ என்ற
ஐயப்பாடு தெரிகிறது. ஒருவேளை தனி அதிகாரிகளை போடக்
கூடாது என்று நான் சொன்னால் முதலமைச்சர் அவர்கள் உடனே
எழுந்து சொல்லி விடுவார். 'என்ன சொக்கர், மூன்று ஆண்டு
காலத்திற்குத் தானே தேர்ந்தெடுக்கப்பட்டீர்கள் ; அதனை
ஐந்தாண்டுக் காலமாக நாங்கள்தானே நீட்டித்துக்கொடுத்தோம்,
ஐந்தாண்டு முடிவிலே உங்களைப் போகச் சொல்லி, தனி அதிகாரி
களைப் போடுவதற்கே நீங்கள் இவ்வளவு கோபப்படுகிறீர்களே,
ஐந்தாண்டு காலத்திற்கு மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்து
இருக்கும்போது, இரண்டு ஆண்டு காலத்திலேயே போகச்
சொல்வது எந்த வகையிலே நியாயமாக இருக்கும், (சிரிப்பு) என்று
கூட முதலமைச்சர் கேட்டு விடுவாரோ? அப்படி அவர் பதில்
சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்
காகவே இந்த மசோதாவை இந்த மன்றத்திலே அறிமுகம்
செய்திருக்கிறாரோ என்று கூட எங்களுக்கு எண்ணம்
தோன்றுகிறது, ஆனால் எங்களைப் பொறுத்த வரையில் இந்த
தமிழக அரசு ஊராட்சி நிறுவனங்களுக்கு, உள்ளாட்சி அமைப்பு
களுக்குத் தொடர்ந்து பல நன்மைகளைச் செய்து வருமென்ற
நம்பிக்கை இருக்கிறது. தனி அதிகாரிகளை நியமித்தாலும்,
அவர்கள் மூலமாக நீங்கள்தான் ஆட்சி செய்யப் போகிறீர்கள்.
இப்போது நாங்கள் கேட்கின்ற கோரிக்கைகள் எல்லாம் நிறை
வேறுவது போல, அந்தத் தனி அதிகாரிகள் மூலமாகவும் எங்கள்
கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கை
எங்களுக்கு இருக்கிறது. ஆனால், நீங்கள் தனி அதிகாரிகளை
நியமிக்கும்போது, நிச்சயமாக நம் தமிழகம் பஞ்சாபாக மாறு
மென்றோ, விருதுநகர் லூதியானாவாக மாறுமென்றோ அல்லது
அமைந்தகரை, அமிர்தசரசாக மாறுமென்றோ சொல்ல
மாட்டேன். தமிழகத்திலே கொந்தளிப்பு வருமென்று சொல்ல
மாட்டேன். விருதுநகர் ஒரு ரத்தக்களரியாகுமென்று சொல்ல
மாட்டேன். அரசு எடுக்கின்ற முடிவை, மனமுவந்து ஏற்றுக்
கொண்டு, நீங்கள் எந்த முடிவை எடுத்தாலும், அதனை நாங்கள்
ஏற்றுக் கொள்கிறோம்; ஏற்றுக் கொள்கிற மனப்பக்குவம் நீங்கள்
சொல்வதுபோல எங்களுக்கு இருக்கிறது என்று சொல்லி(சிரிப்பு)
இந்த மசோதாவை நிறைவேற்றிக் கொடுப்பதன் மூலமாக
(the Government is empowered to appoint its Special Officers)

ஆனால், அவர்களை நியமிக்கலாமா வேண்டாமா என்று முடிவு எடுக்க இன்னும் கூட கால அவகாசம் இருக்கிறது என்று நினைக்கிறேன். நகர்மன்றத் தலைவர்கள் எல்லாம் சேர்ந்த பேரவை ஒன்று இருக்கிறது. அந்தப் பேரவையின் கருத்தைக் கேட்டு இந்த ஒரு மாதம் அல்லது ஒரு வார காலத்திற்கு தனி அதிகாரிகளை நியமிக்க நமக்கு அவசியம் இருக்கிறதா அல்லது அவர்களையே தொடர்ந்து நீடிக்கச் செய்யலாமா என்பதைப் பற்றி நீங்கள் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

16-40 மணி.

தனி அதிகாரிகளை நீங்கள் நியமிக்கக்கூடிய இந்த மசோதாவில் நீங்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல ஏப்ரல் 10 ஆம் தேதிக்குள் கண்டிப்பாகத் தேர்தலை நடத்திவிடுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அப்படி நடத்த வேண்டும் என்று நான் வேண்டுகிறேன். ஏனென்றால் இங்கே ஆளும் கட்சி உறுப்பினராக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள், தனி அதிகாரிகளுடைய நிர்வாகத்தில் இருப்பதால் சென்னை மாநகராட்சி எவ்வளவு தூரத்திற்கு அவலமான நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றி சென்ற ஆண்டு கூட்டத் தொடரின்போது பேசிய கருத்துக்கள் என் மனதில் பசுமையாக இருக்கிறது.

எந்த அதிகாரியாக இருந்தாலும் சரி, மக்களுடைய பிரதிநிதிக்கு இருக்கக்கூடிய பொறுப்புணர்ச்சி, அவர்களைத் தட்டிக் கேட்கக்கூடிய உரிமை ஆகியவற்றை கண்டிப்பாக அதிகாரிகளிடமிருந்து யாரும் எதிர்பார்க்க முடியாது. வெளியே இருந்து வரக்கூடிய அதிகாரிகளாக இருப்பார்களேயானால் அவர்கள் பல கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். அதிகாரிகள் தங்கள் உயர் அதிகாரிகளிடம் அதிகமாக வெளிப்படையாகச் சொல்ல முடியாது. ஆனால் மக்கள் பிரதிநிதிகளால் சொல்ல முடியும் என்ற அடிப்படையில், ஜனநாயகத்திற்கு நூற்றுக்கு நூறு மதிப்பு அளிக்கக்கூடிய வகையில் நீங்கள் அந்த முடிவை மறு பரிசீலனை செய்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நீடிக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் பேசும்போது நகர் மன்றத் தலைவர்களை வீட்டுக்குப் போகச் சொல்வதா அல்லது வேண்டாமா என்பதைப் பற்றி அதன் பேரவையைக் கலந்து கொண்டு முடிவு எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதே போல ஒரு மாநிலத்தில் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 356-வது சட்டப் பிரிவை அமுல்படுத்தலாமா, வேண்டாமா என்பதைப் பற்றி இண்டர்—ஸ்டேட்





கவுன்சிலைக் கலந்துகொண்டுதான் முடிவு எடுக்க வேண்டும் என்பதை அவரும் அவர் சார்ந்துள்ள கட்சியும் வலியுறுத்துவார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிகளுக்கு மார்ச் மாதத்தோடு அதனுடைய பதவிக்காலம் முடிவு அடைவதால் ஒரு மாத காலம் தனி அதிகாரிகளை நியமிக்கலாம் என்று இந்தச் சட்ட முடிவை அமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்திருக்கிறார்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய பிரதிநிதிகள் பஞ்சாயத்து பணிகளில், ஊராட்சி ஒன்றியங்களில் கொடுக்கப்பட்டிருக்கிற வேலை முறைகளைக்கூட சரியாக அந்தக் காலத்திற்குள் முடித்து விடுவார்களா என்ற நிலைகூட இருக்கிறது. பல ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் அரசால் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய உள்ளாட்சி வேலைகளை முழுமையாக நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த ஒரு மாத காலம் தனி அதிகாரி என்ற முறையை நியமித்தால் அதன் மூலமாக பெரும்பகுதி வேலைகளில் ஏற்படும் முடக்கத்தை சீர் செய்ய முடியும். இதன் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்பு வகித்த பஞ்சாயத்து நிர்வாகம், ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் ஆகியவற்றை நடத்துவது சரியாக இருக்கும் என்பதை நான் வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

16.45 மணி.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே நான் கூற வேண்டிய அனைத்தையும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும், நகராட்சி மன்றத் தலைவருமான திரு. ரா. சொக்கர் அவர்கள் விளக்கமாக ஐயத்திற்கிடமின்றி குறிப்பிட்டுவிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்கள் குறிப்பிடும் போது, இந்தப் பணிகள் எல்லாம் முடிவடைந்துவிடுமா, இதற்கிடையில் இப்படிச் செய்கிறீர்களே என்று ஒரு விவாதத்தைக் கிளப்பினார்கள். திடீரென்று அவர்களுடைய பதவிக் காலத்தை நாங்கள் முடிவிற்குக் கொண்டுவரவில்லை. ஏற்கெனவே இரண்டு ஆண்டுகள் உயர்த்தும்போதுகூட, இத்தனாம் தேதி வரையில்தான் இந்தப் பொறுப்புக்காலம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதோடுகூட, ஊராட்சி மன்றத் தலைவர்களைப் பொறுத்தவரையில், கிராம ஊராட்சிகளில் அவர்களே 'செக்'கில் கையெழுத்துப்போட்டு அவர்களே பணம் பெறுகின்ற வாய்ப்பும் இருக்கிறது. ஆனாலும் அவர்கள் ஒரு 60 நாட்களுக்கு முன்பாக இந்தப் பணிகளை முடித்துவிட வேண்டுமென்று ஏற்கெனவே விதிகளில் குறிப்பிட்டிருந்தோம். அவர்கள் நீடித்திருந்தாலும்கூட அவர்கள் 60 நாட்களுக்குப் பின்பு இந்தப் பணிகளில் ஈடுபட முடியாது. அதோடு இன்னொரு விளக்

கத்தையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன், இந்த ஆண்டு திட்டப் பணிகள் அனைத்தும் மார்ச்சுக்குள்ளேயே, ஏப்ரல் 29 தேதிக்குள்ளேயே முடிவடையக்கூடிய வழிவகைகளை நாங்கள் வகுத்திருக்கிறோம். ஏப்ரல் திங்களுக்குப் பிறகுதான் கணக்கு வழக்குகள் முடிக்கப்படவேண்டும் என்று நிச்சயமாக நியதி இல்லை. இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே பேசியதுகூட பத்திரிகையில் ஒரு முறை வந்திருக்கிறது. இத்தனாம் தேதி புதிய தலைவர்கள் பொறுப்பேற்பார்கள், அதற்குள்ளாக இதையெல்லாம் நீங்கள் முடித்துக்கொள்ளவேண்டுமென்று பேசியும் இருக்கிறேன். அவர்களுக்காக எழுத்து மூலமாகவும் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, அந்த வகையில் எந்த விதமான சிக்கலும் ஏற்படுவதற்கு நியாயம் இல்லை. அப்படி ஏதாவது குறைபாடுகள் ஒன்றிரண்டு பணிகளில் இருக்குமானால், அவர்கள் விட்டுச் சென்றதைத் தொடர்ந்து நடத்துவதற்காகத்தான் அந்தத் தனி அலுவலர்களைப் போடுகிறோமே தவிர, அவர்கள் சேர்ந்து வேறு பணிகளைச் செய்ய அவகாசமே இல்லை. மொத்தமே இடைவெளி 38 நாட்கள்தான் இருக்கின்றன. 3 ஏப்ரல் 1991 நண்பகலுக்குப் பிறகு பதவி இல்லாமல் இருக்கிறது. நண்பகலிலே இருந்தே துவங்கினாலும்கூட 38 நாட்கள்தான் இடைவெளி இருக்கிறது. எனவே, அதிலே எந்தவிதமான ஐயமும் சந்தேகமும் உறுப்பினர்களுக்கு ஏற்படவேண்டிய தேவையில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில் ஒரு நாள்கூட இடைவெளி இல்லாமல் உங்களுக்கு எத்தனை நாள் வேண்டுமோ அத்தனைநாள் மட்டும்தான் வைத்துக்கொள்ள வேண்டுமென்று, அவர்கள்தான் இந்த 10ஆம் தேதியைக் குறிப்பிட்டார்கள், அதற்குள்ளேயே நாங்கள் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக எடுத்துக்கொண்டு வருகிறோம். அதுகூட, மக்கள் கணக்கெடுப்புப் பணி முடிகிறவரை அனைத்துப் பணிகளையும் விட்டு வைக்கவில்லை. அதற்கு முன்னால் அந்தப் பணிகள், அதாவது அறிவிக்கை விடுவது, மற்ற மற்ற விவகாரங்கள் ஆகிய இவைகளை முடித்துக்கொண்டு, அவ்வளவு சீக்கிரமாகத் தேர்தலை நடத்த இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 5/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 3 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 5/1991) நிறைவேற்றப்பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(ஊ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்டமுன்வடிவு, 1991.**

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1991)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

16-50 மணி

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களுடைய பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னால்கூட தேர்தல் நடத்தியிருக்கலாம். ஐந்தாண்டுக் காலமாக நிச்சயமாக கிராமப் புறங்களில் நிச்சயமாக வளர்ச்சி இருக்கிறது. தெரு விளக்குகள் எரிவதற்கான பணிகளை பஞ்சாயத்துத் தலைவர்கள் செய்து

* 21-1-1991 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிக மான வேலைகள் இல்லை. பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதி அவர்களுடைய காலம் முடிகிறது என்று சொன்னால் அதற்கு முன்னால் தேர்தல் நடத்தியிருக்கலாம். இரண்டு ஆண்டுகள் பதவிக் காலத்தை நீட்டிக்கும் போதே இந்த அரசுக்குத் தெரியும். பிப்ரவரி மாதம் அவர்களுடைய பதவிக்காலம் முடிவடைகிற தென்பதால் சேர்மன் தேர்தலை நடத்தியிருந்தால் நிச்சயமாக மக்களுக்கு நல்ல பலன் கிடைத்திருக்கும். அதற்குப் பின்னால் ஸ்பெஷல் ஆபீசர் நியமனம் செய்வது, பில் கொண்டு வருவ தெல்லாம் சரியாக இருக்காது. நேரத்தில் இதை அரசாங்கம் செய்திருக்க முடியும். மக்களுக்காக நல்ல தொண்டு செய்கிற பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் கள், உறுப்பினர்கள் எல்லாம் நல்லவிதமாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பிறகு ஸ்பெஷல் ஆபீசர்களைப் போட்டால் அவர்கள் செய்த நல்ல காரியங்களை யெல்லாம் நிச்சயமாகச் செய்யவிடமாட்டார்கள். இப்போது கூட நம்முடைய ஆட்சியில் கிராமப் புறங்களில் அரிசன மக்களுக் காக வீடுகளைக் கட்டுகிறார்கள். அவர்களுடைய பில் பொறுப்புகள் எல்லாம் பஞ்சாயத்துத் தலைவரிடம் ஒப்படைக் கப்பட்டிருக்கின்றன. ஆனால் இதெல்லாம் அதிகாரிகள் கையில் வந்தால் நிச்சயமாக அந்த அளவுக்குத் துரிதமாக இந்த வேலைகள் நடக்காது. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வது, பிப்ரவரி மாதம் 27ஆம் தேதிக்குப் பின்னால் அவர்களுக்கு 'செக்'கில் கையெழுத்துப் போட அதி காரம் கிடையாது என்பதால் அந்த வேலைகளை எல்லாம் ஏப்ரல் மாதத்திற்கு முன்னால் முடிப்பதற்கான வகையில் செய்ய வேண்டும். அதேபோல இந்தத் தேர்தலை உடனடியாக வைப்பதற்கான ஏற்பாட்டையும் செய்யவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1991ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 6/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.



பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும் ''.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

''In Clause 3, in sub clause (3) (a), after the proviso, add the following proviso:

Provided further that steps may be taken to conduct elections to the Panchayats and Panchayat Union Councils atonce to be completed on or before the 27th day of February 1991, as a first step :

Provided also that if, this step is found to be impossible, a panel of special officers may be drawn up for appointment.''

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 3 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1991) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) ஊராட்சிகள் (திருத்தச் ) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1991) * ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்தை ஆதரித்துப் பேசுகின்ற வாய்ப்பை வழங்கியமைக்கு, உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு இருக்கிற டாக்டர் கலைஞருடைய ஆட்சியில் இந்தச் சட்டம் திருத்தப் படுவது குறித்து பாராட்டுவதற்கும், நன்றி சொல்வதற்கும் நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

16-55 மணி.

குறிப்பாக டாக்டர் கலைஞர் அவர்கள் பல்வேறு நல்ல பணிகளை தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காகச் செய்து வருகின்ற நேரத்தில், அந்தத் திட்டங்கள் எல்லாம் விமர்சனத்திற்கு ஆளாக்கப்படுகிறதே தவிர, பாராட்டப்படவில்லை. குறிப்பாக டாக்டர் கலைஞர் அவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குக் கட்டிக் கொடுக்கின்ற கான்கிரீட் வீடுகளைப் பல்வேறு கோணங்களிலேயிருந்து விமர்சிப்பதற்கு அரசியல்வாதிகள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால் பாராட்டுவதற்கு எதிர்க்கட்சியிலே கூட ஆள் இல்லை என்று நான் சொல்ல முடியாது, காரணம், காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள், கலைஞர் அவர்கள் கட்டித் தந்த கான்கிரீட் வீடுகளைப் பார்த்ததற்குப் பின்னாலே அவர்கள் வாயாரப் பாராட்டி, கலைஞர் அவர்களுக்கு நன்றி

* 21—1—1991 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



சொன்னதை என்னாலே மறந்துவிட முடியாது, மற்றவர்கள் மறந்தாலும். அதற்குக் காரணம், நாங்களும் அம்மையார் அவர்களும்தான் அதைப் பாராட்ட முடியும். ஓலைக் குடிசையிலே ஒண்டுக் குடித்தனங்களை நடத்த பழக்கப்பட்டுக் கொண்டிருக்கிற உறவினர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிற காரணத்தாலே, நாங்கள்தான் இந்த நிலையைப் பாராட்ட முடியும். மற்றவர்கள் பரிகசித்துக் கொண்டுதான் இருப்பார்கள். குறிப்பாக விவரம் தெரிந்தவர்கள் என்று சொல்லக்கூடிய அரசியல்வாதிகள்கூட அதற்குக் கிடைக்கின்ற நிதி ஒதுக்கீடுகளைப் பற்றிய விவரங்களை தெரிந்துகொள்ளாமல் பேசி, இது ஜவஹர் திட்டம்தானே, இதை அவர்கள் எல்லாம் எப்படிச் செய்ய இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். குறிப்பாக இந்தத் திருத்தச் சட்டத்தைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில், ஒதுக்கீடு வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினையில், இந்திய துணைக் கண்டத்திற்கு ஆட்பட்டு, அரசியல்வாதிகள் யாரும் விதிவிலக்கு இல்லாத அளவிற்கு ஒரு குறிப்பிட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேர்களும், ஒதுக்கீடு இருக்கக்கூடாது என்று வேகமாகப் பேசி ஆனால் வெளியிலே தெரியாமல் மறைக்கின்ற அந்தக் காலமும் இருந்து இருக்கிறது.

குறிப்பாக 1984-இல் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய முன்னுரையில் அதை எழுதுகின்ற நேரத்தில்,

“In the matter of Reservation, particularly in Education, social and economic criteria should be examined..'' என்று இருக்கிறது. இதை அன்றைக்கு வெளியிட்டது காங்கிரஸ் ஆட்சியிலேதான். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட முன்னுரையிலே இப்படி எழுதப்பட்டு இருக்கிறது. இதை யார், யார் கண்டித்து இருக்கிறார்கள் என்றால் யாரும் கண்டிக்கவில்லை. குறிப்பாக திராவிடர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் மிக வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். அன்றைக்குக் கண்டித்து பாராளுமன்றத்திலே இருந்த உறுப்பினர்கள் கையொப்பமிட்டு, பாரதத்தினுடைய பிரதமரிடம் அளித்திருக்கிறார்கள். அந்தப் பட்டியலிலே திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. முன்பு அமைச்சராக இருந்த, இப்போது அமைச்சராக இல்லாமல் விரட்டி அடித்திருக்கிறார்களே, திரு. ராம் விலாஸ் பாஸ்வான், அவர்கள் கையொப்பமிட்டிருக்கிறார்கள். இப்படி யார் யார், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக உழைக்கவேண்டும் என்று உரிமைக்காக நிற்கிறார்களோ, அவர்களை எல்லாம் விரட்டி அடிப்பதுதான் அந்தக் கட்சியினுடைய கொள்கையாகக் கொண்டு, மறைமுகமாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்ற இயக்கமாக ஒரு காலத்தில் அந்தக் கட்சி இருந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலை மாறி, இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு மரியாதை அளிப்பதற்காகத் தொடர்ந்து ஒதுக்கீடு அளிக்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்தை நானும் வரவேற்று அமைகிறேன்.

* திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே 1957-க்கு முன்பே, அரசியல் சட்டத்திலேயே 1952-ஆம் ஆண்டிலேயே பெண்களுக்கு என்று சட்டம் செய்யாமல் இருந்தாலும் கூட, எங்களை எல்லாம்—மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரியும்—தேடிப் பிடித்துக் கொண்டு வந்தார்கள், பெண்கள் வேண்டும் என்று, காங்கிரஸ் ஆட்சியின் போது. நான் எல்லாம் டைப்ரைட்டிங் லோயர் பாஸ் பண்ணி விட்டு, ஹையர் படித்துக் கொண்டிருக்கும்போது, எங்களை எல்லாம் பிடித்துக்கொண்டு வந்து எம். எல். ஏ.க்களாக நிறுத்தினார்கள், ஐயா. நாங்கள் எல்லாம் மனு போடவில்லை. அந்த அளவிற்கு காங்கிரஸ் ஆட்சி செய்தது. பெண்களுக்கு இந்த மாதிரி ரிசர்வேசன் இருந்த காரணத்தினாலேதான் பாராளுமன்றத்திற்கு, சட்டமன்றத்திற்கு எல்லாம் நாங்கள் வந்தோம். ரிசர்வேசன் இல்லை என்று சொன்னால், ஒரு சீட் கூட வராது எங்களுக்கு, நாங்கள் என்ன வேலை செய்தாலும். இப்போது நாம் பார்க்கிறோம். அங்கே கடைசியிலே ஜாதி வந்து நிற்கிறது. ரிசர்வேசன் இல்லை என்று சொன்னால், அங்கே, 'என்னய்யா, போய்யா, அந்த ஜாதிக்கு, அந்த ஆளுக்கு போட்டுவிட்டு போய்யா, நம்மாளுக்குப் போடு'' என்கிற சூழ்நிலை வந்து விடுகிறது. ஆகையினாலே இந்த ரிசர்வேசன் காங்கிரஸ் ஆட்சியின்போது செய்தது. அப்போதே, பார்ட்டி மத்தியிலே பேசினோம். அப்போதெல்லாம், பஞ்சாயத்து யூனியன்களுக்கு, பஞ்சாயத்துக்களுக்கு எல்லாம் ரிசர்வேசன் கொண்டு வரவேண்டும் என்று ஒரு நிலைமை இருந்தது. அதைக் கொண்டு வர முடியாத ஒரு சூழ்நிலை, பேசினாலும், கொண்டு வர முடியாத ஒரு சூழ்நிலை, இன்றைக்கு இந்த ரிசர்வேசனிலே—378 பஞ்சாயத்து யூனியன்கள் என்று நான் நினைக்கிறேன்—அதிலே அரிசனங்களுக்குக் கண்டிப்பாக எப்படியும், 90 சீட்டு வந்துவிடலாம். 90 அல்லது 96 சீட் வந்துவிடலாம் என்று நினைக்கிறேன் (குறுக்கீடு) இல்லை 68 சீட்கள் வந்துவிடலாம். அதுமாதிரி பெண்களுக்கு 30 சதவீதம். ''ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே'' என்று பாரதியார் அன்றைக்கே பாடிவிட்டுப் போயிருக்கிறார். ஆனால் உங்களோடு போட்டி போட்டு வருவதற்குள்ளாக, அடடா, எப்படி இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்? உங்களோடு போட்டி போட்டு முட்டி மோதி ஒன்றிரண்டு தப்பித்து வந்தாலும் கூட, அதிலேயும், கல்லெறிபடக்கூடியது போன்ற சூழ்நிலை இருக்கிறது.

17-00 மணி.

என்னவோ தெரியவில்லை, பெண்கள் வரவேண்டும். பெண்கள் வந்தால் எல்லா வகையிலும் யோக்கியமாக, ஒழுக்கமாக எந்த வேலை செய்கிறோமோ அதைச் செய்வோம். பெண்களாகிய நாங்கள் நிச்சயமாக அப்படி செய்து கொடுப்போம். அந்த



வகையிலே இப்போது பெண்களுக்கு 30 சதவீதம் என்றால், அதை மாண்புமிகு ராஜீவ் காந்தியே செய்தார் (சிரிப்பு). அதை இன்றைக்கு நாம் அமல்படுத்துவதிலே பெருமகிழ்ச்சியடைகிறோம், பெருமைப்படுகிறோம். ஆகையால் இந்தச் சட்டத்தை எவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவந்து எங்களுக்கு இட ஒதுக்கீடு செய்து கொடுக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாகச் செய்து, பல பெண்கள் வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். 12,000 பஞ்சாயத்துக்களுக்கு மேல் இருக்கின்றன, 30 சதவீதம் இட ஒதுக்கீடு என்றால் எவ்வளவு பேர் வருவோம், எண்ணிப்பாருங்கள்.

இங்கேகூட இந்தப் பக்கத்தில் 2 பேர் இருக்கிறோம், அங்கே பார்த்தால் நான்கைந்து பேர்கள் இருக்கிறார்கள். இதற்கே, இங்கே இருக்கிற சில எம்.எல்.ஏ-க்கு பிடிக்கவில்லை, The face is th in x of h minc அந்தமுகத்தைப் பார்த்தாலே அப்படி நினைக்கக்கூடியது. எனக்குத்தெரிகிறது. இருந்தாலும் நாங்கள் ஓரளவுக்கு வந்தால்தான் நாடு நலம்பெற முடியும். (சிரிப்பு). அதே நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்தப் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களில் நாங்கள் 'காண்ட்ராக்ட்' வேலை எல்லாம் செய்ய வேண்டுமென்று நினைக்க மாட்டோம். மத்திய, மாநில அரசுகள் கொடுக்கக்கூடிய பணத்தை ஒழுங்காகச் செலவிடும் நிலைமையை உருவாக்குவோம். ஆகையால் வெகு விரைவிலே இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களில் 30 சதவீதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்துதர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவில் அதிகமாகப் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. 40 ஆண்டு காலத்திற்குத்தான் ஏற்கெனவே இட ஒதுக்கீடு இருந்தது. அதை மேலும் 10 ஆண்டு காலத்திற்கு நீட்டித்து 'ஒரிஜினல்' சட்டத்தில் உள்ளபடி நிறைவேற்றுவதற்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, ஏகமனதாக இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**10. உறுப்பினர்கள் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், திரு. எஸ். டி. உகம்சந்த் ஆகியோரின் அணியை அ.இ.அ.தி.மு.க.-2 கட்சியாக அங்கீகரித்துள்ளது குறித்துப் பேரவைத் தலைவரின் தீர்ப்பு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவும், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக சட்டமன்றக் கட்சித் தலைவர் எஸ். ஆர். இராதாவும் அளித்த கடிதங்களின்படியும், கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் உட் கூறுகளின் பொருத்தத்தின்படியும் திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், எஸ். டி. உகம்சந்த் ஆகிய மூவரையும் கட்சி சாராதவர்கள் '' unattached '' என்று அறிவித்து அவையிலும் இருக்கை மாற்றங்கள் செய்யப்பட்டன. அவ்வகையில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கை நிறைவுற்றது.

இந்நிலையில் திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், எஸ். டி. உகம்சந்த் ஆகிய மூவரும் தாங்கள் இந்த அறிவிப்பால் பாதிக்கப்படுவதாகவும், தாங்கள் ஜெயலலிதாவின் கடிதம் கொடுக்கப்பட்டதற்கு முன்பே கட்சிப் பொதுக் குழுவைக் கூட்டி அரசியல் முடிவுகள் எடுத்ததாகவும், அதில் திரு. எஸ். திருநாவுக்கரசு பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், யார் உண்மையான அ.இ.அ.தி.மு.க. என்பது குறித்து வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் இருப்பதாகவும், கட்சி அலுவலகம் தொடர்பான



பொருள்கள் குறித்தும் வழக்கு இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர். 1972-க்குப் பின் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களாகவும், தொடர்ந்து பன்முறை சட்டமன்ற உறுப்பினர்களாகவும், மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் அமைச்சரவையில் அமைச்சர்களாகவும் இயங்கி உள்ளதாகவும், எனவே, தாங்கள் உதிரிகள் அல்ல என்றும், ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும், ஜனநாயக ரீதியாக வெளியில் ஒரே கட்சியில் இயங்கிக் கொண்டிருக்கும் தங்களை ஒரு கட்சியாகவே இயங்க அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டு உள்ளார்கள். இதற்கான பல்வேறு ஆதாரங்களையும் காட்டி உள்ளார்கள். நேரிலும் விளக்கி உள்ளார்கள்.

17-05 மணி.

வெளியில் தேர்தலில் ஈடுபட்ட அ.இ.அ.தி.மு.க. (ஜெ.) கட்சியும், அ.இ.அ.தி.மு.க. (ஜா) கட்சியும் தங்களுக்குள் உடன்பாடு கொண்டு இரு கட்சிகளும் இணைவதாக அறிவித்தன. '' Merger '' எனும் முறையில் சட்ட விதிகளுக்கு உட்பட்டு இந்த இணைப்பு ஏற்கப்பட்டது. அந்த நிலையில் உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் வெளியில் கட்சிகள் இணைந்து விட்டாலும், தான் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் (ஜானகி-இராமச்சந்திரன்) என்ற பெயரிலேயே இயங்குவேன் என்று எடுத்துக்கூறிய அவரது விவாதக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்று அவர் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (ஜானகி-இராமச்சந்திரன்) எனும் கட்சியின் பெயராலேயே இயங்க அனுமதிக்கப்பட்டு உள்ளார். மேலும் அவர் சார்ந்துள்ள கட்சி, பொதுத் தேர்தலில் 4 விழுக்காட்டுக்கு மேல் வாக்குகள் வாங்கி உள்ள காரணத்தால் அது 'அணி' ஆக இயங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர் தமது கட்சியின் சட்ட திட்டங்களையும் அவைக்கு அளித்து உள்ளார். எனவே திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், எஸ். டி. உகம்சந்த் ஆகியோரும் தம் கட்சியின் சட்ட திட்டங்களைக்காட்டி, அவற்றை ஏற்குமாறு கேட்டு உள்ளனர். அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (ஜெ) கட்சியின் சார்பில் சேவல் சின்னத்தில் நின்று வெற்றி பெற்ற திரு. கே.ஏ. மணி உண்மையில் இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்தவர் ஆவார். எனினும் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, தன் கட்சியின் பெயரிலேயே இயங்கிக்கொள்ளலாம் என்று செல்வி ஜெயலலிதா அளித்த கடிதத்தின் அடிப்படையிலும் திரு. மணி தன் கட்சியின் மேலிடக் கடிதத்தை வாங்கி அளித்ததின் வாயிலாகவும் அவர் இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி எனும் பெயரில் தானும் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழக ஜனதாவைச் சேர்ந்த திருவாளர்கள் பொன். விஜயராகவன், ஜி.ஜி. குருமூர்த்தி ஆகிய இருவரும் ஒரு கட்டத்தில் ஜனதா தள கட்சியோடு இணைவதாக எழுதிய கடிதத்தின் பேரில் அவர்கள் ஜனதா தள கட்சியோடு இணைக்கப்பட்டு இன்று வரையில் அக்கட்சியிலே இயங்கி வருகிறார்கள். தற்போது அவர்கள் இருவரும் தாங்கள் ஜனதா தளம் (எஸ்) கட்சியில் சேர்ந்துவிட்டதாகவும், அந்தக் கட்சியின் பெயரில் தாங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் வேண்டி உள்ளார்கள். அவர்கள் மூன்றில் ஒரு பங்கினராக இருப்பதால் அந்த பிரிவு ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்கள் ஜனதா தளம் (எஸ்) என்ற பெயரிலேயே இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும், அவர்கள் சேர்ந்துள்ள கட்சியின் தலைமையிடத்திலிருந்து உரிய கடிதத்தைப் பெற்று அளித்த பின்னரே இது பற்றி முடிவுசெய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நேர்வில் ஜனதா தளம் (எஸ்) என்ற கட்சி தமிழ்நாட்டில் அண்மையில்தான் தோன்றி உள்ளது என்றாலும் உறுப்பினர்களுடைய விவாதக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்களது தலைமையிடத்தில் ஒப்புதலுக்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் ஜனதா தளம் (எஸ்) எனும் கட்சி 1990 நவம்பர் 5-க்குப் பின்னால் தான் உருவானதாகும். அந்த அமைப்பு ஜனதா தளத்திலிருந்து பிரிந்தபோது, ஜனதா தளத்தின் கட்சித் தலைவர் தந்த கடிதத்தின்படி மாண்புமிகு பிரதமர் திரு. சந்திரசேகர் உட்பட 25 உறுப்பினர்கள் எக்கட்சியையும் சேராதவர்கள் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது. அதன் பின், அவர்கள் கடிதக் கோரிக்கைகளும், ஜனதா தளம் (எஸ்) கட்சியைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்கள் கடிதக் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு நவம்பர் 5-க்குப் பின்னால் ஏற்பட்ட கட்சிப் பிளவு ( Split ) என்பது ஒப்புக்கொள்ளப்பட்டு. கட்சி சாராதவர்களாக அறிவிக்கப்பட்டவர்களும் ஜனதா தளம் (எஸ்) கட்சியைச் சேர்ந்தவர்களாகவே அங்கீகரிக்கப்பட்டு உள்ளனர். இது மூன்றில் ஒரு பகுதி எனும் விவாதம் ஒப்புக்கொள்ளப்பட்டு அதன் உட்கருத்தும் இணைக்கப்பட்டுள்ளது.

நமது நேர்வில் மூன்றில் ஒரு பகுதி இல்லை என்பதனாலேயே திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், எஸ். டி. உகம்சந்த் ஆகிய மூவரை கட்சி சாராதவர்களாக அறிவித்தோம். எனினும், அவர்கள் தந்துள்ள பிற விவாதங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சிக்குள் 1988 தொடக்கத்தில் பிளவு ஏற்பட்டபோது தில்லி நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்ற மேலவையிலும் அப்போது இருந்த சூழ்நிலைகளையொட்டி அ.இ.அ.தி.மு.க. 1, அ.இ.அ.தி.மு.க.2 என்று இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு உள்ளார்கள். மேலும்,



இன்னும் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் எனும் கட்சிக்கும் அதிலிருந்து பிளவுற்ற திருநாவுக்கரசு
அணிக்கும் உள்ள வழக்குகள் நிலுவையில் உள்ளன. ஜானகி
அணியினர் தொடர்ந்த வழக்குகள் கூட இன்னும் முடிக்கப்
படவில்லை. இவற்றையும் நாம் கவனத்தில் எடுத்துக்
கொள்கிறோம்.

17.10 மணி

இந்நிலையில் திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே.கே.எஸ்.
எஸ். ஆர். இராமச்சந்திரன். எஸ். டி. உகம்சந்த் ஆகிய
மூவரும் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் என்ற கட்சியின் அமைப்பைப் பாதிக்காத வகையில்
தாங்கள் ஒரு கட்சியாக இயங்குவது மக்கள் ஆட்சியின்
தார்மீக முறைக்கும் சட்ட திட்டங்களுக்கு உட்
பட்டும் நியாயமானது என்ற கருத்தை முன் வைத்து
உள்ளார்கள். அனைத்தையும் ஆய்வு செய்து, ஏற்கெனவே
திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்
சந்திரன், எஸ். டி. உகம்சந்த் ஆகியோர் உதிரிகள் ஆக
இல்லாமல் ஒரு கட்சியாகவே ஒருங்கிணைந்து இயங்கி வந்து
உள்ளார்கள் என்ற தார்மீக உண்மையை யாரும் மறந்துவிட
முடியாது. மேலும் மக்கள் ஆட்சியில் அவரவர்களும் உதிரி
களாக இயங்குவதைவிட, வாய்ப்பு உள்ள நேர்வுகளில்
ஒருங்கிணைந்து ஒரு கட்சியாக இயங்குவது ஜனநாயகத்துக்கு
முற்றிலும் உடன்பாடானதுதான். ஓர் உறுப்பினரின்
சட்டமன்ற நிலை குறித்துக் கூறும்போது 'கட்சி சாராதவர்கள்'
என்று குறிப்பிடுவதுதான் முறை. அதன்பின் அவர்களது
கட்சி ஈடுபாடு, அவர்களது கட்சி அமைப்பு ஆகியவற்றை
அடையாளங் காட்டும்போது அதனை ஆய்வு செய்து ஏற்பதும்
முறையானதுதான். அந்த அடிப்படையில் ஒரு முடிவு எடுக்க
வேண்டியுள்ளது. எனவே திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு,
கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், எஸ். டி. உகம்சந்த்
ஆகிய மூவரும் இணைந்து செயலாற்றவும், ஒரு கட்சியாக
இயங்கவும் அனுமதிக்கப்படுவது தார்மீக நியாயம் என்று
முடிவு செய்கிறேன். அந்த அடிப்படையில் திருவாளர்கள்
எஸ். திருநாவுக்கரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்,
எஸ். டி. உகம்சந்த் ஆகிய எல்லோரும் அனைத்து இந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்—2 என்ற பெயரிலே
அவையில் இயங்குவதற்கு அனுமதியும் அங்கீகாரமும் வழங்கு
கிறேன். அந்த அடிப்படையிலும், அவர்களுடைய கட்சி
எழுதிய கடிதத்தின் அடிப்படையிலும் திரு. எஸ். திருநாவுக்
கரசு அக்கட்சியின் தலைவராகவும், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.
இராமச்சந்திரன் அக்கட்சியின் துணைத் தலைவராகவும்,
திரு. எஸ். டி. உகம்சந்த் கட்சியின் கொறடாவாகவும் அவையில்
இயங்குவார்கள் என்பதையும் தீர்ப்பாக அளிக்கிறேன்.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A K. Chandriah Chettiar & Sons, Salem.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K V Narayana Iyer & Sons, Dindigul, Madurai District
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-1
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No A, Annaji Rao Street, Erode-1
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Anantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthagshalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (23-1-1991) 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 17.11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டமுறைக்கான விதிகளும் ஆணைகளும்.

76. குமரி மாவட்டம், திருவாளர்கள் மைலேடி சிற்ப தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கத்தினால் விற்கப் பெறும் சிலைகளுக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் அறக்கட்டளைகள் துறையின் 27-7-1990 ஆம் நாளிட்ட 468 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

77. சென்னை திருவாளர்கள் சமூக சேவை நிறுவனத்தார் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திடமிருந்து மகேந்திரா டீசல் ஜீப் வாங்கியதில் விற்பனை வரி விலக்களிப்பு அளித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 30-7-1990 ஆம் நாளிட்ட 476 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

78. சென்னை, இந்திய புளூ கிராஸ் நிறுவனத்திற்கு விற்கப் பெறும் மருந்துகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 13-8-1990 ஆம் நாளிட்ட 505 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

79. கோவை மற்றும் கூனூர் ஆகிய இடங்களிலுள்ள ஏல நிறுவனத்தார் விற்கும் தேயிலைக்கு விற்பனை வரி 6 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கும் சலுகை குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 16-5-1990 ஆம் நாளிட்ட 291 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



80. மதுரை இந்தியன் பார்வையற்றோர்கள் சங்கத்திற்கு விற்பனை செய்த 20 டேப் ரிகார்டுகள் மற்றும் 200 கேஸட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 23-7-1990 ஆம் நாளிட்ட 458 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

81. அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான 11-வது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

82. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41-வது பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (ஆங்கிலம்.)

83. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான 20-வது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம் மற்றும் தமிழ்).

84. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு கதர் மற்றும் கிராம தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 29 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

85. அண்ணா பல்கலைக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை (1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

22. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 100 வரை, (மூன்றாவது பட்டியல்).

23. அரசு உறுதிமொழிக் குழுவின் ஆறாவது அறிக்கை 1990-91.

144896 D
V211,31'N91
N91:36.3